T.5472

# சோழ மண்டல வரலாறுகள்

T. No 5472

பதிப்பாசிரியர் :
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ.(தமிழ்) எம்.ஏ., (ஆங்கிலம்) பி.எட். டிப்.வ. மொ. பிஎச்.டி,

பொதுப்பதிப்பாசிரியர்
கு. தாமோதரன், எம்.ஏ.,

அ. கீ. சு. நூலக வெளியீடுகள் எண் : 421
தமிழ் வெளியீடு எண்:116

# சோழமண்டல வரலாறுகள்

பதிப்பாசிரியர் :

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**

எம்.ஏ., (தமிழ்.), எம்.ஏ (ஆங்கிலம்.) பி.எட்., டிப்.வ.மொ. பி.எச்.டி

காப்பாட்சியர்:

அ.கீ.சு. நூலகம்

சென்னை - 5.

பொதுப்பதிப்பாசிரியர் :

**கு. தாமோதரன்** எம்.ஏ..

இயக்குநர்

தொல்பொருள் ஆய்வுத்துறை

தரமணி, சென்னை - 113.

© அ. கீ.சு. நூலகம்

1999

விலை ரூ. 75/-

முதற்பதிப்பு : 1999
வெளியிட்டபடிகள் : 500

பதிப்பாசிரியர் :
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்

பொதுப்பதிப்பாசிரியர் :
கு. தாமோதரன் எம்.ஏ.,

விலை ரூ. 75/-

G.O.M.L. Publication No. : 421
Tamil Publication : 116

# Chola Mandala Varalarugal

EDITED BY :

**DR. S. SOUNDARAPANDIAN**
M.A., (Tamil), M.A., (English), B.Ed., Dip. Skt. Ph.D
Curator
Govt. Oriental Manuscripts Library
Chennai - 5.

GENERAL EDITOR
**K. DAMODARAN, M.A.,**
Director
Department of Archaeology
Chennai - 113.

© G.O.M.L.
1999

Price Rs. 75/-

**Printed at :** Royapettah Stationery and Printing and Allied Products Producers Indl. Co-op. Society Ltd.,
26, Koya Arunagiri 1st Street, Royapettah, Chennai - 600 014.

# சோழ மண்டல வரலாறுகள்

## பதிப்புரை

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில், காலின் **மெக்கன்சி** (1754-1821) தொகுத்து வைத்த ஓலை மற்றும் தாள் ஆவணங்கள் உள்ளன.

அத்தகு மெக்கன்சி ஆவணங்களில் உள்ள **சோழமண்டலம்** தொடர்பான ஆவணங்களின் தொகுப்பே இந்நூல்.

சோழ மண்டலம் பற்றிய விரிவான வரலாற்று நூல் அல்ல இது ; சுவடிகளில் உள்ளவை மட்டும், காலவோட்டத்தில் அழிந்துப்படுமே என்ற எண்ணத்தில் இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டுகள்ப் பதிப்பிக்கப்படும் முறை** இங்கு பின்பற்றப்படுகிறது.

### சுவடிகளின் காலம்

இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ள சுவடிகளின் காலம் பொதுவாகக் **கி.பி. 19-ஆம் நூற்றாண்டு** ஆகும். குறிப்பாகச் சோழமன்னர் மகத்துவம் மற்றும் சோழ தேசத்துப் பூர்வீகச் சரித்திர வியாக்கியானம் ஆகிய **இருசுவடிகளின் காலம் கி.பி. 1810** ஆகும்.

### வெளிவந்த நூல்கள்

அ.கீ.சு. நூலகச் சுவடிகளைக் கொண்டு ஏற்கனவே தஞ்சை மராட்டியர்களின் வரலாறு என்ற நூல் தமிழ்ப்பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டதால், தஞ்சை மராட்டியர் தொடர்பான அ.கீ.சு. நூலகச் சுவடிகள் இத்தொகுப்பில் இடம்பெறவில்லை.

தென்னிந்திய கோயிற் சாசனங்கள் என்ற தொகுதிகளில் ஏற்கனவே சோழமண்டலத்துக் கல்வெட்டுகள் தொடர்பான சுவடிகள் பதிப்பிக்கப்பட்டுவிட்டதால், அவற்றையும் இங்கு சேர்க்கவில்லை.

**அரியலூர்** (பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில், கள்ளக்குறிச்சி, மேல்மாத்தூர், ஆலந்தூர், கீழ்ப்பழுவூர் ஆகிய நான்கு ஊர்களுக்கு நடுவே உள்ளது) தொடர்பானதாட் சுவடி (டி. 3272) அரைப்பக்க அளவில் ஒரு சிறு குறிப்பாக உள்ளதால், அதுவும் இங்கு பதிப்பிக்கப்படவில்லை.

பொதுவாகத் தஞ்சைமண்டலம் மற்றும் சோழமண்டல வரலாறுகள் குறித்துப் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. பல மூல நூற்களும் அச்சில் வெளிவந்துள்ளன. வாசுதேவநாயக்கர் எழுதிய **தஞ்சைமாநகர்த் தலபுராணம்** என்ற நூல் கி.பி. 1893இல் அச்சானது. **அழகாபுரி என்ற சமீவனசேத்திர புராணம்** என்ற நூலும் அச்சில் வெளிவந்துள்ளது. ஆத்மநாத தேசிகரின் **சோழமண்டல சதகம்** கி.பி. 1916இல் அச்சிடப்பட்டது. எல்லப்ப நாயக்கரின் **செவ்வந்திபுராணம்,** முருகதாசரின் **கரந்தைக் கருவேலர் பதிகம்,** வினைதீர்த்தப்பிள்ளையின் வெள்ளைப்பிள்ளையார் கீர்த்தனை, தஞ்சை **வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, விசுவகர்மபக்தோபாக்கியானம்** ஆகிய நூற்கள் அச்சாகியுள்ளன. இவற்றிலெல்லாம் யாதானும் ஒரு வகையில் சோழமண்டல வரலாறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனினும், இப்போது இத்தொகுப்பில் பதிப்பிக்கப்பட்டுள்ள மெக்கன்சியின் ஆவணங்களில் சில அரிய வரலாற்றுக் குறிப்புகளும், வரலாற்றுச் செய்திகளும், சோழமண்டலப் பண்பாட்டுச் செய்திகளும், பிறவும் வந்துள்ளன. ஆகையால், இத்தொகுப்பு பதிப்பிக்கப்படுவதாயிற்று.

## சோழமண்டலத்தின் எல்லை

முதற்கண், **சோழமண்டலம்** என்பதன் **எல்லை** யாது?

அ.கீ.சு. நூலகத்தில் உள்ள ஒரு தாட்சவடியில் (டி. 3186), "ஸ்ரீமுஷ்ணம் அருகே உள்ள வெள்ளாறுக்கும், தொண்டைமான் சீமை வெள்ளாறுக்கும் இடையே உள்ளது **சோழராசர்கள் சீமை**" என்று எழுதப்பட்டுள்ளது.

ஸ்ரீமுஷ்ணம் அருகே உள்ள வெள்ளாறு, சேலம் மாவட்டத்தின் **கொல்லிமலையில்** உற்பத்தியாகி, பச்சைமலை, ஆத்தூர் வட்டம் வழிகளில் ஓடிவந்து, தெ.ஆ. மாவட்டத்தை அடைந்து **பறங்கிப்பேட்டைக்** கருமேக வங்காளக் குடாக் கடலில் விழுகிறது. இதன் நீளம் ஏறத்தாழ 140 மைல் ஆகும்.

தொண்டைமான் சீமை வெள்ளாறு, திருச்சி மாவட்டத்துக் குளித்தலை வட்டத்தில் உள்ள **வேழமலையில்** உற்பத்தியாகி, திருச்சி மாவட்டத்தின் நடுவே ஓடிவந்து, தஞ்சை மாவட்டத்தின் நடுவே பாய்ந்துவந்து, இறுதியில் **மணமேல்குடிக்கு** அருகில் வங்காளக் குடாக்கடலில் விழுகிறது. இதன் நீளம் ஏறத்தாழ 85 மைல் ஆகும்.

சோழ, சேர, பாண்டிய மன்னர்களின் வம்சாவளி என்ற அ.கீ.சு. நூலகச் சுவடிகளில் (டி. 3280)

*"கடல்கிழக்கு தெற்குக் கரைபோற்றும் வெள்ளாறு*
*குடதிசைக்கி ......................*
*ஏணாப் பெண்ணை இருபத்தி னாற்காதம்*
*சோழநாட்டுக் கெல்லையெனச் சொல்"*

என்ற பாடல் இடம் பெற்றுள்ளது.

இதில் குறிப்பிடப்படும் பெண்ணையாறு, விழுப்புரம் மாவட்டம் வழியே ஓடுவதாகும். எனவே இப்பாடலின்படி, சோழ மண்டலத்து வடவெல்லை சிறிது அதிகமாகிறது.

அ.கீ.சு. நூலகம் வெளியிட்டுள்ள நூல், சோழன் பூர்வ பட்டயம், இந்நூலின் இறுதியில் ஒரு வெண்பா உளது. அது:-

*"கடல் கிழக்குத் தெற்குக் கரைபுரள் வெள்ளாறு*

*குடதிசையிற் கோட்டைக் கரையாம் - வடதிசையில்*

*ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதம்*

*சோணாட்டுக் கொல்லையெனச் சொல்!"*

**கம்பர்வாக்கு** என்று இதே பாடல் வேறு இடங்களிலும் அச்சிடப்பட்டுள்ளது.

இப்பாடலில் குறிக்கப்படும், கோட்டைக்கரை என்ற ஊர், திருச்சி மாவட்டத்துக் குளித்தலை வட்டத்தில் உள்ளது.

இப்பாடலின்படி, கிழக்கே கடல் மேற்கே **கோட்டைக்கரை,** தெற்கே வெள்ளாறு, வடக்கே வெள்ளாறு ஆகிய நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட நிலமே **சோழநாடு** ஆகிறது.

ஆயினும், **சோழமண்டலம்** அல்லது **சோழநாடு** என்று பொதுவாக ஆய்வாளர்கள் குறித்துள்ளவற்றின் அடிப்படையில் சோழமண்டலம் என்று கருதத்தக்க சோழநாட்டைச் சேர்ந்தவை என்று தற்போதுள்ள மாவட்டப் பிரிவுகளின், கீழ்வரும் பகுதிகளைக் குறிக்கலாம் :-

1. *தஞ்சை மாவட்டம் முழுவதும்*
2. *திருவாரூர் மாவட்டம் முழுவதும்*
3. *நாகை மாவட்டம் முழுவதும்*
4. *திருச்சிராப்பள்ளி மாவட்டம் முழுவதும்*
5. *பெரம்பலூர் மாவட்டம் முழுவதும்*
6. *கரூர் மாவட்டத்தில், கரூர், குளித்தலை ஆகிய வட்டங்கள் நீங்கலான பகுதிகள்*
7. *புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றுக்கு வடக்குப் பகுதிகள்*

8. *தென்னார்காடு மாவட்டம் முழுவதும்*

9. *விழுப்புரம் மாவட்டத்தில் சில பகுதிகள்*

10. *பாண்டிச்சேரி மாநிலத்தில் காரைக்கால், திருநள்ளாறு மற்றும் இவற்றை ஒட்டிய பகுதிகள்*

11. *சேலம் மாவட்டத்தில், நாமக்கல், திருச்செங்கோடு, ஓமலூர் வட்டங்கள் நீங்கலான பகுதிகள்*

மேற்படி இடங்கள் குறித்து, அறிஞர்களிடையே கருத்து வேறுபாடும் உளது.

மேலைப் பகுதிகளில் சில சோழ மண்டலத்தில் சேராது எனக் கருதுவோரும் உளர்.

இருப்பினும், மேலாய்வுகளுக்காக மேலே கண்ட இடங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

## மண்டலப் பிரிவுகள்

பொதுவாகப் பிற்காலச் சோழர்கள் காலத்தில், கோட்டம், நாடு, வளநாடு, நகரம், கிராமம் என்ற ஊர்ப் பகுதிகள் இருந்துள. சிறிய ஊர்கள் ஊர், பற்று, குறைப்பற்று என்றெல்லாம் அழைக்கப்பட்டன.

சோழ மண்டலத்தில் மொத்தம் 29 நாடுகள் இருந்தன எனப்படுகிறது. தமிழகத்தின் பிற மண்டலங்களின் நாடுகள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| *பாண்டிமண்டலம்* | - | *நாடு 18* |
| *சோழ மண்டலம்* | - | *நாடு 27* |
| *தொண்டை மண்டலம்* | - | *நாடு 79* |
| *கொங்கு மண்டலம்* | - | *நாடு 24* |
| *மொத்தம், மண்டலம் நான்கிற்கு நாடுகள்* | | *148* |

## குலமும் கொடியும்

சோழ அரசர்கள் யாவரும் **சூரிய குலத்தவர்கள்** என்பர். சோழர்களின் கொடி-புலிக்கொடி! மாலை - ஆத்திமாலை!

## சோழவமிசம்

சோழவமிசத்தின் பூர்வீக வமிசமாகக் கீழ்வரும் நான்கு வமிசங்களைத் தொடக்கக்காலத்திலிருந்து குறிப்பர் :

வைவச்சுத மனு

இக்ஷ்வாகு

முடிகுந்தன்

வல்லபன்

சிபிச்சக்கரவர்த்தி

## சோழ மண்டல வரலாறுகள் - காலவாரியாக

பொதுவாக முற்கால, பிற்காலச் சோழர்கள் குறித்த வரலாற்றுச் செய்திகளைக் காலமுறைப்படி வருமாறு குறிக்கலாம்:-

| | | |
|---|---|---|
| கி.மு. 1000ஐ ஒட்டிய காலம் | : | 1. வால்மீகி இராமா யணத்தில் சுக்கிரீவன், புண்டரசோழ, பாண்டிய, கேரள தேசங்களில் சீதையைத் தேடுமாறு குரங்கினங்களுக்கு கூறுகிறார். (கிட்கிந்தா காண்டம்) |

2. பாரதப் போரில் தருமனின் படைக்குச் சோழ அரசன் தருமன் உதவினான்

கி.மு. 3-ஆம் நூற்றாண்டு : அசோகர் கல்வெட்டில் **(Rock Edicts II & III)** ‘சோழர். பாண்டியர், கேரளபுத் திரர்கள், தென்னாட்டை ஆண்டு வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டு : கிரேக்க, உரோம நாடு களுக்கும் சோழநாட்டுக்கும் வாணிகத் தொடர்புகள் இருந்ததாகச் சான்றுகள் உள.

கி.மு. 2 (அ) இக்காலகட்டத்தில, சங்க காலச் சோழர்கள் ஆண் டனர். அவர்கள் :-

1. காந்தமன்
2. தூங்கையில் எறிந்த தொடித் தோட் செம்பியன்
3. உருவப் பஃதேர் இளஞ்சேட் சென்னி
4. கரிகாலன்
5. குளமுற்றத்துச்சஞ்சிய கிள்ளி வளவன்
6. நலங்கிள்ளி
7. மாவளத்தான்
8. போர்வைக் கோப் பெரு நற்கிள்ளி

9. வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி
10. நெடுங்கிள்ளி
11. இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி
12. செங்கணான்
13. இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி
14. குராப்பள்ளி துஞ்சிய கிள்ளி வளவன்
15. குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவன்
16. செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி
17. நல்லுருத்திரன்
18. நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி
19. முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி
20. நல்லடி

**(ii)** பட்டினப்பாலை மூலம், சிறந்த வாணிகத்தலமாக இக்காலகட்டத்தில் பூம்புகார் விளங்கியதாக அறிகிறோம்.

கி.பி. 80 : **பிளினி** குறிப்பால் பூம்புகாரிலிருந்து ஏற்றுமதி வாணிகம் நடைபெற்ற குறிப்பைப் பெறுகிறோம்.

கி.பி. 140 : **தாலமி** குறிப்பால், பூம்புகார், நாகப்பட்டினம் இரண்டும் துறைமுகங்களாக அந்நாளில் இருந்தன என்பது புலனாகிறது.

கி.பி. 6-ம் நூற்றாண்டு : பல்லவர்கள், சோழ நாட்டை வென்று தம் ஆதிக்கத்தைச் செலுத்தினர்.

**மகாவம்சம்** எனும் நூலில் சோழ அரசர்கள் பற்றிய குறிப்புகள் உள.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டு : அப்பர், சம்பந்தர் ஆகியோர் பல சோழ நாட்டுச் சிவத்தலங்களைப் பாடினர்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டு : காவிரிநதிக்கரையில், மண்டங்குடியில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறந்தார்.

உறையூரில் திருப்பாணாழ்வார் பிறந்தார்.

திருக்குறையலூரில் திருமங்கையாழ்வார் பிறந்தார்.

இக்காலகட்டத்தில் வடிக்கப்பட்ட 'ஜேஷ்டாதேவி' சிற்பம் தஞ்சையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கி.பி. 9-ஆம் நூற்றாண்டு | : | விசயாலயச்சோழன் மீண்டும் பிற்காலச் சோழர் மரபைத் தொடங்கினார். முத்தரையர்களை வென்று இதனைத் தொடங்குகிறார். |
| | | கி.பி. 880இல் **வரகுண பாண்டியன்** சோழநாட்டின் மீது படையெடுத்தார். திரும்புறம் பயத்தில் (கும்பகோணம் அருகே) தோற்றார். |
| | | சோமாசிமாற நாயனார் சிலப்பணிகள் செய்தார். |
| கி.பி. 900 | : | திருத்தக்கதேவர் இக்காலத்தைச் சேர்ந்தவர். இவர் சோழக் குலத்தவர். |
| கி.பி. 10-ஆம் நூற்றாண்டு | : | ஆதித்தசோழன் (881-907) கொங்குநாட்டை வென்றான். |
| கி.பி. 949 | : | இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டினன் சோழநாட்டின் மீது படையெடுத்தான். சோழநாட்டின் வடபகுதி கிருட்டினன் வசமாகியது. |
| கி.பி. 953 - 973 | : | கண்டராதித்த சோழன் ஆட்சி |
| கி.பி. 973 | : | உத்தம சோழன் ஆட்சி |

| | | |
|---|---|---|
| கி.பி. 985 | : | உத்தமசோழன் இறந்தான். |
| | | இராசராசன் முடிசூடினான். காந்தளூர், விழிமந்தை வென்று சேரநாட்டைப் பிளந்தார். இலங்கை மீது படையெடுத்து வென்றார்; மைசூர் நாட்டில் கங்கபாடி, நுளம்பாடி, தடிகைபாடி ஆகிய பகுதிகளை வென்றார்; தெலுங்குச் சோழரையும் வென்றார். |
| கி.பி. 10ஆம் நூற்றாண்டு | : | இக்காலகட்டத்தே வரையப்பட்ட ஓவியங்கள் தஞ்சை பிருகதீசுவரர் கோயிலில் உள. |
| கி.பி. 1014 | : | முதலாம் இராசராசன் இறந்தார். |
| கி.பி. 1014-1044 | : | முதலாம் இராசேந்திரன் ஆட்சி, வடநாட்டு மீது படையெடுத்து வெற்றி பெற்றான்; கடாரத்தை வென்றான். |
| கி.பி. 1044-1054 | : | முதலாம் இராசாதிராசன் ஆட்சி |
| கி.பி. 1054-1063 | : | இரண்டாம் இராசேந்தின் ஆட்சி |
| கி.பி. 1063-1070 | : | வீரராசேந்திரன் ஆட்சி |

| | | |
|---|---|---|
| கி.பி. 1070 | : | முதலாம் குலோத்துங்கன் ஆட்சி. கலிங்கத்துப்பரணி இவனது வெற்றியையே பாடுகிறது. |
| கி.பி. 11ஆம் நூற்றாண்டு | : | திருச்சி அருகே உள்ள துவாக்குடி பெரிய ஏரியில், நீர்ப்பாய்ச்சல் தொடர்பான குமிழி இக்காலத்தைச் சேர்ந்தது. |
| கி.பி. 1118 | : | விக்கிரம சோழன் ஆட்சி. ஒட்டக்கூத்தர் இவரது அவைப்புலவர். |
| கி.பி. 1130-1150 | : | இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சி |
| கி.பி. 1150-1163 | : | இரண்டாம் இராசராசன் ஆட்சி |
| கி.பி. 1163-1178 | : | இரண்டாம் இராசாதிராசன் ஆட்சி |
| கி.பி. 1178 | : | மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சி. |
| கி.பி. 1218-1256 | : | மூன்றாம் இராசராசன் ஆட்சி. பாண்டியர் சோழநாட்டைச் சூறையாடினர். |
| கி.பி. 1246-1279 | : | மூன்றாம் இராசேந்திர சோழன் ஆட்சி |
| கி.பி. 1257 | : | **சுந்தரபாண்டியன்** |

| | | |
|---|---|---|
| | | சோழநாட்டின் மீது படையெடுத்து வென்றான். இராசேந்திரசோழனைத் தமக்குக் கப்பம் கட்டுமாறு செய்தான். |
| கி.பி. 1279 | : | இராசேந்திரசோழன் இறந்தான். **சோழர் ஆட்சி முடிவுற்றது.** |
| கி.பி. 13ஆம் நூற்றாண்டு | : | சீனாவிற்கும் சோழ நாட்டிற்கும் இக்காலத்தில் நடந்த வாணிபத்திற்குச் சதுரத்துளையுடைய வட்டமான காசுகள் சான்று; தரங்கம்பாடியில் இக்காசுகள் கிடைத்தன. |
| கி.பி. 14ஆம் நூற்றாண்டு | : | ஆதீனங்கள் எனும் சைவ மடங்கள் முதன் முதலாகத் தோன்றின. |
| கி.பி. 1534-1662 | : | தஞ்சாவூரில் விசயநகர, அரசர்களின் ஆட்சி. |
| கி.பி. 1537 - 1543 | : | மதுரைச் செவ்விந்தியப்ப நாயக்கர், திருவாடுதுறை ஆதீனத்திற்கு, எட்டு மடங்களை அமைத்துப் பெரும் சொத்து ஏற்படுத்தித் தந்தார். |
| கி.பி. 1540-1580 | : | சேவப்பநாயக்கர், தஞ்சையில் நாயக்கராட்சியை ஏற்படுத்தினார். |

| | | |
|---|---|---|
| கி.பி. 1580 - 1600 | : | தஞ்சையில் அச்சுதப்ப நாயக்கன் ஆட்சி |
| கி.பி. 1600-1634 | : | தஞ்சையில் இரகுவாத நாயக்கன் ஆட்சி |
| கி.பி. 1620 | : | தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்கள் ஒரு கோட்டையை கட்டினர். |
| கி.பி. 1634 - 1673 | : | தஞ்சையில் விஜயராகவ நாயக்கர் ஆட்சி |
| கி.பி. 1673 | : | மதுரை நாயக்கராகிய சொக்கநாத நாயக்கர், தஞ்சை மீது படையெடுத்தார்; போரில் தஞ்சை விஜயராகவ நாயக்கர் இறந்தார். |
| கி.பி. 1674 | : | பிஜப்பூர் சுல்தானின் ஆளுநரிடமிருந்து, மார்ட்டின் **(Martin)** புதுச்சேரியில் வியாபாரம் செய்து கொள்ள உரிமை பெற்றார்; **பிரஞ்சு** ஆதிக்கம் ஆரம்பமானது. |
| கி.பி. 1675 | : | வெங்காஜி என்ற ஏகோஜி தஞ்சையில் மராட்டிய வமிசத்தைத் தொடங்கினார். |
| கி.பி. 1677 | : | **சிவாஜி**, தென்னிந்தியா மீது படையெடுத்தார்; வெங்காஜி. சிவாஜிக்குக் கப்பங்கட்டு பவராக ஆனார். |

| | | |
|---|---|---|
| கி.பி. 1680 | : | சிவாஜி இறந்தார். |
| கி.பி. 1685 | : | வெங்காஜி இறந்தார். |
| கி.பி. 1685 - 1712 | : | இரண்டாம் ஷாஜியின் ஆட்சி, தஞ்சையில் |
| கி.பி. 1686 | : | புதுக்கோட்டையில் தொண்டைமான்களின் ஆட்சி தொடங்கிற்று. |
| கி.பி. 1693 | : | சுல்பிகார்கான் இரண்டாம் ஷாஜியைத் தோற்கடித்தார்; இரண்டாம் ஷாஜி, ஔரங்கசீப்புக்குக் கப்பம் கட்டும் சிற்றரசராக ஆனார். |
| கி.பி. 1712 - 1728 | : | தஞ்சையில் சரபோஜி ஆட்சி. |
| கி.பி. 1713 | : | தரங்கம்பாடியில், லூதரன் மிஷன் அச்சகம் நிறுவப்பட்டது. |
| கி.பி. 1722-1723 | : | அம்மை நோயால் புதுக்கோட்டையில் பலர் மாண்டனர். |
| கி.பி. 1728-1736 | : | துக்கோஜி ஆட்சி, தஞ்சையில் |
| கி.பி. 1736-1739 | : | பிரஞ்சுக்காரர்கள் காரைக்காலைப் பிடித்தனர். |
| கி.பி. 1739 | : | போன்ஸ்லே தலைமையில் மராட்டியர் படை தமிழகம் |

| | |
|---|---|
| | மீது படையெடுத்தது. |
| கி.பி.இ 1739-1763 | பிரதாபசிங்கு தஞ்சை அரசரானார். |
| கி.பி. 1741 | டியூப்ளே பிரஞ்சுக் கவர்னராக வந்தார். |
| | திருச்சியை மராட்டியர் படை முற்றுகையிட்டது. |
| கி.பி. 1744 | அன்வருதீன் தஞ்சை மீது படையெடுத்தார். |
| கி.பி. 1745 | அன்வருதீன் தஞ்சை மீது இரண்டாம் முறையாகப் படையெடுத்தார். |
| கி.பி. 1752 | முகமதலிக்கு உதவியாக மேஜர் லாரன்ஸ், கேப்டன் கிளைவ் தலைமையில் ஆங்கிலப்படை திருச்சி வந்தது; சந்தாசாகியின் திருச்சிக்கோட்டை முற்றுகை தளர்ந்தது. |
| கி.பி. 1753 | மைசூர்ப்படை, பிரஞ்சு உதவியுடன் திருச்சிக்கோட்டையை முற்றுகையிட்டது. |
| கி.பி. 1758 | லாலி (பிரஞ்சு கவர்னர்) தஞ்சையைத் தாக்கினார்; தோற்றார் |

| | |
|---|---|
| கி.பி. 1763 | பிரதாபசிங்கு இறந்தார். |
| கி.பி. 1763-1787 | துளஜாஜி பட்டத்துக்கு வந்தார்; இராமநாதபுரம் மற்றும் சிவகங்கையைத் தாக்கினார். |
| கி.பி. 1769 | ஹைதர் அலி, தஞ்சை திருச்சி ஆகிய ஊர்களின் படையெடுத்தான். |
| கி.பி. 1771 | தஞ்சை அரசன் துளஜாஜி இராமநாதபுரத்தின் மீது படையெடுத்தான். |
| கி.பி. 1773 | நவாப் முகமதலி, ஆங்கிலேயர் மற்றும் தொண்டைமான் உதவியுடன் தஞ்சைக் கோட்டையைப் பிடித்தான். இதனால், பட்டுக்கோர்டையின் ஒரு பகுதி இராயரகுநாத தொண்டைமானுக்கு அளிக்கப்பட்டது. |
| கி.பி. 1780 | ஹைதர் அலி, தஞ்சையைத் தாக்கிக் கொள்ளையிட்டான். |
| கி.பி. 1781 | தொண்டைமான், கீழாநிலை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகியவற்றைக் கைப்பற்றி கொண்டார். |
| கி.பி. 1782 | திப்புசுல்தானின் படையும் பிரெஞ்சுப்படையும் சேர்ந்து நாகப்பட்டினம், மன்னார்குடி |

ஆகிய ஊர்களைத் தாக்கின.

| | | |
|---|---|---|
| கி.பி. 1783 | | திருமருகல் எனும் ஊரில் நாணயம் தயாரிக்கும் தொழிற்சாலை செயல்பட்டு வந்தது. |
| கி.பி. 1798 | | தஞ்சையில், ஆங்கிலேயர், அமர்சிங்கிற்கு ஓய்வுச் சம்பளம் கொடுத்து சரபோஜியை அரசராக்கினார். தொடர்ந்து, ஆண்டுதோறும் ஒரு இலட்சம் வராகனைப் பெற்றுக் கொள்வது, பதிலாகத் தஞ்சை ஆட்சியை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிடுவது என்ற ஒப்பந்தம் சரபோஜிக்கும் ஆங்கி'லேயருக்கும் இடையே ஏற்பட்டது. |
| கி.பி. 1807 | | சரபோஜியின் அச்சகம் நிறுவப்பட்டது. |
| கி.பி. 1814 | | காம்பக்குடியில், விசயரகுநாதத் தொண்டைமானால் ஒரு சாயத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. |
| கி.பி. 1833 | : | சரபோஜி இறந்தார். |
| கி.பி. 1833 - 1855 | : | சரபோஜியின் மகன் சிவாஜி, |

| | | |
|---|---|---|
| | | தஞ்சை அரண்மனையில் அரசராக இருந்தார். |
| கி.பி. 1845 | : | தரங்கம்பாடிக் கோட்டை ஆங்கிலேயர் வசமாயிற்று. |
| கி.பி. 1855 | : | தஞ்சை அரசர் சிவாஜி இறந்தார். இதனைத் தொடர்ந்து, தஞ்சை அரசு முழுவதும் ஆங்கிலேயர் வசமானது; மராட்டியர் வமிசம் முடிவுற்றது. தஞ்சையில் ஆங்கில ஆட்சி தொடங்கியது. |
| கி.பி. 19ஆம் நூற்றாண்டு | : | 1. மன்னார்குடி<br>2. கும்பகோணம்<br>3. பந்த நல்லூர்<br>4. திருக்காட்டுப்பள்ளி<br>5. திருவாரூர்<br>ஆகிய ஊர்களில் **காகிதப்பட்டறைகள்** இருந்தன. |

இவ்வாறு நீண்ட நெடிய வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டதாகச் **சோழ மண்டலம்** திகழ்கிறது.

இனி, சோழ மண்டலத்தின் வேறு சில பண்புகளையும் காண்போம்.

## பிற்காலச் சோழர்கள் நிறுவிய ஊர்கள்:-

பிற்காலச் சோழர்கள் பல ஊர்களை நிறுவியதற்குப் பல்வேறு சான்றுகள் உள.

கீழ்வரும் ஊர்கள் பிற்காலச் சோழர்களால் நிறுவப் பெற்றவை :-

1. உத்தமசோழபுரம்
2. கண்டராதித்தம்
3. இராசராசபுரம்
4. அருண்மொழித் தேவபுரம்
5. கங்கை கொண்ட சோழபுரம்
6. வீரசோழபுரம்
7. இராசேந்திரப்பட்டிணம்
8. விக்கிரமம்
9. சயங்கொண்ட சோழபுரம்
10. மதுராந்தகம்

## சோழமண்டலமும் சிவத்தலங்களும்

மூலர் பாடிய தேவாரங்களில் மொத்தம் 282 சிவத்தலங்கள் உள்ளன.

இவற்றில் பெரும்பாலான சோழ மண்டலத்தில் உள்ளன.

இதனால் சோழமண்டலத்திற்கும் சிவமதத்திற்கும் இருந்த தொடர்பு புலனாகிறது.

சோழன் **கோச்செங்கணான்** மட்டும் மொத்தம் 70 சிவத்தலங்களை ஏற்படுத்தினான் என்பர்.

திருவரங்கத்திற்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் உள்ள திருவெண்ணவாயில் என்ற சிவன்கோயிலை உருவாக்கியவர் இச்செங்கணானே என்பர்.

விசயாலயன் முதல் முதலாம் குலோத்துங்கன் வரை இருந்த சோழ அரசர்கள் யாவரும் சைவர்களே!

அதன்பிறகு ஓரிரு வைணவச் சார்புடைய சோழரும் இருந்தனர் என்பர்.

## சோழர்தம் கோயிற்பணிகள் :

சோழர்களுக்கும் சைவ சமயத்திற்கும் இருந்த தொடர்பு மேலே சிறிது சிந்திக்கப்பட்டது.

இவண், சோழ அரசர்கள் கட்டிய சைவக் கோயில்களை வருமாறு பட்டியலாகக் காட்டுவோம்.

| சோழ அரசன் | கட்டிய கோயில் |
|---|---|
| 1. விசயாலயன் | 1. விசயாலய சோழிச்சுரம் (புதுக்கோட்டை அருகே நார்த்தாமலை என்ற ஊரில் உளது) |
| 2. முதலாம் ஆதித்தன் | 1. கார்குறிச்சிக் கோயில் (புதுக்கோட்டை அருகே) |
| | 2. திருவெறும்பிச்சுவரமுடைய மகாதேவர் கோயில் (திருச்சியில் உளது) |
| 3. முதலாம் ஆதித்தன் | 1. திருவாடுதுறைக் கோயில் |
| | 2. உடையார் கோயில் (காட்டுமன்னார்குடி அருகே) |
| | 3. குரங்கநாதர் கோயில் (முசிறித் தாலுக்கா, சீனிவாச நல்லூரருகே) |
| 4. இராசேந்திரன் | 1. அனந்தேசுவரர் கோயில் |
| 5. செம்பியன் மாதேவி | |

| | |
|---|---|
| (கண்டராதித்தனின் மனைவி) | 1. திரு.அரனாறிக் கோயில் (திருவாரூர்) |
| | 2. கோனேரிராசபுரக்கோயில் |
| | 3. திருமணஞ்சேரிக் கோயில் |
| | 4. தென்குரங்காடுதுறைக் கோயில் |
| 6. முதலாம் இராசராசன் | 1. தஞ்சை பெரிய கோயில் |
| 7. முதலாம் இராசேந்திரன் | 2. கங்கைகொண்ட சோழேச்சரம் |
| 8. முதலாம் இராசாதிராசன் | 1. இராசாதிராசேச்சுரம் (மன்னார்குடி) |
| 9. முதலாம் குலோத்துங்கன் | 1. சூரியனார் கோயில் |
| | 2. குலோத்துங்க சோழேச்சரம் (கீழைப்பழூர்) |
| | 3. இராசகோபாலன் கோயில் (மன்னார்குடி) |
| 10. விக்கிரமசோழன் | 1. திருமங்கலக் கோயில் (மாயூரம் தாலுகா) |
| | 2. இருங்கோளீசர் கோயில் (ஜமீன்புங்கனூர் அருகே) |
| 11. மூன்றாம் இராசராசன் | 1. திருவாஞ்சியம் அம்மன் கோயில் |

## சோழர் தலைநகர்கள்

- சங்ககாலச் சோழர்களுக்கு உறையூரும், காவிரிப்பூம்பட்டினமும் தலைநகர்கள்.
- பிற்காலச் சோழர்களுக்குத் தஞ்சையும் கங்கைகொண்ட சோழபுரமும் தலைநகர்கள்.
- இராஜராஜனின் அரண்மனை எந்த இடத்தில் இருந்ததென்பது தெரியவில்லை.
- சோழர்காலத் தஞ்சை, இன்றைய களிமேட்டிற்கும், ரெட்டிபாளையத்திற்கும் இடையே உள்ள மேல்வெளிக் கிராமம் முழுவதும் பரவி இருந்திருக்க வேண்டும் என்பர்.

## நாயன்மார்களும் சோழரும்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் சோழர்களும் உளர் என்பது குறிப்பிடத் தக்கதே.

**கோச்செங்கட் சோழ நாயனார்** ஓர் அரசர்; **புகழ்ச்சோழ நாயனார்** என்பவரும் அரசரே.

**கோச்செங்கட் சோழர்** எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பது தெரியவில்லை; **புகழ்ச்சோழ நாயனார்,** உறையூரைச் சேர்ந்தவர்.

கோச்செங்கண்ணார் பல சிவன் கோயில்களைக் கட்டியவர்.

**புகழ்ச்சோழன்,** அதிகன் என்பவனோடு பொருது, பல தலைகளைக் கொய்த நேரத்தில், அதில் ஒரு தலையில் சிவபக்தனின் சடைமுடி இருந்ததைக் கண்டான்; ''ஐயோ சிவபக்தனையா கொன்றேன்? யான் இதோ அழிகிறேன்!'' என்று, கூறி தீவளர்த்து அதில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டான். அதனால் அவன் கைலாயம் சென்றான் என்று வருணித்துக் கூறுகிறது **சேக்கிழார்** எழுதிய பெரியபுராணம்.

## மகாவம்சமும் சோழரும்

**மகாநாமன்** பாலி மொழியில் எழுதிய, கி.பி. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **மகாவம்சம்** எனும் நூலில் சோழன் பற்றி உரைக்கப்படுகிறது.

உயர்குலத்துச் சோழன் **ஏலாரா**, இலங்கை அரசனான **அசேலன்** என்பானைத் தோற்கடித்து, இலங்கையில் அரசாட்சி செய்தான். அவனுடைய படுக்கை அரையில் அவனது தலைக்கு மேல் ஒரு மணியைக் கட்டித் தொங்கவிட்டிருப்பான்; அவனிடம் நீதி கோரி வருபவர்கள் அதை அடிக்கலாம். **ஏலாரா** என்ற அச்சோழனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். ஒரு சமயம், ஏலாராவின் மகன் தேர் மீது தீசவாபி என்ற இடத்துக்கு சென்றான் ; வழியில் கன்றின் மடிது தேர் ஏறி அக்கன்று இறக்க நேரிட்டது. இதற்காக, அச்சோழன் ஏலாரா, தானே தேரை ஓட்டி தன் மகன் மீது ஏற்றி அவனைக் கொன்றான்.!

வேறொரு சமயம், இதே சோழ அரசன், பறவைக் குஞ்சை விழுங்கிய பாம்பின் வயிற்றைக் கிழித்து, குஞ்சை வெளியே எடுத்து அப்பாம்பை மரத்தில் தொங்கவிட்டான்.!

ஒருமுறை புத்த சங்கத்தினரை அழைப்பதற்காக, தேசியபர்வதத்திற்குச் சோழன் இரதத்தில் சென்றான். இரதத்தின் நுகத்தடியானது, ஒரு ஸ்தூபத்தில் மோதி, ஸ்தூபத்தின் சிறுபகுதி பெயர்ந்துவிட்டது. உடனே சோழன், கீழே படுத்துக் கொண்டு, “தேரை என் மீது ஓட்டி, என் தலையை துண்டியுங்கள்” என்றான். பிறகு, புத்த பிக்குகள் சமாதானம் செய்து சோழ அரசன் 15,000 கஹப்பணம் தருமாறு செய்தனர்.

வேறொருமுறை ஒரு கிழவி வெயிலில் அரிசி காயப்போட்டிருந்தாள்; மழை வந்து நனைந்துவிட்டது. கிழவி சோழன் ஏலாராவிடம் முறையிட்டாள். சோழன் உண்ணாவிரதம் மேற்கொண்டு, அவனுடைய குலதெய்வம் வாயிலாக இனிமேல் பகலில் மழைபெய்யக்கூடாது என்ற உத்தரவை, பஜ்ஜுனன் என்ற மழைதேவனுக்கு இடுமாறு செய்தான். அப்போதுமுதற்,

**அச்சோழன்** ஆட்சியில் பகலில் மழை இல்லை; இரவில்தான் பெய்யும்;

இறுதியில் துட்டகாமணி என்ற இலங்கை அரசனால் ஏலாரா கொல்லப்பட்டான்.

இச்செய்திகள் மேல்மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளன.

இவற்றால், பொதுவாக சோழரின் நீதி ஆட்சி புலனாகும்.

## சோழநாட்டுப் புலவர்கள்

சோழமண்டலம் தமிழ்ப் புலவர் பலரைத் தந்துள்ளது; கீழ்வருமாறு அவர்களைக் குறிக்கலாம்.

1. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.
2. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
3. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
4. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
5. கோப்பெருஞ்சோழன்
6. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
7. சோழன் நலங்கிள்ளி
8. சோழன் நல்லுருத்திரன்
9. குடவாயில் கீரத்தனார்
10. நல்லாதனார்
11. இரும்பிடர்த்தலையார்
12. பெருவாயில் முள்ளியார்
13. திருஞானசம்பந்தர்
14. செருத்துணை நாயனார்
15. திருமாளிகைத் தேவர்
16. சேந்தனார்
17. கருவூர்த்தேவர்
18. பூந்துருத்தி காடகநம்பி
19. கண்டராதித்தர்

20. திருவாலி அமுதனார்
21. காரைக்காலம்மையார்
22. பட்டினத்தார்
23. திருவரங்கத்து அமுதனார்
24. கம்பர்
25. ஒட்டக்கூத்தர்
26. ஓவாத கூத்தன் (ஒட்டக்கூத்தரின் பேரன்)
27. அருங்கலான்வயத்தார்
28. சிவஞானவள்ளல்
29. முத்துத்தாண்டவர்
30. ஆரியப்பப் புலவர்
31. இராமையர்
32. கொட்டையூர், சிவக்கொழுந்து தேசிகர்
33. தத்துவப்பிரகாசர்
34. தத்துவராயர்
35. அருணாசலக் கவிராயர்
36. வைத்தியநாத நாவலர்
37. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
38. இராமசாமி சிவன்
39. முத்துச்சாமி பாரதியார்
40. மாயூரம் வேதநாயகம்பிள்ளை
41. சோமசுந்தர தேசிகர்
42. தியாகராசச் செட்டியார்
43. அழகுமுத்துப் புலவர்
44. உ.வே.சா.
45. நா. ரு. வேங்கடசாமி நாட்டார்
46. மறைமலையடிகள்
47. நாகை தண்டபாணிப்பிள்ளை
48. திரு.வி.க
49. கரந்தைக்கவியரசு வேங்கடாசலம்பிள்ளை
50. பெருமழைப்புலவர் சோமசுந்தரனார்
51. சி. இலக்குவனார்

## சோழராட்சிச் சிறப்புகள்

பொதுவாகச், சோழராட்சியில் பல சிறப்புக் கூறுகள் இருந்தன. அவற்றை வருமாறு பட்டியலிடலாம்.

1. குடவோலை முறை
2. ஆவணக்களரி
3. பண்டாரம் (அரசுக் கருவூலம்)
4. மண்டலீசரர்களால் மண்டல நிர்வாகம்
5. கப்பற்படை
6. சத்திரங்கள் மற்றும் ஊட்டுப் புரைகள்
7. வாரியங்கள்
8. ஆற்றுப்பணிகள் (கல்லணை, பெருவளவன் வாய்க்கால், வீரசோழனாறு முதலியன)
9. ஏரிப்பணிகள் (கங்கைகொண்ட சோழபுரத்து ஏரி, காவிரிப்பாக்க ஏரி முதலியன)
10. கோயிற்பணிகள் (சான்றுகள் முன்பே உரைக்கப்பட்டுள்ளன)

## சோழமண்டல நாணயங்கள்

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் சோழமண்டலத்தே பல நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. அவற்றில் சில:

1. நாகபட்டினம் வராகன்
2. பரங்கிப்பேட்டை வராகன்
3. தஞ்சாவூர் சக்கரம்
4. பரங்கிப்பேட்டை ஹோன்னம்
5. நாகப்பட்டினம் ஹோன்னம்
6. தஞ்சாவூர் ஹோன்னம்

பொதுவாகப் பத்துப் பணம் கொண்டது ஒரு சக்கரம் ஆகும்.

ஒரு வராகனுக்கு இத்தனை சக்கரம், இத்தனை பணம் என்பதில் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபாடுகள் இருந்தன.

மேலே கண்ட பிற்கால நாணய மரபானது, சங்கக்காலச் சோழர் நாணய மரபின் வழிவழிச் சாதனையே.

## சோழர்களும் கோயில்களும்

தமிழகத்தில் மூலை முடுக்குகளிலெல்லாம் கோயில்கள் உள்ளன. இந்த நிலை ஏற்படுவதற்கு **சோழர்களே மூலகாரணம்** என மதிப்பிட இடமுண்டு. கோட்செங்கட் சோழ நாயனார் மட்டும் 70 சிவாலயங்கள் கட்டினான் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஐயனார், மாரியம்மன் கோயில்கள் ஊர்தோறும் உள்ளன அல்லவா? இந்த நிலைக்கும் சோழர்களே காரணம் என்று மதிப்பிடலாம்.

சோழர்களுக்கு முன்பே மேற்படி கோயில்கள் தோன்றியிருக்கலாம் ஆனால் ஊர்தோறும் அதிக எண்ணிக்கையில், கோயில் கட்டுவதை ஊரின் ஒரு கட்டாயமாகக் கருதும் ஒரு போக்கு சோழர்களால் ஏற்பட்டது என்று கருத இடமுண்டு ; இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள வரலாறுகள் இந்த உண்மையை நமக்கு உணர்த்துகின்றன எனலாம்.

## ஐயனார் கோயில் எதற்கு?

ஊரின் காவல் தெய்வமாக ஐயனார் இருக்கிறார் என்பது பொது உண்மை. காடுகளாக இருந்த தமிழகத்தில், ஆங்காங்கே ஊர்கள் ஏற்படும்போது காடுகளில் நடக்கும் கொடுமைகள் ஊரிலும் நடக்கக்கூடாது என்று, ஊரின் நிலப்பரப்பை வேறுப்படுத்திக் காட்டி, மாந்தர்களை எச்சரிக்கை செய்யவே பெரிய அளவில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் ஐயனார் குதிரை, குதிரை வீரன் உருவங்கள் ஊர்களில் அமைக்கப்படடன.

ஊருக்குப் புறத்தே உள்ள ஒரு காட்டில் உள்ள ஒரு மாட்டை அடிக்கலாம்; கைப்பற்றலாம், அங்கே செய்தவனுக்குத் தண்டனை இல்லை; ஆனால், ஊருக்குள்ளே இருக்கும் ஒரு மாட்டைக் கவர்ந்தால், அதற்கு அவனுக்கு தண்டனை கிடைக்கும். எனவே இவ்வாறு தண்டனையை நினைவுபடுத்தவே, கத்தியுடன், அரிவாளுடன் நிற்கும் பெரிய உருவங்கள் கிராம எல்லைகளில் ஏற்படுத்தப்பட்டன.

## சோழர்களும் உருத்திராக்கமும்

சைவர்கள், சைவமடாதிபதிகள் உருத்திராக்கத்தை அணிவதை ஒரு கடமையாககக் கொண்டுள்ளனர். இவ்வாறு உருத்திராட்சம் அணியும் பழக்கமானது மக்களிடையே வெகுவாகப் பரவியதற்குச் சோழர்கள் ஒரு இன்றியமையாத காரணம் என்ற உண்மையை இந்நூலில் வந்துள்ள சுவடிகள் நுட்பமாக உணர்த்துகின்றன.

எந்த ஒரு பழக்ககத்திற்கும் மேல் மட்ட மக்கள் ஆதரவு இருக்குமானால் அது வேரூன்றும் என்பது ஒரு சமுதாய உண்மை **(Sociel Truth)**. அதற்கு இணங்கவே சோழர்களின் ஆதரவால், உருத்திராட்சத்தை கழுத்தில் கட்டிக் கொள்ளும் பழக்கம் மக்களிடையே விரைந்து பரவி, இன்றுவரை நிற்கிறது என எண்ணிப்பார்க்க இடம் உண்டு.

## சோழர்கள் வளர்த்த வேதப்பாடசாலைகள்

இன்று கூட, ஆங்காங்கே வேதப்பாடசாலைகள் நடத்தப்படுகின்றன; மாணவர்கள் இவற்றில் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் ஐந்து ஆண்டுகள் என்று படிப்பர். சிறு வயதிலேயே இப்பாடசாலைகளில் மாணவர்கள் சேர்ந்து விடுவர்.

இப்படிப்பட்ட வேதப்பாடசாலைகள் பல்கிப் பெருகி, பரவலாக வேரூன்றிய ஒரு போக்கிற்குக் காரணம் சோழர்களே என எண்ண இடம் உளது. மெக்கன்சியின் சுவடிகளில் இதற்கு

ஆதாரம் உளது; இந்நூலில் அச்சுவடிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

## சோழ அரசர்கள் வாழ்வு - கலப்புத் திருமணம்

விஜயாலய சோழனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஆதித்த சோழன், இராட்டிரகூடப் பெண்ணை மணக்கிறான்; கலப்புத்திருமணம் அங்கே ஆரம்பித்துள்ளது. எனவே ஒரு வகையில் ஆதித்த சோழனின் பரம்பரையினர், இராட்டிர கூடப் பெண்ணுக்குப் பிறந்தவர்கள், தனி வகுப்புப் பிரிவில் சேர்க்கப்பட வேண்டியவர்களாக ஆகின்றனர்.

இராஜராஜ சோழனின் மகள் குந்தவை, வேங்கிநாட்டு இளவரசன் விமலாதித்தனை மணக்கிறாள். அங்கேயும் கலப்பு.

இராசேந்திர சோழனின் மகள் அம்மங்கை, சாளுக்கனாகிய நரேந்திரனை மணக்கிறாள் ; அதுவும் கலப்பே.
இவ்வாறு தமிழ் - ஆந்திர மண்ணின் கலப்புச்சாதி சோழர் காலத்தில் தோன்றியுள்ளது.

## சோழர்களும் பாண்டியர்களும்

அரிஞ்சய சோழனை அடுத்து வந்த **சுந்தரசோழன்** வீரபாண்டியன் என்ற பாண்டிய மன்னனால் தலையை ஒரே சீவாக சீவிக் கொல்கிறான்.

இரண்டாம் இராசாதிராச சோழன், பராக்கிரம பாண்டியனின் முடிவுக்குக் காரணமாகிறான். பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியன் காட்டுக்கு ஓடி ஒளிந்து வாழ்கிறான். அவ்வீரபாண்டியனைப் பிடித்து மீண்டும் அரசனாக்கியவன் இலங்கை அரசன் பராக்கிரமபாகு! இந்த பராக்கிரமபாகுவோடு தொண்டி, பாசிப்பட்டணப் போர்களில் சண்டையிட்டுத் தோற்றவன் இரண்டாம் இராசாதிராசன், ஆனால், இதே இரண்டாம் இராசாதிராசன், பிறகு பராக்கிரமபாகுவின் படைத்தலைவர்களின் தலைகளை வெட்டி, மதுரைக் கோட்டையின் வாசலில் தொங்கவிட்டான்.

மூன்றாம் இராசராசன் காலத்தில் அவனோடு போரிட்டு, தஞ்சையையும் உறையூரையும் தீவைத்து, ஒரே கொளுத்தாகக் கொளுத்தியவன் மாறவர்மன் சுந்தரபாண்டியன்.

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், மூன்றாம் இராசேந்திர சோழனை வென்று, சோழநாடு முழுவதையும் கி.பி. 1279 இல் பாண்டிய நாடாக ஆக்கினான். அத்தோடு, சோழ அரசர் பரம்பரை முடிவுற்றது.

## சோழமண்டல வரலாறுகள் - சுவடிகள் :

**சோழமன்னர் மகத்துவம்** (டி. 2994) எனும் தாட் சுவடியில். அச்சுவடி எழுதப்பட்ட ஆண்டு கி.பி. 1807 என்று குறிக்கப்பட்டுள்ளது. பவிஷ்யோத்திர புராணத்தில் வடமொழியில் சொல்லப்பட் சோழர் பற்றிய வரலாற்றைத் தமிழில் **சரபோசி** மன்னன் எழுதியுள்ளதாக இச்சுவடி தெரிவித்துத் தொடங்குகிறது. பிரளயம் நடந்த பின் இருவேறு சாதிகளைச் சேர்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்த புத்திரர்களே சேர சோழ பாண்டியர்கள் என்று சுவடி பேசுகிறது. இருவேறு நாகரிகக் கலப்பானது தென்னாட்டில் ஏற்பட்டதை இது குறிக்கிறதா என்பது ஆய்வுக்குரியது. சிவனுடைய சிவகணங்களே சோழ அரசர்களாகப் பிறந்தார்கள் என்ற குறிப்பும் இதில் உளது.

குலோத்துங்கச் சோழனுக்கு அரசப் பதவியைச் சிவனே கொடுத்தார் என்றும், சிவபக்தர்களைக் குலோத்துங்கனும், அவன் மனைவியாகிய **கோமளையும்** நன்கு உபசரித்ததற்காக இந்தப் பரிசு தந்தார் சிவன் என்றும் இச்சுவடியில் கூறப்பட்டுள்ளது ஆழமாக ஆயத்தக்கதே. சோழ அரசர்கள் சைவர்களாக இருந்ததோடு மட்டுமல்லாது, சிவாலயங்கள் பலவற்றை முனைப்புடன் கட்டியவர்கள் என்பதும் ஈண்டு நினையத்தக்கது. சிவனே அரசப்பதவியைக் குலோத்துங்கனுக்குத் தந்தான் என்று சுவடி கூறுவது, சைவ மத எழுச்சி காரணமாக அல்லது சைவர்களின் ஆதரவு காரணமாகச் சோழர்கள் தலையெடுத்திருக்கலாம் என்ற

சிந்தனை இங்கே எழுகிறது. சிவத் தொண்டர்களுக்குத் தொண்டு செய்வது என்ற தத்துவம் இன்று இல்லாமல் போய்விட்டது; ஆனால். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுந்த பெரியபுராணத்தில் சிவத்தொண்டர்களுக்கு அந்நாளையச் சைவர்கள் செய்த தொண்டு நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. சிறுத்தொண்ட நாயனார், ஒரு சைவ அடியவருக்காகத் தன் பிள்ளையையே அறுத்துச் சமைத்துப் போட்டாரே.!

குலோத்துங்க சோழனின் மகன் **தேவசோழன்** என்று சுவடி உரைக்கிறது. **தேவசோழனின்** மகன் **சசிசேகர சோழன்** என்றும் காணப்படுகிறது. சசிசேகர சோழனின் மனைவி பெயர் **சண்பகவல்லி** என்றும் சுவடி பேசுகிறது; சண்பகவல்லிக்குப் பிறந்தவள் **குணவல்லி**. சசிசேகரனின் மகன், சிவலிங்கசோழன். **சிவலிங்கசோழனின்** மனைவி பெயர், **பத்மவல்லி**. சிவலிங்கசோழனுக்கு ஒரு மகன், அவன் பெயர் **வீரசோழன்** வீரசோழனின் மகனே **கரிகால்சோழன்** என்கிறது சுவடி. வீரசோழனே, தன் மகனைத் தேர்க்காலில் இடச்சொன்னான் என்று அக்கதையையும் கூறுகிறது சுவடி. கரிகால் சோழனுக்கு அப்பெயர் எப்படி வந்தது? அவனுடைய கால் கருங்குட்டம் எனும் நோயால் கறுப்பாக இருந்ததால்தான் என்று உணர்த்துகிறது. இச்சுவடி கரிகால் சோழன் முன் பிறவியில் வேடனாகப் பிறந்தவன் என்றும் குறிக்கிறது சுவடி; இது சோழர்களுடைய குலத்தைக் குறிக்கிறதா என்று இது ஆயலாம். கரிகாற்சோழனின் அரண்மனை பட்டீசுவரம் அருகே இருந்தது என்ற ஒரு குறிப்பும் இச்சுவடியில் இருக்கிறது. **சோமவர்மா** என்ற புகழ்பெற்ற காஞ்சிபுரத்துச் சிற்பாச்சாரி மூலம் சிவாலயம் கட்டினான் கரிகாற்சோழன் என்றும் சுவடி உரைக்கிறது. இந்தச் சிற்பி **சோமவர்மாவைப் பூஜை** செய்து தனக்காக பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறான். அரசன் கரிகாலன், தனது சிவப்பணியாக, **நர்மதா**, நதிக்குப் போய்ப் பாறைலிங்கம் கொண்டு வருகிறான் கரிகாலன், போகும்போது அரதத்தாச்சாரியார் மற்றும் 64 செட்டிகளோடு நர்மதா நதிக்கும் போகிறான் கரிகாலன். இக்குறிப்பில் காலமாறுபாடு இருப்பினும். இச்செய்தியின் அடிப்படை தவறில்லை என்றே காணப்படுகிறது.

அறுபத்திநாலு செட்டிகள் எதற்காக நர்மதா நதியில் எடுக்கும் லிங்கத்தை வண்டியில் வைத்து, அந்த வண்டியைத் தஞ்சாவூர் வரைக்கும் இழுத்து வருவதற்காக, இப்பணியை 64 செட்டிகளும் செய்து முடித்ததாகவும் சுவடி கூறுகிறது ; இன்றும் 64 மனை வேளாஞ் செட்டிமார்கள் பெரியகோயில் சைத்ர விழாவின் போது பெருமைப்படுத்தப்படுகின்றார் என்பது அறியத்தக்கது.

இந்தச்சுவடி, **சோமவர்மாவையும்** அவரது மகனையும் பற்றிப் புகழ்ந்துரைக்கிறது. **விசுவகர்மாவே** சோமசரிமனாக வந்து பிறந்தான் என்கிறது சுவடி. சோமவர்மா என்ற சிற்பியை கரிகால் சோழனே பூஜித்து வணங்கினான் என்றும் உரைக்கிறது இச்சுவடி. தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலைக் கட்டிய தலைமைச் சிற்பி இவனே என்றும் பன்னிரெண்டு ஆண்டுகள் பிடித்தன இவனுக்கு இதைக் கட்டி முடிக்க என்றும் சுவடி பேசுகிறது.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவன் "நாம் எடுப்பிச்ச கற்றளி" என்று அவனது கல்வெட்டு உள்ளது. இராஜராஜன் என்பதே வரலாறு; ஆனால் கரிகாலன் என்று சுவடி குறிப்பது தவறாகவே தென்படுகிறது. இப்பெயர் மாற்றம் இருப்பினும், கூறிவரும் வரலாறு, பண்பாடு தொடர்பான செய்திகளில் இச்சுவடி குறிப்பிடத்தக்க இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது எனல் வேண்டும். நர்மதை நதியிலிருந்து. இலிங்கத்தை இராஜராஜன் கொண்டுவந்தான் என்பது கூறப்படும் வரலாறு; ஆனால் சுவடி, கரிகாலன் கொணர்ந்தான் என்கிறது.

மேற்படி, கரிகாலனின் மகன், **பீமசோழன்** என்பவனையும் அறிமுகப்படுத்துகிறது சுவடி. பீமசோழனின் மனைவி பெயர், **வித்துல்லதை;** இவள் கேரள மன்னன் ஒருவனின் மகள்.

இப் பீமசோழன் அன்னசத்திரங்கள், அறச்சாலைகள் பல நிறுவினவன் என்றும், இலுப்பைத் தோப்பு உட்படப் பல தோப்புகள் வைத்தவன் என்றும் சுவடி பகர்கிறது. சில சிவத்தலங்களை இவன் கட்டினான் எனவும் சுவடி உரைக்கிறது.

பீமச்சோழனின் மகன் பெயர், இராசேந்திரசோழன் ; இந்த **இராசேந்திர சோழனின்** மனைவி பெயர் **கமலினி;** கமலினி **குலசேகரபாண்டியனின் மகள்** என்றிவ்வாறு கூறிச் செல்கிறது **சோழ மன்னர் மகத்துவம்** எனுமிச்சுவடி.

பீமசோழனை அடுத்து, இராசேந்திர சோழனின் வரலாறு உரைக்கப்படுகிறது. இராசேந்திர சோழன் சில சிவன்கோயில்களை கட்டியதாகச் சுவடி பட்டியலிடுகிறது ; விஷ்ணு கோயில்களையும் திருத்தி அமைத்ததாகக் குறிப்பு உளது. முருகன் கோயில்களும் இவனால் கட்டப்பட்டவையாம். **ஐயனார், பிடாரி** கோயில்களையும் இவன் கட்டினானென்கிறது சுவடி. நெற்றியில் கண் படைத்த **பிரதாபருத்திரன்** எனும் அரசனை இராசேந்திர சோழன் வென்றானாம் ; இராசேந்திரசோழனின் மகன் பெயர், வீரமார்த்தாண்ட சோழன். **வீரமார்த்தாண்ட சோழனின்** மனைவி பெயர் **மாணிக்கவல்லி.** இம்மாணிக்கவல்லி, சேர அரசனின் மகள். வீரமார்த்தாண்டனும் பல ஆலயப்பணிகளைச் செய்தான்; கும்பகோணத் தலத்தில் பல பிரகாரப் பணிகளைச் செய்து வைத்தான். **கொங்கணச்சித்தர்** பற்றியும் இதில் நுவலப்படுகிறது. இக்கொங்கணர் கனவிலே ஒரு செட்டிப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு அவளை, தன்னைப் போலவே, கோவிலில் இருத்திக் கொண்டாரென்ற கதையும் இச்சுவடியில் பேசப்படுகிறது. வீரமார்த்தாண்ட சோழனின் மகன் பெயர் கீர்த்திவர்த்தன் ; கீர்த்தி வர்த்தனின் மனைவி பெயர் கமலினி; கமலினி சூரியசேர பாண்டியன் என்ற பாண்டியனின் மகள். கமலினிக்குப் பிறந்த மகன் பெயர் செயசோழன்.. செயசோழன் கங்கைகொண்டசோழ புரத்திலே பெரியதொரு சிவன் கோயில் கட்டினானாம். கட்டிய சிற்பி தஞ்சை பெரியகோயிலைக் கட்டிய சோமவர்மாவின் கொள்ளுப் பேரனாம். ஆதலால், சுவடி குறிக்கும் செயசோழன், முதலாம் இராஜேந்திரசோழன் என்று ஆகிறது. முதலாம் இராஜேந்திர சோழன் தலைநகரைக் கங்கை கொண்ட சோழபுரத்தில் மாற்றிவைத்துக் கொண்டான். கங்கைவரை போரிட்டு வென்ற தன் வெற்றியின் நினைவாக ஏற்படுத்தியதே கங்கைகொண்ட சோழபுரம். தொல்பொருள் ஆய்வுத்துறை இவ்வூரில் அகழ்வாய்வு **(excavation)** நடத்தியுள்ளது. சோழமாளிகை என்ற அகழ்வாய்வு

நடத்தப்பட்ட இடத்திலிருந்து சோழர்கால செங்கற்கள் தோண்டி எடுக்கப்பட்டன. செயசோழனின் மகன் பெயர் **கனகசோழன்** என்று உரைக்கிறது சுவடி. பிறகு கனகசோழன் **செண்பகாங்கி** என்ற பெண்ணை மணந்தான். இவனும் சைவப்பணி புரிந்தான் பல வெற்றிகளை அடைந்தான் என்று சுவடி உரைக்கிறது.

இந்தக் **கனகசோழன்** ஆட்சியில் காவிரி. திருவலஞ்சுழி என்ற ஊரில், ஒரு துளைக்குள்ளே போய், வேளாண் தொழில் பாதித்ததாம். அதற்கு பரிகாரமாக கனகசோழனே அந்தத் துவாரத்திற்குள் இறங்க வேண்டும் என்று அசரீரி ஒலித்ததாம். அதன்படி கனகசோழனும், அவன் மனைவி ஜண்பகாங்கியும் அந்த ஓட்டைக்குள்ளே இறங்கி உயிர்விடத் தயாராக இருந்தார்கள். பிறகு ஒலித்த அசரீரியின்படி., இறுதியில், ஏரண்டர் என்ற ரிஷி அந்தப் பலத்துவாரத்துக்குள் இறங்கி பிறகு அவர் வானுலகு அடைந்தாராம். மக்களுக்காக மன்னன் உயிர்விடவும் தயாராக இருந்தான் என்ற ஒரு பண்பாட்டை இந்நிகழ்ச்சி சுட்டுகிறது. தேவாரப் பாடலில், மேற்படி கதையானது குறிப்பால் சுட்டப்பட்டுள்ளது.

கனகசோழனின் மகன் பெயர் சுந்தர சோழன், இவனுக்கு பட்டம் கட்டி வைத்தான், கனகசோழன். ஒரு சோழனின் மகளான சித்திரவல்லி என்பாளைச் சுந்தரசோழன் மணந்தான். சுந்தரசோழனின் மகன் பெயர், காலகாலசோழன். காலகாலசோழனுக்குக் கேரள அரசன் ஒருவனின் மகளான குணவதி என்ற பெண்ணை மணமுடித்து வைத்தார் சுந்தரசோழன்.

இவ்வாறான வரலாறுகளுக்கு இடையே எண்ணற்ற ஆய்வுக் கருத்தக்களையும் நாம் பெறுகிறோம். எடுத்துக்காட்டாகச் சோழ அரசர்கள் பிராமணர்கள் மாட்டு அன்பு செலுத்தி, அவர்களுக்கு ஆதரவாக இருந்து வந்துள்ளனர் என்ற உண்மை., இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள இச்சுவடியான சோழ மன்னர் மகத்துவம் எனும் சுவடி மூலம் அறியக்கிடக்கிறது.

சுந்தரசோழன் வசம், ஒரு பிராமணன் கர்ப்பிணியான தன் மனைவியை ஒப்படைத்துவிட்டு இராமேசுவரம் சென்றான்; சென்ற

பிராமணன் திரும்பி அரண்மனைக்கு வந்து, மனைவியின் நிலையை ஒளிந்திருந்து பார்க்கவேண்டி, ஒளிந்திருந்து பார்த்தான். அங்கு வந்த தன் மனைவியின் கையை பிடித்தான். உடனே 'ஆஆ' என்று அப்பிராமணத்தி அலறவே, சுந்தரசோழன் வாளெடுத்து, இருட்டில் அப்பிராமணனை சரியாகக் கண்டுக் கொள்ளாது, அப்பிராமணனை வெட்டிக் கொன்றான். அதனால் ஒரு பாவம் பிறந்ததாம் சுந்தரசோழனுக்கு. "உனக்கு பாவம் பிடித்துள்ளது" என்று சிலப்பிராமணர்களும் மந்திரிகளும் பயமுறுத்த ஆரம்பித்து விட்டார்கள். "நீ கோயில் கட்டு; அக்கிரகாரம் கட்டிவை; குளம் கட்டு" என்றெல்லாம் அடுக்க ஆரம்பித்தனர். அதை மீற அச்சோழ மன்னனால் இயலவில்லை. இன்றும் கூட வீடுகளில் அந்தத் தோசம் இருக்கிறது, இந்த தோசம் இருக்கிறது என்று கூறி, பலவிதப் பிரயாச்சித்தங்களைச் செய்யச் சொல்லி சில போலிச் சாமியார்களும், போலிச் சோதிடர்களும் கூறினால், அதைக் கேட்டுக் கொண்டு வீட்டுப் பெண்கள் "அதைச் செய்தால்தான் ஆயிற்று" என்று ஒற்றைக்காலில் நிற்பதை நாம் பார்க்கிறோம். சோழர் காலம் முதலே அப்படிபடபட்ட பழக்கம் இருந்து வருகிறது என்பது நமது சுவடியில் துலங்குகிறது.

இவ்வாறு பிராயச்சித்தம் செய்யும் வகையில் சோழர்கள் பல கோயிற்பணிகளைச் செய்துள்ளனர் என்பது ஒருண்மை ஆகும்.

இச்சுந்தரசோழன், தன் மகனுக்குக் (காலகாலச் சோழனுக்கு) தானே இருந்து பட்டம் கட்டினான். பிறகு தன் மனைவியுடன் கைலாசம் போய்ச் சேர்ந்தான் எனச் சுவடி விளக்குகிறது.

இங்கே, இரு உண்மைகள் நம் சிந்தனைக்கு கிடைக்கின்றன.

1. சோழர்கள், அவர்கள் வாழ்நாளிலேயே அவர்களின் வாரிசு மன்னர்களை நியமித்துள்ளனர். அதனால்தான் கி.பி. 846இல் தொடங்கிய சோழப் பேரரசு, தொடர்ந்து கி.பி. 1279 வரை இடைவிடாது நீடிக்க முடிந்தது.
2. கணவனாகிய சோழ மன்னன் இறந்ததும், மனைவியாகிய அரசியும் உடன்கட்டை ஏறினாளோ என எண்ண இடமுளது. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள சுவடிகள் பல, மனைவியோடு சோழன் கைலாசம் சேர்ந்தான் என்றே குறிக்கின்றன.

காலகாலசோழன், தலைகவிழ்ந்து இருந்த ஒரு லிங்கத்தை மேல் நிமிர்த்துவதற்காக, தன் கழுத்தில் கயிற்றைக் கட்டிக் கொண்டு, அந்த லிங்கத்தையும் கட்டி இழுத்தான். கயிறு கழுத்தை அறுத்து இரத்தம் சிந்தியது. அப்போது, அவனுக்கு சிவனருள் கிட்டியது. அவனை ஊரே சிவபக்திக்காக பாராட்டியது. இதை அழகுற வருணிக்கிறது இச்சுவடி. குங்கிலியர்கலிய நாயனாரும், இதே போலச் செய்த கதைக் ஈண்டு ஒப்பிடத்தக்கது.

சோழர்கள் சிவப்பணிவிடையில் தலைசிறந்து விளங்கினர் என்பதை இதைவிட உருக்கமாக வேறு வகையில் சொல்லவே முடியாது.

இதன்பின் 15-ஆவது சோழனாகக் கலியாண சோழன் (காலகாலசோழனின் மகன்) வரலாறு வருகிறது. கலியாண சோழனின் மகன் பெயர் பத்திரசோழன். இக்கலியாண சோழன், ஒரு பாண்டியன், ஒரு சேரன், ஒரு விக்கிரமன் ஆகிய நான்கு அரசர்களும் சபாபதி கோயிலுக்கு நான்கு திக்குகளிலும் நான்கு கோபுரங்கள் கட்டி வைத்திருந்தனர் என்ற ஒரு செய்தியை இச்சுவடி வழங்குகிறது.

பிருகதீசுவரர் ஆலயம் கட்டிய சிற்பி சோமசர்மாவின் மகன் பெயர் சவரவர்மா என்று இச்சுவடி பேசுகிறது.

மேல் பத்திர சோழனின் மனைவி பெயர் சுபுத்திரி.

அறுபத்தேழு வயது உயிருடன் இருந்து, இயற்கை எய்திய கலியாண சோழனுக்குப். பின் அவன் மகன் பத்திரசோழன் ஆட்சிக்கு வந்தான். பதினாறாவது வரலாறாக, இப்பத்திர சோழன் வரலாறு புகலப்படுகிறது.

பத்திரசோழனின் மனைவி பெயர் பத்திரி.

பத்திர சோழன் 70 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக சுவடி உரைக்கிறது. இவனும் பல சிவப்பணிகள் செய்தானென்றும் சுவடி பேசுகிறது.

பத்திர சோழனுக்குப் பிறகு எவரும் குறிப்பிடவில்லை. இவ்வாறு கலியுகத்திலே 16 சோழர்கள் ஆண்டார்கள் என்று கூறி அமைகிறது இச்சுவடி. இச்சோழர்களால் ஏற்பட்ட மொத்தத் தலங்கள் இத்தனை என்ற கணக்கையும் இச்சுவடி நல்குகிறது.

இதனை அடுத்து வரும் சுவடி சோழதேச பூர்வீக சரித்திர வியாக்கியானம் (டி. 2995) எனும் சுவடியாகும்.

மெக்கன்சி, சோழ மன்னர்களைக் குறித்துக் கேட்ட வினாக்களுக்கு விடைதரும் முகத்தான் இந்தச் சுவடி செல்கிறது; விடை தந்தவர், தஞ்சை வேதநாயக சாத்திரியார். பெத்லேங்குறவஞ்சி, சாத்திரக்கும்மி முதலிய பல நூல்களையும், கீர்த்தனைகளையும் படைத்தவர் இவர். சாத்திரக்கும்மி என்ற நூலில் மூடத்தனங்களை வெகுவாகச் சாடியுள்ளார் இவர். தஞ்சை வேதநாயக சாத்திரியாரின் பரம்பரையினர் இன்றும் வாழ்கின்றனர்.

கிறித்தவத் தமிழில், வீரமாமுனிவருக்கு அடுத்த நிரலையில் வைத்து ஆயத்தக்கவர் தஞ்சை வேதநாயக சாத்திரியாரே.

**Vyda Nack** என்று தாட்சுவடியில் உள்ள குறிப்பு, இவ்வேதநாயகரையே குறிக்கும்.

வேதநாயகசாத்திரியாரின் காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு ஆகும். அஃதாவது, கி.பி. 1774 பிறந்து, கி.பி. 1864 இல் மறைந்தார்.

வரலாற்று நோக்கில் அல்லாவிடினும் தஞ்சைவேதநாயகரின் உரைநடை என்ற நோக்கில் இச்சுவடி (டி.2995) மிகவும் பயனுடையதாய் விளங்கும். இத்தாட்சுவடி, தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டதல்ல. அவருடைய கடிதத்தின் படி **(Copy)** ஆகும்.

சோழ அரசர்கள் குறிப்பிட்ட ஓரினத்தார் வசம் தங்களை இழந்து நின்றனர் என்ற ஒரு சமுதாய ஆய்வை நிகழ்த்துகிறார் வேதநாயகர் எகிப்திலிருந்து வந்து தமிழ்மண்ணில் வேரூன்றிவிட்டனர் இவ்வினத்தார் என்றும் அவர் ஆய்கிறார். கி.பி. 19ஆம் நூற்றாண்டில் இருந்து ஒருவிதக் கருத்தோட்டம்

இச்சுவடி மூலம் நமக்கு கிடைக்கிறது எனக் கருத வேண்டும்.

தமிழ் மண்ணில் உருவாகிய வானியல் அல்லது சோதிடக் கருத்துக்களை, அளவாயெல்லாம் எகிப்திலிருந்து இங்கு வந்தவை என்று தஞ்சை வேதநாயகசாத்திரியார் குறிப்பிடுவது சரியல்ல. சோதிடம் என்ற பெயரில் உலவும் வானியல் கருத்துகள் யாவையும் தமிழ்க் கண்டுபிடிப்புகளே!

சோழ தேசத்துக்குடிகள் அனைவருக்கும் அவர்கள் எந்தச் சாதியானாலும் சோழியர் என்ற பெயர் இருந்தது என்றும் வேதநாயகர் எழுதுகிறார்.

சோழர் வரலாற்றை அவர் எழுதினாலும் இன்னும் ஆராய்ந்து ஒழுங்காக எழுதவேண்டுமே அல்லாமல், நினைத்தபடி எழுதக்கூடாது என்று அவரே எடுத்துக் கொள்ளுவதையும் பார்க்கிறோம்.

சைவர்களுக்கு முன் தமிழகத்தில் சமணர்களே தமிழ் வளர்த்தவர்கள் என்றும் சமணர்களே தமிழை உருவாக்கியவர்கள் என்றும் வேதநாயகர் நினைத்துள்ளார்.

பலசைவக் கோயில்கள், முன்பு சமணக்கோயில்களாக இருந்தவையே என்றும் பேசுகிறார் வேதநாயகர்.

தஞ்சை வேதநாயகசாத்திரியார், இசைத்தமிழ் புலவராவார். அப்படிப்பட்ட ஒரு தமிழ்ப் புலவருக்குத் தமிழக வரலாறு பற்றி எந்த அளவுக்கு அந்நாளில் (கி.பி. 18, 19 நூற்றாண்டு) தெரிந்துள்ளது என்பதற்கு இந்தச்சுவடி சிறந்த ஆதாரமாகும். சுருங்க உரைக்கின், தஞ்சைவேதநாயகரைத் திறனாய்வு செய்ய நமக்குக் கிடைத்த ஒரு பெட்டகம் இந்தச் சுவடி எனலாம்.

சேர, சோழ, பாண்டியர்களின் வருமானம் பற்றியும் சிறிது சிந்தித்துள்ளனர். சோழநாட்டின் வளம் சிறப்பானதாகையால், பாண்டியநாட்டின் பரப்பைவிடக் குறைந்த பரப்பைச் சோழர் பெற்றிருந்த போதும், வருமானம் குறையாது இருந்தது என்கிறார் வேதநாயகர்.

தஞ்சை வேதநாயக்க அரசர்களையும். அவர்களைத் தொடர்ந்த தஞ்சை மராட்டிய அரசர்களையும் குறித்துத் தஞ்சைவேதநயாக சாஸ்திரியார் எழுதுவது வரலாற்றோடு பொதுநோக்கில் ஒத்துவரக்கூடியதாகவே இருக்கிறது. தஞ்சை மராட்டிய அரசர்களைப் பொறுத்தவரையில், வேதநாயகர் தந்துள்ள ஆண்டுகளில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சோழதேச பூர்வ சரிதம் (டி. 3178) சோழர்களுக்கடுத்த இராயர்கள் பெயர் ஆய்வு (டி.3179) ஆகிய இருதாட்சுவடிகளும், மேலே வந்த வேதநாயகரின் சோழதேசப் பூர்வீகச் சரித்திர வியாக்கியானம் என்னும் தாட்சுவடியும் ஒன்றே. ஒரே செய்திகள், ஒரே மூல பாடம் இம்மூன்று சுவடிகளிலும் உள.

அடுத்துள்ள, சோழ., சேர. பாண்டிய மன்னரக்ள் வமிசாவளி (டி.3280) எனும் தாட்சுவடி பூந்துறையில் இருந்த ஒரு கவிராயரிடம் இருந்த ஆவணம் ஒன்றின் நகல் ஆகும். தேரூர்ந்த சோழன் கதையை முதலில் சுவடி விவரிக்கிறது. நீதி வழுவாத மனுநீதிச் சோழனைச் சோதிப்பதற்கே, தேவர்கள், தேர்க்காலில் கன்று பட்டு இறப்பது போலக் காட்சியை உருவாக்கினர் என்கிறது இச்சுவடி.

சோழர்களின பட்டியலை இச்சுவடி எழுதிக் காட்டுவது பயனுடையது. பட்டியல் குறிக்கும் சோழர்கள் சிலரின் பெயர்கள் புதிதாக இருக்கின்றன. மொத்தம் 66 சோழர்களின் பெயர்கள் பட்டியல்களில் வருகின்றன.

இதைப் போலவே, சேரர்களின் பட்டியல்களும் தரப்பட்டுள்ளன. மொத்தம் 50 சேர அரசர்களின் பெயர்கள் இப்பட்டியல்களில் தரப்பட்டுள்ளன. சேர அரசர்களின் பெயர் கொண்ட அப்பட்டியல் வாயிலாக சோழர்களைப் போலவே, சேரர்களும் சிவப்பணி செய்துள்ளனர் என்று உய்த்துணரலாம்.

பாண்டியர்களின் பட்டியலையும் இச்சுவடி நிரலே எழுதிக்காட்டுகிறது. எழுபதுக்கும் மேற்பட்ட பாண்டிய அரசர்களின் பெயர்களே இச்சுவடி தருவது குறிப்பிடத்தக்கது.

பாண்டியர்களின் பெயர்களில், 'சித்திர' என்ற அடைமொழி ஆய்வுக்கு உரியது. சித்திரக்கலை பாண்டிய நாட்டில் நன்கு வளர்க்கப்பட்டிருக்க வேண்டும்.. நெடுல்வாடையில் நக்கீரர் சித்திரம் பற்றிப் பேசுகிறார். உரோகிணி வான் மண்டலத்தில் இருப்பது போன்ற சித்திரம் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அரண்மனையில் வரையப்பட் டிருந்ததாக நக்கீரர் நெடுநல்வாடையில் பாடியுள்ளார். புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டம் பற்றியும் அதே நூலில் நக்கீரர் பாடியுள்ளார்.

இச் சுவடியில் குறிக்கப்படும், சிலப்பதிகாரக் கதை ஆய்வுக்குறியது. கோவலன், கண்ணகியின் இன்னொரு காற்சிலம்பை மதுரையில் விற்கவந்தது, தனது வணிகத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளவே இதுவே சிலப்பதிகாரம் பாடுவது ஆனால், இதற்கு மாறாக, தாசியின் மீது கொண்டமோகத்தால், கண்ணகியின் இன்னொரு காற்சிலம்பை மதுரையில் விற்க வந்தான் கோவலன் என்று இச்சுவடி எழுதுகிறது.

கோவலன் கொலையுண்டான் என்று கேள்விப்பட்டு, காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கண்ணகி மதுரை வந்ததாக இச்சுவடி கூறுகிறது. கோவலன் கொலைப்பட்ட இடத்தில் தீவைத்து, பிறகு தன் தனங்களை கிள்ளி, பாண்டியனின் அரண்மனை மீதும், மதுரை நகர் மீதும் எறிந்தாள் கண்ணகி என்றும் இச்சுவடி பேசுகிறது. சிலப்பதிகார நூலில் சொல்லப்பட்ட கதைக்கும் இதற்கும் சிற்சில வேறுபாடுகள் உள்ளமை இங்கு சுட்டத்தக்கது. இவ்வகையில் சிலப்பதிகார மேலாய்வுக்கு இந்நூல் பெரிதும் பயனதைக் காணலாம்.

பாண்டிய அரசர்களின் கடைசிக் காலகட்டத்தை விளக்கமாக கூறுகிறது இச்சுவடி. இதில் சில அரிய செய்திகள் வருகின்றன.

கிருஷ்ணதேவராயரின் கீழ் அப்போதிருந்த பாண்டிய நாடு யாரால் ஆளப்பட்டது என்பதற்கான சில பயனுள்ள குறிப்புகளைத் தருகிறது இத்தாட்சுவடி.

பாளையப்பட்டுகள் பற்றிய அரிய செய்திகளையும் இத்தாட்சுவடி நல்குகிறது. மொத்தம் 75 பாளையப்பட்டுகளுக்குப் பட்டியல் தருகிறது சுவடி.

இப்பாளையப்பட்டுகளில், நாயக்கர் பாள்ளயங்களே மிகுதி. இந்நாயக்கர்களின் தாய்மொழி தெலுங்கு.

நாயக்கர் பாளையங்களைத் தவிர மறவர் பாளையங்களும், கவுண்டர் பாளையங்களும் 72ல் அடங்கும்.

72 பாளையப்பட்டுகளின் பட்டியலை ஜெகவீரபாண்டியனார், தமது வீரபாண்டியன் வரலாற்று நூலில் தந்துள்ளார். அப்பட்டியலுடன், இச்சுவடிகளும் பட்டியல் ஒத்திட்டு ஆயத்தக்கது.

இவைதவிர, 25 கோட்டைகளின் பட்டியலையும் நல்குகிறது இச்சுவடி.

இவ்வாறு அறிய கருவூலமாக விளங்குகிறது இத்தாட்சுவடி. அடுத்து, ஸ்ரீரெங்கம் திருச்சினாப்பள்ளியிருக்கப்பட்ட பிராம்மண வித்துவாம்ஸாள் சொன்ன உத்திரவு (டி. 3186) என்ற தாட்சுவடியில் வினாவிடை முறையில் அமைந்துள்ளது. சுவடிப் பொருளின் அமைப்பு வகையில் **(Structure of the Manuscript Content)** இது குறிப்பிடத்தக்கது.

"பாண்டவர்களுள் ஒருவராகிய தர்மரும், சோழ நாட்டில் பேர் பெற்ற தர்மவர்மரும் ஒருவரா?" என்று கேட்கப்படுகிறது; "ஒருவரல்லர்; வேறுவேறானவர்;" என்ற விடை கிடைக்கிறது.

வரலாற்றை மக்களுக்குப் புலப்படுத்திய எளிய உத்தி என்று இதைக் குறிக்கலாம்.

கிருமிகண்டசோழன் என்பவனுக்கு அப்பெயர் எப்படிவந்தது? இராமானுஜர் காலத்தால் அச்சோழன் கழுத்தில் புளுத்து, இறந்தானாம்! ஆகவே கிருமிகண்ட சோழன் என்று பெயர் ஏற்பட்டதாம். இவ்வாறு இச்சுவடி விளக்கம் நல்குகிறது.

பொதுவாக அரசர்கள் சிலர் நோய் காரணமாக இறந்துள்ளனர். மெக்கன்சியின் ஆவணங்களில் பல சான்றுகள் உள. மருத்துவ வசதி இல்லாத பழந்தமிழகத்தில் இவ்வாறு நேர்ந்துள்ளமை கருதத்தக்கதே.

வடகலை என்ற ஒரு பிரிவு, இராமானுஜர் காலத்திலேயே இருந்தது என்று இச்சுவடி எழுதுகிறது. இராமானுசரின் திருப் பாடியத்திலும், (ஸ்ரீபாஷியம்) இதற்கான குறிப்புகள் உள. வேதாந்த தேசிகர்தான் வடகலை, தென்கலைப் பிரிவுகளை உருவாக்கினர் என்று ஒரு வழக்கும் உண்டு. வேதாந்த தேசிகர் (தேசிகப் பிரபந்தம் என்று 19 நூல்களைப் படைத்தவர்), கி.பி. 13ஆம் நூற்றாண்டினர்; இராமானுசரோ, கி.பி. 11ஆம் நூற்றாண்டவர். வேதாந்த தேசிகருக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பே வடகலை, தென்கலை என்ற பிரிவுகள், அப்பெயர்களில் இல்லாவிடினும், ஏதோ ஒரு வகையில் வைணவ மதத்தில் இருந்தன என்று கருதலாம்.

ஆனால், வேதாந்த தேசிகர் காலத்தில், சைவர்களே வைணவர்களுக்குள் ஒரு வேற்றுமையை உருவாக்கி, தென்கலை என்ற சில பிராமணர்களைப் பிரித்து, அந்த வேதாந்த தேசிகரை எதிர்த்தனர் என்று விவரிக்கிறது இந்தச் சுவடி இஃது ஆய்விற்குரியது.

இச்சுவடியில், 115க்கும் மேற்பட்ட தமிழகக் கோயில் தலங்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது.

பாண்டியர்களின் பழைய தலைநகரம் மதுரை அல்ல என்றும், மதுரைக்கு அருகிலுள்ள மணலூர் என்ற ஊரே என்றும் இந்தச்சுவடி செப்புகிறது.

சோழ மண்டலம், கொங்குமண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்களின் எல்லைகளும் சுருக்கமாக இச்சுவடியில் நுவலப்பட்டுள.

இச்சுவடியில் கேட்கப்படும் கேள்விகள் மெக்கன்சியின் கேள்விகளாக இருக்கலாம்.

சந்திரவம்ச வரலாறு எனும் தாட் சுவடியில் (டி. 3188), சந்திரவம்சம் விளக்கப்படுகிறது.

சூரியவம்சம், சந்திரவம்சம் என்ற இரு பெரிய இந்திய வம்சங்களிற் பிறந்தோர் ஆட்சியாளர்களாக இருந்துள்ர். கலப்பு வம்சத்தவர்கள் சந்திரசூரிய வம்சம் என்று குறிக்கப்பட்டனர். எனவே, இச்சுவடி நம் ஆய்வில் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

பாண்டவர்கள் சந்திரவம்சத்து அரசர்கள் என்கிறது சுவடி.

அருச்சுனனிலிருந்து ஒரு கொடிவழியைத் தருகிறது இச்சுவடி. அது வருமாறு:-

அருச்சுனன்
மகன்
அபிமன்யு
மகன்
பரிட்சித்து
மகன்
செனமேசெனன்
மகன்
இராஜராஜ நரேந்திரன்
மகன்கள்
சாரங்கதரன்; சாரங்கபாணி

இறுதியாகக் குறிக்கப்பட்ட சாரங்கதரன், சாரங்கபாணி ஆகியோருக்குப் பிள்ளையில்லாததால், சந்திரவமிசம் அற்றுப்போனது என்று குறிக்கிறது இந்தச்சுவடி.

இவற்றின் பின் 23 சோழர்கள் பட்டியலாக இட்டுக் காட்டப்படுகின்றனர்.

தொண்டைச் சோழன் என்பவனே தொண்டைநாடு ஏற்படுத்தியவன் என்றும், அப்போது அவன் தெற்கேயிருந்து குடிகளை அழைத்துவந்து தொண்டை நாட்டில் குடியேற்றினான் என்றும் நுவலுகிறது சுவடி. இவ்வகையில் தமிழகத்தே நடைபெற்றுள்ள பல்வேறு மக்கள் குடியேற்றங்களை **(Settlement of Tamils)** ஆராய மெக்கன்சியின் சுவடிகள் பெரிதும் பயனளிக்கின்றன.

சம்புகேசுவரர் தலமகாத்மியம் எனும் தாட்சுவடி (டி. 2823; ஆர். 7730) திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்துத் திருவானைக்காவல் பற்றியது. பார்வதி, சிவனருகே, பொருள் இல்லாது புன்சிரிப்பும் செய்ததால், அவள் பூமியில் மீண்டும் பிறக்க நேரிட்டது விளக்கப்படுகிறது.

திருவானைக்காவல் தலத்தின் ஒரு தீர்த்தத்தில் அக்கினிபகவான் தனது சாபத்தைப் போக்கிக் கொண்டானாம். என்ன பாவம் செய்தான் அக்கினிபகவான்? வருணனுடைய மனைவியைப் புணர்ந்த பாவமாம்! சுவடி இவ்வாறு நுவன்று செல்கிறது.

அகத்திய தீர்த்தம், இராமதீர்த்தம், அக்கினிதீர்த்தம் என்றெல்லாம் உள்ள தீர்த்தங்களுக்கு பெயர் வந்தவகை இச்சுவடியில் புலப்படுகிறது.

இவ்வாறான பல்வேறு ஆய்வுக் களங்களை உருவாக்குகிறது இந்தப் பதிப்பு.

வரலாறு, பண்பாடு ஆகியவற்றுக்காக மட்டுமில்லாது, உரைநடை வோன்ற தமிழ்மொழிக் கூறுகளுக்காகவும், இந்தப்பதிப்பு தேவையானதே.

இச்சுவடிப்பதிப்பு நூல் வெளியிடுவதில் பல்லாற்றானும் துணை நல்கிய தொல்பொருள் துறை இயக்குநர் திரு. கு.தாமோதரன், எம்.ஏ., அவர்களுக்கு என் நன்றி உரித்தாகும்.

அன்புடன்

முனைவர். **சு. செளந்தரபாண்டியன்**
எம்.ஏ(தமிழ்), எம்.ஏ. (ஆங்கிலம்) பி.எட்., டிப்.வ.மொ. பி.எச்.டி
காப்பாட்சியர்
அ.கீ.சு. நூலகம், சென்னை - 5.

## THE FLUTTERING OF FOLIOS

In this valuable collection of manuscripts, housed at G.O.M.L, Chennai - 5. are present invaluable historical anecdotes depicted vividly by our ancestors.

One can smell the smell of native soil in these manuscripts.

Sketching of the entire history of the chola kingdom is not the aim of this book. We have only published here manuscripts of G.O.M.L. particulary those collected by Colin Mackenzie pertaining to the Cholamandalam, for the use of rerearchers.

My thanks are due to Mr.K.Damodaran, M.A., Director, Department of Archaeology, Chennai - 113. for his continous efforts in G.O.M.L. publications.

**DR. S. SOUNDARAPANDIAN,**
M.A. (Tamil), M.A. (English) B.Ed.,
Dip. Skt. Ph.D
Curator
G.O.M.L., Chennai - 5.

# பொருளடக்கம்


| வ. எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | சோழமன்னர் மகத்துவம் | 50 |
| 2. | சோழதேசப் பூர்வீகச் சரித்திர வியாக்கியானம் | 132 |
| 3. | சோழ, சேர, பாண்டிய, மன்னர்கள் வமிசாவளி | 154 |
| 4. | ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளியார் சொன்ன உத்தரவுகள் | 181 |
| 5. | சந்திரவம்ச வரலாறு | 202 |
| 6. | சம்புகேசுவரத் தலமகாத்மியம் | 210 |

# 1. சோழமன்னர் மகத்துவம்

(டி. 2994)

## 1. சோழ ராசாவினுடைய சரித்திரம்

1. பவிஷோத்திர புராணத்தில், சமஸ்கிறுத பாஷையாக விருந்ததை ராஜ மகாராசா சத்திரபதியாகிய **சரபோசி** மகாராசா சாயேபு அவர்களினாலே லோகோபகாரத்தைக் குறித்து தமிழிலே சுருக்கமாய்ச் செய்யப்பட்டிருக்குது; யெப்படி யென்றால் லோகத்துக்கு கர்த்தாவானவர் உமையாளாலே மிகவுஞ் சந்தோஷித்து, உண்மையுடனே முன் நடந்த நடத்தைகளு. மினிமேல் நடக்கப்போற நடத்தைகளுமிப்போது நடக்கிற நடத்தைகளுஞ் சொல்லவேணுங்கர்தாவே யென்றுமையாள் கேழ்க்க, கர்த்தாவானவர் சொல்லுகிற பிரகார மென்னாவென்றா "லிந்த லோகம் கிறுதயுகம், திரேதாயுகம், துவாபாரயுகம் கலியுகங்க ளனேகனாட் சுத்திவரும்போது.

---

1. *பவிஷ்ய புராணம், பவிஷ்யோத்திர புராணம் என இரு புராணங்கள் வடமொழியில் அச்சில் உள்ளன. அ.கீ.சு. நூலகத்திலுள்ள பவிஷ்யோத்திரபுராணச் சுவடியில், சுவடி விவரிக்கும் சோழர் வரலாறு எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

பிரளயகாலம் வந்து ததனாலே, பனிரெண்டு சூரியாளுதையமாகி, யந்த சூரியாக்கினியா லுலகாமல்லா மெறிந்து சாம்பலாய், அந்த சாம்பலும் பெருங்காத்தினாலே பறந்து பெருமழையினாலே தண்ணீரா யந்தத் தண்ணீருங் காத்தினாலே ஷோஷித்துலோகமே யில்லாமற் சூனியமாயிருக்கும்போது, கற்தாவானவர், பிரமாவென்றும் விஷ்ட்டுணு வென்றும், ருத்திர னென்றும் மூன்று பேர்களை யுண்டாக்கி, யவர்களாலே திரும்ப லோகத்தை யுண்டாக்கவு மதினிடத்திற் சூரியன், சந்திரன், மலைகள், விருட்சங்கள், சமுத்திரங்கள் முதலாகிய வஸ்துக ளுயிர்களிதுகளை யந்தந்த மரியாதை தப்பாமலிரட்சிக்கவும் சம்மரிக் கவும் வல்லமையுள்ள நீரேழு சமுத்திரங்களுக்கும் தீவுகளுக்கு நடுபாஷியாய் செம்புதீபத்தி லொன்பது நவகண்டத்திற் பாரத காண்டமாகிய பூமியிமோர பறுவத முதல் ராமேஸ்வரம் வரைக்கும் புண்ணிய பூமியாய், சிரேஷ்ட்டமா யிருக்கப்படு மதினாலேஅனேகம் புண்ணிய நதிகள், கங்கை, யெமுனை, சரஸ்வதி, நர்மதை, கபிலை, துங்கை, யோட்டனை, சோனை, கிருஷ்ட்டனை, கோதாவரி, பீமை, தாம்பிரவரணி, காவேரி முதலாகிய மஹாநதிகளும் கேதாரங், குருஷ்சேத்திரம், பிரமபாசம், பிரயாகம், காளஞ்சிரம், மகாகாளம், புஷ்க்கரம், பதரிவனம், சித்திரகூட்டம், நயமிசம், கங்கா, துவாரம், மயேசுவரங், கோகரனம், திரியம்பகம், ஸ்திரிசயிலம், மருணாசலம், காளத்தி, விறுத்தாச்சலம், கோபர்வதம், சிதம்பரம், சய்யபர்வதம், மயேந்திரபர்வதம், சுத்திபர்வதம், நிஷத பர்வதம், அயோத்தியா, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரவத்தி யிது முதலாகிய சிவஸ்தலங்கள் விஷ்ட்டுணு ஸ்தலங்க ளிதுகளெல்லாம் பிரளைய காலத்திலே நஸ்ட்டமாய் திரும்பவு மெப்படி யுண்டாகிற திதை நன்றாய்ச் சொல்லவேணுமென்று றுமையாள் கேட்டதற்கு, கர்த்த ருத்திரவு சொல்லும்படி என்னவென்றால்,

---

2. *சம்மரிக்க - சம்ஹரிக்க - அழிக்க*

2. பிரளயமான பிறகு பிரமா உலகத்தை யுண்டாக்கும்போது, முன்னிருந்தபடியே யுண்டாக்கினாலுந் சிவஸ்தலங்கள் விஷ்ட்டுணுஸ் தலங்கள் சூட்சமாய், காடுமணல் மேடுமாகி யிறந்துபோ யிருந்ததுகளை, சூரிய வமுஷத்திலேயு சந்திர வமுஷத்திலேயுந் துவாபர யுகமாகிய மூன்று யுகத்திலேயு மென்பேரில் மிகுந்த பத்தி யுண்டாகி, காடுமேடுகள் திரித்தி, பிறாகார கோபுர மண்டபங்கள் கட்டி, ஸ்தலங்கள் தோறு மந்தந்தவிடங்களிலே விக்கினேசுவரர், சுப்பிரமணியர் முதலாகிய தேவதைகளுக்கும் கோவில்கள் கட்டினார்கள்.

மறுபடி யென்னுடைய சேனைகளாகிய கணங்கள் பூமியிலே ராசாக்களாக **சத்திரிய** வமுஷத்திற் பிறந்து, கலியுகத்திலே நந்த னென்கிற ராசா மட்டுக்கும் ஸ்தலங்களுக்கு சீரணோத்தாரணம் பன்னினார்கள் லிதன்மேற் கலியுகத்திலே சூத்திர பெண் வயதிற் பிராமன பீடத்துக்கு பிறந்த பேர்கள் சேரனென்றும், விக்கிரமனென்றும் பாண்டிய **னென்றும் சேரனெனன்றும்** நாலு ராசாக்களிந்த பூமியிற் சிவதர்மங்கள் செய்யிறபேர்க ளவாளுடைய நடத்தைகளு மவர்களுடைய வமுஷ பாரம்பரைகளும் மடக்கிச் சொல்லுகிறாரோ மதிற், சேரனென்கிற ராசா சிவபத்தன், விபூதி, ருத்திராஷ்ச வலங்கிறுதன்; சிவலிங்க பூசை, சிவபத்த பூசை, சிவ பணிவிடையிற் பிரியமுள்ளவரவர் வமுஷத்திற் பிறந்த பேர்களுமப் படியே யவர்களாலேயே செய்யப்பட்ட தர்மங்க ளென்னவென்றாற் கங்கையிலறுபத்துநாலு படித்துரைகள் கட்டிவைத்தார்கள். விசுபலிங்க முதலாகிய நாற்பத்திரெண்டு லிங்கங்களுக்குங் கோவி லின்னம் ஞானவாவி முதலாகிய தீர்த்தங்களுக்குப் படித்துறை யிதுவும் கேதாரம், பிரயாகம், பங்காரம், வயித்தினாதம், பிரபாசம், அக்கரம், புஷ்க்கரம், கோகரணம், திரியம்பக முதலாகிய வனேக சிவஸ்த்தலங்களி லிருவத்திரண்டு தலைமுறை வரைக்குஞ் சேர ராசாக்களாலே பணிவிடைகள் செய்யப்பட்டது. யாதுவும் பிராமண வக்கிறாரங்கள், வழிகளிலன்ன சத்திரங்க டண்ணீர்ப் பந்தல்கள், சாலைகள் முதலாகிய தர்மங்கள் மிகவு முண்டாக்கப்பட்டது.

3. பின் நந்திபர்வதத்துக்கு தென்னண்டைப் புறத்திலே **விக்கிரம** ராசா, **போசராசா, முஞ்சுராசா** முதலாகிய பேர்கள்,

பெண்ணையாறு முதலாகிய நதிக்கரைகளிலே ஸ்ரீசயிலம், காளஅஸ்த்தி, அகோபளம், திருப்பதி முதலாகிய சிவஸ்தலங்களுக்கு சீரணோத்தாரணஞ் செய்து, கோவில் கொளங்கள் கட்டிவச்சு தர்மம் செய்தார்கள். **பாண்டிய** ராசாக்கள் அன்பது தலைமுறை வரைக்கும் தாம்பிரவரணி, வைகையாறு முதலான நதி தீரங்களிலே மதுரை, திருனல்வேலி, செனார்த்தனம், சுசீந்திரம், ரிஷபாத்தி, தோதாத்திரி, கன்னியாகுமரி முதலான ஸ்தலங்களுக்கு கோவில் கொளம், அக்கிறாரம், அன்னசத்திர முதலாகிய தர்மங்கள் மிகவும் செய்தார்கள். அந்த பாண்டிய வமுஷத்திலே மலயத்துவச பாண்டியராசாவினுடைய தபத்தினாலே அவன் **வயத்திலே நீ பெண்பிள்ளையாய்ப்** பிறந்தபோது நானும் சுந்தரலிங்கத்திலே யிருந்து உன்னுடனே லீலை செய்து, அறவத்துனாலு திருவிளையாடல்கள் செய்து, மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர், சுந்தரர் யிந்த மூன்று பேர்களுடைய வாய்மொழியினாலே சிவஸ்தலங்கள் தோறும் தேவார முதலாகிய தமிழ்ப்பாட்டுகள் உண்டாக்கப்பட்டுது.

3. மாணிக்கவாசகராகிய ஆவிடையாற்கோவில், உத்தரகோசமங்கை முதலாகிய ஷேத்திரங்களிலே அப்போ பணிவிடைகள் பண்ணப்பட்டுது. இதுவும் யிந்த சிவபத்த வமுஷத்திலே அறுவத்து னாலுபேர் பத்தாள் பிறந்து, அவர்களாகவே சிவஸ்தலங்கள் தோறும் பணிவிடைகள் செய்யப்பட்டுது. இனிமேல் சோழ வமுஷத்து ராசாக்கள், அவர்கள் செய்த தர்மங்கள் அவர்கள் நடத்தைகளும் சொல்லப்படுகிறது; யெப்படியென்றால், யென்னுடைய சேனைகளாகிய சிவகெணங்கள் சோழ வமுசத்திலே ராசாக்களாக பிறந்தார்கள். அவர்களுக்குக் கீர்த்தியே திரவியம் யுத்தத்திலே செயமுள்ள பேர்கள், விபூதி, ருத்திராட்ச அலங்கிருதாள். அவர்கள் **சிவபத்தாள்,** பூசை சிவலிங்க பூசை பிராமண பூசை செய்கிறது.

---

*3. ருத்திராட்ச அலங்கிருதாள் - உருத்திராக்கம் அணிந்தவர்கள்*

4. அவர்கள் சிவஸ்தலங்களிலே சொயம்பு லிங்கங்கள் யெங்கெங்கே யிருக்குதோ அதுகளுக்கெல்லாம் பிரார மண்டபங்கள் கட்டி வச்சு, தாங்கள் புதுசாக சிறிது சிவாலயங்கள் பிராகார கோபுரங்களுடனே உண்டாக்கினார்கள். இதுவும் அக்கிராரங்கள், அன்ன சத்திரங்கள், தண்ணீர், பந்தல்கள், நந்தவனங்கள், சாலையிதுகளெல்லாம் உண்டாக்கினார்கள். நாலிலொரு கடமை வாங்கிக் கொண்டு குடிகளுக்கு சவுக்கியமாய் குத்தமுள்ள பேர்களை, தெண்டிச்சு தன் பிள்ளைகளைப் போலே ஜனங்களை ரெட்சிச்சு, யேழைகளாயிருக்கிற பேர்கள், னொண்டி, முடம் குருடாகயிருக்கிற பேர்கள், யிவர்களை யெல்லாம் ராவும் பகலும் விசாரிச்சி அன்வைஸ்த்திரங்கள் குறித்து, சோடச மகாதானங்களும் பதினாரு திரம் பிராமணர்களுக்குக் கொடுத்து, நிசி ராத்திரி வேளையிலே கூட சகடைகளிலே அன்னங்கள் கொண்டுபோய் யேழைகள் பசிச்சிறாமல் போட்டு நீதியோடே ராச்சியபாரம் பண்ணுகுறத்தினாலே

அவர்கள் னாளையிலே உலகத்திலே திருடுகிற பேர்கள் பொய் சொல்லுகிறபேர், தப்புக் காரியங்கள் செய்யுகுறபேர் யில்லாமல் கலியுக ஆதியிலே இந்த சோழ பூமியிலே ஆயிரம் வருஷம் ராட்சிய பாரம் பண்ணினார்கள். அந்த சோழ ராசாக்களுடைய சரித்திரத்தை ஒவ்வொருத்தர் சரித்திரத்தைத் தனித்தனியே சொல்லுகிறோம்.

5. இப்படி சொன்ன கற்தாவுடைய வசனத்தைக் கேட்டு உமையாள், "சோழ ராசாக்களுக்கு ராச்சியம் வந்த வரலாறு யெப்படி? அவாள் பதினாறு தலைமுறை யிருந்து அதுக்கு மேல் யில்லாமல்ப் போனத்துக்குக் காரணீக மென்ன? அவர்கள் சிவ பணிவிடைகள் யெப்படி செய்தார்கள்? இதுகளெல்லாம் சொல்ல வேணுமென்று கேட்டத்துக்கு கற்தா சொன்ன உத்தரவு. "கலியுக ஆதியிலே கரவடக்கிறாமம் யெங்குற ஊரிலே சிவபத்தியுடனே விபூதி ருத்திராட்ச அலங்கிறுதனாக சிவ பணிவிடைகள் செய்துக் கொண்டுக் குலோத்துங்க ரெண்டு ஒருவர் யிருந்தார்!

---

*4. சகடை - வண்டி*

*5. கர்த்தா - சிவன்;*

அவருடைய பெண்சாதி **கோமளை** யென்று பேர், புருஷனுக்கு பணிவிடை செய்து கொண்டு குணமுள்ளவளாய் வணக்கத்துடனே சிவபத்தாளுக்கு பூசை செய்துகொண்டு யிருவரும் ஒருமனசாய் நன்மையாய்க் குடித்தினம் பண்ணிக் கொண்டு யிருந்தார்கள். அவர்களுடைய நல்ல நடத்தையினாலே மெத்த சந்தோஷத்தை யடைஞ்சு அவர்கள் மனசை சோதிக்கிற நிமித்தியமாக, நடுராத்திரியாலே ஒரு பரதேசியாக வேஷமெடுத்துக் கொண்டு, கந்தை காஷாய வஷ்த்திரம் தரிச்சிக் கொண்டு, "மெத்தப் பசியாயிருக்குது; அன்னங்குடுக்க வேணுமெ"ன்று னான் போனேன்! அந்த வேளையிலே அவர்களிருவரும் ஒருமையாய் உண்மையுடனே சிவபத்தாளை சிவனுடைய சொரூபமென்று மெத்த தோஷத்திரம் செய்து ஆசார உபசாரத்தோட போசனம் பண்ணி வய்த்தார்கள். அவர்களுடைய பத்தியினாலே மெத்த சந்தோஷப் பட்டு, **குலோத்துங்க சோழனுக்கு** சோழ ராச்சியம் பட்டங்கட்டிப் பதினாலு தலைமுறை வரைக்கும் தவறாமல் ராச்சிய பாரம் நடக்கும் படியாக உத்திரவு கொடுத்தேன்.

6. அதின்பிறகு குபேரனை அழைச்சு, **குலோத்துங்க சோழனுக்கு பதினாலு தலைமுறை** வரைக்கும் ராட்சியபாரம் நடக்கும்படியாய் உத்திரவு கொடுத்து இருக்கிறோம்! ஆகையினாலே அவனுடைய வீட்டிலே நவநிதியளோட கூட திரவியங்களுக்கு தாட்சியில்லாமல்க் கொடுத்துக் கொண்டு நீ போய் வாசம் பண்ணுவாயென்று உத்தரவு கொடுத்தேன். இது தவிர, தெண்டக்காரண்ணியத்திலே சோழ தேசத்திலே திருவையாத்துக்கு தென்னண்டையிலே சமீவனாமென்று தஞ்சாவூரெண்டும் பேரோட ஒரு பட்டண மிருக்குது. அதிலே னானும் உமையாளும் தஞ்சேசுவரரென்றும், ஆனந்தவல்லியென்றும், பேரோட வாசம் பண்ணுகிறோம். அந்த ஸ்தலத்திலே நீ யிராவணனாலே அவமானப்பட்டு விசனத்தோட யெங்களை யிருவரையும் பூசை பண்ணிக்கொண்டு தவம் செய்தாய்! அப்போ உனக்கு நவநிதியாய் கொடுத்து, அந்த ஸ்தலத்துக்கு தெட்சன அளகை யென்று பேருங் கொடுத்து, அதிலே உனக்கு ஆதிபத்தியமுங் கொடுத்து, அந்த ஸ்தலத்திலே வாசம் பண்ணுகிற செனங்களுக்கு குறையாத சம்பத்துங் கொடுக்கச் சொல்லி, உனக்கு உத்தரவு பண்ணியிருக்குரோமே; ஆகையாலே நீ அங்கே போய் **குலோத்துங்க சோழனுக்கு**

பட்டங்கட்டி வச்சிருக்கிறோமே அவனுக்கு நவரெத்தின கசிதமான கிரீட ஆரம் முதலான ஆபரணங்கள் கொடுத்து, பிரகாசமாய் அவனுக்குப் பட்டங் கட்டினத்தை விளங்கப் பண்ணிவை!" யென்று சொன்னார்.

7. அப்படியே சிவாக்கினையாலே குபேரன் செய்தபிறகு, கற்தர் குலோத்துங்க சோழனுக்கு பிரதிஷ்டமானார். குலோத்துங்க சோழனுங் கற்தாவை மிகவுந் துதி செய்தார். அப்போது கர்த்தர் சொன்ன உத்தரவு, நீ என்னுடைய கெணம் மனுஷனாய் பிறந்திருக்கிறாய்; நீ யிந்த ராச்சியத்துக்கு ராசாவாய் நீதியுடனே ராச்சிய பாரம் பண்ணிக் கொண்டு, யிந்த தேசத்திலே சுயம்புவாய் சிவலிங்கங்கள் கட்டி, சீரண உத்தாரணம் பண்ணுகுறத்துக்கு உதவி செய்யுற நிமித்தியமாக நவந்தியளோடே கூட உன்கிட்ட குபேரனை நேமிச்சிருக்கிறோம்! வேண்டிய திரவியங் கொடுப்பான்! இது தவிர, தேவதைகளுடைய சில்ப்பி விசுவகர்மா், மயன், தாதா, விதாதா முதலான பேர்களையும் மனுஷாளுக்குள்ளே பிறந்து சிவாலையங் கட்டுகிறதுக்கு உனக்கு உதவி செய்யச் சொல்லி ஆக்கியாபிக்குரோம்!" என்று அப்படியே விசுவகர்மாவுக்கு உத்தரவு கொடுத்தார். அது தவிர பூமியிலே யிருக்கிற நிதியன் உன் கண்ணுக்கு தெரியக்கடவதென்று வரமுங் கொடுத்தார். குலோத்துங்கசோழன் சந்தோஷத்தினாலே சுவாமியை மெத்தவும் துதி செய்தான். அப்போது, சுவாமி சந்தோஷமாய் கண்ணுக்கு மறைஞ்சார். குலோத்துங்கசோழன் ஆச்சரியத்தை அடைஞ்சான்.

அதன்பிறகு, குலோத்துங்கச்சோழனுக்கு தன்வீட்டு தோட்டத்தில் நிதிகள் யிருக்கிறதுகள் கண்ணிலே தெரிஞ்சு, குலோத்துங்க சோழன் அதுகளையெல்லாம் வெட்டியெடுத்து, யானை குதிரை முதலாகிய சேனைகள் சேவுகம் வச்சு, அதினாலே சத்துருக்களை யெல்லாம் ஜெயிச்சு, சீமையெல்லாம் தன் சுவாதீனம் பண்ணிக் கொண்டு, காவேரியினுடைய விரு கரையிலேயும் யிருக்கிற காடுகளை யெல்லாம் வெட்டித் திருத்தி முகத்துவார பரியந்தம் **பவானிகூடல்** முதல் சிவாலையங்கள் கட்டி வச்சார். பவானி கூடலிலே, நஞ்சுண்டேசுவரர், ரெத்தினகிரி மலையிலே ரெத்தினகிரியீசுவரர் கோவில் கட்டி வச்சார்! திருச்சிராப்பள்ளி மலையிலே தாயுமானவர், மட்டுவார்

குழலியம்மாள் உச்சிபிள்ளையார் இவர்களுக்கு கோவில்கட்டி வச்சார். **திருணுசோதியீசுவரர் கோவில், மருதகிரியிலே** சீரண உத்தாரணம் பண்ணிவச்சார். திருவானைக் காவலிலே, ஸ்ரீரெங்கத்திலே, தெட்சண கோகணரத்திலே, தில்லை ஸ்த்தானத்திலே, திருவையாத்திலே, திருப்பயணத்திலே, தஞ்சாவூரிலே யிதுகளில் யெல்லாம் பிரகார, கோபுரம், மண்டபங்கள், கட்டி சீரண உத்தாரணம் பண்ணி வச்சார்! தஞ்சாவூரிலே தஞ்சரிபுரியீசுவரர் கோவில்த் தவிர, யெட்டுத்திக்கிலே யெட்டு சத்தியினுடைய கோவில் கட்டி வச்சார். அவாள் பேர் யென்னவென்றால், யேகவீரசெயந்தி, மயிஷாசுர மற்த்தினி, மாரிரேணுகை, காளி, கொடிமற்த்தினி யிந்த எட்டு பேர்களும் **தஞ்சாசூரனை** அடிக்குற நிமித்தியமாக வந்து, அவனை அடிச்சார்கள். அவன் போறபோது, தன் பேருலே வெகுனாள் பிரசித்தமாயப் பட்டணமிருக்க வேணுமென்று பிறார்த்திட்டான். அதுனாலே **தஞ்சாபுர** மென்று ஒரு பட்டணம் பிரசித்தமா யிருக்குது! அந்த பட்டணத்துக்கு யீசானிய மூலையிலே வசிஷ்ட்டர் பூசை பண்ணின சிவலிங்க மிருக்குது; அதுக்குக் கீழண்டையிலே வசிஷ்ட்டர் உண்டாக்கின திருக்குள மிருக்குது; யிது தவிர அதுக்கு தென்னண்டையிலே வயித்தினாத லிங்க மென்று ஒரு சிவலிங்க மிருக்குது. அது ஒரு காரணத்தினாலே பூமாலை சூடி, குதிரைமேல் ராவுத்தனாய்க் கர்த்த வேஷமெடுத்தார். அந்த லிங்கத்துக்கு நிறுதி மூலையிலே தேவதீர்த்தமென்று ஒரு திருக்குள மிருக்குது. அங்கே கந்தனேசுவரரென்று ஒரு சிவலிங்கம் யிதல்லாமல் தஞ்சேசுவரருக்கு மேலண்டையிலே நீலமேகப் பெருமாளென்றும், சிங்கப் பெருமாளென்றும் விஷ்ணு தலங்க ளிருக்குது. யிதல்லாமல் கொங்கணசித்தர் பூசை பண்ணின லிங்கங் கொங்ணேசுவர லிங்கமென்று யிருக்குது. யிதுகளுக்கெல்லாம் சீரண ·உத்தாரணம் செய்து வச்சார். தஞ்சேசுவரருடைய கோவில் சீரண உத்தாரணம் கோபுர பிரகாரம், ஆனந்தவல்லி கோவில் சன்னதியிலே ஒருத் திருக்குளமும் உண்மையாய் கட்டி வைத்தார். யிப்படி தொண்ணூறு வருஷம் சிவபணிவிடை செய்து கொண்டு, நீதியுடனே பிராமண அக்கிராரம் சாஸ்த்திரங்களும் உண்டாக்கி வய்த்து, தன்மகன்

தேவசோழனுக்கு ராட்சிய பட்டாபிஷேகம் பண்ணி வைத்து, அதுக்கு மேல் கயிலாசத்துக்குப் போய் சிவரூபத்தை அடைஞ்சார்.

**இது குலோத்துங்கசோழனுடைய சரித்திரம்.**

8. இனிமேல் தேவசோழனுடைய சரித்திரம் சொல்லுகுறோம்.

**தேவசோழன்,** நல்ல மந்திரங்களோட வட தொகப்பனாரைப், போலே நீதியுடனே ராட்சியபாரம் பண்ணிக் கொண்டு மத்தியாற்ச்சுனம், கும்பகோணம், திருவெண்காடு, துருதிஸ்தலம், ஸ்ரீவாஞ்சியம், குத்தாலம், துர்க்கேசுவரம் யிந்த யிஸ்த்தலங்களிலே யெல்லாம் சிவபணிவிடை பண்ணி, அறுவது வருஷம் ராஷ்சிய பாரம் பண்ணி, தன்னுடைய குமாரன் **சசிசேகர சோழனுக்கு** பட்டாபிஷேகம் பண்ணி வைச்சு சிவ பதத்தை அடைஞ்சார்.

**சசிசேகர சோழன்** சண்பக வல்லி யெங்குற பெண்சாதியோடே கூட நீதியாக ராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டு மாயூரம், வயித்தீசுவரன் கோவில், திருக்கடையூர், திருவலங்காடு, திருக்கோடிக்காவல், நல்லூர், திருணல்லாரு, வேதாரண்ணியம், திருவாடுதுறை, விஷ்ணுபுரம், க்ஷீரவனம், சிலேசுவரம், வாருகுணசுவரம், கரவடேசுவரம், வில்வாரண் ணியம் யிது முதலாகிய சிவஸ்தலங்கள், விஷ்ட்ணு ஸ்தலங்கள் அறுவது ஸ்தலங்கள் சிரண உத்தாரம் பண்ணி, பிறத்தார மண்டப கோபுரங்கள் கட்டி வைச்சார்! யாவருக்கு **காவேரி கண்ட சோழனென்று** பேர் வந்ததுக்குக் காரணம், அவருக்கு **குணவல்லியென்று** ஒரு பெண், அந்த பெண்ணை பாண்டிய ராசாவுக்கு கலியாணம் பண்ணிக் குடுத்து, அதுமூலமாய் சிவபிராமணர்களுக்கு அக்கிராரங்கள் கோவில்களுக்கெல்லாம் விதிபூர்வமாய் பூசையள் பண்ணி வைச்சுக் கொண்டு, அந்த கியாபகமா யிருக்கும் போது, காவேரியிலே பெருவெள்ளம் வந்த செனங்கள் மெத்த அவதிப்பட்டு, சோழராசா ஒரு மண்டலம்

---

*8. தொகப்பனார் - தகப்பனார்*

சாப்பாடு யில்லாமல் சிவபூசை பண்ணிக்கொண்டு நதீபுரம் யெங்குர ஸ்தலத்திலே சுவாமியை குறித்து தோஸ்த்திரங்கள் பண்ணினானர். அப்போ, ஆகாசவாணி ரூபமாய் கற்த்தர் சொன்னது என்னவென்றால், காவேரிக்குங் கொல்லடத்துக்கும் நடுவிலே அணைக்கட்டி சோழதேசம் யெவளவு செலம் வந்தால் விளையுமோ அவளவு போகக், குறை கொல்லடத்திலே விடுகிறாப்போலே ஒரு அணை கட்டு ; அந்தப் படிக்கு காவேரியை வரத்தக்கதாக காவேரிக்கு ஆக்கியாபிச்சிருக்குரோ மென்று சொன்னார்.

9. அப்படியே, காவேரி, அம்மாளுங் கனவிலே வந்து அணைகட்டச் சொல்லி உத்தரவுக் கொடுத்தாள்! அதுக்குமேல், ஸ்ரீரெங்கத்துக்கு கிழக்கே யோக்கியமான யிடம் பாத்து, பஞ்சலோகம் வாத்து **கல்லணை** கட்டினான். நதிபுர யீசுவரர் கோயில் சீரண உத்தாரணம் பண்ணி, கட்டி வைச்சார்! அதனாலே சசிசேகர சோழனுக்கு காவேரி கறைகண்ட சோழனென்று பேர் வந்தது! யிப்படி எழுவது வருஷம் நீதியுடனே ராட்சிய பாரம் பண்ணி **தன்னுடைய குமாரன் சிவலிங்க சோழனுக்குப்** பட்டங் கட்டிவைத்துப் போட்டு, சிவகெண பதத்தை அடைந்தார்.

## 10. சிவலிங்க சோழன் கதை

சிவலிங்க சோழன் பத்மவல்லி என்குற பெண்சாதியோட கூட தற்மமாய் ராட்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டு, சத்துருக்களை செயித்து, அனேகந் திரவியம் சம்பாரிச்சு திருப்பிரம்பியம், சுவாமிமலை, சோமேசுவரம், பட்டிசுவரம், சிவலீசுவரம், தானிசுவரம், ஸ்ரீவில்லிபுரம் முதலாகிய நூத்தொரு சிவஸ்தலங்களிலே சீரண உத்தாரணம் பண்ணி, பிரகார கோபுரங்கள் கட்டி வைத்தார். பழவாரு தலப்பு சீர்மை பண்ணி வச்சார். அந்த **சிவலிங்கசோழன்,** திருவாரூரிலே தியாகராசருடைய திருநாள் ருத்திரபாதம்

பார்க்குறதுக்கு சமுசாரத்துடனே போயிருந்தவிடத்தில் ராசாவினுடைய குமாரன், **வீரசோழன்** குதிரைகட்டின தேர்மேலேயேறி வீதியிலே விளையாட்டுக்கு போனவிடத்தில் தேரை வேகமாய் விட்டான். அந்தத் தேர் வண்டில் காலிலே பசுவின் கண்ணுக்குட்டி ஆப்பிட்டு நசுங்கிப் போச்சுது. அதினுடைய தாய் சிவலிங்கச்சோழன் அரண்மனை வாசலிலே வந்து கண்ணீர் விட்டு அழுதுகொண்டு கதரித்து! அது என்னவென்று நிசமாக விசாரித்து, தன்னுடைய மகன் செய்த குத்த மென்று தெரிந்து கோபின் மணது ளேக மாகாதென்று தன்னுடைய மகனையும் அந்த வண்டில் காலிலேதானே குடுத்து நசுக்கிப் போடச் சொன்னான். அப்போ, ஆகாசவாணி ரூபமாக கற்த்தர் ராசாவை மிகவும் புகழ்ந்து, பசுவின் கன்னையும் அந்த பிள்ளை யையும் பிழைப்பு மூட்டுவிட்டார். அதைப் பார்த்து, செனங்களெல் லாம் மெத்த சந்தோஷப்பட்டாள். ராசாவும் தாயையும் கன்றையும் சேத்துவிட்டு, தன்னுடைய மகனை கூட்டிக் கொண்டு, தியாகராச ருடைய சன்னதிக்குப் போய் சுவாமியை தோஸ்த்திரவு பண்ணி, தன்னுடைய பேர் வெகுனாளிருக்கும்படியாக கல்லாலே தேரும், அதின்மேல் வீரசோழனும் அந்த தேர்வண்டிக் காலிலே கண்ணுக் குட்டி அகப்பட்டால் போலேயும், பசுமாடு யிதுகளை யெல்லாம் சிலாப் பிரதயமையாக அடிச்சு, கோவிலுக்கு யீசானிய மூலையில் வைத்திருக்கிறார். யிப்படிக் கொத்தப் பெருமையும் நீதியும் உள்ள **சிவலிங்கசோழன் ராசா** தற்மத்துடனே அறுவத்தேழு வருஷம் **ஆண்டு, முடிவிலே தன்னுடைய குமாரன் வீரசோழனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணி வைச்சு, தான் சிவலோகத்தை அடைஞ்சார்.**

---

*10. கோபின் - கோவின் - பசுவின்; மணதுளேகம் மனதில் ஏக்கம்; பிரதமை - பிரதிமை - உருவம்; ராட்சிய பாரம்*

## 11. வீரசோழன் கதை

அதின் பிறகு வீரசோழன் யேமவல்லி என்கிற பெண்சாதியூடனே தொகப்பானாரைப் போலே தற்ம ஞாபமாய் ராட்சியம் ஆண்டுகொண்டு தியாகராச ஸ்த்தலங்கள் திருவாரூர் தவிர நாகபட்டணம், தேவதாரண்ணியம், திருஒத்தியூர், கீழ்வள்ளூர், திருத்தலை, பூண்டி, திருப்புனவாசல், திருனல்லாரு யிந்த யேழு ஸ்தலங்களுக்கும் பிரகார மண்டப கோபுரங்கள் கட்டி வைச்சு, யிது தவிர யின்னம் சிறிது சிவஸ்தலங்களும் சீரண உத்தாரணம் செய்விச்சு, காவேரியிலே வீரசோழன் எண்ணு ஒரு ஆறு; அதன் பேராலே உண்டாக்கி வைத்து சமுத்திரத்திலே முகத்துவாரம் உண்டாக்கி வைச்சார்! அதுக்கு பாலமுங் கட்டி வைச்சார். யிப்படி யெண்பத்தேழு வருஷ ராட்சிய பாரம் ஆண்டு, தன்னுடைய மகன் கரிகால்சோழனுக்கு பட்டங் கட்டி வைச்சு, தானும் சிவலோகத்தை அடைந்தார்.

## 12. கரிகால் சோழன் கதை

அதன்பிறகு, **கரிகால் சோழன்,** காஞ்சி நாங்கி யெங்குர பெண்சாதியுடனே தர்மமாக தன் ராட்சியம் ஆண்டுகொண்டு வந்தார். அவருக்கு கஞ்சநூர் ஆழ்வார் **அரதத்ரென்று** ஒருவர் மகாசிவபத்தர், அவர் உபதேச குருவாயிருந்தார். அவருடைய ஆக்கினையினாலே, கஞ்சநூரிலே அக்கினியீசுவரருடைய கோவில் கட்டி வைச்சார். அது தவிர, துற்கேசுவரம், மங்களேசுவரம், ஆம்பரவனேசுவர முதலாகிய அனேக சிவஸ்தலங்களுக்கு பிரகார கோபுரங்கள் கட்டி வைச்சு, தன் வயத்தில் பிறந்த பிள்ளைகளைப் போலே செனங்களை யெல்லாம் ரெட்சித்துக் கொண்டு வந்தார். அப்படி யிரானென்றிருக்கிற கரிகால்சோழ ராசாவுக்கு சென்மாந்திர பாபத்தினாலே **கறுப்பு குஷ்ட்டரோகம்**

உடலிலே வியாபித்து, அதினாலே மெத்த யிரவும் பகலும் துன்பத்தை அடைந்து, தன்னுடைய குருசுவாமி அரதத்தருக்கு நமஷ்க்காரம் பண்ணி விண்ணப்பம் செய்தது என்னவென்றால், தங்களுடைய திருவடிகளை பணிந்து நம்பியிருக்கிற என்னிடத்திலே தேவரீர் தயவுபண்ணவேணும் எனக்கு இந்த ராட்சியத்தினாலேயும் போக போக்கியங்களினாலேயும் திரவியங்களினாலேயும் மனசுக்கு சந்தோஷமில்லை! நான் தர்மத்தோடே பெத்த பிள்ளைகளைப் போலே சகலமான செனங் களையும் ரெட்சித்துக் கொண்டு வருகுரேன்; அக்கிராரங்கட்டி பிராமணாளுக்கு குடுத்துயிருக்கிறேன்; யிது தவிர அன்னசத்தி ரங்கள், சாலைகள் தண்ணீர் பந்தல்கள் உண்டாக்கி யிருக்கிறேன் சோடச மகாதானங்கள் பதினாரு திரங் குடுத்துயிருக் கிறேன்! யிதுதவிர, சுயம்புஷ் தலங்களிலே பிரகார கோபுர மண்டபங்கள் தளவரிசைகள் சீரண உத்தாணம் பண்ணி, கட்டி வைத்திருக்கிறேன். யிது தவிர, கோதானங், கன்னிகாதானம் முதலாகிய அனேக தானங்கள் சற்பாத்திரங்களிலே குடுத்துயிருக்கிறேன். அகில், என்னுட குஷ்ட்டரோகம் போகவில்லை. னான் என்ன செய்ய? ஆகையாலே தேவரீருடைய திருவடிகளே சரணமென்று அடைந்தேன். இதுக்குபாயம் விசாரிச்சு, தாங்கள் சிவபத்தாளானபடி யினாலே இந்த உபத்திரவத்தை நீக்கி வைக்கவேணுமெ" ன்று பிராத்தனை பண்ணினதுக்கு **அரதத்த ஆசாரியார்** சொன்ன உத்தரவு. "ராசாவே விசனப்படாதேயும் னான் ஒரு மண்டலத்திலே சிவனைப் பிராத்திச்சுக் கொண்டு ஒரு நிட்சயஞ் சொல்குரேனென்று

---

*12. சோடச - பதினாறு; ஆகில் - ஆனால் ; தேத்தரவு - தேறுதல்;கஞ்சினூர் - தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடை மருதூர் வட்டத்தைச் சேர்ந்த ஊர்.*

ராசாவுக்கு தேத்தரவு சொல்லிப்போட்டு பல்லக்கு மேலே யேறிக் கொண்டு சிறுது சிவபத் தாளுடனே ஆலோசனை செய்து கொண்டு, கஞ்சனூர்லே அக்கினீசுவரர் கோவிலிலே சமீபத்திலே காவேரியிலே காலமே ஸ்தானம்பண்ணி, விபூதி ருத்திராட்சங்கள் தரித்துக் கொண்டு, நல்ல பொறுமையுள்ள சிவபத்தாள் பிராமணாளோடு கூட உப்பில்லாமல் விரதமாக அவிசுபட்சிச்சுக் கொண்டு, பஞ்சாட்சர மந்திரசெபம் பதினாயிரம் ஆவிர்த்தி செபித்துக் கொண்டு மகா அபிஷேக பூசைகளினால் சுவாமிக்குச் சந்தோஷ முண்டாக்கி வைத்தார். அதெப்படி யென்றால், சிவபிராமண வமுஷத்திலே பிறந்த பேர்களால் சிவாகமங்கள் படித்த பேர்களாயிருக்குற பிராமணாளைக் கொண்டு, மகா ஙியாச பூர்வமாக ருத்திரா அபிஷேகம் பண்ணி வைத்தார். அதெப்படி யென்றால், நூத்தெட்டுத் தங்கக் குடங்கள் பண்ணி, அதுக்குள்ளே சாம்பிராணி முதலான வஸ்துக்களினாலே வாசனைகள் கட்டி காவேரி செலத்தை நிறைய விட்டு, அந்த செலத்துக்கும் வாசனைகட்டி மேல்ப்பட்டு வஸ்திரமுதலாகிய சாமானாலே அந்த குடங்களுக்கு அலங்காரம் பண்ணி நூத்தெட்டு பிராமணாளை நேமிச்சு, ஒவ்வொருத்தரை பதினோரு பதினோருதரம் ருத்திரஞ் செபிக்கச் சொல்லி, அந்த செலத்தினாலே சுவாமிக்கு அபிஷேகம் பண்ணுகிறது. இப்படிக்கு நித்தியமும் மூணுவேளை. இது தவிர, சிவலிங்கத்துக்கு மேலே நாலுபிரமும் அபிச்சின்னமாக யேகதாரையாக அபிஷேக 'மாகும்படியாக தாரா அபிஷேகமும் பண்ணி வைத்தார்.

13. இதல்லாமல், தெய்வீக சுப்பிரமண்யியருக்கு, பிள்ளையாருக்கு எல்லாம் பூசைகள் நிவேத்தியங்கள் பண்ணி வைத்து, மூணுவேளையுங் கற்தாவை தோஸ்த்திரம் பண்ணின விதமெப்படி யென்றால், சந்திரனுக்கு வந்த உபத்திரத்தை நீக்கி, அவனை தலையின் மேலே பூஷணமாக தரித்த கற்தாவே கெங்கைக்குயிருந்த கெருவத்தை அடக்கி, அவளை சடையிலே தரித்து, பாவிகளுக்கு உக்கிர ரூபராகவும், பக்த்தாளுக்கு சுந்தர ரூபராகவும், முக்கண்ணராகவும் யெங்கும் நிறைஞ்சவராகவும் உலகத்தை உண்டாக்கி சங்கரிக்க வல்லமை யுள்ளவராகவும், பத்தாளுடையே உபத்திரத்தை நீக்கி, சுகத்தைக் கொடுக்கிற நிமித்தியமாக காலனைக் காலுதைத்து, அந்தகாசூரனை சூலத்தால் கிழித்து மன்மதனை நெத்திக் கண்ணாலே விளங்கானென்றிருக்கிற கற்தாவே, உமையவளுக்கு பற்தாவே, உம்மை நான் சரணமாக

அடைந்து, உம்முடைய திருவடிகள் பணிந்து நம்பியிருக்கிற என்னுடைய மணக்கவலை தீர்க்கவேணு மென்று மூணுவேளையிலேயுந் தியானித்து, தோத்திரவு செய்து கொண்டு மண்டலம் அக்கினீசுவரருடைய சன்னியாதானத்திலே, அறந்தத்த ஆசாரியார் தவஞ் செய்தார்.

14. இப்படி தவஞ்செய்து கொண்டிருக்கிற அரதத்தாசாரி யினுடைய கினாவிலே யிளம்பிறை, கெங்கை, சடை, விபூதி, ருத்துராட்ச நாகாபரண அலங்கிறுதாய் பிரசன்னராக வந்து கரிகால்சோழ ராசாவினுடைய உபத்திரம் நீங்கிற நிமித்தியம் சேதி சொன்னது என்ன வென்றால், அடே அரதத்தா என்னுடைய மனோபாவத்தை யிந்தப்படி ராசாவுக்கு நீயே சொல்லு யென்னவென்றால், முன்னாலே காளத்தி ஷேத்திரத்திலே யிந்த கரிகால்சோழராசா

முன் சென்மத்திலே ஒரு வேடனாய் பிறந்திருந்து அனேக மிருகங்களை அடித்து, யிமிஷை பண்ணிக் கொண்டிருந்தான். அந்த பாபத்தினாலே யிவனுக்குக் கருங்குஸ்ட்ட ரோகம் வந்து யிருக்குது. ஆனால் யிவன் ராசாவாகப் பிறந்தது யெந்தப் புண்ணியத்தினாலே யென்றால் காளத்தியிலே சிவன்ராத்திரி தினத்திலே, சிவலிங்கத்தைக் கண்ணாலே கண்டான். அந்தப் புண்ணியவசத்தினாலே, ராசாவாய்ப் பிறந்தான் ஆகையாலே யிவன் குஸ்ட்ட ரோகம் போறத்துக்கு ஒரு உபாயஞ் சொல்லுகிறேன். அந்தப்படிக்குச் செய்யச் சொல்லு அதென்னாவன்றால் தெண்டகாரண்ணிய மென்கிற காட்டிலே செனங்தான மெங்கிற விடத்திலே கரானன்று ஒரு ராட்சத னிருந்தான். அவன்யிப்படியே பஞ்சவனத்திலே சந்தோஷமாய் ஒவ்வொரு ஆனைக்குட்டி அவ்வளவு உயரம் ஒவ்வொரு பார்த்திபலிங்கம் நிமித்தியம் நூத்தெட்டு லிங்கம் பண்ணி நியமமாக பூசைபண்ணி தன் மனோரத சித்தியடைந்தான். அந்த லிங்கமெல்லாம் கும்பலாகப் போட்டான். அது ஒரு மண்மேடாக யிருக்குது. அது யெங்கே யென்றால் பஞ்சரவனத்திலே தஞ்சேசுவரரென்று ஒரு சுயம்பு லிங்க மிருக்குது; அதற்கு நிருதி மூலையிலே கற்தனேசுவரன்

---

*13. காலன் மென்*

யென்கிறத்துக்கு மேலண்டையிலே சிவகெங்கை யென்றொரு குளம் உத்தமமா யிருக்குது; அந்த தீர்த்தத்திலே ஸ்தானம் பண்ணினாலும் பானம் பண்ணினாலும் கண்ணாலே பார்த்தாலும் பாபங்கள் போயிவிடும், புண்ணியங்களுண்டாகும். யதுவுங் கொங்கணேசுவர லிங்கத்துக்கு தென்னண்டை சக்திகூப மென்று ஒரு கிணறு யிருக்குது; அதுக்கு மேலண்டையிலே சுப்பிரமணிய மூர்த்தி யிப்பவு மிருக்கிறார். கார்த்திகை மாசம், கிற்திகா நட்சத்திரத்திலே அவரை தெரிசனம் பண்ணினால் மெத்த புண்ணியம் உண்டாகும், அந்த சுப்பிரமண்ணியருக்குத் தென்னண்டையிலே முன் சொன்ன சிவகெங்கைக்குத் தென்னண்டை யாக்கரன் என்கிற ராட்சசன் பூசைபண்ணின பார்த்திப லிங்கங்கள் ஒரு மண்மேடா யிருக்குது! அது மகா புண்ணியபூமி அத்தை **சில்ப்பியள்** பார்த்தால் தேவக்காதம் யென்று சொல்லுவார்கள்; அந்த விடத்திலே நீ கரிகால் சோழ ராசாவுக்குச் சொல்லி கருங்கல்லாலே ஓயர்ந்த விமானமாய் கெற்பகிரகங் கட்டி வைத்து, அப்படியே சுப்பிரமணியர், விக்கினேசுவரர், பார்வதி இவர்களுக்கு விமானங் கட்டி வைத்து கருங்கல்லாலே இரண்டு கோபுர பிரகாரங்கள் கட்டி வைத்து, பிரகாரத்தை சுத்திலும் அகிளுண்டாக்கி வைக்க வேணும் யிந்தக் காரியத்துக்கு விக்கினம் வராமல் கற்தளேசுவர லிங்கத்துக்கு வடவண்டையிலே ஒரு பிள்ளையார் கோவில் கட்டி அதிலே தொப்பை பிள்ளையாரென்று பேரும் வைத்து பூசை பண்ண வேணும்; அதுக்கு மேல் ராசாவும் நீயுமாய் நிர்மதாநதி யென்கிற ஆத்துக்குப் போய் அதிலே பிரணவ குண்ட மென்றொரு குண்ட மிருக்குது, அதிலே ஸ்த்தானம் பண்ணி, பக்த்தியோடே முழுகினால் அதிலே ரெண்டு பாணலிங்கங்கள் ராசா கையிலே அகப்படும் அது ஆப்பிட்ட வுடனே அங்கேதானே போட்டு விட்டு மூணாவது ஆகப்பட்ட சூட்சமாயிருக்கிற லிங்கத்தை யெடுத்துக் கொண்டு கரை மேலே வந்தவுடனே அது வரவர பெருத்து விற்தி அடையும் ஆகையாலே அதுக்குப் பிறகீசுவரரென்று பேரு! ருத்திரமென்கிற மறையிலே சொல்லப்படுது. அந்த லிங்கத்தை வண்டியிலே

---

*14. சில்ப்பியள் - சிற்பிகள்*

யேத்தி புஸ்ப்ப மண்டபத்துடனே நித்தியமாய்ப் பூசை நிவேத்தியத்தோடே கூட வழியிலே மனுஷாளைவிட்டு வண்டிலையிழுத்துக் கொண்டு வரவேணும் உன்னுடைய பத்தியினாலேயும் ராசாவினுடைய பத்தியினாலேயும் வருத்தப்படாமல் வந்து சேரும். கொண்டு வந்து பிரகார கோபுரமுங் கட்டி முடிகிறவரைக்கும் அபிஷேக தூப தீப நிவேத்தியங்களோடே கூட விதியோடே சிவ பிராமாணாளை விட்டு பூசைபண்ணச்சொல்ல வேணும் அதுக்கு மேல் திருவையாத்திலே யிருக்கிற ஆதிசைவாள் கு[illegible]த்திலே பிறந்து சிவசேகரன் முதலாகிய யிருவத்துனாலு சிவபிராமண[illegible]ாக் கொண்டு, அந்த லிங்கத்துக்கு சரியாய் பிரமபீடம் விஷ்ட்டுணு பீட்டத்துடனே ஆவிடையாள் பண்ணி கெற்ப கிரத்திலே வைத்து. அந்த லிங்கத்தை அதிலே பிரதிஷ்டை பண்ணி விதியோடே அஷ்ட்ட பந்தனம் பண்ணி, கும்பாபிஷேகமும் பண்ணி நித்தியமாய் பூசை பண்ணினால் அந்த லிங்கம் பாதாள பரியந்தம் வேரோடி சுயம்புலிங்கமாயிருக்கத் தக்கதாய் னான் ஆகிறேன்; அதிலே யாதாமொருத்தர் யென்னை தெரிசனம் பண்ணுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் தர்மார்ந்த காமம் மோட்சம் யிது னாலுகளையுங் கொடுக்கிறேன். பர்வகாலங்களிலே சிவகெங்கா தீர்த்தத்திலே ஸ்தானம் பண்ணி பிரஹதீசுவரர் தெரிசனம் பண்ணி அவரசவர்களுக்குள்ள சத்தி தீபங்களேத்தி வில்வங்களினாலே பூசை பண்ணினால், அவளாவாள் மனோரதத்தின்படி நிறைவேற்றி வைக்கிறேன்.

15. பெரியனாயகி யென்று தேவிக்கு பேரு வைத்து தனிக்கோவிலுங் கட்டி பூசை நடப்பிவிக்க வேணும். லிங்கத்தினுடைய சன்னியதானத்திலே ஒரு கல்லாலே உயர்ந்ததாய் ஒரு விருஷபம் செய்விக்க வேணும் அதுக்கு நிருதி மூலையிலே ஒரு விருஷம் சித்திபிரதமை மழை வருகிறத்துக்கும் அதிக மழை நிருத்துறத்துக்கும் சத்தியுள்ளதாய்ப் பிரதிஷ்ட்டை பண்ண வேணும். இதல்லாமல் லிங்கத்துக்கு தென்னாண்டையிலே சுரங்களெல்லாம் போக்கடிக்கது. சத்தியுள்ளவராய் அகோரமூர்த்தி யென்று ஒரு மூற்தி பிரதிஸ்ட்டை பண்ணி, சந்தனக் குளம்பினாலே அபிஷேகம்

பண்ணி பூசை நிவேத்தியம் பண்ணவேணும் இப்படி யெல்லாம் உத்தமமான வேலைகள் செய்கிறத்துக்கு யோக்கியமான **சில்ப்பி விச்வகர்மா** வமுஷத்திலே பிறந்தவன் **சோமவர்மா** வென்று காஞ்சிபுரத்திலே யிருக்கிறான். அவன் முன்னாலே காஞ்சிபுரத்திலே யேகாம்பர லிங்கத்துக்கு உயர்ந்து கோபுரமாக ஒரு கோபுரங்கட்டி சேரராசாகையாலே வெகுமானம் வைத்து மிருக்கிறான். இப்போதும் அவனை அழைப்பிவிச்சு வெகுமானம் பூசைகள் பண்ணி அவன் கையினாலே நாம் சொன்ன விதிப்படிக்கி பிரகாரம் கோபுரங்கெற்கிரகம் முதலானதுங் கட்டி வைத்து, சொன்ன பிரகாரம் பூசையும் பண்ணிவைத்தால் அந்த குஸ்ட்ட ரோகத்தை நாம் போக்கடித்துப் போருகிறோமென்று சோழராசாவுக்கு நீ சொல்லி, யிந்தப்படி செய்வை யென்று அரதத்த ஆசாரியாருக்குச் சொற்பனத்திலே வந்து சொன்னார். அரதத்த ஆசாரியார் யிந்தப்படி சிவாக்கினை சொற்பனத்திலே கண்டு மிகவுஞ் சந்தோஷத்தை யடைந்தார்.

16. மறுநாள்க் காலமேயெழுந்திருந்து அரதத்த ஆசாரியார் காவேரியிலே ஸ்த்தானம் பண்ணி அக்கினீஷ் வரருக்கு பூசை பண்ணி பதினாயிரம் பிராமணாளுக்கு சாப்பாடு பண்ணி வைத்து, விபூதி பிரசாதங்கள் வாங்கிக் கொண்டு சந்தோஷத்துடனே பல்லக்கு மேலேறிக் கொண்டு பட்டீசுவரத் துக்கிட்டே யிருக்கிற கரிகால் சோழனுடைய அரண்மனைக்குப் பிறப்பட்டு வந்தார். அப்போ, சோழராசா, அரதத்தர் வருகிற சமாசாரம் அரிக்காரர் சொல்லக்கேட்டு, தன்னுடைய பரிவார செனங்கள் மந்திரிகள் தங்கப் பிரம்புகள் கைப்பிடித்து வாசல் காற், பாரா சேவகர் இவர்களுடனே கூட சதிரிலேயிருந்து அரதத்த ஆசாரியார் வந்தவுடனே யெழுந்திருந்து காலிலே கும்பிட்டு விழுந்து ஒடுக்க வணக்கத் தோடே அவரைதன் சிம்மாசனத்திலே உளுக்கார வைத்து, கை கூட்டி தான்

---

*16. பட்டீச்வரம் - கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 6 கி.மீ. தூரத்தில் உள்ள ஊர்.*

முன்னின்று சேதி சொன்னது என்னவென்றால், "நான் தன்னியன் நான் உம்மாலே மெத்த அனுக்கிரகம் செய்யப்பட்டவன். தம்முடைய முகப்பிரசன்னமா யிருக்கிறத்தைக் கண்டு கற்தர் யென்னிடத்திலே பிரசன்னரானா ரென்று நினைக்கிறேன். சிவாக்கிஞையைக் காட்டிலும் குருவாகிய தங்களுடைய ஆக்கிஞையேக் காட்டிலும் குருவாகிய தங்களுடைய ஆக்கிஞையே யெனக்குப் பெரிசு! ஆகையாலே தாங்களிட்ட கட்டளைப் பிரகாரஞ் செய்கைக்கி சித்தனா யிருக்கிற னென்ற ராசாவினுடைய விசேஷத்தைக் கேட்டு மெத்த சந்தோஷப்பட்டு, அரதத்த ஆசாரியார், மந்திரி, சேனாபதியள், சாஸ்திரியள், கவிகள் அனைவரும் பார்த்திருக்க ராசாவினுடைய நெத்தியிலே திருனீரிட்டு வணக்கமுள்ள ராசாவுக்கு பிரசாதமுங் கொடுத்து, சிவபிராமணாளைக் கொண்டு மந்திரி முதலான பேர்களுக்கு விபூதி பிரசாதமுங் கொடுப்பிவிச்சு அனைவரும் பார்த்திருக்க ராசாவைப் பார்த்து, அரதத்த ஆசாரியார் சொன்ன உத்தரவு யென்னாவென்றால், "ராசாவே! பத்தாளுடைய விசனத்தை தீத்து காப்பாத்திற பொறுப்பு உள்ளவர் கற்தா உன்னுடைய உபத்திரத்தை நீக்க வேறே வயத்தியாள் தேவையில்லை! யெல்லா உபத்திரத்தை தீர்க்கிறதற்கு அவரே ஒரு பெரிய வயித்தியர்; உன்னுடைய குஸ்ட்ட ரோகத்தை சிவன் நீக்கி வைப்பார். அவர் ஆக்கினையினாலே நானிந்த வாற்தை சொல்லுகிறேன். யெப்படி யென்றால் உன்னுடைய உபத்திரம் நீங்கிற நிமித்தியமாக ஆக்கினசுவரரை நான் ஒரு மண்டலம் பூசை பண்ணினேன். அந்த மண்டலத்தின் முடிவிலே வடிவாகிய பரமசிவன் யென்னுடைய கினாவிலே வந்து சேதி சொன்னார். அதென்னவென்றால், சமீவன மென்கிற ஸ்தானத்திலே தஞ்சேசுவரலிங்கத்துக்கு தென்னண்டையாய் தளீசுவரலிங்கத்துக்கு மேலண்டையாய் சிவகெங்கை யென்று ஒரு தீர்த்த மிருக்குது. அது சிவலிங்க தீர்த்த மென்று சொல்லுவார்கள். அந்த தீர்த்ததுக்குத் தென்னண்டையிலே கரன் யெங்கிற ராட்சசன் பூசை பண்ணின பார்த்திப லிங்கங்கள் மண்மேடா யிருக்குது! அவிடத்திலே கருங்கல்லாலே இரண்டு கோபுரங்கள் கெற்ப கிரகங்கள், பிரகாரங்கள் பெரியதாய்க் கட்டி, அதிலே நர்மதா நதியிலே யிருக்கிற லிங்கங் கொண்டு வந்து

பிரதிஷ்டை பண்ணு! அது மகாஸ்தலம் இதல்லாமல் காவேரிக்கும் விண்ணாருக்கும் தெற்கு சமீசிலிங்கத்துக்கும் வதந்தேசு லிங்கத்துக்கும் வடக்கு மணிமுத்தா நதி யென்று ஒரு ஆறு. அதிலே அற்பசி மாசம், காற்திகை மாசம், மாசி மாசம் வைகாசி மாசம் யிதுகளிலேயும் பருவ காலங்களிலேயும் ஸ்த்தானம் பண்ணி யிந்த ஸ்த்தலங்களிலே சுவாமி தெரிசனம் பண்ணி அங்க பிரதெட்சணம் முதலாகிய பிரதெட்சணமும் பண்ணினால் பாபங்களெல்லாம் பரிகாரமாகும். எந்தெந்த ஸ்தலங்களென்றால் ஆனந்தவல்லி, தஞ்சேசுவரலிங்கம் கற்தளேசுவரலிங்கம் வசிஷ்டே சுவரலிங்கம், கொங்கணேசுவரலிங்கம், பிரதீசுவரலிங்கம், தொப்ப பிள்ளையார், சுப்பிரமணியசுவாமி யிந்தஷ்சேத்திரத்துக்கு ரெட்சகா ளாகிய நீலமேகப் பெருமாள், சிங்கப்பெருமாள் இதுவும் கீழண்டை யிலே மாரியம்மன், துற்கையம்மன், விசைய அம்மன், யேகவீர அம்மன் ரேணுகாதேவி, காளிதேவி மர்த்தனி தேவி கோடி அம்மன் இவர்களை யெல்லாம் ஆவணி ஞாயித்துக்கிழமை யாகிலும் செவ்வாய்க்கிழமை வெள்ளிக்கிழமை யாகிலும் இவர் களுக்குப் பூசை பண்ணினால் நினைத்த காரியத்துக்கு தடை வராமல் சுகமாயி ருப்பார்கள் யிந்தட்சேத்திரங்கள் வராமல் சுகமா யிருப்பார்கள் யிந்தட்சேத்திரங்கள் பிரதேட்சணமாய் சுத்தி வந்தால், யெல்லாப்பா வங்களும் பரிகார மாகுமென்று கினாவிலே கண்ட செய்திய ளெல்லாம் அரதத்த ஆசாரியார் ராசாவுக்கு சேதி சொன்னார்.

17. இதுவுஞ் சிவனுடைய பிரசாதம் உம்மிடத்தில் நிரம்ப யிருக்கிற படியினாலே கினாவிலே யிப்படி சுவாமி சொன்னார். ஆகையாலே ஓயர்ந்த கோபுரங்கட்டி நிர்மதா லிங்கங்கொண்டு வந்து காஞ்சிபுரத்திலேயிருந்து **சிற்ப்பிகளை** அழைப்பிவிழ்து கோவில்க்கட்டி, பிரதீசுவர லிங்கத்தைப் பிரதிஷ்ட்டை பண்ணினால் உன்னுடைய குஸ்ட்ட ரோகம் போகுமென்று சிவாக்கினைப்படிக்கி உனக்கு நான் சொன்னேன்! நீ உன் மந்திரிகளுடனே ஆலோசனை பண்ணிக் கொண்டு சுறுக்காத்தானே கோவில்க் கட்டென்று அரதத்த ஆசாரியார் கரிகால்சோழ ராசாவுக்கு ஆக்கியாபிச்சார்.

இந்தப் பிரகாரங் குருவினுடைய வசனத்தைக் கேட்டு, கரிகால் சோழ ராசாவும் மெத்த சந்தோஷத்தை அடைஞ்சு, பிரிதி

உத்தரவு சொன்னது என்னாவென்றால், ''சிவபத்தராகிய யென்னுடைய குருசுவாமி யெந்த வேலை செய்யச் சொல்லி ஆக்கியாபிச்சாரோ அந்த வேலை செய்யுறத்துக்கு னான் சந்தோஷமா யிருக்கிறேனென்று; மந்திரிகளைப் பார்த்து, ஆக்கியாபிச்சது யென்ன வென்றால் "நல்ல லெக்கிணம், நல்ல முகுற்தத்திலே குருசுவாமியோடே கூட பயணம் பிறப்பட்டுனான் நிர்மதா நதிக்கிப்போய் லிங்கங்கொண்டு வருகிறேன். நீங்கள் காஞ்சிபுரத்திலே யிருக்கிற சிலப்பாசாரியளுக்கு மனுஷாளை யனுப்பவித்து வழிச்சிலவுக்கு பணம் கொடுத்து அனுப்பிவிச்சு சுறுக்காய் அழைப்பிவிய்யுங்க ளென்று ஆக்கியாபிச்சார்.

18. இப்படி ஆக்கியாபிச்ச சோழராசாவினுடைய வசனத்தைக் கேட்டு மந்திரியள் சிரசாவந்தனம் பண்ணி, மகாராசாவே தன்னியன் மகாராவாவினுடைய ரோகம் நிவர்த்தியாகும்படியாக கற்தர் சொற்பனத்திலே கட்டளையிட்ட பிரகாரம் அகத்தியம் பண்ணவேண்டியதுதான். சூரியாள், சந்திராள், பறுவதங்கள், நதிகள் யிருக்கிறவ்ரைக்கும் திறமாயிருக்கும் படியாகக் கோவில் கட்டி சிவபிரதிஷ்ட்டை செய்வித்தால், கீர்த்தியும் பிரதிஸ்ட்டையுங் கயிலாசலோகமும் மகாராசாவுக்கு வெகு காலம் ஸ்திரமாய் விளங்குமென்று மிகவுந்துதி செய்து மந்திரியள் சோசியாளை அழைப்பிவித்து நல்ல லெக்கணம் பாத்து காஞ்சிபுரத்திலேயிருந்து சில்ப்பாசிரியளை யெல்லாம் அழைப்பித்து, யிந்த முகுற்தத்திலே ஆரம்பம் செய்யலாமென்று ராசாவுக்குச் சேதி சொன்னான். கரிகால்சோழராசா அந்த முகுற்தத்திலேதானே தொப்பைபிள்ளையார் கோவில்கட்டி பிரதிஸ்ட்டை பண்ணி, நினைச்சகாரியஞ் தடையில்லாமல் கூடி வரும்படியாக பிள்ளையாருக்கு பூசை பண்ணி சிவாலையத்துக்கு முகுற்தம் பண்ணி, பழஞ்தேங்காய், அருகம்பில்லு முதலாகிய வஸ்துக்களினாலே பிள்ளையாருக்கு பூசைபண்ணி, மெத்தமெத்த சந்தோஷத்துடனே பிள்ளையாரை மிகவுஞ் தோஸ்த்திரம் பண்ணினவித மெப்படி யென்றால்,

17. சுறுக்காக - விரைவாக

18. விக்கினங்களை யெல்லாம் போக்கடிக்கவல்லமை உள்ளவராய் தெந்தம் ஒரு கையிலே, மோதகம் ஒருகையிலே, பாசம் ஒரு கையிலே அங்குஷம் ஒரு கையிலே பிடித்து விளங்கிற பிள்ளையாரே! நான் துடங்கின சிவ பணிவிடை காரியத்தை நிறைவேத்த வேணும் யிந்தயிஸ்தலத்திலே வாசம் பண்ணிக்கொண்டு யாதமொருவர் உமக்கு உச்சபங்கள், திருனாள்க்கள் செய்விச்சு சேவிக்கிறார்களோ அவருடைய விக்கினங்களை யெல்லாம் போக்கிவிக்க வேணுமென்று நமஷ்காரம் பண்ணிக் கோபுரவேலை செய்விக்கத் துடங்கினார். அப்போ, சோமவர்மா யென்கிற சில்ப்பிக்கிவஸ்த்திரங்கள் உடமைகளினாலே மெத்த பூசை பண்ணி கையைக் கூப்பிக் கொண்டு, மந்திரிகளோடே ராசா சொன்னது யென்னவென்றால், " சிவபணிவிடை செய்யச் சொல்லி சிவனாலே யேவப்பட்டுக் கோபுர வேலை துடங்கியிருக்கிற யெனக்கு நீர் உதவி செய்கிறதென்ன வென்றால், சில்ப்பாசாஸ்த்திரத்தில் சொன்னபிரகாரம் சிவாலையங்கட்ட வேணும் அதற்கெவ்வளவு திரவியம் வேணுமோ அவளவு னான் கொடுக்கிறேன்! சிவபணிவிடை நிமித்தியம் யென்னுடைய பிராமணனை கொடுக்கச் சொன்னாலும் கொடுக்கிற வல்லமையுள்ள யெனக்கு இந்த திரவியங்களும் இந்த பூமியும் லெட்சயமல்லவென்று தாராளமாய் சொல்லுகிற ராசாவினுடைய வசனத்தைக் கேட்டு, சோமவர்மாயென்கிற சில்ப்பி தொப்பைபிள்ளையாருக்கு மேலண்டையாக தங்களுக்கு யிஸ்ட்ட தெய்வமான காளிகாதேவி கோவில்கட்டி பிரதிஸ்டை பண்ணி பஞ்சா அமுர்த முதலான அபிஷேகங்கள் தூப தீப நிவேத்தியங்கள் பண்ணி, நமஸ்காரம் பண்ணி சோமவர்மா காளிகாதேவியை பிராத்திச்சுக் கொண்ட வித மெப்படி யென்றால்;

19. சில்ப்பியகளுக்கெல்லாம் வரங்கொடா நின்ற தெய்வமான காளிகாதேவி உன்னுடைய திருவடிகளை நான் பணிந்தேன். யிந்தஸ்தலத்திலே வாசம் பண்ணுகிற செனங்களுடைய விக்கினங்களை

---

*18. தெந்தம் - தந்தம்; பிராமணனை கொடுக்கச் சொன்னாலும் - பிராணனை என்று இருக்க வேண்டும்;*

யெல்லாம் நிவாரணம் பண்ணி சில்ப்பிகளுடைய மனோகரங்களை யெல்லாங் கொடுக்கவேணும்; பிரதீசுவரருக்கு முன்பாக சில்ப்பி களெல்லாங்கூடி உனக்கு உச்சவம் பண்ணிவிக்க வேணுமென்று சோமவர்மா பிறாத்திக்கும்போது காளி அவருக்குப் பிரத்திட்சமாய் சொன்னதென்ன வென்றால், " சோழா ராசாவாலே ஆக்கியா பிச்சபிரகாரம் சிவாலையம் நீ கட்டக் கடவாய்! னான் யிங்கேதானே சில்ப்பிகளாலே பூசைபண்ணப்பட்டு அவர்களுடைய மனோரதங்களைக் தொடுத்துக் கொண்டுயிருக்கிறனென்று சொல்லிப் போட்டு மறைஞ்சாள்.

**சோமவர்மா** காளியினுடைய வசனத்தைக் கேட்டு, மெத்த சந்தோஷத்தை அடைஞ்சார். அன்று முதல் காளிகாதேவி வடக்கு முகமாயிங்கேயிருந்து சில்ப்பிகளிளாலே பூசைபண்ணப்பட்டுக் கொண்டு யிருக்கிறாள்!

20. அதின்பிறகு **சோமவர்மா** யென்கிற சில்ப்பியானவன் கரிகால் சோழராசாவினுடைய மனசு சோதிக்கிற நிமித்தியமாக திரவியங்களைக் கோணிகளிலே பொதியாய்ப் பிடிச்சுக்கொண் டுபோய் சமீவன முதல்க் கொண்டு கல்வெட்டிக் கொண்டு வர வேண்டிய மலைமட்டுக்கும் சகலசாமானும் விற்கும்படியாக கடையள் கிட்டக்கிட்டப் போட்டு வைச்சு, வழியிலே அடிக்கடி தண்ணீர்ப் பந்தல்களும், அன்ன சத்திரங்களும் போட்டு வைத்து, வண்டில் யிழுக்கிறகிடாய் மாடுகள் அங்கங்கே உயர்ந்த மாடு களாய் வாங்கி வைத்து மனுஷாள் வண்டில்களும் திட்டம் பண்ணி வைத்து, திரவியங்களை பொதிபிடித்துக் கொண்டு போகச்சே, அந்தபொதி பணப்பைகளை உளியினாலே கிழிச்சுவிட்டார் அந்த திரவியங்கள் கீழே சிந்தி, வழியிலே தாரையாய் விழுந்துகொண்டு போச்சுது. அதுகளை யேழை பரதேசியள் யெடுத்துக் கொண்டு போனார்கள்; அந்த சமாசாரத்தை அரிக்காரர்கள் வந்து ராசாவுக்குச் சொன்னார்கள். ராசா அதைக் கேட்டு, சோமவர்மாயென்கிற சில்ப்பி தன் மனதுக்கெப் படித் தோணிச்சோ அப்படி செய்யட்டும்! அத்தை ஒருதரும் விசாரிக்க வேண்டியதில்லையென்று சொன்னார். அந்த சேதி சோம வர்மா யென்கிற சில்பி கேட்டு மெத்த சந்தோஷத்தை அடைஞ்சு,

---

*20. அரிக்காரர் - அரண்மனைக்குச் செய்தி சொல்லுபவர்.*

யிந்த சோழராசாவே உத்தமமான கோவில் கோபுரங்கள் கட்டிவைக்க யோக்கிய னென்று நம்பிக்கையடைஞ்சு, வெகுபேர் சில்பியளை கூட்டிக் கொண்டு மலையனிலே போய், உளிகளினாலே பேதிச்சுக் கல்லுகள் வண்டில்மேலெடுத்து அனேகம் கல்லுகள் கொண்டுவந்து சேர்த்தார். அதைப்பார்த்துச் சோழராசா சந்தோஷமாய்ச் சோமவர்மா யென்கிற சில்ப்பியை அழைத்து, வஸ்த்திர ஆபரணங்களினாலே பூசைபண்ணி, கைகூப்பிக் கொண்டு சேதி சொன்னார்.

21. அதென்னவென்றால் " சோம வர்மாவே சிவபணிவிடை செய்கைக்கு சிவனாலே ·நான் ஆக்கியாபிக்கப்பட்டேன் ஆகையாலே நீர் யெவ்வளவு திரவியங் கேட்டீரோ அவளவும் மந்திரியள் கொடுப்பார்கள். நீர் **சில்ப்பசாஸ்திரம்** சொன்னபடியே கோபுரகட்டிப் போட வேணும். நான் நிற்மதா நதிக்குப் போய் அரதத்த ஆசாரியாரோடு கூட **அறுவத்து னாறு செட்டிகளோடு** கூட பாண லிங்கங் கொண்டுவருகிறத்துக்கு நாளை அருண உதையத்திலே சோசியாள் முகுற்த்தம் பார்த்து வைத்திருக் கிறார்கள். அப்போ பயணம் பிறப்பட்டு போகவேணுமென்று சொல்லிப் போட்டு மந்திரிகளை உத்தரவு கேட்டத்துக்கு மந்திரிகள் சொன்னதென்ன வென்றால், "மகாராசா ஆக்கினா பிறகாரஞ் சோமவர்மா கேட்ட திரவியம் கொடுத்து, அவரைக் கொண்டு கோவில் கட்டிவைக்கிறா மென்று சொன்னார்கள். அதுக்கு மேல் ராசா ராத்திரி சுக நித்திரையா யிருக்கச்சே கினாவிலே கற்தர் சொன்னத்தை காலமே ராசா மந்திரிகளோடே சொன்னார்; அதென்னாவென்றால், "பாணலிங்கங் கொண்டுவருகிறபோது அந்த லிங்கங் கொண்டுவருகிற வண்டில், யிந்த அறுவத்துனாலு செட்டிகளே யிழுக்க வேணும். மத்தொருவர் யிழுக்கலாகாது என்று சிவன் சொல்லியிருக்கிறார். ஆகையாலே அவர்களை யழைப்பிவை" யென்று ஆக்கியாபித்தார். அந்தப்படி அவர்கள் வந்தவுடனே அவர்களுக்கு வஸ்திர ஆபரணங்களினாலே பூசை பண்ணி, ''சிவாக்கிஞையினாலே நீங்கள் லிங்கங்கொண்டு வருகிறதுக்குப் பயணம் பிறப்படுங்க ளென்று ஆக்கியாபிச்சார்! அதற்கு செட்டியள் சொன்னது, விக்கினங்கள் வாறாமல் துடங்கின காரியம் விக்கினம் வாறாமல் தொப்பைப் பிள்ளையாரைப் பூசை

செய்து பிறாத்தித்துக் கொண்டு வருகிறோ மென்று சொல்லிப் போனாள்.

21. அதின் பிறகு, அந்தப்படியே தொப்பைப் பிள்ளையாருக்கு அவர்களுடைய தெண்டகப்படி பூசையள் செய்து, பிறார்த்தனை பண்ணின விபர மெப்படி என்றால், சிவாக்கினையினாலே சோழராசா கோவில்கட்டி, பாணலிங்கம் கொண்டுவந்து பிரதிஷ்டை பண்ணப்போறாரே, அதற்கு யெங்களையுங் கூட சகாயமாய் வரச்சொல்லி ஆக்கியாபிச்சிருக்கிறார். ஆகையாலே நாங்கள் விக்கினமில்லாமல் செய்த காரியம் நிறைவேரும் படியாக சுகமாய் வழிவந்து சேரும்படியாக தேவரீர் செய்ய வேணுமென்று **செட்டிகள்** சொன்ன வசனங்கேட்டு, தெற்குமுகமாயிருந்த பிள்ளையார் மேற்கு முகமாய் திரும்பி செட்டியாளைப் பாத்து ஆக்கியாபிச்சார். அதென்னாவென்றால், நீங்கள் யென்சன்னியதானத்திலே யிருக்கிற பேர்கள், என்னுடைய பக்தர்கள்! ஆகையால் உங்களுக்கு சிரமில்லாமல் என்னுடைய தும்பிக்கையினாலே லிங்கத்தை யிழுத்துக் கொண்டு வந்து சேருகுரேனென்று சொன்னார். அதின்பிறகு, செட்டியள் யிந்தசேதி ராசாவுக்கு சொல்லி, ராசாவும் சந்தோஷத்துடனே அரதத்த ஆசாரியரோடே செட்டியாளையுங் கூடவே கூட்டிக் கொண்டு நிர்மதா நதிக்குப் போய் பிறணவ குண்டத்திலே ஸ்தானம் பண்ணி, தன் கைய்யிலே அகப்பட்ட லிங்கத்திலே முதல் அகப்பட்ட லிங்கத்தை கரையின் மேலே வைத்தவுடனே அது வளர்ந்தது. அதைப் பாத்து ஆச்சரியத்தை அடைந்து பூசைகள் பண்ணி வண்டில் மேலேந்தி, பூபந்தல் முதலான தெல்லாம் போட்டு, அலங்கரித்து, அனேகம் மேள, தாளம், **வேத பாராயணத்துடனே** கொண்டு வந்து ஆறாமாசம் நினைத்த நினைப்புகளை நிரவேத்துகுர சமீவனமென்குர **தஞ்சநகரம்** வந்து சேர்ந்து, தஞ்சுபுரேசுவரர் லிங்கத்தினுடைய சன்னியதானத்திலே வைச்சு, சிவபிராமணாளை நேமிச்சு, பஞ்சா அமுர்த, தூப, தீப முதலாகிய உபசாரங்களினாலே கோபுரங் கட்டி முடிகிற வரைக்கும் ஆலையத்திலே வைச்சு, பூசை பண்ணி வைச்சார். **அறுவத்துனாலு** செட்டிகளுக்கும் அனேக வஸ்த்திர பூஷணங்களினாலே சந்தோஷம் பண்ணி வைச்சார். மேல்தன்னுடைய குருசுவாமி

யோடே மந்திரிகளோடே கூட **தஞ்சநகரத்திலே** சுகமாயிருந்தார்.

22. அதின்பிறகு, **சோமவர்மா** யென்குற சில்ப்பி அனேகங் **கல்தச்சரோடே** கூடி, **சில்பசாஸ்திர** பிறகாரமாக, அஸ்திபாரம் பரிச்சு அதின்மேலே ரிஷிப்பங்கள் வைத்து, ரெண்டு கோபுரகளுங் கட்டி, சில்ப்சாஸ்திர மொத்த பிரகாரம் ஒசந்த கெற்பகிரகம் விமானங்கட்டினது மெத்த ஆச்சரியகரம். அவன் **விசுவகர்மாவே** பூமியில் வந்து பிறந்தபடியினாலே அப்படிக் கட்டினான். அவன் வேலை துடங்கிச் செய்யும்போது பனிரெண்டு வருஷத்துக்கு மேல் கெற்பகிரகத்தினுடைய குமுதவரி, பரமவரி, சுபோதவரிப் பட்டிகை யிந்த னாலுவரிகள் பூமிக்கு மேலே கிளம்பிச்சுது. யிப்படி வெகுனாள் அனேகாமாயிரம் சில்ப்பிகளோடே வேலை செய்யுர சோமவர்மாவை சோளராசா காஞ்சிபுரத்திலே யிருந்து அழைப்பிக்கும்போது, அவருடைய பெண்சாதி பூரண கெற்பணியா யிருந்தாள். அவள் பிரசவிச்சு பிள்ளை பிறந்து பனிரெண்டு வயதாகி சில்ப்ப சாஸ்த்திரங்களைல்லாம் தொகப்பனைப் காட்டிலும் அதிகமாய் ஓதி, கய்யிலே உளிபிடிச்சு வேலை செய்யவல்லமை உள்ளவனாகி விபரந் தெரிந்தவுடனே தாய்க்கு நமஸ்காரம் பண்ணி, யென்னுடைய தொகப்பனார் எங்கே போனாரென்று சொல்லவேணுமென்று கேட்டவுடனே, தாயார் பிள்ளையைப் பார்த்து, அவனுடைய சாமாத்தியத்தையும், புத்தியையும் பாத்து, சந்தோஷத்தினாலே கட்டிக் கொண்டு சொன்னது என்னவென்றால், உன்னுடைய தொகப்பானார் ஓசந்த கோபுரங் கட்டுகைக்கு தஞ்சநகரத்துக்கு போயிருக்கிறார். பனிரெண்டு வருஷ மாச்சுது. சோழராசா பண்ணுகிற வெகுமானத்தினாலே அங்கேதானே விருக்கிறார். தாகப்பனாரைப் பார்க்கவேணு மென்று யிச்சை யிருந்தால், மகனே நீ அங்கே போய் ராசாவண்டையிலே யிருந்து திரவியமும் மெத்த சம்பாரிச்சுக்கொள்ளலா மென்று புத்தி சொல்லி கட்டு சாதங் கட்டி குடுத்து, அனுப்பிவிச்சாள்.

23. அந்த பிள்ளை, காஞ்சிபுரம் விட்டு, பத்துனாளையிலே தஞ்சநகரம் வந்து சேர்ந்துது. அப்போ பனிரெண்டு வருஷத்துக்கு அஸ்திவாரர் தீந்து பூமியிலே நாலு கலக வரி கெற்ப கிரகம்

யெழுப்பி விருந்ததைப் பார்த்து, அந்த பிள்ளை தன் கையிலிருந்த முழக்கோலாலே அளந்து பார்த்து. யிந்த அடிக்கும் முடிவுக்கும்யிவளவு ஓசரமாகு மென்று நிற்செயித்துக் கொண்டு அங்கே விசாரித்துக் கொண்டிருக்கிற ராசாவினுடைய மந்திரியுடனே சேதி சொன்னான். யென்னாவென்றால், யிந்த அடி போட்டபிறகாரம் கோபுரங் கட்டி முகிந்தால் பெருங்காத்துக்கு வெகு மழைகளினாலே அடிக்கடி யிடிந்துவிழும்; யிந்த யோசினை தெரியாம யிந்த வேலை சில்ப்பி சமத்தனல்ல வென்று கணக்கோடே சொன்னான்.

குழந்தைபிள்ளை பேச்சை யுத்தமமாய் யெண்ணி மந்திரி ராசா வோடே ரகசியத்திலே சேதி சொன்னார்; அதைக்கேட்டு ராசா, அந்த பிள்ளையை அழைப்பிவிச்சு யெங்கே யிருந்து வந்தாயென்று கேட்டு, எந்த பிறமாணத்தலே கட்டினால் கோபுரங் கெட்டியா யிருக்குமென்று ராசா கேழ்க்க, அதுக்கு அந்த பிள்ளை உத்தரவு சொல்ல, யிந்தபடி நடக்குற வேளையிலே கணக்கோடே அந்த பிள்ளை சொன்னது, போட்டிருக்குற அடிக்குக் கொஞ்சம் உள்ளடக்கிப் போட்டால் கோபுரங் கெட்டியா யிருக்கு மென்று சொல்லிக் கொண்டிருக்கச்சே, யிந்த சேதி சோமவர்மா யென்கிற சில்பசாஸ்திரி கேட்டு, தன் வீட்டிலே அனேக பதார்த்தங்கள் சமையல் பண்ணசொல்லி, அவருக்கு சாப்பாடு பண்ணி, தனக்குள்ளே யிருக்கிற சில்பா சாஸ்திரிகளை விட்டு, யார், எங்கேயிருந்து வந்தாரென்று, விசாரிச்சு சமாசாரத்தை அறிந்து கொண்டு, அரமனை வாசலிலே தன் மனுஷர்களை வைத்து, வெளியிலே வந்தவுடனே அழைத்துக் கொண்டு வரச்சொன்ன விடத்தில் வெளியிலேயிருந்து மனுஷர் அழைத்துக் கொண்டு வந்தபிறகு சோமவர்மா அந்த பிள்ளையினுடைய ரூபத்தையும் பவுர்த்தையும் கையிலே தரித்திருக்கிற ஆயுதத்தையும் பாத்து பொறாமையினாலே மனசுக்குள்ளே வெந்துக் கொண்டு, அந்த பிள்ளையைப் பார்த்து ஒரு பேச்சு சொன்னார்; யெப்படி யென்றால் நீ யார் குழந்தை எங்கேயிருந்து வந்தாய் ரொம்ப யிளைப்பாய் தோணுது சாப்பிடு என்று சொன்னார். அதுக்கு அந்த பிள்ளை சொன்ன உத்தவு யென்னவென்றால், தொகப்பனே யிந்த கோபுரவேலை நன்றாய் செய்யப்படவில்லை விறுதாவாய்

ராசாவினுடைய திரவியம் சிலவு பண்ணப்படுது யிப்படி கோபுர வேலை செய்தால், திறமாய் நிற்கமாட்டாது. என்று சொன்னார். சோமவர்மா அந்த குழந்தையினுடைய வசனத்தைக் கேட்டு, பிறத்தி உத்தரவு சொன்னது யென்னாவென்றால், நீ குழந்தை பிள்ளை யாகிலும் புத்தி பெரிசு. சில்ப்ப சாஸ்த்திரம் உனக்கு நன்றாய் தெரிந்திருக்குது. னான் கெழவன் எனக்கு அங்குபிரமாணம் நன்றாய் தெரியது யிதுக்கு என்ன பயணம் சொல் லென்று கேட்டத்துக்கு அந்த பிள்ளை சொன்ன உத்தரவு, "உங்களி டத்திலிருந்து நான் தெரிந்து கொள்ளவேணும், உங்களுக்குத் தெரி யாம லிருக்கு மாகிலும் எனக்கு தோணினத்தை சொல்லுகிறேன். யிப்போ போட்டிருக்கிற விட்டத்துக்கு யிருவது அங்குலங் குறைத்து உண்டாக்கிப் போட்டால், கோபுர வேலை கெட்டியாய் சாசுவிதமா யிருக்கும்; ராசாவினுடைய பியைபாசம் சபலமாகும் நாம் செவ்வையாய் வேலை பண்ணினால் கற்தர் நம்மிடத்திலே தயவு பண்ணி நமக்குங் கைலாக லோகத் தைக் கொடுப்பாரென்று சொன்னக் குழந்தைப் பிள்ளை வசனத் தைக் கேட்டு, சந்தோஷப்பட்டு, அந்தப்படியே செய்குரோமென்று சில்ப்பாசாரிகளை எல்லாங் கூப்பிட்டு "யிண்ணை முதல் யிவர் சொன்னபடி கேளுங் கோளென்று எல்லாருக்குந் தாக்கிதை பண்ணி நீ யிவர்க்களுக் கெல்லாம் வயணஞ் சொல்லிக்குடு என்று பிள்ளைக்கு தாக்கிதை பண்ணினார். எப்படி என்றால், மூன்று வேளையிலேயும் எந்தெந்த வேலை எப்படி செய்யவேணுமோ அப்படியிவர் சொல்லுவார்; அப்படி நீங்கள் செய்யுங்கோளென்று சொன்னார்.

24. அப்படியே அந்த சில்ப்பியளும் செய்கிறோமென்று உத்தரவு கொடுத்தார்கள். அதின்பிறகு, அந்த பிள்ளை பிரமான மாய் நூல்ப் பிடித்து யெந்த வேலை, யெப்படி செய்யவேணுமோ அப்படியே சாந்து வேலை முதலாகிய பேர்களுக்கும் வேலையிட்டார். வெல்லச்சார், கடுக் காய்ச்சார், பாக்குச்சார் முதலாகியதும் சேத்து, கல்லுக்கள் மயிரிணைக் கமாயிணக்கி, சில்ப்ப சாஸ்த்திரப் பிரகாரம் பொம்மையள் தீந்து, கெற் பக்கிரக விமானம் சோமவர் மாவினுடைய குமாரன் வெகு திட்டமாய்க்

---

*23. தாக்கியதை - அறிவுறுத்தல்;*
*வயணம் - விளக்கம்*

*24. இணக்கி - இணைந்து;*

கட்டினான். ராசாவும் சோமவர்மாவினுடைய பிள்ளை புதுசாய் வந்த சில்ப்பி யென்று அறிஞ்சு தோப்பனுக்குப் பிள்ளைக்கும் அப்போதைக்கப்போ செய்ய வேண்டிய வெகுமானமுஞ் செயிது, சந்தோஷப்படுத்தி வைத்தார்.

இப்படி யிருக்கச் செய்தே பத்துப் பதினோரு வருஷமாச்சுது. கோபுரத்துக்கு மேல் சிகரங் கட்டுகைக்கு கீழே பிரம ரெந்திர வெளிமூடுகிற கல்லு ஒருகல்லா யிருக்க வேணுமென்று யோசனை பண்ணிக் கொண்டிருக்கச்சே ஒரு கிளவி விபூதி, ருத்திரட்சங்களை தரித்துக் கொண்டு சிவ பத்தியோடே சில்ப்பாசாரியற்க் கெல்லாம் அப்போதைக்கப்போ தாகத்துக்கு நீர் மோர்கள் பாக்கு வெத்திலைகள் கொடுத்து அனுசரித்துக் கொண்டிருந்தார்கள். சில்ப்பாசாரிக ளெல்லாம் சந்தோஷப்பட்டு உன் மனோரதம் யென்ன? வென்று கேட்டார்கள். அதுக்கு அவன் சொன்னது, என் வீட்டிலே ஒரு கல்லு பெரிசாயிருக்குது; அதை மகாராசா கட்டி வைக்கிற கோபுரத்திலே அந்த ஒரு கல்லையும் சேர்த்து சிவபணிவிடை செய்யுந் தர்மம் எனக்குங் கொஞ்சங் கிடைக்கும் படியாகச் செய்ய வேணுமென்று பிறாத்திச்சான்.

25. அது சில்ப்பசாரிகளுக்கெல்லாம் அந்தக் கல்லைப் போய்ப் பார்க்குமிடத்தில் அந்தக்கல் நல்ல கருங்கல்; பிரம்மரெந்திர வெளி மூடுகிறத்துக்கு யோக்கியமானதா யிருந்தது. அந்தப்படியே சிவனுடைய சிரசுக்கு மேலே, சிகரத்துக்குக் கீழாய் அந்தக் கல்லை ஸ்தாபித்தார். அதினாலே, கிழவி சந்தோஷத்தை யாடைஞ்சாள். இந்தப்படி பனிரெண்டு வருஷத்திலே விசுவகர்மா வமுஷமான **சோமவர்மா** தன் மகனோட கூடி அனேகமாயிரங் கல்த்தச்சார்களோடே கூட, சாந்து வேலைக்கார்களோடு கூட, பிரகார கோபுரமுங் கெற்ப கிரக விமானங்கட்டி, சிகரம் வைத்தார். கரிகால்சோழ ராசா மெத்த சந்தோஷத்தை அடைந்து, சில்ப்பி யளுக்கு வெகுமானம் பண்ணி பின்பு, அரதத்த ஆசாரியரோடே தஞ்சேசுவர லிங்கத்தினுடைய ஆலையத்துக்குப் போய், முன் தாம் கொண்டுவந்து வைத்த பாணலிங்கத்தை அறுவத்துனாலு பேர் செட்டிகளைக் கொண்டு அனேக மேளதாளங்கள், நந்தனங் வேத பாராயணங்களோடே கூட சம்பிரமமாய் வண்டியிலே

யெழுந்தருளப் பண்ணி அறுவத்துனாலு செட்டிகள் கையினாலே யிழுக்கச் சொல்லி கெற்பகிரகங் கொண்டுவந்து சேத்து ஸ்தாபித்தவுடனே அந்தப் பிரதீசுவர லிங்கம் பாதாளம் வரைக்கும் வேறோடி சுயம்பு லிங்கமாச்சுது. பிரமபீடம், விஷ்ட்டுணு பீடம், அஷ்ட்டபந்தனம் முதலாகிய கிரிகைகள் விதிவத்தாக செய்யப்பட்டுது. கோபுரங்களுக்கு பஞ்சவர்ணங்கள் வச்சு அலங்காரம் பண்ணப்பட்டுது. மண்டபங்கள் சிவனுக்கு முன்பாக அனேகங்கள் கட்டப்பட்டுது. இதல்லாமல் தஞ்சநாயகியம்மன் சோமாசக்கந்த மூற்தி சபாபற்த்தி, சண்டேசுவரன் கெணபதி யிவர்களுக்கெல்லாம் வேறே வேறே கோவில்கள் கட்டினார்கள். இப்படி யிருக்கச்சே ஒரு னாள் அவசரத்திலே கரிகால்சோழ ராசா கோவில் வேடிக்கையாய்ப் பார்க்க வேணுமென்று ஒரு யேயகாந்தமான யிடத்திலே வந்து உளுக்கார்ந்திருந்தார். அப்போது சோமவர்மா யென்கிற சில்ப்பியினுடைய குமாரன் பாலசிப்பி, சிருது சில்ப்பிகளோடே கூட வேலை செய்து கொண்டிருந்தான். யிவன் வேலைக்குள்ளே மனதான படியினாலே ராசா வந்ததை அறியான். அந்த சமையத்திலே அந்தப் பாலசில்ப்பிக்கி ஒருவன் பாக்குவெத்திலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அது பாலசில்ப்பி ஒவ்வொரு மடிப்பாய் வாங்கிப் போட்டுக் கொண்டிருந்தான். அந்த மடிப்பினுடைய கற்பூரவாசனை வெகுதூரம் வீசித்து, அப்படி யிருக்கிற சமையத்திலே தன் பின்னே யிருக்கிற சோழராசாவைப் பார்த்து விட்டான். உடனே பயத்தோடே யெழுந்திருந்து னான் மெத்த குத்தஞ் செய்தேன்; யென்குத்தத்தை மகாராசா பொறுத்து மாப்புப் பண்ண வேணும்; அந்தக் குத்தம் பரிகரித்துக் கொள்ளுகிறத்துக்கு என் வேலையிருக்கிற சாத்திரியத்தைக் காண்பித்து ஒரு சுப்பிரமணிய சுவாமியினுடைய கோவில் கட்டுகிறேன். அதைப் பார்த்து என்னுடைய குத்தத்தை பொறுக்க வேணுமென்று சொன்னான். சோழராசாவும் அந்த சாத்திரத்தைப் பார்க்கவேணுமென்கிறார்; ஆகையினாலே அந்த குத்தத்தை பொறுத்தார்.

26. அதின்பிறகு பாலசில்ப்பி விச்சித்திரமாக கோவில்க் கட்டி அதிலே வள்ளியம்மை தெய்வானையுடனே மயில்வாகனத்து மேலே ஆறுமுகத்துடனே சுப்பிரமணியசாமி ஒரு கல்லாலேதானே

உண்டாக்கி வைத்தார். அதின் பிறகு, **சோமவர்மா** யென்கிறவன் ஒரு கல்லாலே பெரிய விரிஷபம் ஒன்று ப்ணணி, தன்னுடையவேலைச் சாத்திரயங் காண்பிவிச்சு ராசாவைப் பாத்து, யிந்த ரிஷபத்திலே ஒரு அதிசய மிருக்குது; என்னவென்றால், இதினுடைய பிறத்தட்டிலே ஒருதேரை யிவளவு செலத்தோடே கூடயிருக்குது பாருமென்று உளியினாலே ஒரு தட்டு தட்டினான். தேரையிருக்கிற விடத்துக்கு அடையாளம் யென்னவென்றால் "அந்த ரிஷபம் ஓரட்டும் சந்தனத்தை பூசினால் யெல்லாவிடமும் ஒணரும் தேரை யிருக்கிற விடம் ஒணராது! யிது அடையாளம்" என்று காண்பித்து. உளியினாலே தட்டிவுடனே, அங்கேயிருந்து ஒருதேரை கிளம்பி சபாபதி கோவிலுக்கு மேலண்டையாய் விழுந்துது அந்த தேரை விழுந்தவிடம் பெகீரதமென்று கோவிலுக்குள்ளே ஒரு தீர்த்தமாச்சுது. அந்த தேரை மெந்தமட்டுக்கும் அந்த ரிஷபத்துக்குள்ளே யிருந்துதோ அந்த மட்டுக்கும் வளந்தது. அது வெளிப்பட்டவுடனே வளருகிறது நின்று போச்சுது.

27. அதன் பிறகு அகோர மூற்கிக்கு யெதிராக தென்னண்டை பிரகாரத்திலே ஒரு ரிஷபம் பூசை பண்ணின பேர்களுடைய மனோரங்களை பூரணம் பண்ண சத்தியுள்ளதாயும், மழையில்லாமல், போனால், மழை பேயச் சொல்லவும் அதிக மழையானால் நிறுத்தவும் சந்தியுள்ளதாக உண்டாக்கினார். அதல்லாமல், பண்ணினபேர்களுடைய சுரத்தை நிறுத்த சக்தியுள்ளவராக அகோரமூற்தி; அது தவிர யிருவந்தஞ்சு மூற்திகள் அவதார மூற்திகளை உண்டாக்கினார். அதல்லாமல் சோமசக்கந்த மூற்தி, பிரதீசுவரலிங்கத்துக்கு யோகமாக உயர்ந்ததாக உண்டாக்கினார். அதுக்கு வடவண்டையிலே பாபகம் யென்கிற ஒரு கிணர் உண்டாக்கினார். அது தவிர, சிகரத்திலே யெட்டு ரிஷப பிரகாரங்களிலே கிட்டகிட்ட ரிஷபங்கள் உண்டாக்கி வைத்து சோமவர்மா யென்கிற சில்ப்பி மகா அலங்கிறுதமாக கட்டி

---

*25. மாப்பு மன்னிப்பு*
*26. சாத்திரியம் சாதுரியம்*

கரிகால் சோழ ராசாவுக்கு காண்பித்தார். ராசாபாத்து மெத்த சந்தோஷமாகி, பூமியிலே ஒரு கயிலாசம் உண்டுபண்ணினான் **சோமவர்மா** யென்று துதி செய்து, கனகதண்டிகை கொடுத்தார். சோமவர்மாவுக்கு கனகாபிஷேகம் பண்ணிவைத்தார். தொகப்பன் பிள்ளையிருவரையும் யானை மேலேத்தி வைத்து, அவர்களோட கூட வேலை செய்த சில்ப்பிகளுக்கெல்லாம் கடையங்கள் ஆரங்கள் வஸ்த்திரங்கள் முதலாகியதுங் கொடுத்து, சாப்பாடு பண்ணி வைத்து, அனேக மேள வாத்தியங்களோடே வீதி பிரதெட்சனை பண்ணி வைத்து, தன் பேராலே **சோழபுரம் யென்று ஒரு கிராமம் சோமவர்மா யென்கிற சில்ப்பிக்கு கொடுத்தார்.** சோமவர்மாவும் அந்தவூரிலே கயிலாசனாதர் யெங்கிற லிங்கத்துக்கு ராசா கொடுத்த திரவியத்தினாலே விச்சித்திரமாக ஒரு கோவில் கட்டிவைத்தார். அதின்பிறகு, சோழராசா **அறதத்த ஆசாரியா** ரென்கிற தன்னுடைய குருவோடே கூட தேசத்திலே யிருக்கிற சிவபிராமணாளை யெல்லாம் அழைப்பிவைத்து கும்பாபிஷேகத்துக்கு வேண்டிய சாமானெல்லாம் சேகரம் பண்ணி, யாகசாலை கட்டி, குண்டங்கள் போட்டு, திருவையாத்திலிருந்த சிவ பிராமணாளை அழைப்பித்து மகுடாகம வசனப் பிரகாரமாக மகாஅபிஷேக விதியினாலே பிரதீசுவரலிங்கத்துக்கு மகா அபிஷேகம், பூசை களெல்லாம் பண்ணி வைத்தார்.

28. இந்தப்படிப் பிரதீசுவரருக்கு கும்பாபிஷேகம் பண்ணிவித்து அப்படியே தேவிக்கும் கெணபதிக்கும், சுப்பிரமணியருக்கும் சோமசக் கந்தருக்கு, சபாதிக்கு, சண்டேசுவரருக்கு இவர்களுக்கெல்லாம் தங்கக் குடங்களினா லேயும் வெள்ளிக் குடங்களினாலேயும் ஒவ்வொருவருக்கு யெண்பதெண்பது குடம் அபிஷேகம் பண்ணிவித்தார். இதுதவிர, ஆரஞ் சங்குகளிலே கூர்ச்சங்கள் போட்டு, பஞ்ச பல்லவங்கள் சேத்த சகஸ்திர சங்காபிஷேகம் ஆயிரம் தாம்பிரக் குடங்களிலேயும் நவரற்றினங்கள் போட்டு, அதிலே நதிசெலங்களை விட்டு அபிஷேகம் பண்ணி வித்தார். இது தவிர, நூறு நூறு பிரம்கூர்ச்சங்களாலே அபிஷேகம்; யிது தவிர

---

*27. கனக தண்டிகை - பொன்னாலாகிய கோல்; கடையம் - கடகம்*

பஞ்சதெவ்வம் நூறு குடம், பசுவின் பால் லட்சங்குடம், பசுவின் தயிர் லெட்சகுடம், பசுவின் நெய் லெட்சங்குடம், தேன் லெட்சங்குடம், சக்கரையள் மலைமலைகள் போலே குவிச்சு, யிளநீர் அஞ்சு லெட்சம், வர்ழைப் பழம் ரெண்டு லட்சம், பலாப்பழம் ரெண்டு லெட்சம் யிலும்பிச்சம்பழம் பத்து லெட்சம், கருப்பஞ்சாறு ஆயிரங்குடம், சந்தனக்குழம்பு ஆயிரங்குடம், சுத்த செலம் அஞ்சுலெட்சம் குடம் இந்தப்படி சேகரித்து நாலுவேத மந்திரங்களை யோதி, அபிஷேகம் பண்ணி வைத்தார். அதுக்குமேல் ரெட்சையிட்டு தங்கத்தினாலே காப்புக்கட்டிக் கொண்டு இருக்கிற சிவபிராமணாள் பிரதீசுவர லிங்கத்துக்கு தங்கத்தினாலே கொள்கை சாத்தி, திரிகுண்டஞ்சாத்தி, ஆயிரம் படத்தோட கூடின நாகாபரணமுஞ் சாத்தி, அலங்காரம் ராசா கய்யினாலே பண்ணினார்கள். அப்படியே தேவிக்கி, கெணபதிக்கி, சுப்பிரமணியர், சோமாசக்கந்தர், நடேசர், யிதுகளுக்கெல்லாம் வஸ்த்திர ஆபரணங்களினாலே அலங்காரம் பண்ணிவித்து, நெய்விளக்கு, கொடிவிளக்கு, வைத்து சாம்பிராணிப் பொகையள் நாலுபிரமும் புகைச்சு, பட்சணங்கள், அன்னங்கள், கரிபதார்த்தங்கள் மலைமலைகள் போலே குவித்து, பழவகைகளும் மலைகளாக குவித்து நிவேத்தியம், தாம்புலம், கற்பூராதிகள் பண்ணிவித்து, நாநாவித வாத்தியங்கள், விசிரியள், ஆலவட்டங்கள் உயர்ந்த கண்ணாடியளோடே கூட மகா அபிஷேக விதியினாலே பிரதீசுவரருக்கு சோடச உபகாரங்கள் பண்ணி வைத்தார்.

29. அதின்பிறகு, கோடிபிராமண போசனம் அட்ட ரசங்களோடே கூட சந்தணம், புஷ்ப்பம் வஸ்த்திர ஆபரணங்கள், செம்புகள், தெட்சணங்கள், தாம்பூலங்கள் குடுத்து வைத்தார். அதின்பிறகு, சிவபிராமணாள் பரிசாரகர்களுக்கு வஸ்த்திரங்கள், ஆபரணங்கள், பசுமாடுகள், பூமிகள் திரவியங்களெல்லாம் குடுத்து, சந்தோஷம் பண்ணி வைச்சார். குறைவந்த பேர்களுக்கெல்லாம் தெட்சணைகள் குடுத்தார்; யிந்தபடி கும்பாபிஷேகமான பிறகு, மண்டலாபிஷேகம் நடப்பிவிச்சார். அதல்லாமல், மூணு காலத்திலேயும் லெட்சம் வில்வாற்சனை யிது தவிர, வெண்தாமரை செஞ் தாமரை, நிலோற்பலம், யிது தவிர, பிரதீசுவரர் பூசை, நிவேத்தியத்துக்காக சூலமங்கலம் முதலாகிய பத்து கிராமம்,

---

*28. கூர்ச்சம் - தருப்பை*

தாம்பரசானம் பண்ணி குடுத்தார். நட்டுமிட்டு, மேளதாளம், தேவடியாள் யிவாளை அமத்திவச்சார்; பஞ்சாமிர்த அபிஷேகத்துக்காக ஆயிரம் பசுமாடு குடுத்தார். பிரதோஷம் சோமவார முதலாகிய தினங்களிலே ரெட்டிப்பு பண்ணி வைச்சார்.

அதின்பிறகு, சித்திரைமாசத்தையிலே, சயித்திர உச்சபம் ஆரம்பிச்சு, யேகாதேசியிலே உச்சபம் துபாதேசியிலே தீர்த்தம் ஆகத்தக்கதாக துசாரோணம் துடங்கி, பதினெட்டுனாள் உச்சபத்திலே விக்கினேசுவரருக்கு மூன்றுநாள், சுப்பிரமணியருக்கு மூன்றுநாள், கலியாண சுந்தரேசுவரருக்கு னாலு வீதியிலேயும் உச்சபம் பண்ணி வைச்சார். அதின்பிறகு, ஆலையத்துக்குள்ளே யெட்டுக் கொடியேத்தி, பத்தியுடனே ராசா பூதவாகனம், யானை வாகனம், ரிஷப வாகனம் முதலாகிய வாகனங் களிலே சுவாமியை யெழுந்தருளப் பண்ணி, பிரதிசுவரருக்கும் பெரியானயகிக்கு மாத உச்சபம் பண்ணி வைச்சார். பிரதீசுவரருக்கு ஓசந்த ரதம் எட்டு வண்டில் பூட்டி, பணிகள் துசங்களெல்லாம் கட்டி. அலங்கிருதமாய் முன்னே அதின்பின்னோடே அம்மனாதம் யிப்படியாக ரித உச்சபங்கள் னாலு வீதியிலேயும் பட்டணத்திலே நடப்பிவிச்சு மூணுநாள் துவாதேசியிலே தீர்த்தங் குடுத்து செனங் களைல்லாம் சிவகெங்கையிலே சுவாமி குடுத்த தீர்தத்திலே ஸ்த்தானம் பண்ணினாள். கர்கால்சோழ ராசாவும் அரதத்தரோடே கூட ஸ்த்தானம் பண்ணினார். ராசா ஸ்தானம் பண்ணி யெழுந் திருந்து வுடனே உடலிலேயிருந்த கறுப்பு குஷ்ட்டரோகம் வாங்கி ராசாவினுடைய சரீரம் பார்த்த பேருக்கு சந்திரனைப் பார்த்தால் போலே மனசுக்கு மெத்த சந்தோஷம் உண்டாகத்தக்கதாக ஆச்சுது.

30. ராசா தன்னுடைய பெண் சாதியுடனே சிவகங்கையிலே ஸ்தானம் பண்ணி, பத்தியோடே பிராமணாகளுக்கு வெகு திரவியங்கள் தான தர்மங்கள் பண்ணிக் கொண்டிருக்கிற வேளை யிலே சிவாக்கினையினாலே கெங்காதேவிக்கு மின்னல்கொடி போலே சறுவாபரண பூசிதியாய்த் தீர்த்தத்திலேயிருந்து உண்டாக்கி

---

*29. உச்சபம் - உற்சவம்; சயித்திர - சித்திர நட்சததிர; துசாரோணம் - கொடியேற்றம்;*

கய்யிலே ஒரு லிங்கம் விசுவனாதலிங்கத்தை யெடுத்துக் கொண்டு சகலமான செனங்களும் கேட்டுக் கொண்டிருக்கச்சே ராசாவுக்கு சொன்னசேதி என்னவென்றால், ராசாவே பிரதீசுவரருக்கு வடவண்டையிலே சிவாக்கினையினாலே செனங்களுடைய பாவங்களெல்லாம் போக்கி விக்கிர நிமித்தியமாக ஒரு அமிசத்தினாலே வாசம்பண்ணிக் கொண்டிருக்கிற செங்கையாக்கும் நான்; என்னிடத்திலே யெவாள் ஸ்த்தானம் பண்ணுகிறார்களோ, யெவாள் என் செலத்தை பானம் பண்ணுகிறார்களோ அவர்களுடையே தாபங்களை எல்லாம் போக்கடிப்பேன். என்னிடத்தில் ஸ்த்தானம் பண்ணி பிரதிசுவரரை தெரிசினை பண்ணுகிறார்களோ அவர்களுடைய பாவங்களெல்லாம் தீர்ந்து அவாள் சூரியகிராணம், சந்திரகிராணம், பிரதோஷம், சோமவாரம், பூரண அம்மாவாசி, அம்மாவாசி யிது முதலாகிய பர்வ காலங்களிலே என்னிடத்திலே ஸ்த்தானம் பண்ணி பிரதீசுவரரை தெரிசினம் பண்ணினாளானால், கெங்கையிலே ஸ்த்தானம் பண்ணி, விசுவலிங்கத்தை தெரிசினம் பண்ணினால் எந்த பலத்தை அடைவார்களோ அந்த பலன் அடைவாரகள் யிந்தத் தீர்த்தத்துக்கு அக்கினி மூலையிலே யிந்த சிவலிங்கத்தை னான் பிரதிஷ்டை பண்ணுகிறேன்; யிந்த லிங்கம் விசுவனாத லிங்க மென்று பேர்; என்னுடைய பிரபாபத்துக்குள்ளே யிருந்தது. யிந்த லிங்கத்தை யிங்கே கொண்டு வந்து தாபிச்சேன்; யித்தைத் தெரிசனம் பண்ணின பலத்தை அடைவார்களென்று சொல்லி அந்தர்தியானமாய் மரைஞ்சாள்.

31. அதின்பிறகு, சோழராசா அந்த விசுவேசுர லிங்கத்துக்கு கோவில்கட்டி பூசைபண்ணினார்! யிப்போதும் அந்த லிங்க மிருக்குது. அதின்பிறகு ராசா யிந்த ஆச்சரியத்தையும் தன் குஷ்ட்டரோகம் போனத்தையும் பாத்து பிரதீசுவரருக்கு நமஷ்காரம் பண்ணி, தோஸ்த்திரம் பண்ணினார்; யெப்படி என்றால், தேவர்களுக்கெல்லாம் தேவராய யிளம்பிரை தரித்து, பெரிய னாயகியோடே சேந்து, நம்பினபேர்களுக்கு சுகத்தை குடானின்ற பிரதீசுவரருக்கு நான் நமஷ்க்காரம் பண்ணுகிறேன்; உலகத்துக்கு னாதநாய்; அழிவில்லாதவராய், திரிசூலம் தரித்தவராய். சுருதிகளுக்கு அழகாய் பாபியளுக்கு பயங்கரனாய் பெரிய

தேவராய், சுத்தராய், சடைதரித்தவராய், உம்மை வணங்கினவர் அக்கியானத்தைப் போக்குறவராய், கெங்கையைத் தரித்தவராய், எல்லாந்தானாய், நாகாபரணம் தரித்தவராய், பசுக்களுக்கு பதியாய், விபூதிருத்திராஷ்ச அலங்கிற்தராய் சுப்பிரமணியருக்கு பிதாவாய் கெணேசன் நந்தி நந்தியினாலே சேவிக்கப்பட்டவராய், ரிஷபத்துவச முள்ளவராய், சம்மார கற்தாவாய், பிரம்ம கபாலந் தரித்தவராய், கபாலமாலை அணிந்தவராய் பூமிரதமாகவும், மகாமேடு வில்லாகவும், விஷ்ணுபாணமாகவும் கல்பித்தவராய், திரியம்பகராய், நீலகண்டராய், சிரிஷ்டிதிதிசம்மார கற்தராய், பூசைபண்ணின பேர்களுக்கு சீக்கிரமாக சித்தி பண்ணிக் குடுக்கிறவராய், யிருக்கிற பிரதீசுவரரை நமஷ்காரம் பண்ணினார். அதுக்குமேல் சிவஅர்ச்சகராய சிவபக்தர்களுக்குள்ளே உத்தறராய் தன்னுடைய குரு அரதத்த ஆசாரியாரை பூசைபண்ணி, வஸ்திர ஆபரணங்கள் திரவியங்களினாலே சந்தோஷப்படுத்தி வைச்சார்.

அதுக்கு மேல் ஆதிசைவ குலத்திலே பிறந்தவர்களாய சிவ அற்சகளாய் திருவையாத்திலே யிருந்து வந்திருக்கிற சிவபிராம ணாளுக்கு தன்மதானியம் வஸ்திர ஆபரணம், நாடு, சீர்மை பூமியெல்லாம் குடுத்து, யாங்கேதானே பிரதீசுவரருக்கு பூசை பண்ண தக்கதாய் ஸ்தாபித்தார். அதின்பிறகு, அறவத்தினாலு செட்டிகளும் வஸ்திர ஆபரணங்கள் குடுத்து சந்திராள் சூரியாள் உள்ளவளரக்கும் சிவபத்தி பண்ணிக் கொண்டு யிருக்கும்படியாக ஸ்தாபிச்சார். அதின்பிறகு, பிரதீசுவரரை நமஷ்காரம் பண்ணிக் கொண்டு தன் வீட்டுக்குப் போய்; சந்தோஷமாய், தன் பெண் சாதி யோடே சகல சமாசாரம் சொல்லிக் கொண்டு மாடியின் பேரிலே சயனித்துக் கொண்டார், கரிகால்சோழ ராசாவினுடைய கினாவிலே பிரதீசுவரர் பிரசன்னமாகி, ஒரு சேதி சொன்னார்! என்னா வென்றால், நீ பண்ணுகிற பூசா நிவேத்தியங்களினாலே சந்துஷ்டி யாய் கிழவி குடுத்த நிழலிலே வாசம் பண்ணிக் கொண்டிருக் கிறனென்று சொல்லிப்போட்டு மனரஞ்சார். மறுனாள் காலமே காரிகால்சோழராசா எழுந்திருந்து, தன்னுடைய குருவாகிய அரதத்த ஆசாரியரோடே சொல்ல, மந்திரிகளோடே ஆலோசனை பண்ணி,

---

*31. சுருதி - வேதம்; ரிஷபத்துவசம் - இடபக்கொடி.*

சில்பிகளை எல்லாம் அழைப்பிக்கச் சொல்லி, சோமவர்மாவை அழைத்துக் கொண்டார். அது என்னவென்றால், யிந்த பிரதீசுவரர் கோவில் என்னுடைய திரவியம் போட்டு கட்டுனீர், பிள்ளை யாராகிலும் திரவியம் போட்டு யிருக்கிறார்களோ? அதை நன்றாய் விசாரிச்சு சொல்லுமென்று ஆக்கியாபிச்சார் அதைக் கேட்டு சோமவர்மா என்கிறவர் யெல்லாகல் தச்சரையும் அழைப்பிவிச்சு, நடந்த சமாசாரம் என்னாவென்று கேட்டவிடத்திலே கல்தச்சர்ளெல்லாம் பயந்து சேதி சொன்னாள்.

32. அதென்னாவென்றால், ஒரு கிழவி சில்ப்பியளுக் கெல்லாம் சமையா சமையங்களிலே அன்னம், நீர் மோர், பாக்கு, வெற்றிலையுங்குடுத்து எல்லாரையும் ரெட்சித்தாள், ஆகையாலே எல்லாரும் அவள் தாட்சண்ணியத்தினாலே அவள் குடுத்த கல்லு ஒரு கல்லு சிகரத்துக்குக் கீழே வைச்சாள்; அத்தையிப்போ எடுப்போ மென்றாள். ஆசாரி எடுக்கக்கூடாது என்று சொன்னான். யிந்தபடி சொன்ன சில்பியினுடைய வசனத்தைக் கேட்டு, சோமவர்மா, ராசாவினுடைய சன்னிதானத்திலே போய் நடந்த சேதி சொல்லி, யிந்த அபராதம் பெரியதாயிருந்தாலும் மகாராசா சயித்துக் கொள்ள வேணும்! அந்தக் கல்லு சிகரத்துக்குக் கீழே யிருக்கிறபடியினாலே பரிகரிக்கக் கூடாது. ஆகையாலே அரதத்த ஆசாரியாரோடே கூடி சுவாமியை பிராத்தனை பண்ணிக் கொண்டால், அதுக்கு உபாயம் சுவாமி சொல்லுவார் என்று சொன்னார்.

யிந்தப்படி சொன்ன சோமவர்மாவினுடைய வசனத்தை கேட்டு, அரதத்த ஆசாரியத்ரோட ஆலோசினை பண்ணி, தன் பெண் சாதியும் தானும் மகாராசா பிராணளை விடுகிறதாக நிட்செயம் பண்ணிக் கொண்டு, பிரதீசுவரருக்கும் ரிஷபத்துக்கும் மத்தியிலே மூணுனாள் உபவாசமாக படுத்துக் கொண்டிருந்தார். யிந்த பிறகாரம் பிராணனை விடுகிற நிற்செயத்தோடே படுத்திருக்கிற தன்னுடைய பத்தனா யிருக்கிற கரிகால்சோழ ராசாவினுடைய கினாவிலே, மூணுநாளைக்கு மேல் பிரதீசுவரர் வந்து சொன்னது யென்னாவென்றால், சிவ பணிவிடை செய்து, புண்ணியவனாயிருக்கிற ராசாவே! நீர் சோகத்தை அடையாதேயும் அந்த கிழவி வேண்டிய திரவியத்தைக் குடுத்து சந்தோஷப்படுத்தி வைச்சால், அந்த கிழவி தன்னுடைய ஒருகல்லு

சேர்ந்ததினாலே யெந்த புண்ணியம் உண்டாச்சுதோ அதுக்கு மேல் நீ மழை பேய்குற போது எவளவு தாரையள் விழுகுதோ, ஆகாஷத்திலே எவளவு நஷ்சேத்திரங்கள் யிருக்குதுகளோ அவளவு வருஷம் உன்னுடைய விமுஷத்திலே முன்பிறந்த பேர்கள் யினிமேல் பொறக்க போறவர்களோடே கூட என்னுடைய சன்னியதானத்திலே வாசம் பண்ணுவாய்; அது தவிர, எனக்கு சமானமான ரூபத்தையடைந்து நந்திகேசுவரருக்கு சமானமான ஆதிபத்தியத்தையும் அடைவாய்! கெணபதி, சுப்பிரமணியாளைப் போலே நீயொருவன் தேவிக்கு குமாரனா யிருப்பாய்; யிப்படி பிரதீசுவரராலே சொல்லப்பட்டு காலமே எழுந்திருந்து தன்னுடைய குருவாகிய அரதத்த ஆசாரியருக்கு கினாவிலே நடந்த சமாசாரத்தை சொன்னார். அதின்பிறகு அந்த கிழவியை அழைப்பிவிச்சு கனகாபிஷேகம் பண்ணிவைச்சு, அவளுடைய சம்மதிமேலே அந்த சிவ புண்ணியத்தை தாரதத்தமாக வாங்கிக் கொண்டு அவளுக்கு சேதி சொன்னது என்ன வென்றால், லெட்சம் உளியள் எவளவு நிறையிருக்குமோ அவளவு சொற்ணம் தருகிறேன். அதினாலே நீ சந்துஷ்டியா யிரு! என்று சொன்னர்.

33. யிப்படி, ராசாவினுடைய வசனத்தை கேட்டு கிழவி சொன்னது என்னாவன்றால் நீ நான் கிழவி யின்றைக்கோ நாளைக்கோ மரித்துப்போகப் போறேன். எனக்கு திரவியங்களினாலே ஆகவேண்டிய தென்னா? ஆகையானாலே நீர் குடுத்த திரவியங்களினாலே யிந்த சில்ப்பியன் கையினாலே கும்பகோணத்துக்கு நிறுதி மூலையிலே யிருக்கிற ஆயிராபதேசுவர லிங்கத்துக்கு யிந்த மாதிரியாய்க் கோவில் கட்டி வைச்சால், அதினலே எனக்கு மெத்த சந்தோஷ முண்டாகுமென்று சொன்னாள். அப்படியே அவளுடைய வசனத்தின்படி கேட்டு, ராசா சந்தோஷமாய் சில்ப்பியளை அழைப்பிவிச்சு சிவாலையங் கட்டி வைச்சார். கிழவி மெத்த சந்தோஷத்தை அடைந்தாள்; யிப்படி பாவமில்லாமல் தர்ம நடத்தையோடே கூடினது கரிகால்சோழராசா தொண்ணூறு வருஷம் ராச்சிய பாரம் பண்ணித் தன்னுடைய குமாரன் பீமசோழனுக்கு பட்டாபிஷேகம் பண்ணி வைச்சு, தன் பெண்சாதியோடே கயிலாசம்போய் சேந்து சிவசாரூபத்தை அடைந்து சிவகெணங்களுக்கு ஆதிபத்தியத்தை அடைந்தார்.

அந்த ராசாவினுடைய கீற்தி மலைகளும், கடல்களும், ஆறுகளும் எந்த மட்டும் யிருக்குதோ அந்த மட்டும் பிரதீசுவரர் பிரசாதத்தினாலே ஸ்த்திரமாயிருந்தது. அந்த கரிகால்சோழ ராசாவினுடைய சரித்திரங்கள் பிரதீசுவரர் கோவில் பிரகாரங்களிலே யெழுதப்பட்டிருக்குது; அந்தச் சரித்திரத்தை யாதாமொருதர் கேழ்க்கிறார்களோ கேழ்ப்பிக்கிறார்களோ அவர்கள் சிவகெணாதிபத்தியத்தையடைந்து, வெள்ளி மலையிலே வாசம் பண்ணுவார்கள். யிந்த பிரதீசுவரர் கதை பாபங்களை போக்கடிக்கும்; புண்ணியங்களை உண்டாக்கும்! யிதைப் படித்தவர்களுக்கு பிரதீசுவருடைய பிரசாத முண்டாகும்.

## பீமசோழராசா கதை

34. கரிகால்சோழராசா கயிலாசம் அடைந்தபிறகு, அவருடைய குமாரர் பீமசோழரை மந்திரிகளும், பட்டணத்திலுள்ள செனங்களும் அவருடைய சிங்காதனத்திலே பட்டங்கட்டி வைத்தார்கள். இந்த பீம சோழருக்கு பெண்சாதி கேரள ராசாவினுடைய மகள் மகா குணசாலி; வித்துல்லதை யென்று அவளுக்குப் பேர். அவளோடே கூட அவர் யிந்த சோழ பூமி பரிபாலனம் பண்ணிக் கொண்டு வருகிறபோது அவராட்சியத்திலே ஒருவருந் திருடர் கிடையாது. இது முதலாகிய துஸ்ட்ட மிறுகங்கள் கிடையாது. காலாகாலங்களிலே மழை, வெள்ளங்கள், உண்டாகி, பூமி நன்றாய் விளைந்து வந்தது. பீமசோழன் பிராமணாள் அக்கிராமம் மெத்தக் கட்டி வைத்தார். சாலைகள் பழமுள்ள மரங்களினாலே வழிகளிலே உண்டாக நிலைத்தார். தண்ணீர்ப் பந்தல்கள் கட்டி வைத்தார். அன்ன சத்திரங்கள் பிராமணாளுக்கு மிர்ஷ்ட்டா அன்னமாய்க் கொடுக்கும்படியாகக் கட்டி வைத்து, அதுகளிலே வந்த சமுசாரிகளுக்கு சவுக்கியமாயிருக்கும் படியாக தொட்டிகள் குழந்தைகளுக்கு போட்டு வைத்து வெய்யிலிலே வந்த பேர்களுக்கு விசிரிகள் போட்டு வீசச் சொல்லி சுமங்கலியளுக்கு கண்ணாடி மஞ்சள், குங்கும முதலானதுகள் கொடுக்கச் சொல்லி நடந்துவந்த பேர்களுக்கு காலுகளுக்கு யெண்ணை தடவி, காலுகள் பிடிக்கச் சொல்லி, வென்னீர்கள் வார்த்து, யெண்ணைகள் தேய்த்துத்தானம் பண்ணச் சொல்லி ரோகிகளா யிருக்கிற பேர்களுக்கு அவுஷதங்கள் கொடுக்கச்

சொல்லி, மனுஷாளை திட்டம் பண்ணி வைத்து, சாப்பிடுங்கள்; பட்டினியா யிருக்கத் தேவையில்லை என்று கிராமத் துக்குக் கிராமம், பட்டணத்துக்குப் பட்டணம் மனுஷாளை திட்டம் பண்ணிவைத்து, கூப்பிடச்சொல்லி, நொண்டி முடங்களிருக்கிற விட ்திலே சகடையளிலே அன்னங்கள் கரிபதார்த்தங்கள் கொண்டு போய், படுத்திருக்கிற பேரை யெழுப்பி ராவும் பகலும் தூங்காதேயுங்கோ அன்னஞ் சாப்பிடுங்கோளென்று சொல்லி, உபசாரம் பண்ணி சாப்பிடச் சொல்லி, மனுஷாளை திட்டம் பண்ணினார்.

இதல்லாமல், நாலு பிறமும் மனுஷாளை விட்டு நாலுவர்ணங்கள் பிராமணாள் சத்திரியாள், சூத்திராள், தவசியாள் அவர் அவர்களுடைய நடத்தையளோடே சாஸ்த்திரந் தப்பாமல் விதி தர்மங்கள் செய்யுங்கள்! விபூதி ருத்திராட்சங்கள் தரித்துக் கொள்ளுங்கள், சிவலிங்கத்தை அற்சனை பண்ணுங்கள்!

இந்தப்படி பீமசோழராசாவினுடைய ஆக்கிஞை யிந்த ஆக்ரைப்படி நடந்துவராவிட்டால், அவரவர்களுக்குள்ள யோக்கிமான தெண்டனைகள் வருமென்று மனுஷாளை விட்டு அங்காங்கே கட்டளையிட்டார்.

35. இந்தப்படி தர்ம நாயமாக பீமசோழன் ராட்சியபாரம் பண்ணிக் கொண்டு வருகிறபோது அருணாமலை ஷேந்திரஞ் திருவணாமலையிலே கோபுரங்கள் மண்டபங்கள் எல்லாம் கட்டிவைத்தார். காவேரிக்கு வடிகரையிலே பீமேசுவரலிங்கத்துக்கு கோவில் கட்டி வைத்தார். சீயாழியிலே னாலு கோபுரமுங் கட்டி வைத்தார். அந்தச் சிவன் கோவிலுக்கு தீபங்களுக்கு யெண்ணை உதவும் படியாக இலுப்பைத் தோப்புகள் உண்டாக்கி வைத்தார். கார்த்திகை மாசத்திலே சிவன்கோவில் விஸ்ட்டுணு கோவில்களுக் கெல்லாம் விசேஷமாய் விளக்குகள் போட்டு வைத்தார். சிவன் கோவில்களுக்கு தென்னந்தோப்புகள் கரும்புத் தோட்டம், புஸ்ப்பத் தோட்டங்கள் போட்டு வைத்தார்.

---

*34. அவுஷதங்கள் - மருந்துகள்; தவசியாள் - வைசியாள் என்று இருக்க வேண்டும்.*

சிவராச்சிய பரிபாலனம் தீர்த்தங்கள் தூர்வை யெடுத்து படித்துரைகள் கட்டி வைத்து சிவன்கோவில், விஷ்ட்டுணு கோவில்களுக் கொல்லாம் உச்சபங்கள் பண்ணி வைத்தார். பூசையளும் பண்ணி வைத்தார். சிவபணிவிடையிலே சாகிறுதையாய் ஞாயத்தோடு ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற திட்டத்தினாலே முன்னிருந்த முன்சோழ ராசாக்களை செனங்களுக்கு நினைப்புண்டாக்கி வைத்தார்.

இப்படி இருக்கச்சே அவருடைய பெண்சாதி வித்துல்லத்தை சங்கர நாராயணசுவாமி யென்று தங்களுடைய பிறந்தவீட்டுக் குலதெய்வந் தங்களுடைய தேசத்திலே யிருக்கிற சுவாமி அவரிடத்திலே மெத்தப் பத்தியாய் அவரை தெரிசனம் பண்வேணுமென்று ரகசியத்திலே தன்னுடைய பர்தாவை பிராத்தித்துக் கொண்டாள். அதினாலே, அந்த அம்மாளுடைய கினாவிலே அந்த சங்கரராயண சுவாமி வந்து சேதி சொன்னார்; என்னவென்றால், உன் நிமித்தியமாக ஞானசிவலிங்க ரூபத்தை யெடுத்துக் கொண்டு பிரதீசுவரருக்கு வடவண்டை கொங்கணீசு வரருக்கு தென்னண்டை வாசம் பண்ணிக் கொண்டிருக்கிறேன்; அங்கே வந்து நித்தியமாய் தெரிசனம் பண்ணிக் கொண்டியே யானால், உனக்கு **ராசேந்திர சோழனென்று** ஒரு குமாரன் பிறப்பானென்று சொன்னார். இப்படிக்கு கினாவிலே சங்கரனாராயணசுவாமி சொன்ன வசனத்தைக் கேட்டு, தன்னுடைய பத்தா, **பீமசோழராசாவோடே** சொன்னாள். காலமே யாருவருந் சந்தோஷத்துடனே அந்த அடையாளம் சொன்னவிடம் வந்து பார்க்கிறபோது அந்தப்படி ஒரு சிவலிங்கம் அங்கே உண்டாயிருந்தது. அதைப் பார்த்த ராசா கெற்பகிரக முதல் கோவில் கட்டி பூசை பண்ணினார். ராசாவினுடைய பெண்சாதியும் மெத்த பூசைகள் பண்ணி, தோஷத்திரம் பண்ணினாள். எப்படி யென்றால், தேவர்களுக்கெல்லாம் தேவராய அருள்கடலாகி தேவரீர் இங்கேதான் யெழுந்தருளி சேவித்த பேர்களுக்கெல்லாம் புத்திர சந்தானங்கள் அவர்களுடைய மனோரதங்கள் சித்திக்கும் படியாக இங்கேயே வாசம் பண்ணவேணு மென்று பிராத்திச்சாள். இப்படிச் சொன்ன வித்துல்லதை வசனத்தைக் கேட்டு, சங்கரனாரயண சுவாமி சொன்ன தென்னவென்றால், என்னுடைய பக்கத்தில் ஒரு கிணறிருக்குது அதிலே கெங்கை சானித்தியமா யிருக்கிறாள்; அதிலே ஸ்தானம் பண்ணினவாளுடையே

பாவங்க ளெல்லாம் நிவாரணம் பண்ணுவாள். வையாசி மாதத்திலே யிந்த தீர்த்தத்திலே ஆர் ஸ்தானம் பண்ணுகிறார்களோ அவர்களுடைய வமுஷத்துக்கு ஒருநாளும் ஆனி வருகிறதில்லை! ஆகையினாலே யிங்கே ஸ்தானம் பண்ணி, யென்னை பூசை பண்ணு; காற்திகை சோமவாரத்திலே யிந்த தெனத்திலே ஸ்தானம் பண்ணி சோடச உபசாரங்களினாலே யென்னை பூசை பண்ணினால் ராசேந்திர சோழனென்று உனக்கு ஒரு பிள்ளை பிறப்பான் என்று சொன்னார்.

36. அந்தப்படியே, காற்திகை சோமவார விரதம் பண்ணிக் கொண்டு வந்தாள்; அவளுக்கு ராசேந்திர சோழனென்று லெட்சணவந்தராய் புத்திவராய் பிள்ளை பிரந்தது. அந்தப் பிள்ளைக்கி பீமசோழன் சகல வித்தையும் கத்துக் கொடுத்து குலசேரபாண்டிய ராசாவினுடைய மகள் கமலினி யென்கிறவளை கலியாணம் பண்ணிவைத்தார். ராசா ராசேந்திர சோழனுந் தாயார் தோப்பனாருக்கு மெத்தப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். யிப்படி பீமசோழன் யெழுவத்தேழு வருஷம் ராட்சிய பாரம்பண்ணி, சிவலோகத்தை அடைஞ்சார்.

## இராசராசேந்திர சோழன் கதை

37. அதெப்படி யென்றால், தன்னுடைய மந்திரிகளோடே கூட பூமியிலே யிருக்கிற ராசாக்களை ளெல்லாம் செயித்து, பிலத்தினாலே அவர்கள்கிட்ட தோப்பா வாங்கி, வெகு திரவியங் கள் சேத்து சிவன் கோவில் கட்டி வைத்தார்; யெங்கேயென்றால், முல்லைதுவாரம், புஸ்ப்பவனேசுவரம், யீசுமூலேசுபரம், மந்திரே சுவரம், ரிஷிகாணரேசுவரம், சொர்ணவனேசுவரம் இது முதலாகிய கோவில்கள் தீர்த்தங்கள் எல்லாஞ் செம்மையாக கட்டி, யெண்பது சிவலிங்கங்கள் ஸ்தாபித்தது. அதுகளுக்கெல்லாம் கோவில்கள் கட்டி, உச்சபங்கள் நடப்பிவித்தார். சிவஸ்தலங்களிலே அக்கிரா ரங்கள் கட்டி வைத்தார்; விஸ்ட்டுணு தலங்கள் சீரண உத்தாரணம் பண்ணி வைத்தார்.

---

*36. லெட்சணவந்தராய் - அழகுள்ளவராய்;*
*37. தோப்பா - கப்பம்;*

அப்படியே சுப்பிரமணிய தலங்கள், மலைகளின்பேரிலே வெகுசாக்கட்டி வைத்தார். பிள்ளையார் கோவில்கள், துற்கைகளுடைய கோவில்கள், அய்யனார் பிடாரியாருடைய கோவில்கள் திரளாக கட்டி வைத்தார். இப்படிக் கொத்த சோழராசா பிரதாப ருத்திரானென்று ஒரு ராசா; அந்த ராசாவை செயித்தார்; யெப்படி யென்றால், பிரதாருத்திர னென்கிற ராசா நெத்தியில் கண் படைத்தவன் சோழ ராவாவினுடைய ஆக்கினைக் குள்ளே அகப்படாமளிருந்தான். அவன் சித்திரத்திலே யெழுதிக் கொண்டு வரச்சொல்லிப் பார்த்து, இவனொரு மனுஷன். இவனுக்கு நெத்தியிலே கண்ணு சிவனுக்கும் நெத்தியிலே கண்ணு இப்படி சரியா யிருக்கலாமோ? வென்று சிவபத்தி பலத்தினாலே அவனிடத்திலே யுத்தம் பண்ணி, அவனுடைய நெத்திக் கண்ணைக் கெடுத்தார் பிரதாபருந்திரனும் அதுக்குமேல் சோழ ராசாவுக்குள்ளே அடங்கி கப்பபணம் கொடுத்துக் கொண்டு வந்தார்.

இப்படிக் கொத்த ராசேந்திரசோழனுக்குக் கமலினி வயத்திலே சூரியன் போலே பிரகாசமாக ஒரு பிள்ளை பிறந்தான். அந்தப் பிள்ளையை பார்த்து வீரமார்தாண்ட சோழனென்று பேர் வைத்தார். அந்தப் பிள்ளைக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவித்து, நீதியள், தர்மங்கள், வித்தைகளெல்லாங் கற்பிவித்து, அதின்பிறகு சிவபணிவிடை செய்த புண்ணியத்தினாலே யெழுவத்தெட்டாம் வயதிலே தன் பெண் சாதியுடனே சிவலோகத்தை அடைந்தார்.

## வீரமார்த்தாண்ட சோழன் கதை

38. அதின்பிறகு வீரமார்த்தாண்ட சோழன் ராட்சிய மாண்டுக் கொண்டு சேரராசாவினுடைய மகள், மாணிக்கவல்லியைக் கலியாணம் பண்ணிக் கொண்டு யிவருடைய தகப்பன், பாட்டன் நடந்த நடக்கையோடே தன் ராட்சியத்திலேயிருக்கிற செனங்கள் யெல்லாம் விபூதி ருத்திராட்சம், சிவபூசாபராளாக செய்வித்துக் கொண்டு அனேக அக்கிராரங்களினாலேயும், தீர்த்தங்களினா லேயும் வேதசாஸ்திர கோஷங்களினாலேயும் விளங்கிற காவேரியினுடைய இரு கரைகளிலேயும் பாடக சாலைகள், சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள். இதுகளை உண்டாக்கி வைத்து, ராட்சியம் ஆண்டுகொண்டு வருகிறபோது, பிராமணாள் அனேகம் பேர்கள் யாகாதியள், கர்மாதியள்

தேவதைகளுக்கு சந்தோஷம் வரும்படியாய்ப் பண்ணிக்கொண்டு வந்தார்கள். சன்னாசிகள் வெகுபேர். வேதாந்தங்கள் படித்து, பூசை பண்ணப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த ராசா, கோபுரங்கள், மண்டபங்கள், பிரகாரங்கள், சுயம்பு ஸ்தலங்களிலே அறுபது ஸ்தலங்களிலே சீரண உத்தாரணம் பண்ணி வைத்தார். காவேரியினுடைய யிரு கரையிலேயும் சத்தஸ்தானம் சூத்திரஸ்தலங்களுக்கு கண்டியூர், தில்லைஸ்தானம் முதலானுகளுக்கு பிரகார கோபுரங்கள் கட்டி வைத்தார், விஸ்ட்டுணு தலங்களுக்கும் வெகுதிரளாய் பிரகார கோபுரங்கள் கட்டி வைத்தார்.

இது தவிர, கும்பகோண ஸ்தலத்திலே, சாரங்கபாணி, சக்ரபாணி, திருச்சிரை சாரனாதர் நாகேசபரம் சோமசுபரம் விசுவனாதர், கெவுதமேசுபர் யிவர்களுக்கெல்லாம் பிரகார கோபுரங்கள் கட்டி வைத்தார். மகாமாங்கக் குளத்துக்குப் படித்துரைகள் கட்டி வைத்தார். இப்படியாய் ராட்சிம் ஆண்டு கொண்டிருக்கிற சமையத்திலே, சபையிலே தேவசர்மா யெங்கிற தன்னுடைய புரோகிதர் மகா பெரியவர், விரதத்தர்; அவரைப் பார்த்து, சுவாமி, கொங்கனே சுபர லிங்கத்தினுடைய மகாத்துமம் யென்னா? அது யெனக்கு சொல்லவேணு மென்று கேட்டார்.

கொங்கமணசுபரர் ஆர் நிமித்தியமாய் உண்டானவர்? ஆருக்குப் பிரசாதம் பண்ணினார்? இதையும் நன்றாய்ச் சொல்ல வேணுமென்று கேட்டார். அதுக்கு தேவசர்மா சொன்ன உத்தரவென்ன வென்றால், தத்தாத்திரையருடைய சிஷாளுக்குள்ளே ஒருத்தர் கொங்கணரென்று யிருந்தார்! அவர் இமோத்து பர்வத்திலே சிதேந்திரியராகி, விபூதி, ருத்திராட்சதாரணம் சிவத்தியானம் பண்ணிக் கொண்டு பஞ்சாக்கினி மத்தியிலே யிருந்து நூறு வருஷம் தர்மம் செய்தார். அவர் தவத்தினாலே சிவன் சந்தோஷத்தை அடைந்து, அவருக்குப் பிரதிட்சமாய் வந்து சொன்னார்.

39. அது என்னாவென்றால், உனக்கு யெந்த மனோரதங்க ளிருக்குதோ அதுகளையெல்லாம் சந்தோஷமாகக் கொடுக்கிறேன். ஆனால் சமீவன மென்று சித்சேத்திரம் யிருக்குது; நீ அந்த சித்ஷேத்திரத்திலே போய், தபசு பண்ணினால் உனக்கு தவசு

சித்தியுண்டாகும். அது யெங்கே யிருக்குதென்றால், சொல்லு கிறேன் கேள்! பஞ்சநதி க்ஷேத்திரத்துக்கு தென்னண்டையிலே காவேரி யென்றொரு நதி; அதுக்குத் தென்னண்டையிலே வீணாநதி யென்றும், மணிமுத்தா நதி யென்றும் அய்ந்து ணாழிகைக்குள்ளாக யிருக்குது. மணிமுத்தாநதிக் கரையிலே சுதாபுஷ்பகரணி யென்று ஒரு தீர்த்த மிருக்குது; அதினுடைய கரையிலே ஆனந்தவல்லி யென்கிற தேவியோடே தஞ்சேசுவரர் யிருக்கிறார். அவரை பூசை பண்ணி பிரதெஷ்ணம் பண்ணிக் கொண்டு, அதுக்கு யீசானியத்திலே வசிட்டேசுபரரென்று ஒரு லிங்கமும் மிருக்குது. அதுக்கு தென்னண்டையாய் பராசரர் தபசு பண்ணின ஸ்தலந்தேவதீர்த்த மென்று ஒரு தீர்த்தம்; அதினுடைய கரையிலே கரதளேசுவர லிங்கமென்று ஒரு லிங்கமிருக்குது. அங்கேபோய், தபசு பண்ணினால், உனக்குத் தபசு சித்திக்கும்! அந்த சுரதளேசுபரனுடைய சமீபத்திலே கரிகால் சோழர் பிரதிஷ்டை பண்ணின லிங்கம் பிரகதீசுபரரென்று ஒரு மகாலிங்கம், பெரிய னாயகி யென்று தேவி, பெரிய விருஷபம், மகத்தாகிய கோபுரம், பிரகாரம் இதுகளெல்லா மிருக்குது. அதுக்கு வடவண்டையிலே சிவகெங்கை யென்றொரு தீர்த்தமிருக்குது. அதுக்கு கொங்கணேசுபரலிங்கமென்று ஒரு லிங்கம் பிரதிஷ்டை பண்ணி பூசை பண்" ணென்று சொன்னார்.

இந்தப்படி, சிவனுடைய ஆக்கினைனுயினாலே அந்த கொங்கணசித்தன், கேதாரம், காச்சமீரம், காஞ்சிபுர முதலாகிய சிவஸ்தலங்களை யெல்லாந் தெரிசனம் பண்ணிக்கொண்டு நதிகளெல்லாம் தாண்டிக்கொண்டு, காவேரிதீர்த்தம் வந்து சேர்ந்து. இரு கரையிலே யிருக்கிற லிங்கங்கலெல்லாம் தெரிசனம் பண்ணிக் கொண்டு சமீவனம் வந்து சேர்ந்து, அங்கே தன் பேராலே சிவலிங்கம் பிரதிஷ்டையும் பண்ணி, பத்தியோட கூட ருத்திராட்ச அலங்கிறுதராய், ருத்திர பஞ்சாஷ்சர செபம், சிதேந்திரியாகப் பண்ணிக்கொண்டு அந்த லிங்கத்துக்கு யெதிரா யிருக்கிற இந்ததீர்த்த கரையிலே தவஞ்செய்தார்.

40. இந்தப் பனிரெண்டு வருஷம் தபசு பண்ணுகிறபோது. அந்த சித்தனுடைய முன்பாக ரிஷபாருடராய் ஞானம்பாள் சமீதராய் மெத்த வடிவுடனே செங்கை யெளம்பிரை நீலகண்ட

திரிநேந்திர சோபிதராய் கொங்கணேசுபர லிங்கத்திலே யிருந்து வெளிப்பிறப்பட்டு, கொங்கண சித்தருக்கு பிரதிஷ்ட்ச மானார். கற்தாவைப் பார்த்து கொங்கணசித்தர் பிரதிட்ச நமஷ்க் காரம் பண்ணி தோஷத்திரம் பண்ணினார். பத்தாளுக்கு சுகங்கொடுக்கிறவராய் முக்கண்ணராய் யிளம் பிறை தரிச்சவராய், விஷ்ட்டுணுவினுடைய கண்ணாலே பூசிக்கப்பட்டவராள், பணிந்தபேர்களுக்கு கல்ப்பவிருட்சமாய், வேதாந்தப் பொருளாய், ரிஷபாருடராய் யோகிகளினாலே வந்திக்கப்பட்ட பாதராய், பாம்பை பூஷணமாக அணிந்தவராய், புலித்தோல் தரித்தவராய், தெட்சன் யாகத்தை கெடுத்தவராய் திரிசூலம் தரித்தவராய் ஆனந்த குணமுள்ளவராய், சாம வேதப் பிரியனாய் வியோமவேசரான கொங்கண சுபரா, நீர் யென்னை ரெட்சியும் இந்த பிரகாரம் கொங்கணசித்தர் தோஸ்த்திரம் பண்ணுகிறபோது சுவாமி சொன்னது உத்தரவு என்னாவென்றால், கொங்கணசித்தர் உன்னாலே பூசை பண்ணப்பட்ட இந்த லிங்கத்திலே னான் சானித்தியமாய் யிருக்கிறேன். எனக்கு முன்பாக யிருக்கிற தீர்த்தம் அதிலே ஸ்தானம் பண்ணி, யென்ன தெரிசனம் பண்ணி நீர், சொன்ன தோஷத்திரத்தினாலே யென்னை யாதானு மொருத்தர் தோஷத்திரம் பண்ணுகிறார்களோ, அவர்களுக்கு நான் கயிலாசப் கொடுக்கிறேன். காம போகங்களை கயிலாசம் கொடுக்கிறேன். காம போகங்களை யெல்லாங் கொடுக்கிறேன். யிங்கே வாசம் பண்ணிக் கொண்டு பறுவ காலங்களிலே சோமவாரம், பிரதோஷம் சிவன் ராத்திரிகளில் யென்னை தெரிசனம் பண்ணின பேர்களுக்கு யெமனுடைய பயமில்லை நிட்சயமாக கயிலாச வாசம் கிடைக்கும். உனக்குந் தபசு சித்தியுண்டாச்சுது; நீ சுருக்கிலே கயிலாசத்துக்குப் போய் சேரென்று ஆக்கிஞாபிச்சு சிவனும் அந்தில்தியானத்தை அடைஞ்சார். கொங்கண **சி**த்தருங் கயிலாசம் போய் சேர்ந்தார்.

---

40. *சமீதராய் - சமேதராய் - உடன் கொண்டு; பத்தாளுக்கு - பக்தர்களுக்கு; வந்திக்கப்பட்ட - வணங்கப்பட்ட ; பூஷணமாக அணிகலனாக பிலித்தோல் - புலித்தோல்; ஸ்தானம் - ஸ்நானம்*

41. அப்படி **தேவசர்மா** வீர மார்த்தாண்ட சோழ ராசாவுக்கு சொல்லிப் போட்டு, கொங்கணேசுபரர் விஷையமாக இன்னமொரு கதை சொல்லுகிறேன். கேளுமென்றார். அதற்கு சோழ ராசா சிவ கதா அமுதத்தை எவ்வளவு பானம் பண்ணி னாலும் திரித்தியில்லை; ஆகச்சே யின்னம் சிவனுடைய கதை தேவியினுடைய கதை சொல்லவேணுமென்று கேட்டார். அதுக்கு தேவசர்மா சொன்னதென்னாவென்றால், இந்த தஞ்சாவூரிலே ஒரு செட்டிப்பெண் யிருந்தாள்; அவள் வாலிபம் முதல்க் கொண்டு பத்தியாய்க் கொங்கணேசுபரரிடத்திலே சேவித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு யெவ்வரணம் வந்தவுடனே தாயார், தகப்பனார், பந்துக் ளெல்லாரும் நல்ல பிள்ளையாக விசாரித்து, கலியாணம் பண்ணி விக்கிறோ மென்று சொன்னார்கள்.

இப்படி யிருக்கிறானின்ற அந்தப் பெண்ணினுடைய சொற்பனத்திலே கொங்கணேசுபரர் வந்து சகலமான தேவதையள், ரிஷியளோடே கூட சர்வாபரண பூஷிதியான அந்த செட்டில் பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொண்டு, தன்னுடைய ஆலையத்திலே கியானாம்பிகைக்கி கீழண்டையிலே ஸ்தாபித்தார். மறுனாள் காலமே பந்துக்களெல்லாரும் பெண்ணைக் காணாமல்த் தேடிக் கொண்டுவந்து கொங்கணேசுபரர் கோவிலிலே கண்டு அழைத்தார். அப்போ யிந்தப் பந்துக்களை யெல்லாம் பார்த்து, ஆகாசவாணி ஒரு வாற்தை சொன்னார்; என்னாவென்றால், சிவபத்த வருஷத்திலே பிறந்த யிவள் சிவனுக்கு பாரியா யிருக்கிறாள். யிவளை மனுஷராலே கலியாணம் பண்ணிக் கொள்ளக் கூடாது! முன்னாலே பாண்டியராசா வயத்திலே பராசத்தி பிறந்தாப்போலே பராசத்திதானே செட்டில் பெண்ணாய்ப் பிறந்தாள். ஆகையாலே, பரமசிவன் யிவளைக் கலியாணப் பண்ணிக் கொண்டா ரென்று யிப்படி சொல்லிக் கொண்டிருக்கச்சே, ஆகாசத்திலே யிருந்து புஷ்ப்பவருஷம் வருஷிச்சுது. அது யெல்லாருடைய தலையின் மேலேயும் விழுந்ததைப் பார்த்து, செட்டிகளைல்லாம் சந்தோஷமாக அந்தப் பெண்ணை சிவாலையத்தில் தானே வைத்துப் போட்டு. அவர்கள் வீட்டுக்குப்போய் சேர்ந்தாள்.

---

*பிரதோஷம் திரயோதசி நாளன்று செய்யப்படும் பூசை; பிர - முன்; தோஷம் - இரவு; பிரதோஷம் இரவுக்கு முந்தைய நேரம்.*
*41. திரித்தி - திருப்தி; பாரியாய் - மனைவியாய்;*

42. இப்பவும் அந்தச் செட்டிப்பெண் ஆலையத்திலே சிவாபிரதிமையாக யிருக்கிறாள். அவளை பூசை பண்ணின பேர்களுக்கு முன்னோர் தங்களைளெல்லாங் கொடுக்கிறாள் யிந்த கொங்கணேசுபரருடைய பிரதாபத்தைக் கேட்ட பேர்களுடைய பாவம் நீங்கு மென்று சொன்ன புரோகிதர் வசனங்கேட்டு, கொங்கணேசுபரிடத்திலே மெத்தப் பத்தியுடனே சீரண உத்தாரணம் பிரகாரமண்டப கோபரங்கள் கட்டி வைத்து வையாசி மாஸ்த்தையிலே சுவாமிக்கு உச்சபம் பண்ணி வைத்தார். அந்த வீர மார்த்தாண்ட சோழனுக்கு **கீர்த்திவர்த்தன் சோழனென்று** ஒரு பிள்ளை பிறந்திந்தான்.

அவனைத் தன்னுடைய சிம்மாசனத்திலே பட்டாபிஷேகம் பண்ணி வைத்து, தன்னுடைய பாரியோடே கூட அறுவத்தாறு வருஷம் ராட்சிய பாரம் பண்ணி சிவனை அடைந்தார். இந்த வீரமார்த்தாண்ட ராசாவினுடைய புண்ணிய கதையைக் கேழ்க்கிற பேர்கள்கூட சிவ சாரூபத்தை அடைவார்கள்; சமுசியமில்லை.

## 10 ஆவது - கீர்த்திவர்த்தன்

## சோழன் கதை

43. அதின்பிறகு வீரமார்த்தாண்ட சோழன் போனபிறகு கீர்த்திவர்த்தன் சோழராசாவாகி யிருந்தார். அவனுடைய பாரிகைக்கு கமலினி யென்று பேர். அவள் சூரிய சேகர பாண்டியராசாவினுடைய மகள்; மெத்த வணக்க முன்னவள். அவளுடனே சேந்து வணக்கத்தோடே மந்திரிகளோடே கூட ராச்சியம் ஆண்டுகொண்டு, சிவாலையங்கள் கட்டி வைத்தார். சீரண உத்தாரணங்கள் வெகுசாய் செய்தார். அதினாலே அவருடைய

---

*42. சமுசியம் - சந்தேகம்*

*43. சீரண + உத்தாரணம் = சீரணோத்தாரணம் ; புனர் நிர்மானம்- திருத்திப் புதிதாய் அமைத்தல் ; நிருதி மூலை - தென்மேற்கு மூலை; மனோரதம் - உள்ளத்து ஆசை;*

பேர் யெதாந்தமாய் விளங்கிச்சுது. அந்த ராசா சுப்பிரமணிய சுவாமியின்டத்திலே மிகுந்த் பத்தியோடே சஷ்ட்டி விரத முதலான விரதங்கள் ஆசரிச்சுக் கொண்டு வந்தார். அதினாலே சுப்பிரமணிய சுவாமி சந்தோஷத்தை அடைந்து அந்த ராசாவினுடைய சொற்பனத்திலே வந்து சொன்னார்; என்னவென்றால் உன்னுடைய பத்தியினாலேயும் உன்னுடைய பாரிகை பண்ணின விறுத்தினா லேயும் மெத்த சந்தோஷத்தை யடைந்தேன் உனக்கு வமிஷோத்த கராய் சத்துருக்களை செய்கிற சக்தியுள்ளவனாய் விசய சோழ னென்று ஒரு பிள்ளை. பிறக்கும். தஞ்ச நகரத்திலே கொங்கணேசு பரருக்கு நிருதி மூலையிலே யென்னுடைய ஆலையமிருக்குது. அது குகபறுவதத்தின் மேலே யிருக்குது. அந்த பறுவதம் பூமியிலே அமுழந்திப் போயிருக்குது. அத்தை உத்தாரணம் பண்ணு! அதிலே சத்தி கூடமென்று ஒரு கிணறு யிருக்குது! அந்த கிணத்திலே சஷ்ட்டி யண்ணைக்கி ஸ்த்தானம் பண்ணினால் பிள்ளையில்லாத பேர்களுக்கு பிள்ளை பிறக்கும்! அந்த தீர்த்தத்திலே காற்த்திகை மாசம், காற்த்திகை நஷ்சேத்திரத்திலே ஸ்த்தானம் பண்ணி, என்னை தெரிசனம் பண்ணினியே யானால் உன்னுடைய மனோரதங்களை அடைஞ்சு புத்திரனையும் அடைவாய் என்று சொல்லிப்போட்டு மறைஞ்சார்.

44. அதின்பிறகு, ராசா காலமே எழுந்திருந்து மந்திரிகளை அழைப்பிச்சு அந்த சுப்பிரமணிய ஸ்தலத்தை சீரண உத்தாணம் பண்ணச் சொல்லி ஆக்கி ஞாபிச்சார். அப்படியே சீரண உத்தாரணம் பண்ணுகிறபோது, அந்த சத்தி தீர்தம் கண்ணிலே விழுந்தது. அத்தை உத்தாரணம் பண்ணி கோவிலும் பர்வத்தின் மேலே ஒசத்திக் கட்டி படித்துரையும் கட்டி வைச்சார். சுவாமி சொன்ன பிரகாரமே அந்த சத்தி தீர்த்தத்திலே ஸ்தானம் பண்ணி, சுப்பிரமணியரை தெரிசனம் பண்ணினார்; அதெப்படி என்றால், ஆறுமுகராயும் வேலாயுதராயும் சூர தாருகாசுரனை சங்கரிச்சவராயும் தேவசேனைக்களுக்கு அதிபதியாய்

---

*44. சங்கரிச்சு - கொன்று; பிரதீஷ்சம் - பிரத்தியட்சம்; பாரி - மனைவி.*

பிரணவ ரூபியாய் மந்திரங்களுக் கெல்லாம் குருவாய், கீர்த்திகா குமாரராய், சுவர்ணதாமரை புஷ்ப்பமாலை அணிந்தவரா யிருக்கிற சுப்பிரமணிய சுவாமியை நான் நமஷ்க்காரம் பண்ணுகிறே னென்று தோஸ்த்திரம் பண்ணுகிற வேளையிலே, சுப்பிரமணியர் பிரதீஷ்சமாகி ராசாவுக்கு சொன்னார்; என்னவென்றால், உன்னுடைய தோஸ்த்திரத்தினாலேயும் நீ செய்த பணிவிடையினாலேயும் உன்னுடைய பாரி பண்ணின விரதத்தினாலேயும் செயசோழானென்று உத்தமனாய் ஒரு பிள்ளை பிறப்பான். யிப்படியா தாமொருத்தர் யிந்த சத்தி தீர்த்தத்திலே ஸ்த்தானம் பண்ணி, யென்னை தெரிசினம் பண்ணி தோஸ்த்திரம் பண்ணுகிறார்களோ, அவாள் மலடா யிருந்தாலும் பிள்ளை பிறக்கும் யிந்தபடி நாம் வரங்குடுத்தோம். யிந்த சேத்திரத்திலேய யிருக்கிற துற்கைகள். விஷ்ணு, அய்யனார் பிள்ளையார் யிவர்களுக்கு எல்லாம் நீ கோவில் கட்டி வை அதினாலே உனக்கு உத்தமாகிய பலனுண்டாகும் என்று ஆக்கிஞாபிச்சு, அந்திர்தியானத்தை அடைஞ்சார்.

45. அதின்பிறகு அந்த ராசா சுப்பிரமணியருடைய ஆக்கிஞையினாலே தஞ்சாவூரிலே நவசத்தி ஆலையங்கள் திக்குகளிலே கட்டி வைச்சார். மாரியம்மன் கோவில் கட்டிவைச்சார்; நடு பட்டணத்திலே ரேணுகா தேவிக்கு ஆலையங்கட்டி வைச்சார். தென்னண்டை பிள்ளையார், எங்கெங்கே எந்த எந்த தெய்வங்கள் யிருந்துதோ. அங்கங்கே அந்தந்த தெய்வங்களுக்கு ஆலையங்கள் கட்டி வைச்சார். நரசிங்கருக்கு மேலண்டையாய், நீலமேகருக்கு வடவண்டையாய், கற்தாவுக்குங், கையிலாச நாதருக்கும் விஷ்ணுவுக்கும் கோவில்கள் கட்டி வைச்சார். அவர்களுக்குகெல்லாம் பூசைகளும் பண்ணி வைச்சார். யிப்படி பூசை பண்ணினத்தினாலே பேய் பிசாசுகள் ரோகங்கள் பட்டணத்து செனங்களுக்கு பீடியாம லிருந்தது.

யிது தவிர, விதிஷ்ட்டேசுபுரர் வயித்தியனாதர் யிதுகளுக்கெல்லாம் கோவில்க்கட்டி வைச்சார். தஞ்ச நகரத்துக்கு கீழண்டையிலேயிருக்கிற மாரியம்மனுக்கு மெத்த பூசைகள் பண்ணி வைச்சார்; யிப்படி யிருக்கிற வேளையிலே அவருடைய ஸ்த்திரி **கமலினி** கெற்பினி ஆகி, பார்வதி சுப்பிரமணியரை பிறப்பித்தால் போலே ஒரு குமாரனை பெத்தாள். அப்போ, ராசா பிராமணருக்கு

திரவியங்களும். நெல்லுகளும், வஸ்த்திரங்களும், பூஷணங்களும். மெத்தக் குடுத்தார். அது தவிர, அந்தஸ்தலத்திலே யிருக்கிற கோவிலுகளுக்கெல்லாம் பூசையும் பண்ணி வைச்சார். அந்த செயசோழனும் யிளம்பிறைபோலெ வளந்தார். அறுவத்துநாலு கலைகளையும் குருக்களிடத்திலே வணங்கி கத்துக் கொண்டான். கேரளதேசத்து ராசா, **காஞ்சன் மாலை** யெங்குற தன்னுடைய மகளை. செயசோழனை அழைப்பிவித்து வலுவிலே கலியாணம் பண்ணி குடுத்தார். யிப்படிக் கொத்த பிள்ளை. பெண்சாதி மருமகளுடனே ராட்சியபாரம் பண்ணிக் கொண்டு கீர்த்திமான் எங்குற ஒரு ஆறு உண்டாக்கி வைச்சார்; அந்த கீற்திசோழன் எழுவத்தேழு வருஷம் ராட்சிய பாரம்பண்ணி மகன் செயசோழனுக்கு பட்டாபிஷேகம் பண்ணி வைச்சு மாரியோடே கூட சிவபதத்தை அடைந்தார்.

## செய சோழன் கதை

46. அதின்பிறகு. செயசோழன் தர்மத்தோட ராட்சியபாரம் பண்ணிக்கொண்டு. மந்திரி ஆலோசினை பண்ணிக் கொண்டு. தனக்கு யோக்கியமான பெண்சாதியுடனேகூட சிவதர்மங்கள், சிவபணிவிடைகள். சீரணஉத்தாரணஞ் செய்தார்; காஞ்சனூர் அக்கினேசுவரர்; தேவூர் கதளிவனேசுவரர், திரிச்சங்காட்டங்குடி பிச்சாண்டேசுவரர். ஸ்ரீவாஞ்சேசுபரர், யிதுகளுக்கெல்லாம், சீரண உத்தாரணங்கள பண்ணிக் கட்டி வச்சார். செங்கொண்டபுரத்திலே, பிரகதீசுவரர் கோவிலுக்கு முக்கால் திட்டமாக சோமவர்மா என்கிற சில்ப்பி, பிரகதீசுவரர்கோவில் கட்டினவன், அவனுடைய கொழுபேரனுடைய கையினாலே, அதே மாதிரியாய் கட்டிவச்சார்!

ஸ்ரீமுஷ்பட்டணத்திலே ஆதிவீரர்களுக்கும் முக்கிய நகரம் என்கிற உடையார்பாளையத்திலே முக்கேசுபரருக்கும் விர்த்தாசலேசுபரருக்கும். மணிமுத்தாநதி படித்துறைகள், காளத்தி யீசுவரர் இவர்களுக்கெல்லாம் ஆலையங்கள் கட்டி வைத்தார். அந்த செயசோழனுக்கு **கனகசோழனெ**ன்று ஒரு பிள்ளை பிறந் தது; அந்த பிள்ளைக்கு பட்டங்கட்டி வைத்து. அறுவது வருஷம் ராட்சியபாரம் பண்ணி. அதுக்குமேல் சிவபிரசாதத்தினாலே தன்னுட பாரியோட கூட சிவபதத்தை அடைந்தார்.

யிந்த கீற்திசோழன்கதை, யிவனுடைய பக்த்தி, யிதுகளை எவாள் சொல்லுகிறார்களோ அவர்களுக்கு சிவனிடத்திலே பக்தியுண்டாகும்!

## கனகசோழன் கதை

47. அதின்பிறகு, கனகசோழனென்கிற ராசா, விக்குரமாற்கராசா வருஷத்திலே பிறந்து, சென்ம்பகாங்கி என்கிற பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொண்டு, அனேகம் சேனைகள் மந்திரிகளோட தர்மமாய், நீதியாய் ராட்சியபாரம் ஆண்டுகொண்டு வந்தார். யிவர்களுடைய பூறுவ ராசாக்களுடைய பக்த்தி எந்தபடி நடந்துதோ, அந்தபடியே தானும் சிவபக்த்தி பண்ணிக்கொண்டு வந்தார். யிது தவிர, யானை, குதிரை, சேனை யிதுகளுக்கெல்லாம் ருத்திராட்சத்தினாலே அங்கிகள் பண்ணிப்போட்டார் அதினாலே, எந்த யுத்தத்திலே போனாலும் செயித்துக் கொண்டிருந்தார்! அந்த ராசாவினுடைய ராட்சியத்திலே சயினால், மிலேச்சாள், சங்கதசாதிகள் முதல்க்கொண்டு ராசா ஆக்கிஞையினாலே விபூதி உத்தாரணம் பண்ணிக்கொண்டு வந்தான்.

48. அதினாலே, எல்லாரும் பாவமில்லாமல் பரிசுத்தமா யிருந்தார்கள். சிவாலையங்களி உச்சபங்க ளாகும்படியினாலே நாலுபக்கமும் வாத்திய கோசங்கள் கூறுவதாய் நிறைந்து யிருந்துது. அதுதவிர, பாடக சாலைகளிலே மூன்று வேதங்கள், சாஸ்திரங்களையும் ஓதுகிற பிள்ளைகளுடைய ஞானி, மிகவும் உண்டாகிக் கொண்டிருந்தது! சதாசிவ பூராணங்கள், பெரியவர்க ளெல்லாம் படிக்குற அந்த தொனிகள் மெத்த உண்டாயிருந்துது. கடை தெருவுகளிலே தன தானியங்கள் அமிதமாக நிறைஞ்சு யிருந்துது! அந்த ராசா ராச்சியபாரம் பண்ணுகிறதிலே யெல்லாம் சந்தோஷமாய் தர்மங்களை செய்து கொண்டிருந்தான். சிபாயிகள், வில்வித்தைகள் முதலான ஆயுதங்கள் பழக்குறபோது, அந்த நாண்

---

*47. அங்கி-ஆடை; இங்கு மாலை; சயினால் -சயினாள்- சமணர்கள்; மிலேச்சாள்-வெளிநாட்டோர்; சங்கத சாதிகள்-கலப்புச் சாதிகள்*

ஓசைகள் மெத்த உண்டாச்சுது! யிது தவிர, ராசா கட்டி வைக்கிற சிவாலயங்களில் கல்தச்சர்கள் வேலை செய்யும்போது, அவர்களுடைய உளி ஓசைகள் மெத்த உண்டாச்சுது! மழை, காலாகாலம் தப்பாமல் பேஞ்சு, கிளார் பூமியிலே ஒருவிடத்திலேயும் யுத்தங்கள் கிடையாது!

49. யிப்படி ராட்சியபாரம் ஆண்டுகொண்டு வருகிறபோது, திருவலஞ்சுழி என்கிற சிவஸ்தலத்திலே, வெள்ளைப் பிள்ளையாருக்கு முன்பாக காவேரி, ஒரு பிலத்து வழியாக பாதாளத்திலேயே போய் பிரவேசித்தாள்! செலனாடாமல் போச்சுது! அதினாலே பயிர்களெல்லாம் காஞ்சுபோய் செனங்களெல்லாம் கூப்பிடடாள்! அந்த சமாசாரம் அடுக்காறா வந்து சொன்னத்தைக் கேட்டு, கனகசோழராசா குதிரைமேலே யேறி செனங்களோடே கூட அந்தஸ் தலத்திலே போய் பார்க்குறபோது, காவேரி செலம் ஓரட்டுக்கும் பிலத்த வழியாய் பாதாளத்திலே போய் சேருகிறத்தை பாத்து, அதை அடைக்கிறதுக்கு எத்தினம் பண்ணினான். ராசா தன் கையினாலே ஆனமட்டுக்கும் உறுவபிரையத்தினம் பண்ணினார்; ஆகாமல் போய்விட்டது! அப்போ ராசா மெத்த விதனத்தோடே ஆலோசனை பண்ணி, என்ன செய்வோ மென்று தேனுபுரேசுபர சுவாமி சன்னியதானத்திலே போய், சுவாமி அம்மன், வெள்ளை பிள்ளையார் மூன்று பேருக்கும் நமஷ்க்காரம் பண்ணி உபவாசமாக சன்னதியிலே படுத்துக் கொண்டார். அந்த வேளையிலே சுவாமி ஆகாசவாணி ரூபமாக ஒரு சமாசாரம் சொன்னார்; அதென்னவென்றால், "ராசாவே நீராகிலும் தபசியாகிய பெரியா ராகிலும் அந்த பெலத்துக்குள்ளே பிரவேசிக்கால், அது அடை பட்டு போம்! வேறே உபாய மில்லை. அது அடைப்டுகுறத் துக்கு! அது அடைப்பட்டுதானால் காவேரி பிரவாகமா யெப் போதும்

---

*48. ஊதுகிற - ஓதுகிற; பூராணங்கள்-புராணங்கள்; சிபாயிகள்-படைவீரர்கள்; கிளார்-களர்;*

*49. செலம்-தண்ணீர்; கூப்பிட்டாள்-கூப்பாடு போட்டனர்; எத்தினம்-முயற்சி; விதனத்தோடே - விசனத்தோடே - வருத்தத்தோடு; பெலம்-பிலம்-துவாரம்;*

போலே பயிருக்கும் பாயும்; நெல்லு விளையும்; செனங்கலும் சுகமாயிருப்பாள்!"

50. ஆகையாலே நீரிந்தப் பிலத்திலே பிரவேசிக்க வேணும்! சரீரம் ஸ்திரமல்ல! யிந்த வேலை செய்தீரானால், சந்திராள், சூரியாள் உள்ளவரைக்கும் கீர்த்திஷ்த்திரமாக யிருக்கும்! யிப்படி முன்னே சிறுதுபேர் ராசாக்கள் கீற்தி அடைந்து யிருக்கிறாள்! யாரென்றால், சிவசக்கரவர்த்தி ததீசி, மகர்சிஷகர்ணன் யிப்படிக்கொத்த போர்கள் பர உபகார நிமித்தியமாய் சரீரத்தை விட்டாள்! அவர்கள் யிப்போது யில்லாமலப் போனாலும் அவர்களுடைய கீற்தி ஸ்த்திரமா யிருக்குது!" என்று சொன்ன ஆகாஷவாணியினுடைய வசனத்தைக் கேட்டு **கனகசோழ ராசா** காவேரியிலே ஸ்த்தானம் பண்ணி, விபூதி ருத்திராட்சதானம் பண்ணிக் கொண்டு தன்னுடைய சீர்மையிலே யிருக்கிற செனங்களுடைய யிதத்தைக் கோரி, **தானும் தன்னுடைய பெண்சாதியுமாய்,** சுவாமியை யிஸ்த்தோத்திரம் பண்ணி, அந்த பிலத்துவாரத்துக்குள்ளே விழுகிறதுக்கு எத்தினமாக நடந்தார்கள்!

அந்த சமையத்திலே, சீர்மையிலே யிருக்கிற செனங்களெல்லாம் ராசாவினுடைய மனசையும் பக்தியும் நீதியும் பாத்து, கண்ணீர்விட்டு அழுதுகொண்டு, வீடுகள் மேலேயும் மரங்கள் மேலேயும் யேறிக்கொண்டு ராசாவையும் **செண்பகாங்கி** என்குற ராசாஸ்த்ரீயையும் பார்த்தார்கள். அந்த சமையத்திலே ஒரு மந்திரி பெரியரா யிருக்கப்பட்டவர் குறுக்கே விழுந்து கையை கூப்பிக்கொண்டு, வணக்கமாய் ராசாவைப் பாத்து ஒரு சேதி சொன்னார்; அதென்னவென்றால், "கும்பகோண காவேரிக்கு வடகரையிலே திருக்கோடியீசுவர ஸ்தலத்திலே ஒரு ரிஷியீசுபரர் தபசு பண்ணுகிறார்! மகாபெரியவர்! அவருக்கு நமஷ்காரம் பண்ணி, அவருடைய உத்தரவுமேலே நீர் யிந்த பிலத்துக்குள்ளே பிரவேசிக்கவேணும்! யில்லாவிட்டால் கூடாதெ"ன்று சொன்ன மந்திரி வாற்தையைக்கேட்டு ராசா சந்தோஷமாய், தன்னுடைய ஸ்த்திரியோட கூட அந்தஸ்தலத்துக்கு போய், அந்த ரிஷியீசுபரருக்கு நமஷ்காரம் பண்ணினார்.

51. அப்பொழுது, அந்த ரிஷியீசுபரார் ராசாவைப் பார்த்து, "நீர் தீர்க்காயிசாயிரும்!'' என்று வாழ்த்தினார். ராசாவினுடைய பெண்சாதியை பார்த்து, "நீர் தீர்க்க சுபமங்கிலியா யிரு! உனக்கு ஒரு பிள்ளை பிறப்பா"னென்று வாழ்த்தினார் அப்படிக்கொத்த ரிஷியினுடைய வாற்தையைக் கேட்டு, ராசா பிராமணாளுடைய வாற்தை பொய்யாகுறதில்லையே! நான் பிலத்துக்குள்ளே பிரவேசித்தால் பிள்ளை யெப்படி பிறக்கும்? ஆகையாலே னாம் செனங்களுக்கு உபகாரம் பண்ணவந்த காரியத்துக்கு விக்கினம் வந்தாப்போலே யிருக்குதென்று விசாரப்பட்டுப் கொண்டு இருக்கிற வேளையிலே ராசாவினுடைய மந்திரிகள் ரிஷியீசுபரரை நமஸ்க்காரம் பண்ணி ஒரு விக்கிஞாபணம் பண்ணினார்கள்! யென்னவென்றால், ''தாங்கள் பெரியவர்கள்! தங்களுடைய வாற்தையை சத்தியமா யிருக்கவேணும்; ஆகிலும் இப்போ திருவலஞ்சுழிஸ்தலத்திலே ஒரு பிலமிருக்கு! காவேரியினுடைய செலம் ஓரட்டுக்கும் அந்தப் பெலத்து வழியாய் போய், பாதாளம் போய் சேருது! ஆகையாலே பயிர்களுக்கு செலமில்லாமல் உணர்ந்து போகுது! அதினாலே பிரசைகளெல்லாம் ராசாவண்டை கூக்குரல் போடுகிறார்கள்; செனங்களுடைய ரெஷ்சனம் ராச தற்மமான படியினாலே, ராசா தானே வந்து, அத்தை அடைக்க யெத்தனம் பண்ணினார். அது அடைபட யில்லை! அந்த வேளையிலே ராசா சுவாமியைப் பிரார்த்தித்தார்; அப்போ ஆகாசவாணி ரூபமாக சுவாமி ஒரு உபாயஞ்சொன்னார்! என்னவென்றால், ''இந்த துவாரம் அடைபடுகிறதுக்கு ஒரு பெரியவராகிய ரிஷியாகிலும் ராசாவாகிலும் அதுக்குள்ளே பிரவேசித்தால், அடைபடும்! யில்லாவிட்டால் அடைபடாதென்று சொன்ன வசனத்தைக் கேட்டு, ராசா அதிலேதானே பிரவேசிக்கிறதற் செத்தினர் பண்ணிக்கொண்டு தாங்கள் பெரியவளானபடியினாலே, தங்களுடைய உத்தரவு. வாங்கவேணுமென்று வந்தார்; தாங்கள் ராசாவுக்குத்திரவு

---

*51. திருவலஞ்சுழி-கும்பகோணத்திற்கு மேற்கே 4 மைல் தொலைவில் உளது.*

கொடுத்து அனுப்பிவித்தால், அந்தப்பெலத்துவாரம் அடைபட்டு, காவேரி யெதால் பிரகாரமாக யிருக்கும்! பாஞ்சு பயிர்கள் விளைஞ்சால், செனங்கள் ரெட்சிக்கப்படுவார்கள்; இது ராசா தர்மமானபடியினாலே, தாங்கள் வாக்கினாலே ராசாவுக்கு உத்தரவு கொடுக்கவேணும்! பெரியவாளுடைய வசனம் ஒருனாளும் பொய்யாகிறதில்லை! பெரியவாளுடைய கிடாட்சத்தினாலே யிந்தக் காரியம் ராசாவுக்கு சித்தித்துது; இந்த லோகத்திலே கீர்த்தியும் கயிலாசமும் வரவேணுமென்று சொன்ன மந்திரியினுடைய வசனத்தைக் கேட்டு, ராசாவையும் செனங்களையும் பார்த்து மனசிலே ஆலோசனைப் பண்ணி **யேரெண்ட முனி** ஒரு வார்த்தை சொன்னார்.

52. என்னவென்றால், "நான் விரதன்! தபசு வெகுனாளாய் பண்ணி, சரீரமெல்லாம் சீரணமா யிருக்குது! னான் கயிலாசத்தைப் போய், அடையவேணுமென்று யிச்சிக்கிறேன்! யிந்த ராசாவினுடைய ராட்சியத்திலே **திரிக்கோடீகாவல்லிலே** யிருந்து வெகுனாள் தபசு பண்ணினேன்! ஆகையால் ராசாவுக்கு உபகாரமாகவும் செனங்களுக் குபகாரமாகவும் னான் பொய் தேகத்தை அந்தப் பெலத்திலே விடுகிறே னென, **ததீசி** மகாரிஷி தேவதையள் நிமித்தியமாக தேகத்தை விட்டு சொற்கத்தை யடைந்தாரோ யில்லையோ, அப்படியே னானும் அடைகிறேன்! நான் இந்த ராசாவுக்கு ஆசீர்வாதம் பண்ணின வாக்குப் பொய்யாகக் கூடாது. ஆகையாலே, யிந்த ராசா சிரஞ்சீவியா யிருக்கட்டும்; யிவனுடைய பெண்சாதி தீர்க்க சுபமங்கிலியா யிருக்கட்டும்! இவனுக்கு சீக்கிரமாக சிவபணிவிடை செய்யத்தக்கதாக பிள்ளை பிறக்கட்டும்! செனங்களை யெல்லாம் ரெட்சிக்கட்டு மென்று இப்படி சொன்ன ரிஷியினுடைய வசனத்தை ராசாகேட்டு, ராசா சொன்னது: னான் இருக்கச்சே தாங்களிப்படி யெனக்காக தேகத்தை தியாகம் பண்ணினால் யெனக்கு பிரமித்தை வரும். ஆகையாலே, னான்தானே போய் பிரவேசிக்குறேனெ"ன்று சொன்ன ராசாவினுடைய வசனத்தைக் கேட்டு, யேரண்டர் சொன்னது : " செனங்களுக்குபகாரமாக சந்தோஷத்துடனே னான் யென்னுடைய தேகத்தை விடுகிறேன்! இல்லாமல், சிவனுடைய சன்னியதானத்திலே தேகத்தை விட்ட

---

52. *திருக்கோடிகா - திருவிடைமருதூருக்குக் கிழக்கே ஒன்றரை மைல் தொலைவில் உளது.*

பேர்களுக்கு சிவசாயூச்சியம் வரும்! ஆகையாலே உனக்கு பாபலேசமும் வருகிறதில்லை! யென்று சொல்லிக்கொண்டிருக்கிற வேளையிலே, ஆகாசத்திலே யிருந்து புஷ்ப வருஷம் வருஷிச்சுது! தேவதைகள் துந்திமி முதலான வாத்தியங்கள் கோஷிச்சான்! அந்த வேளையிலே யேரண்ட ராசாவோடெயும், சகலமான செனங்களோடே கூட பிள்ளையாருக்கும் சிவனுக்கும் நமஸ்க்காரம் பண்ணி, காவேரிஸ்த்தானம் பண்ணி, விபூதி உத்திராட்சம் தரித்துக் கொண்டு, சிவனை மனதிலே தியானம் பண்ணிக்கொண்டு, அந்த பிலத் துவாரத்தை மூன்றுதிரம் பிரதெட்சணம் பண்ணி, அதுக்குள்ளே போய் பிரவேசித்தார்!

53. அப்போ, அந்தப் பெலத்திலே யிருந்து யேரண்டசுபரென்று ஒரு லிங்கம் உண்டாச்சுது! அந்த வேளையிலே யேரண்டரிஷி விமானத்து மேலே யேறிக்கொண்டு, ராசாவைப் பார்த்து, ஒரு வசனஞ் சொன்னார்; என்னவென்றால், "னான் வெகுசன உபகாரம் பண்ணினத்தினாலே சிவலோகத்துக்குப் போறேன்! நீ னான் தபசு பண்ணிக் கொண்டிருந்த திருக் கோடிகாவலிலே நீ சுவாமிக்கு கோவில்ப் பிரகாரங்க ளெல்லாம் கட்டிவை! இந்த ஆவற்தேசுபர லிங்கத்துக்கும் திருப்பணி பண்" ணென்று சொல்லிப்போட்டு, சிவலோகம் போய் சேர்ந்தார்.

அதுக்கு மேலாராசாவும், அந்தப்படியே திருக்கோடீச்பரருக்கு கோவிலுங்கட்டி வைத்து, திருவலம்சுழியிலேயும், ஆவற்தேசுபர லிங்கத்துக்கும் கோவில்க்கட்டி வைத்தார்! அப்படியே விக்கினேசுபரருக்குங் கோவில்க் கட்டிவைத்தார்! அந்தப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னாக ஒரு மண்டபம் விசித்திரமாகக் கட்டி, அதிலே சோழக்கலம்பம்(?) உண்டாக்கி வைத்தார்.

அதின்பிறகு, மத்தியாற்கனத்துக்கு நிறுதி, மூலையிலே **திருனாகேசுபரம்** அதிலே உசந்த மண்டபங்கள் பிரகார கோபுரங் கட்டிவைத்தார். இப்படியே மூலைக்கி மூலை அனேகந் திருப்பணிகள் பண்ணிவைத்து, யெழுவது வருஷம் நீதியுடனே ராட்சியபாரம் பண்ணி, தன்னுடைய குமாரன் **சுந்தர சோழனுக்கு** பட்டாபிஷேகம் பண்ணி வைத்து, தன்னுடைய **பாரியோடே** கூட **கயிலாசம்** போய் சேர்ந்தார்!

யிந்த அத்தியாத்தைக் கேட்ட பேர்களுக்கும் புண்ணியம்; அதிகமாகும் பாவங்களெல்லாம் போய்விடும்! அதுதவிர, யிந்த கதையைப் பார்த்தால், ஒருத்தருக்கு **மித்தைச் சொல்லலாகாது!** ஒருத்தருக்கும் யித்தையுஞ் சொல்லலாகாது! அதற்குத் திஸ்ட்டாந்திரம் **யேரண்டார் ரிஷி** யித்தைச் சொல்லப்போய், தானே பிலத்திலே சரீரத்தை விட்டார்!

## சந்திர சோழன் கதை

54. அதின்பிறகு, **சுந்திரசோழன்** மகாப்புண்ணியசாலி, யிவருக்கு பிரமகஸ்தி வந்து நிவாரணமாச்சுது. அந்த அவஸ்த்தை வந்த வித மென்ன, யெந்த புண்ணியத்தினாலே, யெந்த ஸ்தலத்திலே நிவாரண மாச்சுதோ, அத்தைச் சொல்லுகிறோம்.! அதெப்படி யென்றால், **சுந்தரசோழராசா** தகப்பனாரைக் காட்டிலும் அதிகமாய் றாட்சியபாரம் பண்ணிக்கொண்டு வந்தார். சோழராசாவினுடைய மகள் **சித்திரவல்லி** யென்கிறவள், அவர் பாரி; அவளுடனே சிவதர்மங்கள், சிவாலையங்கள், விபூதி ருத்தி ராட்சதாரணங்கள், சிவ அற்சணை செய்துகொண்டு, குலோத்துங்கனுக்கு சுவாமி கொடுத்த கிரீடம், பட்டம் முதலாகிய விருதுகள் தரித்துக் கொண்டு சிவபத்தாளுக்கு அனேகந் திரவியங்கள் கொடுத்துக் கொண்டு தந்திரிகளாகிய மந்திரிகளோடே கூட

ராச காரியங்களை சாகிறுதையயாய்ப் பார்த்துக் கொண்டு வந்தார். இப்படியிருக்கச்சே, சுந்தரசோழனுக்கு **காலகாலசோழ னென்று**, ஒரு பிள்ளை பிறந்தான்; அவன் பெரியவனாகி அனேக சிவாலையங்கள் கட்டி வைத்தான்! பூசை உச்சபங்களெல்லாம் பண்ணி வைத்தான்! தாயார், தோப்பனாருடைய திருவடிகளிலே ரொம்ப பத்தியயாக வணக்கத்துடனே சாஸ்த்திரங்களிலே சமத்தனா யிருந்தான்!

---

*53. திருநாகேசுவரம்-கும்பகோணத்துக்குக் கிழக்கே 4 மைல் தொலைவில் உளது.*

*54. பிரமகஸ்தி-பிரமஹத்தி-பிராமணனைக் கொன்ற பாவம்;*

அவனுக்குக **கேரளதேசத்து** ராசாவனுடைய பெண் **குணவதி** யென்கிறவளைக் கலியாணம் பண்ணி வைத்தார். அவளோட கூட காலகால சோழன் சந்தோஷமாய் போகிச்சுக் கொண்டிருந்தான்!

இப்படி ராட்சியபாரம் பண்ணிக் கொண்டிருக்கிற **சுந்தரசோழனுடைய** வாசலிலே ஒரு யாத்திரைக்குப் போற பிராமணன் வந்து வாசல்காற்பாரோடே ராசா பேட்டி ஆகிற நிமித்தியமாக சேதி சொன்னார்; என்னவென்றால், " னான் காசியிலே யிருந்து வாறேன்! ராமேசுபரத்துக்குப் போறேன்! வழியிலே யென்னுடைய பெண்சாதி கெற்பிணியானாள்! வழிநடக்கமாட்டயில்லை! ஆகையாலே ராசாவினிடத்திலே அடைக்கலமாக வைத்து, னான் இராமேசுரம் போயிட்டு வரவேணும்! ராசாவே தாய், தோப்பன், செனங்களுக்கு! அதிலேயுஞ் சோழ தேசத்து ராசா, பிராமணாளுக்குந் தர்மத்துக்கும் மெத்த உடையவராயிருக்கிறவா!"

"ஆகையாலே, யென்னுடை பெண்சாதியை விடுகிறதுக்கு வெழ்க்கப்படாமல் னான் இப்படிச்சொல்லுகிறேன்; இந்த சேதி ராசாவுக்கு சொல்லவேணும்; னான் கெங்கையை யெடுத்துக்கொண்டு சீக்கிரம் ராமேசுபரத்துக்குப் போய், ராமனாதருக்கு அபிஷேகம் பண்ணிப் போட்டு வரவேணு"மென்று வாசலிலே யிருக்கிறபேரோடே சொல்லி வேண்டிக் கொண்டார்.

அந்தப் பிராமணனுடைய வாற்தையைக் கேட்டு, ராசா சபையிலே யிருக்கிறவரை போய்ப்பார்த்தார். அந்த அவசரம் எப்படி யிருந்துதென்றால், கொஞ்சஞ் சொல்லுகிறோம்; இரு பிரங்களிலே வெஞ்சாமரங்கள் வீசுராள், மந்திரியள், கவியீசுராள், சாஸ்த்திரியாள், பாடகாள், சோசியாள், புராணம் சொல்லுகிற பேர்கள், சேனாதிபதியள், யிவர்களினாலே னாலுபிறமுஞ் சூழப்பட்ட சிம்மாசனத்தின் மேலே. உற்க்கார்ந்திருக்கிற ராசாவினுடைய சமீபத்திலே போய், வணக்கத்துடனே வாசல்க்காரப் பாராக்கள் சேதி சொன்னார்கள்; என்னவென்றால், "ஒரு பிராமணன் யாத்திரைக்காறர், வாசலிலே பெண்சாதியுடனே வந்து, மகாராசா தெரிசனத்துக்கு காத்திருக்கிறார்!"

55. இப்படி சொன்னவர்ளுடைய வாற்தையைக் கேட்டு ராசா சொன்னார்: " ஆர் அந்தப் பிராமணன் பெண்சாதியுடனே வந்துயிருக்கிறார்?" அழைத்துக் கொண்டு வந்து சபைக்குள்ளே விட்டார். ராசா, அந்த பிராமணனுக்கு நமஸ்காரம் பண்ணி, பூசை பண்ணி, அவர் கொடுத்த விசுவனாதருடைய விபூதி நெத்தியில தரித்துக் கொண்டு, வணக்கத்தோடே பிரியமாக ராசா ஒரு வாற்த்தை சொன்னார்; யென்னவென்றால், "பிராமணா நீர் எங்கேயிருந்து வருகிறீர்?" உம்முடைய பாதத் தூளினினாலே இந்த தேசம் பவுத்திரமாச்சுது? என்னாலே ஆகவேண்டிய காரியம் தங்களுக்கு என்ன? சொன்னால் அந்தப்பிரகாரஞ் செய்கிறேனென்று சொன்ன ராசாவினுடைய வாற்தையைக் கேட்டு, பிராமணனுக்கு சந்தோஷமாய் ராசாவைப் பார்த்து பிராமணர் சொன்னது என்னவென்றால், "ராசாவினுடைய வாற்தையைக் கேட்டு, பிராமணனுக்கு சந்தோஷமாய் ராசாவைப் பார்த்து, பிராமணர் சொன்னது என்னாவென்றால், "ராசாவே நீர் பிராமணாளிடத்திலே பத்தியுள்ளவரான படியினாலே நூறு சுகமாயிரும்! சோழ வமுஷத்திலே பிறந்த உமக்கு பிராமண பத்தி சகசமா யிருக்கிறத்திலே ஆச்சரியமென்ன? ஆகையாலே னான் உம்மிடத்திலே அன்னவஸ்திரம், திரவியம், பூமிகள் கேள்க்க வேணுமென்று வரயில்லை! விசுவேசுவரர் அன்னபூரணி பிரசாதத்தினாலே யெனக்கெல்லாமிருக்குது! ஆனாலும் என்னுடைய பெண்சாதி கெற்பினி, செறுபெண், யிவளை உம்மிடத்திலே அடைக்கலமாக வைக்கிறேன்! நான் ராமேசுவரம் போய் வருகிற வரைக்குந் தாய், தொகப்பன் போலே ரெட்சிக்கவேணும்! இப்படி சொன்ன பிராமணனுடைய வாற்தையைக் கேட்டு, ராசா, "நல்லது! அப்படியே ஆகட்டுமென்று அவாள் ரெண்டுபேருக்கும் விசேஷமாய்ப் பூசை பண்ணினார்.

அதின்பிறகு, அந்தப்பிராமணனும் பெண்சாதியை அடைக்கலமாக வைத்துப்போட்டு ராமேசுபரத்துக்குப் போனார். ராசாவுந் தன்னுடைய அந்தப்புரத்திலே தன்னுடைய பெண்சாதி கையிலே யொப்புவித்து ரெட்சிக்கச்சொல்லி ஆக்கிஞாயித்து வெள்ளாட்டிகள், வாசல்காரராகிற அனைவர்கள் கூட்டங்களுக்கும் ஆக்கிஞாயித்தார். அதின்பிறகு,

---

*55. செறுபெண்-சிறுபெண்; வெள்ளாட்டி-தாதிப்பெண்;*

அந்த பிராமணத்தி அம்மாளும், ராசா பெண்சாதியினாலே அன்னவஸ்திரங்களினாலே ரெட்சிக்கப்பட்டு யெந்த வேளைகளிலே, யெந்தெந்த பதார்த்தங்கள் வேணுமோ, அதுகளினாலே அடையப்பட்டு சந்தோஷமா யிருந்தாள். ராசாவினுடைய வெள்ளாட்டிகளும் அந்த அம்மாள் சொன்னபடி கேட்டுக்கொண்டு யிருந்தாள். அதினாலேயுஞ் சந்தோஷப்பட்டாள்; இப்படியிருக்கச்சே. அந்த பிராமணன் ராமேசுவரத்துக்குப் போய், கெங்கையை ராமலிங்கத்துக்கு அபிஷேகம் பண்ணி, ஒருவருஷ பரியந்தம் **மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி,** மலையாளம் வரைக்கும் சுத்திப்போட்டு ராசாவினுடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். "தன் பெண்சாதி ஒரு வருஷம் யென்னமா யிருந்தாளோ? இவளுடைய மனோபலத்தை அறியவேணு மென்று ராத்திரி யிருண்ட வேளையிலே அரண்மனைக்குள்ளே போய் ஒருவிடத்திலே ஒழிந்திருந்து, பெண்சாதி வெளியிலே பிறப்பட்ட சமையத்திலே அவள் கையைப் போய்ப் பிடித்தார்! அவள் தன்னுடைய புருஷனென்கிறது தெரியாமல், ஆரோ துஸ்ட்டன் வந்து கையைப் பிடித்தானென்று "கூகூ"வென்று கூப்பிட்டாள்! அப்போ வாயினாலே ஒரு சேதியுஞ் சொன்னாள். "தகப்பனாரைப் போலே சோழராசா யென்னை ரெட்சிக்க, தாயாரைப் போலே சித்திரவல்லி ரெட்சிச்சுக் கொண்டிருக்க, யாரோ யென்னை கையைப் பிடிச்சானென்று" அவள் கூப்பிட்ட குரலைக் கேட்டு, சோழராசா கையிலே கத்தி யெடுத்துக் கொண்டு வந்து, அந்தப் புருஷனை ஒரே வெட்டாய்ப் போட்டுவிட்டார்!

56. அதின்பிறகு, தீவெட்டிக்காரர் தீவெட்டி கொண்டுவந்தாள்; வெளிச்சத்தில் பார்த்தவிடத்தில் தன்னுடைய புருஷன் இப்படி யிருவரும் பார்த்து மெத்தத் துக்கத்தை அடைஞ்சாள். அப்போ, அந்த அம்மாள் தன்னுடைய புருஷனோடே கூட உடன்கட்டை யேறுகிறதாய் நிட்செயம் பண்ணிக்கொண்டு ராசாவைப் பார்த்துச் சொன்னாள்; யென்னவென்றால், "ராசாவே, அக்கிஞானத்தினாலே உனக்கு பிறுமத்தி வந்துது! நீயும் உன் பெண்சாதியுஞ்தாய், தோப்பனைப் போல ரெட்சிச்சீர்கள்; னான் யென் புருஷனை விட்டு இனிமேல் ஒருச்சிணயிருக்க மாட்டேன்! பத்தினிகளுக்கு

---

*56. அக்கிஞானத்தினாலே - அஞ்ஞானத்தினாலே; ஒருச்சினம் - ஒருக்கணம்*

புருஷனே தெய்வம்! ஆகையாலே அவருடனே கூடத்தானே மரித்து. சொற்கலோகத்தை அடைகிறேன்! நீர் உத்தரவு கொடுக்கவேணுமெ"ன்று அந்த அம்மாள் கேட்டாள்.

அப்போ ராசா மெத்த துக்கத்தை யடைந்து, அம்மாளைப் பார்த்து சொன்ன தென்னவென்றால், "யெனக்கு இப்போ பிறுமத்தி தோஷமும் பிராமண அத்திதோஷமும் பாபியான யெனக்கு வந்து பிடித்து, யெனக்கு ராட்சியத்தினாலே யென்ன ஆகவேண்டிய காரியந், தெய்வ மெனக்கு இப்படிப்பட்ட கெதி கொடுத்துது?; சோழ ராசாக்களுடைய வருஷமாகிற நல்ல மரங்களுக்கு கோடாலியானென சோழராசாக்கள் சம்பாதித்த கீர்த்திகளை யெல்லாங் கெடுக்கப் பிறந்தேன். இந்தப்படியெல்லாம் ராசா துக்கப்படுகிறபோது கிட்டியிருக்கிற மந்திரிகள் தேத்தரவு சொன்னாள்; யென்னவென்றால், "ராசாவே யெந்தெந்த வேளையிலே யேதேது வரவேணுமோ அதுவரும்! நீர் அக்கிஞானகிர்தமாய் உமக்கு பாபம் வந்துது; அதற்கு பிராயசித்தம் பண்ணிக்கொள்ளலாம் இந்தப் பிராமணஸ்திரியை புருஷனோட கூட போகவேண்டா மென்று சொன்னாலும் இவள் பிழைக்கமாட்டாள் என்று யிப்படி யெல்லாம் மந்திரிகள் சொன்னபின்பு, ராசா பிராமணஸ்த்திரியைப் பார்த்து ரொம்ப நல்லவற்றை சொல்லி நீர் பிழைச்சு யிருக்கிற மட்டுக்கும் உனக்குப் பூசிதைகள் பண்ணி நடப்பிக்கிறேன். நீ விரதங்கள் தானங்கள் பண்ணென்று யிப்படி யெல்லாம் நல்லவாற்தை சொன்னாலும் னான் கூடவே போவேனென்று அந்த அம்மாள் சொன்னாள்; அதின்பிறகு ராசா உத்தரவு கொடுத்தார்; ராசாவினுடைய பெண்சாதியும் அந்த அம்மாளுக்கு ஆடையாபரணங்கள், .சந்தன புஷ்ப்பங்களினாலே சிங்காரிச்சு கூடவே அனுப்பிவித்தாள். அவாள் யிருவருக்கும் பிராமணாளுக்கு நடக்கிற பிரகாரம் உத்தரகிரியளெல்லாம் நடப்பிவித்து கையாசார்த்தமும் ராசா பண்ணி வைத்தார்.

அதின்பிறகு, சோழராசாவுக்கு சாப்பாடு ருசியாமல் ராத்திரியிலே நித்திரை வாராமல் துக்கம் அதிகமாச்சுது. தங்கம் போலே யிருந்த உடம்பு கருகி களர் காந்தியில்லாமல்ப் போச்சுது. அவருடைய ராட்சியத்திலே மழைகள் பேயாமல் அடிக்கடி

யிடிகளும் விழுந்துது. இதுதவிர ராத்திரி வேளையிலே பிசாங்கள், நரியள், நாய்கள் இதுகளெல்லாம் விகாரங்களாய் அழுதுது; நாலு பிறகும் புகை சூழ்ந்து போச்சுது. பயிர்களெல்லாம் பட்டுப்போச்சுது! இதுகளையெல்லாம் பார்த்து, ராசா அதுகளுக்கு சாந்திகள் விகிதமாய் பண்ணி வைத்தார். அதுக்கு மேல் மந்திரிகளைப் பார்த்து, "நான் இப்படிக் கெட்டுப் போனேனே! யென்னோட பிரமத்தியானது கருப்பாய், கோர ரூபமாய், பயங்கரமாய் கய்யிலே ஒரு தடி யெடுத்துக்கொண்டு பின்துடர்ந்து அடிக்கடி யென்னை அடிக்கிறே னென்று பயப்படுத்து! யிந்த பிரம அத்தி நிவர்த்தியானால், அப்போனான் சுகமாயிருப்பேன். இதுக்குப் பெரியோர்களை அழைத்து, பிராயசித்தங் கேட்டு சொல்லுங்களெ"ன்று சொன்னார்.

57. அந்த வார்த்தையை மந்திரிகள் கேட்டு, பெரிய சாஸ்த்திரிகளை யழைப்பிவித்து, மனுவிக்கியனேசுபரர் முதலாகிய தர்மசாஸ்த்திரங்களைப் பார்த்து சாஸ்த்ரிகள் சொன்னார்; யென்னவென்றால், அக்கியானத்தினாலே வந்த பிரமத்திக்கு மரனாத்திக பிரயாச்சித்தம் பண்ண வேணும்! ராசாவான படியினாலே சிவாலையங்களை கட்டி வை! காவேரி யினுடைய கரைகளிலே நாலு முகங்களிலேயும் ரிஷி பிரதிஷ்ட்டையான லிங்கங்கள், சுயம்பு லிங்கங்கள் இதுகளுக்கெல்லாங் கோபுர பிரகாரங்கள் கட்டிவை; சிவஸ்தலங்களிலே, அக்கிரகாரங்கள் கட்டிவை! சோடசமகா தானங்களை பண்ணு! நல்ல பாத்திரங்களிலே கண்ணிகாதானங்களை பண்ணு! நல்ல கொடும்பிகளா யிருக்கிற பேர்களை ரெட்சி! தீனாளாய், அனாதாளாயும், னொண்டிகள், குருடுகளா யிருக்கிற பேர்களை ரெட்சி! அன்னச்சத்திரங்கள், மடங்கள், தோட்டங்கள் யிதுகளுக்கெல்லாம் உண்டாக்கி வைத்து வர்ண துலாபாரம் பண்ணு! கெங்கை, காவேரி முதலான புண்ணிய நதிகளிலேஸ்தானம் பண்ணு! சேதுவிலே போய் ஸ்நானம் பண்ணி, ராமேசுபரத்திலே ராமலிங்கத்துக்கு கோபுர பிரகாரங்கள் கட்டிவை! இதுகளினாலே உன்னுடைய பாபங்கள் போய்விடுமெ"ன்று மந்திரிகளும் பிராமணாளாய் சேந்து சொன்னாள்!

---

*57. மரனாத்திகம் - மரணாந்திகம்- மரணம் வரையிலும்; கண்ணிகாதானம் - கன்னிகாதானம்;*

58. அந்த வாற்தையைக் கேட்டு ராசா புண்ணிய நதிதீரங்களிலே தீர்த்த யாத்திரை பண்ணி ஸ்த்தானங்களைப் பண்ணி. சேதுஸ்தானங்களைப் பண்ணி, ராமேசுபரத்திலே சிவாலங்யகைளக் கட்டி வைத்தார். உத்தரசோகமங்கையிலே சிவாலையும் நன்றாய்க் கட்டி வைத்தார். நூறு முகத்தோடே கூடிய காவேரியினுடைய கரைகளிலே யெல்லாம் சிவாலையங்களைக் கட்டி வைத்தார்! சோடசமகா தானங்களைப் பதினாறு திரம் பண்ணினார். ஆயிரம் கோதானம் பண்ணினார். சட்டுரசோபேதமாய் காவேரிக் கரைகளிலே யிருக்கிற சிவஸ்தலங்களிலே ஸ்தலத்துக்கு ஸ்தலம் கோடி பிராமண போசனங்களை பண்ணி வைத்தார். கன்னிகா தானங்களை அமிதமாய்ப் பண்ணி வைத்தார். காற்திகை மாஸ்தையிலே, சிவன் கோவில், விஷ்ட்டுணு கோவில்களிலே தீபங்கள் திரளாய் யேத்திவைத்தார்.

59. அப்போ, ராசாவினுடைய கினாவிலே ஸ்த்ரி, புருஷாள் ரெண்டுபேர் தம்பதிகளாய் வந்து சேதி சொன்னாள். ராசாவே, உனக்கு பிரமத்தி யின்னம் கொஞ்ச மிருக்குது! குறையெல்லாம் போய் விட்டுது! காவேரியிலே நூறு கரைகளிலே யிருக்கிற சிவஸ்தலங்களை யெல்லாம் தெரிசனம் பண்ணினால், அதுவும் போய் விடும்! நீ அக்கிஞானத்தினாலே பிரமத்தி பண்ணினாய்; ஆகையாலே நீ பரிதாபப் படவேண்டியதில்லை! உன்னாலே பூசை பண்ணப்பட்ட னாங்கள் பிரமலோகத்துக்கு போறோம் என்று யிப்படிக் கண்ட சொற்பனத்தை ராசா காலமே யெழுந்திருந்து மந்திரிகளுக்குச் சொல்லி போட்டு, தன்னுடைய பிள்ளையை ராட்சிய பாரத்துக்கு வைத்துப்போட்டு, தான் செறுது சேனைகளோடே கூட நஞ்சுண்டேசுபரர் முதல்க்கொண்டு காவேரிக் கரையிலே யெந்தெந்த ஸ்தலங்களிருக்குதோ, அதுகளை யெல்லாம் கிரமமாய் தெரிசனம் பண்ணிக்கொண்டு பிரதெட்சணமாக பஞ்சநதம், கும்பகோணம், மாயூரந், திருவலங்காடு, சாயாவனங், குத்தாலந், திருவாலூர், வேதாரணியங் கதகாரணியம்,

---

*கொடும்பி-குடும்பி-குடும்பத்தார்; வர்ண - சுவர்ண;*

*58. பதினாறுதிரம்-பதினாறுதடவை;*
*சட்டுரசோ - ஷட்ரசோ - ஆறு இரசங்கள்.*

ஸ்ரீவாஞ்சியம், கதளிவனம், காசி, ஆரணியம், வயித்தீசுவரம், பந்தநல்லூர் இப்படிக்கொத்த ஸ்தலங்களிலே ஸ்தானங்கள் பண்ணி, சிவ தெரிசனங்களை பண்ணிக்கொண்டு வந்தாலுஞ் சொற்பனத்திலே வந்து, அந்த பிரமத்தி பயப்படுத்திக்கொண்டு வந்துது.

இப்படி யிருக்கையிலே **மத்தியாற்சுனஷ்டசேத்திரம்** வந்து சேர்ந்தார். அங்கே காவேரியிலே ஸதானபண்ணி கீழ்கோபுர வாசல் வழியாக மகாலிங்கமூற்தியை தெரிசனம் பண்ணி உள்ளே போறபோது, அந்த பிரமத்தி கோபுர வாசலிலேதானே நின்று போச்சுது! இப்போவும் முழங்காலை குத்திட்டுக்கொண்டு, அதிலே தலையும் வைத்துக்கொண்டு அந்த கோபுர வாசலிலே இப்போவு மிருக்குது! ராசா உள்ளே போய் மகாலிங்கமூற்தி, அம்மன், பிள்ளையார், சுப்பிரமணிய சுவாமியைத் தெரிசனம் பண்ணிக் கொண்டு பிரமத்தி தன்னைவிட்டுப் போச்சுதென்று அறிந்து, ஆனந்தத்தினாலே மயிர்க்கூச்சலாகக் கண்ணிலே தண்ணீர் தளும்ப **கிராணம் பிடித்துவிட்ட சந்திரமண்டலம்** போலே விளங்கிநின்ற சோழராசா மகாலிங்கமூற்தியை தோஸ்த்திரம் பண்ணினார். மத்தியாற்சுணஷ் சேத்திரத்துக்கு அதிபதியாய் தன்னுட திருவடிபணிந்த பேர்களுக்கு வரங்கொடுக்கிறவராய் விக்கினேசுபரராலே பூசை பண்ணப்பட்ட திருவடித்தாமரை உள்ளவராய், உலகத்துக் கற்தாவாய் மன்மதனை, யெமனை அடித்தவறாய், பிறமா விஷ்ட்டுணுவினாலே வணங்கப்பட்டவராய், சடையிலே யிளம்பிறை, கெங்கையை தரித்தவராய், பகருடைய கண்ணைக் கெடுத்தவராய், ஆகாசகூந்தல் உள்ளவராய், சமுசார பாசத்தை அத்தவராய், அஸ்ட்டமூற்தியாய், தேவதையள்

---

*59. பந்தநல்லூர்-திருப்பந்தணைநல்லூர்-திருவிடைமருதூரை அடுத்த கஞ்சனூருக்கு வடகிழக்கே 2 மைலில் உளது;*

*திருவலங்காடு-திருவலங்காடு-சென்னைக்கு மேற்கே 40 மைல் தூரத்தில் உளது;*

*காயாவனம்-திருச்சாய்க்காடு-சீர்காழிக்குத் தென்கிழக்கே. திருவாலூர்-திருவாரூர்;*

அசுரனாலே பூசிக்கப்பட்டவராய், யெல்லோருக்கும் அதிகராய் யிந்த உலகத்தை யுண்டாக்கி ரெட்சித்து சங்கரிக்கிறவராய் யெங்குநிறைந்தவரான மத்தியாற்சுன யீசுபரரை நம்பி னான் பணிந்தேனெ''ன்று, இப்படிப் பணிந்து, துதி செய்யுற சுந்தர சோழனைப் பார்த்து, ஆகாசவாணி சொன்னது." ராசாவே, நீர் யென்னை தெரிசனை பண்ணினத்தினாலே உனக்குப் பிரமத்தி போய்விட்டுது; யாதொருத்தன் காவேரியிலே ஸ்தானபண்ணி, யென்னை தெரிசனம் பண்ணுகிறானோ அவனுக்கெல்லாப் பாவமும் போய்விடும்! நீ யெனக்குத் திருப்பணி செய்!" யிந்தப்படி சிவாக்கிஞையினாலே ராசா கோபுரங்கள் மண்டபங்களும் னாலு பிறாகரங்களும் கட்டினார். மேல்கோபுர வாசலிலே சுப்பிறமணியர் கோவில்கட்டி ஸ்தாபித்தார். ராசாவினுடைய திருப்பணியினாலே, சுவாமி மெத்த சந்தோஷத்தை யடைந்தார்.

இப்படியிருக்கப் பூச உச்சபம் வந்துது; அதிலே ரிஷபவாகனரூடனாய பிள்ளையார் சுப்பிரமணியரோடே வந்து காவேரியிலே தீற்த்தங் கொடுக்கிறபோது ஸ்தானம் பண்ணினார். அதினாலே பிரமத்தி போய்விட்டு! அப்போ, ராசாவைப் பார்த்து ஆகாசவாணி சொன்ன தென்னவென்றால், "ராசாவே, உம்முடைய பிரமத்தி பூசஸ்தானத்திலே நிசெயமாய் போய்விட்டது! உன்னுடைய மனோரதம் பூரணமாச்சது! உன்னுடைய பாரியோடே கூட கயிலாசம் அடையப் போறாயெ''ன்று யிப்படி சொன்ன ஆகாசவாணியினுடைய வசனத்தைக் கேட்டு, பெண்சாதியோடு கூட வேகமாக திருபுவனஸ்தலத்துக்குப் போனார். அங்கே போகச்சே பிரமத்தி யெங்கே யின்னநந் தொடருதோ வென்று பயத்தினாலே உடம்பு நடுங்கித்து! அப்பொழுது, ஆகாசவாணி வந்து ராசாவைப் பார்த்துச் சொன்னது: "ராசாவே, பயத்தினாலே வந்திருக்கிற நடுக்கத்தை விட்டுவிடு! கம்பஅரசுபரரென்று னான் யிங்கே யிருக்கிறேன்! என்னைத் தெரிசனம் பண்ணி, யெனக்கும் பிரகார, கோபுரங்களெல்லாங் கட்டிவையுமெ''ன்று ஆக்கிஞாபித்தபடி **சோமவர்மா** யென்கிற சில்ப்பியினுடைய வமுஷத்திலே பிறந்த **சில்ப்பியினுடைய** கயிபட பிரதீசுபரார் கோவிலுக்கு முக்காலத்திட்டமாக கெற்பகிரகம், மண்டபம், பிரகாரகங்ளெல்லாம் கட்டிவைத்தார்; சுவாமிக்கு சிறப்பாய்ப்

பண்ணி வைத்தார். **சில்ப்பாசாரிக்கு** வெகுமானமும் பண்ணினார். இதுதவிர, அந்தக் கோவிலிலே உக்கிர நரசிம்ம மூற்தியை பிளக்கிற அவசரமா சரபமூற்தியை பண்ணி, பிரதிஸ்ட்டை பண்ணிவைத்தார்.

இப்படியெல்லாஞ் சில தர்மங்களை அறுவது வருஷம் பண்ணி, தன் மகன் **காலகால** சோழனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்து, அந்த சோழன் தன்னுடைய **பெண்சாதியுடனே கயிலாசம்** போய் சேர்ந்தார்.

## காலகாலசோழன் கதை

60. அதின்பிறகு, காலகால சோழன் மகாசிவ பூசா துறந்தான்! அவனுடைய பெண்சாதி **குணவதி**; அவளுடனேகூட ராட்சியம் ஆண்டுகொண்டு வந்தார். சிவதர்மங்கள் மெத்தப் பண்ணினார்; யெங்கே யென்றால், **கந்துகபுரம், கமுசபுரம், கோவடுதீர்த்தம், ஸ்ரீவாஞ்சியம், பிச்சிவாரணியம், நதேசினிவனம், அரவிந்தவனம், பிரமக்கியானேசுபரம், நதிபுரம், திரையலோக்கியம், வேத்தூர்புரம்** இவை முதலாகிய ஸ்தலங்களிலே யெல்லாம் திருப்பணி வேலைகள் மெத்த செய்தார். அவர் தாளவனத்திலே வந்து, சிவலிங்கத்தை தெரிசனம் பண்ணினார். அந்த சிவலிங்கம் பூறுவம் உன்னதமாயிருந்து வணங்கியிருந்துது. அதுக்குக்காரண மென்னவென்றால் அந்த சிவலிங்கம் பூசை பண்ணுகிற குருக்கள்மார்க ளெல்லாஞ் சாபத்தினாலே பூசை பண்ணப்படாமல், ஒரு குழந்தையைப் பூசை பண்ணச்சொல்லி அனுப்பிவித்தாள். அந்த குழந்தை பிள்ளை சிவலிங்கத்தினுடைய தலையெட்டாமல், இப்படி பத்துனாள் அவதிப்பட்டுது! ஆயாசமில்லாமல் அபிஷேகம் பூசைகள் பண்ணுகிறதுக்கு தலையை வணக்கவேணுமென்று அந்த குழந்தை சிவலிங்கத்துக்கு முன்னே நின்று அழுதுது! சிவலிங்கத்தினுடைய தலையும் முதலுந் தெரியாமல் பிறமாவும் விஸ்ட்டுணுவும் மெத்த அவதிப்பட்டார்கள்! ஆகிலும் கற்தர் பஞ்சா அமுற்தத்தினாலே அபிஷேகம் பண்ணி, வில்வத்தினாலே அர்சனை பண்ணி, தூபதீபமுங் கொடுத்து, நெய்வேத்தியத்தை தட்டிலே யெதிரே வைத்து, மணியடித்து, சுவாமியைச் சாப்பிடச் சொன்னான்.

---

*60. திருவாஞ்சியம்-நன்னிலத்திற்கு மேற்கே 6½ மைலில் உளது.*

**சுவாமி சும்மாயிருந்ததைப்** பார்த்து சாப்பிடச்சொல்லி குழந்தை அழுதாள்! அப்போ தயவினாலே அந்த சாதத்தை கொஞ்சமாய்ச் சாப்பிட்டார். அதின்பிறகு, கற்பூர ஆரத்தி யெடுத்து அம்மன், விக்கினேசுபரர், சுப்பிரமணியர், சோமாசக்கந்தர், நடனேசுபரர், நந்திகேசுபரர், இவர்களுக்கெல்லாம் பூசை, நிவேத்தியம் பண்ணிப்போட்டு, மிச்சமிருந்த சாதத்தை யெடுத்துக் கொண்டு வீட்டுக்குபோய் தாயார்முன்னே கொண்டு போய் வைத்தான். தாயார் பார்த்து, மகா துக்கத்தையடைந்து "பாதிச்சாதத்தைக் காணோமே? யெங்கே போச்சுது? இந்த சாதம் ஆருக்குப் போதும்? வீட்டிலே உனக்கு யெனக்கு எல்லாருக்குங் காணாதே! நமக்கு யிந்த கோவில்ச் சாதத்தைத் தவிர வேறே பங்குமனை யில்லையே! நமக்கு ஜீவனார்த்தமாய் சுவாமி யிந்த விற்தியைத்தானே கல்ப்பிச்சிருக்கிறார்! யெனக்கு புருஷனுமில்லையே! நீ ஒரு பிள்ளை! யென்னை யெல்லாம் அவமானம் பண்ணுகிறார்களே, நானென்னசெய்யப் போறே?"னென்று அழுதாள். அதைப்பார்த்து அந்தக் குழந்தையும், அழுது துக்கப்பட்டு வாற்தை சொன்ன தென்னவென்றால், "பாதி அன்னம் சுவாமியே சாப்பிட்டார்! பாதி அன்னம் சுவாமியே சாப்பிட்டார்! பாதி மிச்சமிருந்ததை உன் கையிலே கொண்டுவந்து கொடுத்தேன்! சுவாமியைத் தவிர ரெண்டாம் பேர்கள் கையிலே நான் கொடுக்கயில்லை!"

இப்படிச் சொல்லுகிற பிள்ளை வாற்தையைக் கேட்டு தாயார் மெத்தப்பயப்படுத்தி, "கல்லுக்குள்ளா யிருக்கிற சுவாமி நீர் கொண்டுபோய் நிவேத்தியம் பண்ணுகிற அன்னத்தை சாப்பிடுதா? நீ சும்மாய் சொல்லுகிறாய்!" என்று உலுக்கி மெத்த புத்திசொல்லி யனுப்பிவிச்சாள். யென்ன புத்தி சொன்னாலும் நடக்கிறகாரியம் நடந்துகொண்டு வந்தது! யிந்தப்படி யெட்டுனாள் பார்த்து, பசி பொறுக்கமாட்டாமல் பிள்ளையோடு கூடத் தானேபோய் வாசல்வழியாய் உள்ளே நடக்கிற காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிவலிங்கந் தலைவணக்கங் கொண்டது! அந்த நிவேத்தியத்தை சிவலிங்கம் வாங்கிசாப்பிட்டதும் யெல்லாத்தையுங் கண்டு "கூகூ" வென்று கூப்பிட்டாள்! துக்கப்பட்டு, அந்த வெதவையான அம்மாள் சொல்லுகிறார்கள் "ஒன்றுந்தெரியாத

குழந்தை பிராத்தனை பண்ணிச் சென்று, கற்தாவாகிய தேவரீர்தானே அன்னத்தைச் சாப்பிட்டால், பசியினாலே அவதிப்பட்டு வெதவையாயிருக்கிற னான் யென்னத்தைச் சாப்பிடுவேனெ"ன்று கூப்பிட்டாள்!

அந்த அம்மாளுடைய அழுகைக் குரல்கேட்டு சிவன் லிங்கத்துக்குள்ளே மறைந்தார்! அதைப்பார்த்து குழந்தை பிள்ளையார் செய்த வஞ்சினையினாலேயல்லோ மறைஞ்சாரென்று மெத்தத் துக்கப்பட்டுக் கொண்டு, வீட்டுக்குப் போனான். அப்போ முதல்க்கொண்டு, அந்த சிவலிங்கம் தலைவணங்கித்தானே யிருந்துது! அதைப் பார்த்து, காலகாலசோழராசா அந்த லிங்கத்தை நிமித்தி வைக்கவேணுமென்று யெத்தினம் பண்ணினார். அந்த லிங்கத்திலே கயறுகளைக் கட்டி மனுஷாளை விட்டு இழுக்கச் சொன்னான். அந்தக் கயறு அறுந்து மனுஷாளும் கீழே விழுந்து ரெத்தங்களையு கக்கிக்கொண்டார்! சிறுதுபேர் கீழே விழுந்து மூற்சையடைந்து, ஆமைகள் போலே துடித்துக் கொண்டிருந்தார்! அந்த சமையத்திலே ஆகாசவாணி, "ராசாதானே கழுத்திலே கத்தியை வைத்துக் கொண்டு கயறுகட்டி லிங்கத்திலே மாட்டி யிழுத்து ராசாவினுடைய கழுத்தும் அறுபட்டதானால், லிங்கம் நிமிறுமெ"ன்று ஆகாசவாணி சொல்லித்து! அந்த வாற்தையைக் கேட்டு, ராசா தயிரியத்தோட கூட ஸ்நாணம் பண்ணி, விபூதி, ருத்திராட்ச தாரனை பண்ணிக் கொண்டு, போய் தன் பெண்சாதியுடனே சிவாலையத்திலே போய் தாளவனேசுபரணை தெரிசனம் பண்ணி நமஸ்காரம் பண்ணி, யெல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கச்சே தன் கழுத்திலே கத்தியை வைத்து கம்புக் கயத்தினாலே, லிங்கத்து சிரசிலே மாட்டி யிழுத்தார்! "சுவாமி நீரே ரெட்சியுமென்று வாயினாலே சொல்லிக் கொண்டு யிழுக்கிறபோது கழுத்திலே யிருந்து ரெத்தங்கள் ஆறாய் பெருகித்துது! அவருடைய பெண்சாதி குணவதியென்கிறவள் தயிரித்டைய பெண்சாதி குணவதியென்கிறவள் தயிரியத் தோடே தானே கிட்டே யிருந்து கொண்டு யீயை ஓட்டிக் கொண்டு யிருந்தாள்! ஒன்றுஞ் சொல்ல யில்லை! மந்திரிகள் முதலான சமஸ்தான செனங்களு கண்ணியே தண்ணீர்விட்டு அழுதுகொண்டு துக்கப்பட்டுக் கொண்டு யிருந்தாள்!.

61. அப்போ பார்த்து செனங்க ளெல்லாம் ''யிந்த ராசாவினுடைய சிவபத்தி ஆச்சரியமா யிருக்குது!. இவர் சிவனுடைய பணிநிமித்தியமாகி சீவன் விடுகிறார்! இந்த சோழராசாவினுடைய தயிரியம் மெத்த ஆச்சரியமா யிருக்குது! இத்தை நாம் கண்ணாலே பார்க்கக் கூடச் சத்தியில்லை! யென்னசெய்வோ மெ''ன்று பேசிக் கொண்டிருக்கையிலே அந்த ராசா கழுத்து அறுந்து, கொஞ் சஞ் சொச்ச மிருக்கச்சே, அம்மனுக்கு தயவு வந்து'' யிந்த ராசாவை ரெட்சிக்க வேணுமெ''ன்று மெத்தவும் பிராத்திச் சாள் அப்போது, லிங்கத்திலே யிருந்து சுவாமி வெளியே பிறப்பட்டு தன்னுடைய கையினாலே ராசாவினுடைய கையைப் பிடித்துக் கொண்டு, லிங்கத்தையுங் கோணலில்லாமல் நிமித்தி, யெல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கச்சே ராசாவைப் பார்த்து உன்னுடைய கழுத்து யெப்போதும் போலே ஆகுமென்று கையினாலே தடவிக் கொடுத்தவுடனே, அப்படித்தானே ஆச்சுது! அதுக்கு மேல் ராசாவைப் பார்த்து சொல்லுகிறார். ''யென்னுடைய பத்தாளுக்குள்ளே நீ உத்தமன்! உன்னாலே சோழன் வமுஷம் விளங்கித்து! உனக்கு னான் சொரூப முத்தி கொடுத்தேன்! உன்னுடைய பிள்ளையைப் பட்டாபிஷேகம் பண்ணி வைத்து யென்னுடைய ஆலையஞ் செவையாய் கட்டி வைக்கச் சொல்லி நீ விமானத்துமேலே யேரிக் கொண்டு கையிலாசம் வந்து சேரெ''ன்று சொல்லிப் போட்டு அந்திரத் தியானமாய் அந்த லிங்கத்துக்குள்ளே மறைந்தார்!

ராசாவும் அப்படியே தன்னுடைய பிள்ளைக்குப் பட்டாபிஷேகம் பண்ணி வைத்து, கோவில்க் கட்டி வைக்கச் சொல்லி ஆக்கிஞாபித்து, தன் பெண்சாதி யோடே தான் விமானத்தின் மேலே யேறிக் கொண்டு தேவதைகளெல்லாம் புஸ்ப்ப வருஷங்கள் வருஷிக்க, வாத்திய கோஷங்களோடே கூட யெழுவதாம் வயதிலே போய் கயிலாசஞ் சேர்ந்தார்!

## 15 ஆவது கலியாண சோழன் கதை

62. அதின் பிறகு, காலகால சோழனுடைய மகன் கலியாண சோழன் மெத்த குணசாலி; மெத்த சிவபத்த தார்மீகன் அவன் பாண்டிய ராசாவினுடைய மகள் கலியாணி அவளை கலியாண பண்ணிக் கொண்டு, தர்மத்துடனே சோழ ராச்சியத்தைப் பரிபாலனம் பண்ணினான். தன்னுடைய தகப்பனார் செய்யச் சொன்ன திருப்பணி, திருப்பனந்தாளிலே பிறகார, சோழ மண்டபங்க ளெல்லாங் கட்டி நிறைவேத்தினான். அது தவிர, யின்னஞ் சிறுது சிவாலையங்களுக் கெல்லாந் திருப்பணிகள் பண்ணி வைத்தான். சிவபணிவிடையிலே மெத்த அபேட்சை யுள்ளவன்; பாவங்க ளென்றால் மெத்தப் பயப்பட்டு செய்யாமல் யிருக்கிறவன்! அவன் நாற்புரத்திலேயும், யேழு தியாகராசாஸ்தலத்திலேயும் பிரகார மண்டப கோபுரங்களெல்லாங் கட்டி வைத்தார். காவேரியிலே **மன்னியாரென்று** ஒரு ஆறு உண்டாக்கினார். அதினுடைய கரையிலே அனேகம் சிவாலையங்கள் கட்டினார்! யிருப்படி யிருக்கிற வேளையிலே ஒருக்கால் திருவாதிரை உச்சபத்திலே சபாபதியை தெரிசினம் பண்ணுகிற நிமித்தியமாக சோழவம்முஷ, சேரவம்முஷ, **பாண்டியவம்முஷ, விக்கிரம** வம்முஷமாகிய யிந்த நாலு வம்முஷங்களிலே பிறந்த நாலு ராசாக்களும் ஒரு மிக்கக் கூடினார். சபாபதி தெரிசனம் பண்ணினார்! அந்த வேளையிலே பேச்சுமேல் பேச்சாய் **நாலுராசாக்களும்** ஒரு பிரதிக்கனை பண்ணிக் கொண்டாள்; யென்னவென்றால், "நாம் நாலுபேரும் யிந்தக் கோவிலுக்கு நாலு வாசலிலேயும் செந்ததாய் சரியாய் பேருக்கு ஒரு கோபுரங் கட்ட வேணும்!.

---

*61. செவையாய், செம்மையாய்; வருஷிக்க - பொழிய*

யிதிலே யாரு சுருக்காய் கட்டுகிறானோ, அவன் எல்லாரிலேயும் சிரேஷ்ட்டன், என்று பிதிதிக்களை கூறிக்கொண்டு, அப்படியே னாறு ராசாக்களும் தங்களுடைய மந்திரிகளை அழைப்பிவிச்சு ஆக்கி ஞாபிக்சார். **சில்ப்பிகளை** அழைப்பிவிச்சு அவாளுக்கு வஸ்த்திர பூ ஷணங்களினாலே வெகுமானம்பண்ணி, வேறவேறேயாக அந்த ராசாக்கள் கோபுரங்கள் சந்தோஷமாகக் கட்டி வைச்சார்; னான் முன்னே னான் முன்னே" என்று கோபுரங்கள் சந்தோஷமாகக் கட்டி வச்சார்., "னான் முன்னே னான் முன்னே" என்று கோபுரங்கள் சந்தோஷமாக கட்டினான். கீழண்டை கோபுரம் **சேரராசா** கட்டிவிச்சார்! வடவண்டை கோபுரம் **விக்கிரமராசா** கட்டிவைச்சார்! தென்னண்டை கோபுரம் கலியாண **சோழ ராசா கட்டிவைச்சார்** அங்கே ஒரு விக்கினேசு பரரையும் பிரதிஷ்டை பண்ணினார். அவருக்கு முக்குறுணி பிள்ளையாரென்று பேர் வைச்சு, கோபுரத்துக்கு விக்கினம் வராமல் **சபாபதி** சிவகாமசுந்தரி யிவர்களுக்கெல்லாம் பூசைபண்ணி சிவகங்கை கரையிலே பெண்சாதியுடனே கூட விறுதமாய் அடுத்துக் கொண்டிருந்தார்.

அப்படியிருக்கச்சே அவருடைய கினாவிலே சபாபதி வந்து சேதிசொன்னார். அது என்னவென்றால், " ஓய் சோழ ராசாவே! நீ சேர, விக்கிரம பாண்டியனைக் காட்டிலும் மிகுந்த பத்தியுள்ளவன்! யிந்த சிவகங்கைக் சிவகங்கைக் கீழண்டைக் கரையிலே ஆயிரக்கால் மண்டபங் கட்டி வைச்சு, அதுக்கு மேல் தென்னண்டை கோபுரங்கட்டு! உங்களுட பெரியோர் களெல்லாம் சிவபணிவிடை பண்ணி, கயிலாசத்திலே சிவகெணங்களாகி வாசம் பண்ணுகிறார்கள்! நீயும் சிவபணிவிடை பண்ணி, சந்திரன், சூரியான் உள்ளவரைக்குங்கயிலாசத் திலே யிரு! **விசுசகர்மாவை** சிலப்பியாக பிறக்கச் சொன்னது, உங்களுடையவம்முஷத்து நிமித்தியமாகிக் **கரிகால்சோழராசா பிரதீசுபரர்** கோவில் அந்த சில்ப்பியினாலே **கூட்டிவைத்தார்!** யிப்போதும் அந்த சில்ப்பியினுடைய வமுஷத்திலே பிறந்த சில்ப்பியை அழைப்பிவிச்சு ஆயிரக்கால் மண்டபமுங் கோபுரமுங் கட்டிவைச்சால் சுறுக்கிலே முடியுமென்று சொல்லிப்போட்டு மறைஞ்சார்!

---

62. *கீழண்டை - கிழக்குப் பக்கம்; மேலண்டை - மேற்குப் பக்கம்; சவாபதி - சபாபதி*

அப்பொழுது ராசா, ரொம்ப சந்தோஷத்தோட எழுந்திருந்து காலமே **சோமவர்மா**வினுடைய வமுஷத்திலே பிறந்த **சவரவர்மா** என்கிற சில்ப்பியை அழைப்பிவித்து அனேக வஸ்த்திர பூஷணங்களினாலே சந்தோஷப்படுத்தி ஆயிரக்கால் மண்டபமுங் கோபுரமுங் கட்டச் சொல்லி சொன்னவிடத்தில் ஒரு வருஷத்துக்குள்ளாக ரெண்டுங் கட்டினான். சோழராசாவினுடைய பிரதிக்கினை செண்ணுது; **விக்கிரமன் சேரன் பாண்டியன்,** யிவர்களுக்கு கோபுரங்கட்டி ஆகாமல் பன்னிட்டுது. அப்போ யெல்லாரைக் காட்டிலும் சிரேஷ்ட்டன் சோழ ராசாவே என்று ஆகாஷவானி சொல்லித்துது. அதின் பிறகு அந்த மூன்று ராசாக்களும் சுவாமியை சேவிச்சு, தங்களுடைய தேசம் போய் சேர்ந்தாள். அதின்பிறகு கலியாண சோழனுக்கு **பத்திரசோழ னென்று** பிள்ளை பிறந்தான், அவனுக்கு சுபுத்திரி என்றொரு பெண்ணை கலியாணம் பண்ணி வைச்சு தன்னுடைய சிம்மாஸ்தனத்திலே வைச்சு, பட்டாபிஷேகம் பண்ணி வைச்சுத் தன்னுடைய பெண்சாதியுடனே கலியாண சோழராசா சபாபதி பிரசாதத்தினாலே அறவத்தேழாம் வயதிலே கயிலாச பர்வதம் போய்சேர்ந்து, சிவசாரூப்பிய முத்தி அடைந்தார்.

## 16. பத்திரசோழன் கதை

63. அதின் பிறகு, **பத்திரசோழன் பத்திரி** என்கிற பெண்சாதியுடனே செனங்களை ரெட்சித்துக் கொண்டு பூமியைப் பரிபாலனம் பண்ணினார். மகாசிவ பத்தனாயிருந்துக் கொண்டு சுயம்பு லிங்கங்கள், தெய்வ லிங்கங்கள், ஆரிஷ லிங்கங்கள் யிதுகளுக்கெல்லாம் சீரண உத்தாரணங்கள் பண்ணி வைச்சார். தங்களுடைய பெரியவாள் னாளையில சீரணஉத்தாரணங்கள் பண்ணி வைய்யாத ஸ்தலங்களிலேயும் பண்ணிவைச்சார்; விசேஷமாய் திருக்கோடிகா, ஸ்ரீவாஞ்சியம், வயித்தேசிபரம், யிதுகளிலே யெல்லாம் திருப்பணி வேலை நடப்பிவிச்சார்! யிது தவிரவும் யின்னம் சிலது ஸ்தலங்களுக்கு சீரணஉத்தாரணம் பண்ணிவைச்சார்; பிள்ளை பிறக்கவேணுமென்று சிவனைக்கோரி அந்தபுரத்திலே தபசு பண்ணினார். அப்போ ராசாவினுடைய சொற்பனத்திலே சிவன் வந்து

சொன்னார். " ஓய் ராசாவே! உங்களுடைய வமுஷத்திலே பிறந்த பேர்களெல்லாம் சிவகெணங்கள்! உங்களை **ராசாவமுஷத்திலே பிறப்பிச்சிது என்னதுக்கு என்றால், சிவாலையங்க ளெல்லாம் கட்டிவைக்கிறதுக்கு!** அதுகளெல்லாம் சொச்சமில்லாமல் கட்டி ஆச்சுது! ஆகையாலே உன் பெண் சாதி யோடே கூட நீ கயிலாசத்துக்கு வா" வென்று சொன்ன யீசுவரருடைய வசனத்தைக் கேட்டு, ராசா சொன்னது, '' பிள்ளையில்லாமல் போனால் நல்லத்கெதியில்லை. என்று சொல்லுகிறார்கள்; ஆகையாலே பிள்ளை வேணு மென்று சொன்னத்தைக் கேட்டுச் சிவன் சொன்னது "தற்ம மாற்கத்திலே யிருக்கிற பேர்களுக்கு அது பத்தி மாற்கத்திலே யிருக்கிற பேர்களுக்கு அது தேவையில்லை" என்று ராசாவுக்கு சமாதானம் பண்ணி சிவன் சொன்னது என்னாமென்றால், நீ என்னுடைய பணிவிடை செய்துயிருக்கிறாய்; உங்களுடைய பெரியவர்களும் மெத்தபணி விடை செய்து யிருக்கிறார்களே; ஆகையாலே அனைவரும் பூமியிலே சிவாலையங்கள் கட்டிவச்சதிலே யெத்தனை கல்லுயிருக் குதுகளோ அது பூமியிலே யெத்தனை நாளாயிருக்குதுகளோ அந்த லெக்கத்தை பதினாயிரத்திலே பெருக்கினால் எத்தனை வருஷமோ அத்தினி வருஷம் கயிலாசத்திலே என்னுடைய லோகத்திலே நீங்கள் வாசம் பண்ணுவீர்கள். உங்களுடைய பேர்கள் சோழனென்று பூமியிலே எந்த மட்டும் விளங்குதோ அந்த மட்டும் சிலலோகத்திலே சிவ கெணங்களுக்கு ஆதிபத்தியம் பண்ணிக் கொண்டுயிருப்பீர்கள். புண்ணியசாலிகளான உங்களுடைய சந்ததி கலியுகத்திலே யிருக்க வேண்டாம். யினிமேல் கலியுகத்திலே துலுக்காள், தெலுங்காள், சூத்திராள், தமிழாள் யிந்த பூமியிலே சோழபாண்டிய தேசத்துக்கு ராசாவாக போறார்கள், ஆதிலேயும் காவேரி தீர்த்தம் தாம்பிரவரணி தீரத்திலேயும் என்னுடைய பக்தான் மிகுந்திருக்கப் போறார்கள். யிந்த சோழ தேசத்துக்கும் பாண்டிய தேசத்துக்கு வருகிற ராசாக்கள் தர்மிஷ்ட்டாளாகத்தானே, சிவபத்தளாய், நீதியோடே ராட்சிய பாரம் பண்ணிக் கொண்டு சிவாலயங்களையும் பரிபாலனம் பண்ணுவாள்.

யிது புண்ணியஸ் தலமானபடியிலாலே, யிதிலே யிருக்கிறபேர் மனசும் புண்ணியத்தினாலே, ருசிக்கும்'' யிப்படி எல்லாம் சொற்பனத்திலே வந்து சொன்ன சிவனுடைய வாற்தையைக் கேட்டு பத்திர சோழன் தன்னுடைய திரவியங்களை எல்லாம் சிலவழிக்க, சிவன்கோவில் கட்டி வைச்சார் சோடச மகா தானங்கள் பண்ணினார். ஆயிரம்பசுமாடு தானம் பண்ணினார். தன்னை கார்த்துக் கொண்டிருக்குற பேர்களுக்கு திரளாக திரவியங் குடுத்தார்.

63. யிப்படி யிருக்கச்சே, சிவனாலே அனுபவிக்கப்பட்ட விமானம் வந்து சேர்ந்துது. அதிலே **பத்திரை** யெங்குற பாரியோடே, **பத்திரசோழன்** யேறிக் கொண்டு கயிலாசத்துக்குப் போனார். இவர் போற சமையத்திலே தேதையள் புஷ்பவருஷம் வருஷிச்சாள்; வாத்தியங்களை அடிச்சாள் அப்சரஸ்திரங்கள் நாட்டிய மாட்டினாள் யித்தனை சம்பிரமத்தோட கூட **பத்திசோழன்** எழுவது வருஷம் ராட்சியபாரம் பண்ணி சிவலோகத்தைப்போய் அடைந்தார். யிப்படி சிவகெணங்கள் **குலோத்துங்கசோழன்** முதல் **பத்திர சோழன்** மட்டும் பூமியிலே ராசாக்களாய் பிறந்து சிவாலையங்களைக் கட்டிவைச்சு, திரும்பவும் சிவலோகம் போய் சேர்ந்தாள். சோழராசாக்க ளெல்லாம் **விபூதி ருத்திராட்ச அலங்கிருதாளாய், சிவபத்தாளாய்** சிவகெணங்களானாலும் மனுஷர்களை போலே நடத்தை யோடேகூட தர்மத்தோட கூட பூமியை பரிபாலனம் பண்ணிக்கொண்டு, கலியுகத்திலே ஆயிரத்து நூத்தின்பத்தாறு வருஷமட்டும் சோழராசாக்கள் ராட்சிய பரிபாலனம் பண்ணி, சாஸ்விதமாய் கீற்தியுண்டாக்கிப்போட்டு, மறுபடி சிவலோகம் போய் சேர்ந்தான்.

யிவாளுடைய சரித்திரத்தை யார் கேழ்க்கிறார்களோ அவர்களுக்கு பாவங்கள் நிவாரணமாகும்; யித்தை யார் கேழ்ப்பிக்கிறார்களோ அவர்கள் மனோரதங்கள் அடைவார்கள்

---

*63. அனுபவிக்கப்பட்ட - அனுப்பிவிக்கப்பட்ட என இருக்க வேண்டும்*

யிந்தப்படி கதையை பார்வதிக்கு சிவன் சொன்னதை, சூதபிரானிகர் ரிஷிகளுக்குஞ் சொல்லுகிறார். முதல் **குலோத்துங்கசோழனுக்கு, சாம்புவமூர்த்தி** கிரீடம் பட்டமுங் குடுத்தார். -1

அவர் குமாரன் **தேவசோழன்** வெகு சிவாலையங்களை கட்டிவைச்சு கடைசியிலே சிவலோகத்தை அடைந்தார். -2

அவர் குமாரன் **சசிசேகரசோழன்** காவேரிக்கு நடுவிலே அணைக்கரை கட்டி, காவேரியினுடைய நூறு கரைகளிலேயும் வெகு சிவாலையங்கட்டி, கரைகாலில்லாங் கெட்டிபண்ணி, நூறு முகத்துவாரங்களுங் கண்டுவிட்டு, காவேரிகரைகண்ட சோழனென்று பேரை அடைந்து, கடைசியிலே சிவபதத்தை யடைந்தார் -3

அவர் குமாரன் **சிவலிங்கசோழன்** அனேகம் சிவலிங்க பிரதிஸ்ட்டை பண்ணினவர் தன்னுடைய குமாரன் தர்மம் தப்பினானென்று பசுவின் கண் நிமித்தியமாய் தேர் வண்டில் காலிலே தன் பிள்ளையைக் கொடுத்தார் -4

அவர் குமாரன் **வீரசோழன்** அனேக சிவாலையங்களைக் கட்டிவைத்தார் -5

அவர் குமாரன் **கரிகால்சோழன்** பிரதீசுபரர் கோபுரங், கெற்பகிரக மண்டபங்கள் கட்டி வைத்தார். -6

அவர் குமாரன் **வீமசோழன்** தஞ்சநகரத்திலே கொங்கணேசுபரர் முதலாகிய சுவாமிகளுக்கெல்லாங் கோவிலு களைக் கட்டிவைத்தார். அவர் சங்கரநாராயண சுவாமிகோவில் கட்டிவைத்தினாலே அவர் பிரசாதத்தினாலே **ராசேந்திர சோழானென்**று பிள்ளை பிறந்தது -7

ராசேந்திரசோழன், சேர பாண்டிய ராசாக்களை யெல்லாம் செயித்து, அனேகஞ்சிவாலையங்களைக் கட்டி வைத்தார்.-8

அவர் குமாரன் **வீரமாற்தாண்ட** சோழன் அனேகர் சத்துரு ராசாக்களை யெல்லாஞ் செயித்தார்-9

அவர் குமாரன் **கீர்த்திசோழன்** கீர்த்திமானென்கிற ஆறு வெட்டி வைத்தார். அனேக சிவாலையங்களைக் கட்டி வைத்தார்10

அவர் குமாரன், **செயசோழன்** அனேக சிவாலையங்களைக் கட்டி வைத்தார். -11

அவர் குமாரன், **கனகசோழன்** திருவலஞ்சுழியிலே காவேரி பிரவாகத்தையடைந்தார் -12

அவர் குமாரன், **சுந்திரி சோழன்** மத்தியார்ச்சுனத்திலே போய், பிரமத்தி தோஷந் தீத்துக் கொண்டு வெகு சிவாலையங்களைக் கட்டி வைத்தார் -13

அவர் குமாரன் **காலகால சோழன்** திருப்பனந்நாளிலே சிவலிங்கத்தை நிமித்தி, வெகு தர்மங்களை பண்ணினார் -14

அவர் குமாரன் **கலியாண சோழன்** சிதம்பரத்திலே கோபுரங் கட்டி வைத்து பிரதிஸ்ட்டை யடைந்தார் -15.

அவர் குமாரன் **பத்திரசோழன்** அனேக சிவதர்மங்களைக் பண்ணிவைத்தார் -16

64. இப்படி, கலியுகத்திலே பதினாறு சோழன் அனேக சிவாலையங்களைக் கட்டிவைத்து, சிவதர்மங்களைப் பண்ணி, சிவ கெணங்களாய் கயிலாசத்திலே யிருக்கிறார்கள். இந்த சோழராசாக்கள் பண்ணின திருப்பணிவேலை னாலு திக்குகளிலேயும் பிரச்சித்தமா யிருக்குது. அவர்களுடைய கீர்த்தி விஸ்த்தாரமா யிருக்கிறத்தை பூமியிலே யிருக்கிற செனங்களெல்லாங் கொண்டாடுகிறார்கள். ரெத்தினகிரியீசுவரர் மலைமேல்க் கோவில்க்கட்டி வைத்தார். உபயகாவேரி மத்தியிலே, ஸ்ரீரெங்கஞ், செம்புகேசுவரர், திருவையாரு, திருமலைவாடி, தஞ்சேசுவரர், பிரதீசுவரர், கும்பேசுவரர், நாகேசுவரரர், சோமேசுவரர், கொங்கணேசுவரர், விற்தாசலேசுவரர், வல்விகேசுரர், வியாக்கிரேசுவரர், திருவங்காடு, சாயாவனம், வேதாரணியம், மாயூரம், வயிதீசுவரஞ், சீயாழி, ஸ்ரீவாரசியம், திருவாடுதுறை திருவலங்காடு,, திருக்கோடிகாவல்,

கெங்கைகொண்டபுரம், பீமேசுவரம், மத்தியார்சுனம், ராமேசுவரம், யிதுமுதலாகிய அனேக சிவஸ்தலங்களைல்லாஞ் சீரண உத்தாரணங்கள், பிரகார கோபுரங்கள் கட்டி வைத்தார்.

65. இப்படிக்கொத்த சோழராசாக்கள் கீர்த்தியை யாதாமொருத்தர் காதினாலே கேழ்க்குகிறார்களோ அவர்களுக்கு சிவபத்தி யுண்டாகும். பாபங்கள் நீங்கும்! வித்தை, புத்தி, களத்திரம், மித்திரர்கள், வீடுக், கிராமம், பூமிகளெல்லாம் சிவகிறுபையினாலே விற்தியடையுங், கடைசியிலே சிவகெணங்களோடே சேந்து கயிலாசத்திலே வாசங் கிடைக்கும்.

இந்தப்படி சொன்ன சூதருடைய வசனத்தைக் கேட்டு, ரிஷியன் மெத்த சந்தோஷத்தை யடைஞ்சு, " நீர் யெங்களுக்கு **நல்ல புராணம்** சொன்னீர்! யெங்களுக்கு யிதைக் கேட்டு மனது திரித்தி யடையவில்லை, யின்னங் கேழ்க்கவேணும் யிந்த **செம்பு தீவிலே** சிவஸ்தலங்கள் யெத்தனை யிருக்குதுகள்? அதிலேயும் காவேரியினுடைய கரைகளிலே யெத்தனை யிருக்குதுகளோ? சுயம்புஸ்தலங்கள் யெத்தனை யிருக்குதுகள்? சிவதீர்த்தங்கள் யெத்தனை யிருக்குதுகள்? பிரதிஸ்டை பண்ணினஙதலங்கள் யெத்தனை யிருக்குதுகள்? இதுகளை யெல்லாம் வகைதுகையாடே யெங்களுக்கு தெரியப்படுத்த வேணுமென்று கேட்டதற்கு, சூதர் சொன்னது. இப்படியே முன்னே உமையாள் பரமசிவனைக் கேட்டிருக்கிறாள்; அதுக்கு, அவர் சொல்லியிருக்கிறார்; அது யெப்படி யென்றால், சுவாமி பூலோகத்திலே சிவஸ்தலங்கள், விஸ்ட்டுணுஸ்தலங்கள், சுப்பிரமணிஸ்தலங்கள், தீர்த்தங்கள்

---

64. *திருமலைவாடி - திருமழபாடி; திருவையாறுக்கு மேற்கே 1 மைல் தூரத்தில் திருநெய்த்தானம் உளது; திருநெய்த்தானத்திற்கு வடமேற்கே 2 மைல் தூரத்தில் திருமழபாடி உளது.*

*செம்புகேசுவரம் - ஜம்புகேசுவரம் - திருவானக்காவல்; திருச்சிக்கு வடக்கே 2½ மைல் தூரத்தில் உளது*

*திருக்கோடிகா - திருவிடைமருதூருக்குக் கிழக்கே 1½ மைல் தூரத்தில் உளது.*

*65. களத்திரம் - மனைவி; திரித்தி - திருப்தி;*

யிதுகளை யெல்லாங் கேட்டிருக்கிறேன்; வகைதுகையோடே காவேரி கரையிலேயும், யின்னம் பக்கங்களிலே யிருக்கிறஸ்தலங் களை சொல்ல வேணு கேட்டதுக்கும், **பரமசிவன்** சொன்ன உத்தரவு " காவேரிக் கரைக்கும் ராமேசுர கரைக்கும் நடுவிலே

| | |
|---|---|
| சிவஸ்தலங்கள் | இருபத்து மூவாயிரம் |
| புராதனங்களான விஸ்ட்டுணுஸ்தலங்கள் | ஆயிரம் |
| சுப்பிரமணியஸ்தலம் | ஆயிரம் |
| பிள்ளையார்ஸ்தலம் | ஆயிரம் |
| கானிகா ஷேத்திரம் | அய்யாயிரம் |
| தாண்டவேசுவரஸ்தலம் | நூறு |
| துற்கையினுடைய ஸ்தலம் | மூவாயிரம் |
| அயினாருடைய கோவிலுகள் | அய்யாயிரம் |

66. யிந்தப்படி, யிருக்குதுகள் இதுகளிலே விஸ்ட்டுணுஸ் தலங்களிலே உன்னோடு கூடே வாசம் பண்ணுகிறேன்; கல்ப்பாந்த காலங்களிலேயும் உன்னைவிட்டும் யிந்தஸ்தலங்கள் விட்டும் னான் புரிகிற தில்லை! யிதுகளிலே **முத்தி சேத்திரங்களைப்** பொறுக்கிச் சொல்லுகிறேன் கேளும்!

திருவானைக்காவல்

ஸ்ரீ வாஞ்சியம்

மாயூரம்

கும்பகோணம்

வாமனேசம்

பஞ்சந்தம்

அகத்தீசம்

திருக்கடையூர்

திருச்சங்காட்டங்குடி

---

66. *புரிகிற தில்லை - பிரிகிறதில்லை*
*திருச்சங்காட்டங்குடி - திருச்செங்காட்டங்குடி; திருக்கண்ண புரத்திற்குக் கிழக்கே 1 மைல் தொலைவில் உள்ளது.*

அளர்கேசம்
மத்தியார்ச்சுனம்
தர்மசம்ஸ்தாபனேசம்
சந்திரேசம்
தியாகாராசஸ்தலம்
தஞ்சபுரேசம்
பிரதீசம்
பிரகலாதேசம்
ஆத்தமனோதேசம்
கண்ணியாபுரேசம்
காசியாரணியம்
நரசிம்மேசம்
சக்கிரேசம்
திரிபுரேசம்
யோகீசுவரம்
பிரசாரிசுவரம்
அத்தினந்த புல்வேசம்
குடக்கேசுவரம்
திரியம்பகேசம்
பாபவினாசம்
சார்ங்கேசுவம்
வியாக்கிரேசம்
வியாசேசம்
வேதாரணியம்
பிச்சாடனேசம்
காளீவனம்
விசுவாமித்திரரேசுவரம்
காசியவேசுவரம்
திருவங்காடு
சங்கமேசுவரம்
பத்தவச்சலேசுவரம்
அகோரேசுவரம்

இப்படிப்பட்ட சிவஸ்தலங்கள் சய்யபர்வத முதல் காவேரியினுடைய கரைகளிலே. நூறு முகத்துவார மட்டும் இருக்கிற ஸ்தலங்கள் சுயம்புஸ்தலம் ஆறாயிரம்

தேவதைகள், ரிஷிகள் பிரதிஷ்ட்டை பண்ணின முத்திஸ்தலங்கள் அனேகமுண்டு. அக்கியானநாசி யென்கிற நதியினுடைய கரையிலே முத்திஷேத்திரங்கள் எஞ்னூறு; யெது எதுகளென்றால், செறுது சொல்லுகிறோம் "ஆபத்தானேசம், ஆனந்திசுவரம், ஆயிராவதேசுவரம், விஸ்ட்டுணுனாமதசுவரம், பிரமத்தபுரம், கலியாணநேசம், காம்பூரணேசம், தெட்சணகோகரணம், தெட்சிணாமூற்திலிங்கம், பிரணவேசம், சம்ப்பகேசம்,பாண்டவனேசம், அற்கேசம், வமுசனாதேசுவரம்; இதுகள் வடகரையிலிருக்குது. தென்கரையிலே யிப்பலேசுவரம், அற்தீதேசுவரம், சானந்தனேசுவரம், இது முதலாகியதுகள் அனேகங்க ளிருக்குது.

இதற்கு தென்னண்டையிலே வெள்ளாறு, சுவேதநதி யென்றிருக்குது. அதுசுவேத லிங்கத்தினுடைய மஸ்தகத்திலே யிருந்து பெருகிறது; அது மகாதீர்த்தம். அந்த நதியினுடைய கரையிலே வில்வனேசுர மென்றிருக்குது. கபித்தேசுவரம், தேந்தமட்டேசுவரம், கோமுகேசுவரம், சிகாகிரீசுவரம், மருதுவனேசுவரம், பர்த்துருபிரவேசுரம், சொர்னாதேசுவரம், பக்த்தாசலேசுவரம், அது விஸ்ட்டுணுதலம். அந்த விஸ்ட்டுணு பெண்ணைப் பூசைப்பண்ணினார். அவருடைய சிரமத்தை நிவாரணம் பண்ணினேன். அதெப்படியென்றால், **காலநேமி** யென்கிற அசுரனோடே சண்டைபோட்டு, வெகு சிரமத்தோடே யென்னுடைய ஆலையத்திலே வந்தார். அந்த அசுரனை யடித்து, அவருக்கு ஆறிலொருபங்கு ஆலையத்திலே கொடுத்தேன். நாரதனாதேசர், காஞ்சிகேசுவரம், சூலேசுவரம், கடகேசுவரம், வஞ்சனேசுவரம், தாத்திரீசுவரம், அட்செயபடம், கரதீர்த்தம், அம்போதீசுவரம், கலியாணசவுந்திரம், கற்பூரேகவரம், முனிவரே சுவரம், சந்திரவிம்பேசுவரம், சத்திய கிரீசுவரம்,இப்படிப்பட்ட அனேகஸ்தலங்கள் இருக்குது'' என்று **பார்வதிக்கு சிவன் சொன்னத்தை, சூத ரிஷி**களுக்குச் சொன்னார்.

67. இந்தஸ்தலங்களை யாதாமொருத்தர் கேட்டாலும், தெரிசித்தாலும், உலகத்திலே போக போக்கியங்களை யனுபவித்து, கடைசியிலேயே கயிலாசத்திலே சிவகெணங்களாய் வாசம் பண்ணுவார்கள். இந்தக் கதை பவுஷோத்திர புராணத்திலே முப்பது அத்தியாயம் சம்ஷ்க்கிறுதமா யிறுந்தது; ஸ்ரீமன்த்து மகாராசா சத்திரபதி **சரபோசி** சாயபு அவர்களினாலே தமிழ் செய்யப்பட்டுள்ளது.

இதிலே யேற்றக்குறைச்சங்களா யிருந்தாலும் பெரியோர்களா யிருக்கப்பட்ட பேர்கள் சயித்தருளக் கடவார்கள்.

*சற்குருவே துணை*

---

*67. சயித்தருள - சகித்தருள*

# 2

## சோழதேச பூறுவீக சரித்திர வியாக்கியானம்

## அல்லது

## சோழ தேசத்தைப் பூறுவீகமா யாண்ட

## இராசாக்கள் சரித்திரம் (டி. 2995)

## *Solah Dhesa poorvega Sarithira Vehaugeeaunum or the History of the Kings who reigned in Sohla Dhesam in Tamil transmitted by Vyda nack from Tanjore at Letter No. 14.*

# சோழ தேசத்திற் பூறுவீகமாயிருந்த சில இராசாக்களின் பெயர் அட்டவணை

1. கனம் பொருந்திய **மேசர்காலன் மைக்கிஞ்சித் துரையவர்கள்** எழுதியனுப்பிவித்த நிருபத்தில், கேட்டுக்கொண்ட ஒரு பிரதான கேழ்வியாவது,

சோழராட்சியத்தில் எத்தனை சோழராசாக்க ளிருந்தார்கள ளென்றும், முந்தியிருந்த சோழன் முதற்கொண்டு கடசியிலிருந்த சோழன் மட்டு முண்டான தலைமுறை நாமக்க ளேதென்றும் அந்தச் சோழராசாங்கம் எதினாலே அற்றுப் போச்சுதென்றுஞ், சோழனுக்குப் பிறகு இந்த ராட்சியத்தை ஆண்டவர்க ளாரென்றுந் திட்டமாய் விசாரித் தெழுதவேணுமென்று கேட்டுக் கொண்ட கேழ்விக்கு, **வேதநாயக வேதாகம சிரோமணி** கொடுக்கிற புரத்தியுத்தார மென்னவென்றால்,

2. இச் சோழதேசத்திலிருக்கும் அனேகம் பெரியோர்களை யும், பிராமணரையும், வித்துவாங்கிஷரையும் விசாரித்தவிடத்தி லொருதர் சொல்லுகிறபடி மற்றொருதர் சொல்லுகிறதில்லை! சிலர் **அறுபத்து நாலு சோழனெ**ன்றுஞ்; சிலர் **இருபத்து நாலு சோழனெ**ன்றுஞ், சிலர் பதினாறுசோழன் மாத்திரமிருந்தானென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆனால் வேறே சிலர். அப்படியல்ல; சோழர்கள் இம்மாத்திரமென்று கணக்கு வழக்கில்லை! பெரு சதுர்யுகமாய் அவர்க ளுலகத்தை யாண்டு வருகிறார்கள்! **84,000 சோழனுக்கு** அதிகமே யல்லாமல்க் குறைச்ச லிருக்கமாட்டா தென்றுஞ் சொல்லுகிறார்கள். இது **பயங்கரமான பொய்!**

---

1. *காலன்மைக்கஞ்சி - காலின் மெக்கன்சி (1754-1821)*
*நிருபம் - கடிதம்*
*வேதாகம சிரோமணி - தஞ்சை வேதநாயக சாஸ்திரி என்ற கிறித்தவப் புலவர்*

ருசுப்படுத்தக் கூடாது! ஆனால், 16 சோழராசாக்கள் மாத்திர மிருந்தார்கள் என்றும், அவர்கள் 1172 வருஷ மிந்த ராட்சியத்தை ஆண்டார்கள் என்றும், **நான் முன்னாலே அனுப்பிவித்த பிரதீசர் மகுத்துவமென்று** சொல்லப்பட்ட சோழ மகுத்துவத்திலே அல்லது சோழ ராசாக்களுடைய **நடபடிப்** பொஸ்த்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது. அதிலே கொஞ்ச மெய்யிருக்கு மென்கிறதற்குப் பிசகில்லை. ஆகிலு முக்கால்வாசிப் பொய்யுங்கூடவே கலந்திருக்கு தென்று எழுதப்பட்டதுகளில் அனேக மொன்றுக்கொன்று ஒத்திராதத்தினாலே கண்டு கொள்ளலாம். ஏனென்றால், இத்தேசத்து இஸ்தலபுராணங்களை யெல்லாம் முன்னிருந்த.... தங்கள் சீவனத்துக்காக வேண்டி, ஒவ்வொரு கோவில் இஸ்த்தலங்களை மட்டு மிஞ்சின பிரகாரமாக யுயர்த்தி, பொய்யான கதைகளினாலே அதை ரூபகாரப்படுத்திச் சரித்திரத்தினுடைய பசுமையைக் கெடுத்துப் போட்டார்கள்! சோழ ராசாக்கள் தானே அந்தந்தக் கோவில்களை புதிதாய்க் கட்டியிருந்தாலும், இவர்களாலது உண்டுபண்ணப்பட்டதில்லை யென்றும், வெகு யுகமாயிருந்த அந்தச்சுவாமி கோவிலை சோழராசாக்கள் சீரணஉத்தாரணம் பண்ணிக் கட்டிவைத்தார்க ளென்று மாத்திரஞ் சொல்லியிருக்குது; ஏனென்றால், அந்த தலங்களுடைய சுவாமியின் மகுத்துவத்தை அதிகமாக நரருக்குக் காட்டத்தானே.

இது தமிழராட்சியிமானபடியினாலே, இதுவே தமிழ்ப் பிரதான மல்லாமல் **தெலுங்கு, கிரந்தம், சமஸ்கிரதம்** மற்றப் பிராமண பாஷைகள் பிரதானமல்ல. அதெல்லாம் அன்னியமான பாஷைகளானபடியினாலே, இந்த ராட்சியத்திலே மெத்தக் கொச்சையாய்ப் பேசப்படுகிறது ; தமிழொன்றே சாதுரியமாய்ப் பேசப்படுகிறது. தமிழ்ப் பாஷையுந் தமிழ்ச்சாதியுமிந்த ராட்சியத்தில் மிச்சமாய்ப் பெருத்திருக்கிறது. மற்றப் பாஷைகளு மற்றச் சாதியாரும் மெத்தவுஞ் சிறுத்திருக்கிறது. இதினால் இந்த ராட்சியந் தமிழராட்சிய மென்கிறதற்குச் சந்தேகமில்லை!

---

*2. ருசுப்படுத்தக் கூடாது - நிறுவ இயலாது;*

3. இதிப்படி யிருக்கிறபடியினாலே, இந்த தமிழராட்சியத்தை முதமுத உண்டு பண்ணின ராசாக்கள் தமிழர்களா யிருப்பார்களே அல்லாமல், பிராமணரா யிருக்க வேண்டிய முகாந்திரமில்லை! ஏனென்றால், துலுக்கராவது, மராட்டியராவது இத்தேசத்தடுத்தவர்க ளல்ல. இவர்களெல்லாம் வட ராச்சியத்திலிருந்து மெள்ளமெள்ள இந்த ராட்சியத்திலே வந்து குடியேறினார்கள். இந்தச் சீர்மையினுடைய நன்மையைக் கண்டபிறகு, இதைவிட்டுப் போக மனது வராமல், நாளது வரையுலே பலப்பல சாதிகள் மென்மேலும் பெலத்து வற்திச்சபோது, **தமிழ்ச்சாதியைச் சிறுமைப்படுத்தி** வரவர ஒவ்வொரு சாதியாரும் ஊன்றிப் பெலன் கொண்டார்கள். இவ்விதமாக ....... வடதேசத்திலிருந்து நான் நினைக்கிறபடியும் பெரியவர்களிடத்திலேயிருந்து கேழ்விப்பட்ட படியேயும் **எகிப்பத்துத்** தேசத்திலிருந்த அக்கியானிக் கோவில்களுடைய பூசாரிகள் இவர்கள் ஒன்றுக்கொன்று விரோதத்தினாலே சண்டைபோட்டுக் கொண்டு பாதிப்பேர் மட்டு மிந்த ராட்சியத்துக்கு பிறப்பட்டு வந்து, இவிடத்திலே யிருந்த சேரன், சோழன், பாண்டிய னென்கிற ராசாக்களை யடுத்து நல்லது பண்ணிக்கொண்டு அவர்கள் தங்களுபதேசங்களை இவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து இவர்களுக்கிசைந்தாப்போலே சில சுவாமிகளையுங் கோவில்களையு முண்டுபண்ணி நித்தியம் பூசை பண்ணுகிறத்தினாலே, யிவர்களுக்கு மோட்ச முண்டென்று காட்டி, நயச்சொல்லினாலேயும், ..... சாஸ்திரங்கள், குறிகள், நிமித்தங்கள் சொல்லி, பலவிதமான பலனுண்டாகு மென்று அவர்களைப் பயித்திவிச்சு, ஒரு மாத்தைக்கு இருபத்தேழு நட்சேத்திர மென்றும், ஒவ்வொருத்தனும் இந்த நட்சத்திரத்திலே பிறக்கவேணுமென்றும், அசுபதி முதல் ரேவதி மட்டும் 27 நட்சத்திர முண்டுபண்ணி, அதுகளிலே பிறந்தால் இன்னின்ன பலனுண்டாகும், இன்ன வருஷத்திலே சாவான் என்று வரப்போற நன்மையையுந் தின்மையையு முன்னேறத் தானே சொல்லி, ..... அவர்கள் மனதை ஆறுதல்ப்படுத்தி ஆசறுவாதம் பண்ணினத்தினாலேயும், மறுபிறப்புண்டென்றும், இன்னின்ன தர்மங்களைச் செய்தால் பெரிய

---

3. *அக்கியானி - அஞ்ஞானி; எகிப்பத்து-எகிப்து; பயித்தி-பயிற்றி; முன்னேற - முன்கூட்டியே;*



T. No 5472

ராசாவாய்ப்பெரிய குலத்திலே பிறக்கலா மென்கிற போதகத்தினாலேயும் எல்லாச் சாதியாரும் இவர்களைக் 'குரு'வென்று அங்கிகாரம் பண்ணி ஏற்றுக் கொண்டார்கள்!

4. இவர்கள் முன்னாலே வடராட்சியத்தி லிருக்கிறபோது, அன்னிய பதார்த்த மாங்கிஷங்களைச் சாப்பிடுகிறவர்களா யிருந்தாலும் வரவர அதுகளைத் தள்ளிப்போட்டு, தங்கள் தந்திரமான புத்தியினாலே இந்தச் சனங்களை ஏய்க்கிறதற்கு எது நன்மையாய்க் காணுதோ அதைத் தெரிந்துக்கொண்டு, அதைக் கையாடி சுயவ ஆசாரத்தையும் வீணான பத்திகளையுங் காட்டினார்கள். அதினாலே எல்லாச்சாதியாரும் இவர்களுடைய ஆசாரங்களையுஞ் சுத்தங்களையும், குழித்து முழுகி இஸ்த்தானம் பண்ணகிறதுகளையும், என்னேரம் வேதமோதுகிறதுகளையு, மற்றுமிவர்களுடைய வழிப்பாடுகளையுங் கண்டபோது இயாவரு மிவர்களை கனம்பண்ணிப் பெரிய எண்ணிக்கையாக ஏற்த்துக் கொண்டு, சகல காரியத்திலுமிவர்களுக்குக் கீழ்ப்படிந்து, இவர்கள் சொன்னபடி கேட்டு நடந்து கொண்டார்கள். இவர்களுடைய வங்கிஷத்திலே, அக்காலத்திலே பேரெடுப்பா யிருந்தவர்கள் அப்பர், சுந்தரர், சம்மந்தர், மாணிக்கவாசகரென்கிற நாலு பிரதான மனுஷ ரிருந்தார்கள். இவர்கள் தமிழ்ச் சாஸ்த்திரங்களை மகா திட்டமாய்ப் படித்துத் தமிழ்ச்சாதியருக்கு வேதங்களை யுண்டுபண்ணினார்கள். அக்காலத்திலே மதுரையிலே பாண்டியராசாவுக்குக் கீழாக 8000 **சமனாள்** மட்டுமிருந்தார்கள். அந்தச் சமனாளுக்கு இந்த ........ சொல்லுகிற உபதேசமுமிவர்கள் நடக்கையு மொத்துவராம லொன்றுக்கொன்று மெத்த விரோதங்கள் நடந்துது. இந்த .......... தலைமையாயிருந்த சம்மந்தர் சோழராசாவை யெப்படித் தங்கள் ......... அப்படியே கூன்பாண்டியனையும் பயித்திவைத்துத் தங்களுடைய மந்திரங்களினாலே பலவிதமான... புதுமைகளையுஞ் ........... காட்டிப் பாண்டியராசாவை மயக்கி, வெகு

---

*4. மாங்கிஷம் - மாமிசம்; கையாடி-கையாண்டு; குழித்து-குளித்து;*

*அப்பர், வேளாளர் ஆவார்; இவர் வேதநாயகர் கருத்துக்கு ஏற்ற எடுத்துக்காட்டாக அமையவில்லை.*

பூறுவகாலமாய் அவருடைய தேசக்குடியா யிருந்த சமனாளை முழுதும் அழித்துப்போடப் பிறையாசப்பட்டார்கள்.

5. அதெப்படி யென்னில் அறுபத்து நாலு திருவிளையாடலிலே இதைத்தொட்டுச் சொல்லியிருக்கிற தென்னவென்றால், சம்மந்த மூற்தியும் அவருடைய சீஷாக்களும் வந்து தங்கியிருந்த மடத்திலே சமணாள் விரோதத்தினாலே நெருப்பு வைத்தார்களாம். அந்த நெருப்பைச் சம்பந்த மூற்தி மந்திரத்தினாலே அவித்துப், பாண்டியராசாவின் மேலே யேவினாராம். அப்போது அந்த அக்கினி வந்து கொடிய சுரமாய்ப் பாண்டியனை யெரிக்கிறபோது, சமணாளை அழைப்பிவித்து, அதைத் தீர்க்கச் சொன்னார். அவர்களாலே கூடாதே போச்சுது. அப்போப்... குருவாகிய சம்மந்த மூற்தியை அழைப்பித்தார்கள். இவர் வந்து, திருநீறுபோட்டுப் பாதிப்பக்கத்துச் சுரத்தையுஞ் சொஸ்த்தமாக்கி, மறுபாதிப் பக்கத்திலே யிந்தப் பக்கத்து அக்கினியைக் கூடப் போகப்பண்ணினார்.

6. அப்போ, பாண்டியனுக்கு ஒரு பக்கஞ் சுகமாகவு, மறுபக்கமோ முன்னிலுங் கொடிதாகவும் பத்தி யெரிந்துது! அப்போ சம்மந்தர் பாண்டியனோடே, ‘‘இந்தப் பாதிப்பக்கத்தையுஞ் சமணாளைச் சொஸ்த்தமாக்கச் சொல்லும்! நாங்க ளொருபக்கஞ் சொஸ்த்தமாக்கினோமே, அப்படி யவர்களுஞ் செய்யட்டும்! செய்யட்டும்! அவர்கள் அந்தப்படியே சொஸ்த்தமாக்கினால், எங்களைக் கழுவிலே போடுகிறது! இல்லாதேபோனால், அவர்களைக் கழுவிலே போடுகிறதென்று வாக்குவாதங்க ளுண்டாச்சுது. இதைப்பற்றிச் சமணா ளென்ன பிறையாசைப் பட்டாலுஞ் சொஸ்தமாக்க அவர்களாலே கூடாதே போச்சுது. ஏனென்றா லிவர்களுடைய... மகா கொடுமையா யிருந்துது.

6. அப்புறஞ் சம்மந்தர் விபூதியைப் போட்டு முற்றிலும் சொஸ்த்தமாக்கினாராம். அப்போ, பாண்டியனுக்கு மிகுந்த

---

*5. சீஷாக்கள் - சீடர்கள், சமணாள்-சமணர்கள்; சொஸ்த்தமாக்கி-குணமாக்கி*

சந்தோஷமுண்டாக்கித் தான் ஏர்த்துக் கொண்டிருந்த சமணாள் வேதத்தை விட்டுவிட்டது மல்லாமல்ச், சய்வாள் தங்கள் சிவபுராணங்களிலே சொல்லுகிறபடி 8000 பேர்கள் மட்டுஞ் சமணாளைக் கழுப்போட்ட படியினாலே மற்றவர்கள் தெரிகெட்டுச் சீர்மைதோறுஞ் சிதறிப் போனார்கள்.

இவர்களைத் தொட்டுஉலக சரித்திரத்திலே 197 ஏட்டிலே யெழுதப்பட்ட தென்னவென்றால், ஏறக்குறைய 500 வருஷத்துக்கு முன்னே **கூன்பாண்டியன்,** பவுத்தரைச் சங்காரம் பண்ணின பின்பு, இவர்கள் கெங்கை நதிக்கரையி லின்னாள் வரையு மிருக்கிறார்க ளென்று சொல்லியிருக்குது. இங்கே சொல்லப்படுகிற பவுத்தர், சமனாள்தானே பின்னையும் 57 எட்டிலே சொல்லியிருக்கிற தென்னவென்றால், பாண்டியன் வங்கிஷத்திலே புரூரவன் முதலாய் வழுதி கடையாய் 362 பாண்டியன் இராட்சிய பாரம் பண்ணினது; 357 பாண்டியனுக்குப் பிறகு பவுத்தர் காலம்; அவர்களைக் கூன்பாண்டியன் அழித்தான். அவனுக்குப் பிற்பாடு இன்ன மூன்று பாண்டிய னிருந்தானென் றெழுதியிருக்குது.

7. இப்படியாகப் ............ கெதிரியா யிருந்த சமனாள் முற்றிலும் அழிக்கப்பட்டுப்போன பிறகு, .......... எதிரியில்லாதபடியினாலே, யிவர்களுடைய.... அதிகமதிகமாய்ப் பரம்புகிறதற்கு மெத்தவும் இடமுண்டாச்சுது; ஏனென்றாளிவர்கள் போதகத்துக்கு எதிர்ச்சொல்லுகிறவர்களொருதரு மில்லாதே போனபோது, தங்கள் மனதின் படியெல்லாம்... இவர்கள் சந்திரகிராணஞ், சூரியகிராணம், வருஷந், தேதி, மாத, மற்றதுகளைக் கெணிக்கிறதும், பஞ்சாங்கங்களை யுண்டுபண்ணுகிறது மற்றச் சோதிட சாஸ்த்திர மெல்லா மிந்த ராட்சியத்திலே யிவர்கள் கற்றுக் கொண்ட வித்தையல்ல, எல்லாம் எகிப்பத்துத் தேசத்திலே யிருந்து இவர்கள் படித்துக்கொண்டு வந்த கல்விகள்தானே

---

6. *ஏர்த்துக் கொண்டிருந்த - ஏற்றுக்கொண்டிருந்த; தெரிகெட்டு-தறிகெட்டு;*
7. *தமிழத்துச் சோதிட அறிவு, தமிழர் கண்டுபிடித்ததே,! எகிப்திலிருந்து வந்ததல்ல; இங்கு வேதநாயகர் சொல்லுவது தவறானது.!*

8. எகிப்பத்துச் தேசத்திலிருந்து வந்தார்க ளென்கிறதை ரூபகாரம் பண்ணுகிற இரண்டு திஸ்ட்டாந்திரம்-க) உலக சரித்திரம்-5-ஏட்டி லெழுதப்பட்டபடி யுலகமுண்டாகி 2164 வருஷத்திலே எகித்தரசு புரிந்த சீபி தேவர்கள்பேரில் யோகிப்பாயிருந்து, சந்திர சூரியனை நமஸ்க்கரிக்கக் கட்டளையிட்டான். அதினால் எகித்தரின் வேதத்தப்பறைகள் யாவு முளைத்தது என்றெழுதியிருக்குது. ஆனபடியினாலே சந்திர சூரியனை வணங்கிற ஆராதனை யெகிப்பத்துத் தேசத்தாருக்குச் சீபியரசனாலே கட்டளையிடப்பட்டது. இப்போ இத்தேசத்தாருஞ் சந்திர சூரியனைக் கும்பிடுகிறார்கள். இந்த வுபதேசம் எகிப்பத்துப் பூசாரிகளாகிய முன் சொன்ன... சந்தேகமில்லாமல் வந்ததென்று நினைக்க வேணும்.

2. உலக சரித்திரம் 26 ஏட்டி லெழுதப்பட்டபடி யுலக முண்டாகி 3669 வருஷத்திலே முந்தின கிரேக்க ராயராகிற இஸ்க்காந்த ரென்னப்பட்ட **மகாஅலேக்சாந்தர்** பட்டத்துக்கு வைக்கப்பட்டு அய்ந்து ஆண்டுகளுக்கும் பிறகு கட்சிப்பாரிசு ராசாவாகிய தாரிக்கோதே மன்னனைச் செயித்து, 206 வருஷமாக நிலைநின்ற **பெர்சி** ராட்சிய பாரத்தைக் கட்டிக் கெங்கைநதி மட்டும் எல்லாத்தையும் ஒரு குடையின் கீழ் ஆண்டு கொண்டிருந்தாரென் றெழுதியிருக்குது. ஆனபடியினாலே, கிரேக்க ராசாவாகிய அலேக்ஸ்கந்தர் 2100 வருஷத்துக்கு முன்னேதானே வங்காளத்துக் கிட்ட கெங்கைநதி மட்டும் வந்து கட்டியாண்ட படியினாலே, அவர்களுடைய கிரேக்க ஞானிகளாகிய அல்லது எகிப்த்துப் பூசாரிகளாகிய... அக்காலத்திலேதானே அவர்களோட கூட இவ்விடத்துக்கு வந்திருக்க வேணுமென்று நம்ப வேண்டியிருக்குது.

---

*8. சந்திர, சூரிய வணக்கம் எகிப்திலிருந்து தமிழகத்திற்கு வந்ததாக வேதநாயகசாத்திரியார் கூறுவதை ஏற்றுக் கொள்ள இயலாது: பழந்தமிழர்களிடையே இவ்வணக்கங்கள் இருந்தன.*

9. ஆனபடியினாலே சோழராசாக்கள்... வந்தார்களென்று பரிச்சேதம் நினைக்கக் கூடாது. மலையாள ராட்சியத்திலே யானா லிந்தத் தாறுமாறு நடக்குது. புத்தியறிந்த ஒரு பெண் முதமுத... அழிந்தால் அது மகா புண்ணியமென்று அவர்களுக்குபதேசம். அப்படியே ராச இஸ்த்திரிகளும்... பிள்ளைக்கு அவடத்திலே பட்டங்கட்டுகிறதென்று கேழ்விப்பட்டேன். ஏனென்றால், அந்தச்சாதி... யானபடியினாலே இப்படி நடக்கிறது; மெத்தப் புண்ணியமென்று நினைக்கிறார்கள். பின்னாலே நான் மலையாளச் **சாதியாருடைய வழக்கங்களைத்** திட்டமா யெழுதி யனுப்பிவிக்கும் போது, அதுகளை நன்றா யறிந்து கொள்ள இடமாயிருக்குமே; ஆனதினாலே சோழ மண்டலந், தொண்டமண்டலம், பாண்டிமண்டலம் இந்த மூன்று தேசத்தாரும் மலையாளச் சாதியாரை மெத்த ............ எண்ணுகிறது. ஆனால்ச் சோழ மகுத்துவத்திலே சொல்லப்பட்ட பதினாறு சோழர்களை யில்லையென்று சொல்லப்போகாது. அவர்களெல்லா முண்டாயிருந்தார்க ளென்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆகிலும் அந்த ராசாக்களுடைய அங்கிஷ அட்டவணை முன்னுது பின்னுதாகச் சொல்லப்பட்டிருக்கு தென்று பார்க்கிறேன். ஏனென்றால்ச் சோழ மகுத்துவத்திலே குலோத்துங்க சோழன் முதமுத யிருந்தானென்றும், அவனுக்குப் பிறகு மற்றச் சோழர்க ளுண்டானார்களென்றுஞ் சொல்லப்படுகுது. ஆனால் நான் கொண்டுவந்து கொடுத்த இந்து தேசத்தார் பூறுவீக ராசசரித்திர மென்கிற பொஸ்த்தகத்திலே குலோத்துங்கசோழன் கடசியிலே யிருந்தானென்று சொல்லப்படுகுது. இதைக் கம்பன், அவன் மகன் அம்பியாவது கதையினாலு மற்ற வித்துவாங்கிஷருடைய விடுபாட்டுகளினாலயும் நம்பவேண்டியிருக்குது. ஏனென்றால்க் குலோத்துங்கசோழனுக்குப் பிறகு இராசாக்க ளில்லைச், சோழவங்கிஷ மற்றுப் போச்சுது என்று வெகுவாய்க் கேழ்விப்பட்டிருக்கிறேன்; ஆயிலும் வேறேபேர்க ளிதற்கு விரோதமாகச் சொல்லுகிறத்தையுங் கூட இங்கே யெழுத்திக்காட்டுகிறேன்; அதாவது,

---

*9. அம்பியாவதி-அம்பிகாபதி*

10. குலோத்துங்கசோழன் ஆதியாகப் **பத்திரசோழன்** வரைக்கும் அவரவர் ஆண்ட வருடம் 1159; இது கலியுகம். 3349க்கு மேல்த் துவக்கமாய் 4500 வருஷம் வரைக்கும் நடந்துது. அதின் பிறகு, சிலநாள் ராசாவில்லாத ராட்சியமா யிருந்துது. அது யேதினாலேயென்றால் பத்திரசோழராசாவுக்குப் பிள்ளையில்லாததி னாலேயுங் **குலோத்துங்கசோழன்** துவக்கிப் பதினாறு சோழப்பட்ட முடிந்தபடியினாலேயுந்தானே; இதுவுமல்லாமல் விக்கிரமாதித்தன் ராசாச் சக்கரவற்தியர் யாண்டபிறகு, அவனைக் **குசவனான சாலியவாகனன்** செயித்து, அவன் பட்டத்தை ஆண்டு கொண்டான்.

இந்தச் சகனைத் தொட்டு, உலக சரித்திரம் 54 ஏட்டிலே யெழுதப்பட்ட தென்னவென்றால், கிறிஸ்த்துப் பிறந்த 78 வருஷந்துவக்கிச் சகார்த்தந் தொகை யேற்றப்பட வேணும். அதேனென்றால், கோவிந்தசுவாமியென்ற ராசாவின் குமாரனாகிறவர் ரிஷக்குச் ........... சாதியாளாகிற ருசத்தி பெற்ற சாலிவாகன சகன், சிறுவத்திலேதானே ராசகோலமாய் மண்குதிரையேறி விளையாடுவான், ஆளாய்ப் போனபின்பு, விக்கரமாதித்த னென்ற தன் சிறியதகப்பனாருக்குப் பட்டம் பிடுங்கி, நம்முடைய இந்துஸ்தானை யெல்லாம் ஒரு குடையின் கீழாண்டு கொண்டிருந்தான். அவன் சந்ததியிலே **தயிமூரலங்கு** பிற்காலம் பெண்கொண்டு இந்தச்சீர்மையைத்தன் கோத்திரத்தாரின் கம்பைக்குள்ளாக்கினைதாக வேணும் என்றெழுதியிருக்குது.

11. இதின்படி, சகன்சக்கரவர்த்தியானபோது, அய்யோத்தி மானகரத்தைச் சூழ்ந்த 81 தேசத்துக்குங் கட்டளை கொடுத்து, அந்தந்தத் தேசத்துக் குடிகளுக்கு அந்தச்சாதி ராசாவே ஆளவும், குடிகளில் தலைமைக் குடிகள் இராசாவோடே கூட இருந்துப் பந்திப்போசனம் பண்ணவும், இராசாவோ சனங்களுக்கு பந்துவாக

---

*10. கலி 4500-கி.பி., 1399; ஆனால் கி.பி 1399 வரை சோழராட்சி நீடிக்கவில்லை. கி.பி. 1279ஆம்ஆண்டுடன் - மூன்றாம் இராஜேந்திர சோழனுடன், சோழராட்சி முடிவுற்றது. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனால் இம்முடிவு ஏற்பட்டது.*

யிருந்து எல்லாரையும் இரட்சித்துக் கொண்டு செய்கிற தரும காரியங்களுக்குச் சகலரும் பரிந்து, ஒத்தாசை செய்து கொண்டு, குடிகளே இராசாவோடே கூட படையெடுத்துக், குமுக்காயிருந்து, எதிரி ராசாக்களை அடக்கி சமாதானப்படுத்தி இருந்தார்கள். இப்படிச் சோழதேசத்துக் குடிகளுக்கெல்லாஞ் சோழியரென்றே பேர்! ............ முதல் பிராமணாள் வரைக்குஞ் **சோழியரென்று** சொல்லப்படும். இந்தப்படி, கர்னாடகர், தெலுங்கு தேசத்திலும், கன்னடியத்தேச, மராட்டிய தேசம், **ஆரியதேசம்,** இந்துத்தேசம் இன்ன மற்றத் தேசங்களும் வரம்பு தப்பாமல் நடப்பிவைத்த சக்கரவற்தி போய், விப்ரீத காரணத்தினாலே கீழிது மேலிது, மேலிது கீழிதுமாச்சுது ஆனதினாலே சோழதேசத்திலும் மற்றத் தேசங்களிலும் ஒன்றைப் பார்த்தொன்று அவரவர்கள் தயிரியம் பண்ணிக்கொண்டு, தங்கள் கைப்பெலத்தினாலும், மணப்பெலத்தி னாலும் அங்கங்கே யிருக்கிற அற்ப.. அந்தந்த இசமான இஸ்த்தானமானவன் **உடையார் களென்றும்** சேர்ந்துகூடின பாளையத்துக்குப் **பாளையகாரரென்ற** பேரு முண்டாச்சுது. இவர்கள் சிலநாள் வலோக்காரமாய் இந்தத் தேசத்தை அங்கங்கே ஆண்டார்கள்.

12. இதின்பிறகு, **ஆனைகொந்திராயர்** ராட்சியத்தில் விதாண்ணிய வங்கிஷ சிரேஸ்ட்டராகப் பட்டவர் சுவாமியுடைய கிறுபையா வொருமலைக் கெபிலே பூகெற்பத்திலிருந்து சன்னாசம் பண்ணிக் கொண்டிருந்தார். அவர் அந்த மலையிலே சஞ்சரிக்கிற இடையனான புசங்கனைத் தமக்குச் சீஷனாக்கி அவனுக்கு பூமிகெற்பத்திலிருக்கிற திரவியங்களைக் காட்டி, அந்தத் திரவியத்தினால்... சேரியிலிருக்கிற அல்லது நாட்டிலிருக்கிற செனங்களுக்குப் பயிரிடுகிறவர்களாகிய...சாதியையும் அவர்களுக்குத் தொழிலாளியா யிருக்கிற சாதியுள்ப் படப்... பதினெட்டிலேயுங் காடு, மலை, தண்ணீர் இதுகளில் சஞ்சரிக்கிற... சாதி அதாவது வதை பண்ணுகிற சாதி அல்லது.... சாதி 108; இப்பேர்பட்டவர்களுக்கு ஆயிதங் கொடுத்து **புசங்கராயன்** சக்கரவற்திபோல ராட்சிய மாண்டார். மேலாகச் சொன்ன

---

*11. வீபரீத-விபரீத; மணபெலம்-மனபலம்;*

பாளையக்காரர் படைக்குப் பயந்து **கிஸ்ட்டணராயர்** நாளையிலே அங்கங்கு கோட்டைகள் கட்டி, பாடவைத்துச் சம்பளமுங் கொடுத்து, புசங்கராயரிலும் அதிகமாக ஆண்டார். இவ்விதமாக கடசியான **பத்திரசோழன்** அத்து 42 வருஷத்துக்குப் பிறகு புசங்கராயன் இராட்சியங்கட்டி இந்த 399 வருஷமாச்சுது என்றுஞ் சொல்லு கிறார்கள். ஆயிலு மெத்தனை சோழ ரிருந்தார்க ளென்றும், அவர்கள் தலைமுறை ஒழுங்கேதென்றும், நிலவரமா யின்னஞ் சொல்லக் கூடாது.

பாண்டியன் தேசத்திலு, மலையாளராட்சியத்திலுஞ், சகலபண்டாரச் சன்னதிகளிடத்திலுஞ் சுற்றித்திரிந்த பிறகு, **இராமனாதபுரத்துச் சேதுபதி** வங்கிஷ விற்திகளையும் ஆராய்ந்து பார்த்தபிறகு, எல்லாருடைய வாக்கியத்துக்கு மொத்துப் பார்த்து, ஒரு தேசத்தார் சொல்லுகிறதற்கு மற்றத்தேசத்தா ரென்ன சொல்லுகிறார்களென்கிறத்தை யெல்லாம் அலாதியாக எழுதி, யொன்றோடொன் றெப்படி யொத்திருக்குதென்று புத்தியின் கண்ணினாலே விசாரித்துப் பார்த்துச் சோழராசாக்களுடைய தலைமுறை அட்டவணை யெழுதவேணு மொழிய **நினைத்தபடி யெழுதக் கூடாது!**

இது தவிர, முக்காலத்திலே.... களுக்குள்ளே அனேகம் பெரிய சாஸ்த்திரிகளிருந்தார்கள். அவர்களாலேதானே புராணங்களுஞ் சமையங்களு முண்டாச்சுது. அவர்கள் பேரென்னாவென்றால், சனக்குமாரர், நாரசிங்கரர் நந்தி, சிவதர்மம், தூருவாசர், நாரதர், கபிலர், மானவர், உசன், பிரமாண்டர், வருணர், காளி, வாசிட்டர், லையங்கர், சாம்புசர், பராசர், மாரீசர், பாற்கவர், இந்த நாமதேயமுள்ள பதினெட்டுப் பேர்கள்தானே வைதீக தருமமுந் தரும சாஸ்த்திரமு, மனுவிக்கான சாஸ்த்திர மற்றக் கதைகள், புராணங்களையு முண்டு பண்ணினார்கள். வேத வியாசரும் அனேகம் விதமாய் இராமாயணம், பாரதத்துக் கிசைந்த சாஸ்த்திரங்களை யுண்டுபண்ணினா ரென்று **அகஸ்த்தியர்** தாமுண்டாக்கின ஞானத்திலே 10 பாட்டுத் துவக்கி 14 கவிமட்டுஞ் சொல்லுகிறார்.

மேலாகச் சொல்லப்பட்டவர்களுக்கும் வேதவியாசருக்கும் பின்னான காலத்திலே அகஸ்த்திய ரிருந்தார்போலே காணுது. இந்த அகஸ்த்தியர் தமிழை யுண்டுபண்ணினா ரென்று அக்கியானிகள் சொல்லுகிறார்கள்; அத்தை நான் நம்பவில்லை! ஆனாலவர் வயித்திய சாஸ்த்திரங்களை யுண்டுபண்ணினார். என்றாலும் அவர் தமிழிலே அத்தனை கெட்டிக்கார ரல்லவென்று அவருடைய வாகட சாஸ்த்திரங்களிலே வெளியாங்கமா யிருக்குது. ஏனென்றால், அதுகளெல்லாமைந்த **வெள்ளையும், ஒரு போங்கான பாடலுமா**யிருக்குது. இவரு மிவரைச் சேர்ந்த பதினெட்டுச் சித்தாதிகளுஞ்... தானே யிருந்தார்கள். இந்தச் சித்தாதிகள் வாக்கியமல்லா மெத்த **வெள்ளையா யிருக்கு மல்லாமல், சற்றாகிலும் கருகலா யிருக்காது!**

12. **குலோத்துங்கசோழன்** நாளிலே இருந்த கம்பனுடைய பாடலாகிய இராமாயணம் அம்மாத்திரங் கட்டுமுகனையாய் அகஸ்த்தியருடைய பாடல்க ளிருக்கமாட்டாது. ஆனபடியினாலே **அகஸ்த்தியர் தமிழை யுண்டு**பண்ணினாரென்று பரிச்சேதம் நினைக்கக் கூடாது! ஆனால்த் **தமிழ்ப்பாஷையையு; மிலக்கணசாஸ்த்திரங்களையு முண்டுபண்ணினவர்களாரென்றால், சமணாளுடைய சாஸ்த்திரிகளுங் குருக்களுந் தானே!** ஆனால், அகஸ்த்தியரொடு பெரிய வயித்திய சாஸ்த்திரி யென்கிறதற்குப் பிசகில்லை. **நாகர்மாமுனி கிரந்த அட்சரங்களை யுண்டு பண்ணினா ரென்று...** சொல்லுகிறார்கள். அப்படி யிருந்தாலு மிருக்கும்; ஆனா லகஸ்த்தியர் தமிழ் அச்சரங்களை யுண்டுபண்ணினதற்குப் போதுமான ரூபகாரத்தைக் காணோம்!

இந்தப் பிரகாரமாக, மேலாகச் சொல்லப்பட்ட ........... குருக்கள், சாஸ்த்திரங்களுடைய உபதேசத்தை யேற்றுக் கொண்ட பிரசைகளுக்குள்ளும், இராசாக்களுக்குள்ளும் இருந்த அனேகம் பெரியோரும் வித்துவாங்கிஷரும் தாங்கள் .... ராலே கற்றுக்

---

*12. யாப்பருங்காலக்காரிகை அவையடக்கத்தில் அகத்தியர் தமிழை உருவாக்கிய குறிப்பு உளது.*

கொண்ட வுபதேசத்துக் கிசைந்தாப்போலே, தங்கள் படிப்புகளையும் வித்தைகளையுங் காட்டி, தங்களுக் குலகத்திலே பேருண்டாக்க வேணுமென்கிற நோக்கத்தினாலே அனேகங்கோடி பாடங்களை யுண்டுபண்ணினார்கள். இந்த நீண்ட காலத்திலிருந்த வித்துவாங்கிஷரெல்லாம் ஒவ்வொருதரும் நினைத்தபடி அனேகங் கதைகளையும். புராணங்களையு முண்டு பண்ணினபடியினாலே உலகம்.. பொஸ்தகங்களினாலும் சாஸ்த்திரங்களினாலும் நிறைபப்பட்டுப் போச்சுது.

இத்தேசத்துப் பிள்ளைகள் சிறுவயது துவக்கி அதுகளைப் படிக்கிறபடியினாலே அந்தப் ..... தானே வேறூன்றிப் போய் சத்தியத்தை யேர்த்துக்கொள்ள மாட்டோமென்று அத்தோடெதிர்த்து நிற்கிறார்கள்.

பின்னையுஞ் சமணாளுடைய வேதத்துக்கடுத்த பெரியவர்கள் சொல்லுகிற தென்னவென்றால், சீரங்கந், திருவானைக்காவல் மற்றுமுண்டான பெரியகோவில் இஸ்த்தலங்க ளெல்லா மெங்களுடையது. இதை... பலோக்காரத்தினாலே யிராசாக்களை அனுசாரி பண்ணிப் பிடித்துக் கட்டிக்கொண்டு எங்கள் கோவில்களை யெல்லாந் தங்கள் கோவிலாக்கிப்போட்டார்கள்; பிரதான கோவில்களெல்லா மெங்களுடையது; அது அவர்களுடைய சொந்தமென்று ருசுப்படுத்த அவர்களுக்கு ஆதரவு கிடையாதென்று இப்படிப் பலவிதமாய்ச் சொல்லுகிறார்கள்.

அதுகளைப் பார்த்தால் ஏறக்குறைய ஞாயமாயிருக்குது. ஏனென்றால், சமணாளுடைய வேதத்தைச் சிவபத்தாள் விஸ்ட்டுணு பத்தாள் தூஷணித்தாலும், எப்படியுமிவர்களுடைய வேதத்தைப் பார்க்க, அவர்களுடைய வேதமே அதிக ஞானமாற்கமாய்ச் சொல்லப்படுகிறதென்று புத்திமான் கண்டுகொள்ளுகிறதற் கிடமிருக்குது. ஆனபடியினாலே யிதைப்பற்றி நானினைக்கிற தென்னவென்றால், **எகிப்பத்துத்** தேசத்தில் அல்லது வடக்கே யிருந்து... வருகிறதற்கு முன், இந்த ராட்சியத்திலே யிருந்தவர்கள் சந்தேகமில்லாமல்ச் சமணாள்தானே! திவாகரம், நிகண்டு, அகராதி,

நாலடியார், நன்னூல், தொல்காப்பியம் மற்ற இலக்கண நூல்களையும், கணக்கதிகாரங்களையு முண்டுபண்ணினவர்கள் இந்தச் சமணாள்தானே! இவர்களை நெஸ்ட்டூரமாய்க் **கூன்பாண்டியன்** துன்பப்படுத்தின படியினாலே, யிவர்கள் மெத்தவு முலகத்திலே சிறுத்துப் போனார்கள். இவர்களுக்கு வல்லமையில்லாமல்ப் போச்சுது. இப்போ இதுகளை ஆராய்ந்து பார்க்க மனதுள்ளவன் சமணாள் வேதத்தையும் அவர்களுடைய வழக்கங்களையும் அலாதியாக எழுதி, அப்படியே சிவபத்தாள், விஸ்ட்டுணு பத்தாளுடைய வேதங்களையும் வழக்கங்களையும் அலாதியாக எழுதிப் பார்த்தால், சமணாளுடைய ஞாயமே அதீகத் திட்டமாயிருக்கும். அதுகளை யெல்லாம் பின்னாலே கூடுமான சமையங்களிலே யெழுதிக் காட்ட மனதாயிருக்கிறேன்.

பின்னையுஞ், **சாலியவாகன** சகார்த்தத்திலே சோழராசாக்க ளிருந்தார்களோ அதற்கு முன்னிருந்தார்களோ என்று விசாரித்தவிடத்தில், சிலர் கலியுகத்தின் ஆதிதொட்டுச் சோழராசாக்க ளிருந்தார்க ளென்று சொல்லுகிறார்கள். வேறே சிலர், அப்படியல்ல, சகார்த்த ஆண்டுக் குள்ளாகத்தானே சோழராசாங்க மிருந்ததாகச் சொல்லுகிறார்கள். இதைத்தொட்டு நானினைக்கிற தென்னாவென்றால், பிரதீசர் மகுத்துவம் அல்லது சோழமகுத்துவத்திலே சொல்லுகிறபடி சோழராசாங்கம் 1172 வருஷமாய் நின்றுதென்று சொல்லப்பட்டிருக்கிற படியினாலேயும், இதற்குச் சரியாய் ஏறக்குறைய முந்தின சோழசரித்திரமும் இசைந்திருக்கிற படியினாலேயும், இப்போ உலகத்தின் தண்டக்கத்தின்படியே 3000, 4000 வருஷத்துக்கு முன்னடந்தத்தை அத்தனை மிச்சமாய்ச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டார்க ளென்கிறத்தினாலும், சோழ ராசாக்கள் கட்டின கோவில்களுடைய பெலன்களைக் கொண்டு, வெகுநாளைப் பழைசு அல்லது நூதனப் பழசு பார்க்கிறத்தினாலு மெத்த மிச்சமாயிருந்தால் இப்போ **நாமிருக்கிற சாதி வருஷம் 1810** வருஷத்துக்கும் அதற்கும் ஒத்துப்பார்த்தால் கிட்ட ஆயிரம் வருஷ மிருக்குமே அல்லாமல் அதிக மிருக்கமாட்டாதென்று நினைக்க வேண்டி யிருக்கிறது.

13. ஆனதினாலே, சோழராசாக்கள் சகார்ந்த ஆண்டுக்குப் பிறகேதானே முற்றிலு முண்டானார்க ளென்று நினைக்கப் போகாது. சகார்த்தத்துக்கு முன் 1000 வருஷமுஞ் சகார்த்தத்துக்குப்பின் 1000 வருஷமும் ஆக 2000 வருஷம் சோழனும் அவனுக்குப் பின்னாக உபையகுல **கிளிபாண்டியனும்** ஆண்டிருக்க வேண்டும். அதுகளை யின்னம் அதிகத்தெளிவாய் விசாரிக்கிறதற்கு போதுமான சோதிரிஷ் சாஸ்திரிகள் அல்லது போதுமான இராச சரித்திரங்கள் அத்தனை அகப்படவில்லை. அதுகாளல்லாஞ் சவரித்தபிறகு, இன்னம் அதீகத் திட்டமாய்ச் சோழராசாக்கள் நடபடிகளை யெழுதிக்காட்டுவேன். பின்னையு மிவிடத்தி லறிய வேண்டிய தென்னவென்றால், இந்தச் சோழராசாக்கள், மெத்தப் பேரெடுப்பான பெரிய ராசாக்கள் என்று நினைக்கும்போது ஒரு பெரிய **பாளையப்பட்டு** அல்லது ஒரு சின்ன ராசாவைப்போ லிருந்தார்கள். இந்தச் **சோழனுடைய ராட்சியமெல்லாம் இருபத்திநாலு காதத்துக்குள்ளாக** இருந்துது. இருபத்திநாலு காதத்துக்குள்ளான இராட்சியங்களை ஆளுகிறவனைப் பெரிய ராசா அல்லது சக்கரவற்தி யென்று சொல்லக்கூடாது. இப்படியே **பாண்டியனுக்கு அன்பத்தாறு காதமுஞ், சேரனுக்கு எண்பத்தோரு** காதமு மிருந்துது. சோழனுடைய 24 காதத்திலே காண்கிற பணமே, பாண்டியனுடைய 56 காதத்திலும், சேரனுடைய 81 காதத்திலேயுங் கண்டுது; ஏனென்றால், பாண்டியன் ராட்சியத்திலே ஆறுகள் மெத்த இல்லாதத்தினாலேயுஞ் சேரன் பூமியிலே மலைகளுங் காடுகளு மிச்சமானத்தினாலேயும் சோழபூமி 24 காதமா யிருந்தாலுஞ் சற்று மேன்மையாய் அழைக்கப்பட்டுது; ஏனென்றால், இதிலே ஆறுகள் மிச்சமாயிருக்கிறத்தினாலுங் காடுகள், மலைகள் அத்தனை யிராதபடியினாலுந்தானே. ஆனாலிந்தச் சோழராசாக்கள் இத்தனை பேரெடுப்பானது எதினாலே யென்றால், அன்னாளிலே யிவர்களுக்கு எதிரியில்லாததினாலும், இந்தப் பூமியிலே காணுகிற பணங்களுக்கு வேறே சிலவு இல்லாத்ததினாலேயும், தங்கள் நாமம் பூமியிலே பிரஸ்த்தாபமாகிறதற்கு வேண்டி அனேகங் கோவில்

---

*13. சொல்லப்போகாது - சொல்ல இயலாது.*

களையுங் குளங்களையு முண்டுபண்ணினத்தினாலும், வித்துவாங்கி ஷருக்கும், பிராமணருக்கு மிச்சமான தானதற்மங்களைச் செய்ததினாலும், மெத்தவும்,' பேரெடுத்தார்களே யல்லாமல் மற்றப்படியல்ல!

14. சோழ வங்கிஷ மற்றுப்போன பிறகு, இந்த இரண்டு ராட்சியத்தையும் பாண்டியன் ஆண்டபடியினாலே சோழனைப் பார்க்கப் பாண்டியன் போரருப்பாய் வாழ்ந்தான். நானூறு வருஷத்துக்கு முன்னாக **விசைய நகர ராட்சிய** பாரம் பண்ணின **கிஸ்ட்டணராயர்** இந்த ராட்சியங்களை யெல்லா மொரு முட்டாய் ஆண்டபடியினாலேயும், அன்பது ராசாக்கள் மட்டும் அவனுக்குக் கீழாயிருந்தபடியினாலேயும், சேரன், சோழன், பாண்டியனைவிட வலசைராயர்கள் பெரியவர்க ளென்று சொல்லவேணும். இவர்களைத் தொட்டு உலகசரித்திரம் 198 ஏட்டிலே எழுதியிருக்கிற தென்னவென்றால் 1659 வருஷத்திலே அன்பது ராசாக்கள் ஆண்டு கொண்டிருந்த விசையநகர ராயர்களில்க் கடைராயனாகிற முன்சொன்ன **கிஸ்ட்டணராயன்** குமாரன் **ராமதேவராயன்** மரணமடைந்தான். இஸ்லாமான நாலு நவாபுகள் அவனுடைய ராட்சியத்தைத் தங்களுதாக்கிக் கொண்டார்கள்; அவர்களி லொருதன் **கோல்கொண்டை** ராசாவானான்.

15. 1689 வருஷத்திலே, அவுரெங்கு சேயபு பாச்சா, கோல்கொண்டை ராட்சியத்தையும் அதுக்கிப் புறப்பட்ட மற்றத் தேசங்களையுங் கட்டிக் கொண்டான். என்றெழுதியிருக்குது. ஆனபடியினாலே, சோழராசாக்கள் தலைமுறை அட்டவணை களைச் சற்று நிறுத்தி இராயர்கள் ஆண்டத்தையும், அதின்பிறகு வடுகநாயக்கமார் ஆண்டத்தையும், கடசியிலே மராட்டியர்

---

*14. கோல்கொண்டை - கோல்கொண்டா* ***(Golkonda)***

*15. அவுரெங்குசேயபு பாச்சா - ஔரங்கசீப் சாகிப் பாதுஷா (1618-1707); மொகலாய மன்னன்.*

*வடுகநாயக்கமார் - தெலுங்கு நாயக்கர்கள்;*

*மராட்டியர் - தஞ்சைமராட்டியர் கி.பி. 1676ல் ஆட்சியினைத் தஞ்சையில் தொடங்கினர்.*

ஆண்டு வருகிறத்தையும், அவர்கள் யெத்தனை பட்டம், யெத்தனை தலைமுறையா யாண்டுவருகிறார்களென்கிறதையுங் **கேழ்விப்பட்டபடி** இவிடத்தி லெழுதிக்காட்டுகிறேன்:-

## சோழ ராசாசங்கத்துக்குப் பின்னாக பூறுவத்திலே தெட்சாண உத்திராதி இராட்சிய பரிபாலனம் பண்ணின இராயர்கள் பெயரட்டவணை

1. புசங்கராயர்
2. அச்சுற தேவராய ரென்று பேர்கொண்ட மல்லிகா தேவராயர்
3. வீரசிங்காதன ராயர்
4. கோனேரித்தேவராயர்
5. ஏன்மதிம்மராயர்
6. ஆனைக்கொந்திராயர்
7. அசுபதி கெசபதி நரபதி ராயர்
8. வாசுதேவராயர்
9. நரசிங்கராயர்
10. ராமதேவராயர்
11. இஸ்த்திரி ரெங்கதேவராயர்
12. அனுமந்தராயர்
13. கிஸ்ட்டண தேவராயர்
14. வீரவசந்தராயர்

-இவாள் பதினாலு பேர்கள் இராட்சிய பரிபாலனம் பண்ணினார்கள்.

ஏறக்குறைய அவர்கள் ஆண்ட வருஷம் உத்தேசம் 400 வருஷமென்று சொல்லுகிறார்கள். இதைத் தொட்டு உலகசரித்திரம் 197 ஏட்டில் எழுதியிருக்கிற தென்னவென்றால், வலசை ராயர்கள் வங்கிஷம் பிரயுடைத்தேவர்முதல்க் கிஸ்ட்டணதேவர் ஈறாக பனிரண்டு தலைமுறை வரைக்கும் ஏறக்குறைய ஆயிரம் வருஷம் ஆண்டார்கள்.

16. இப்படியாக, இவர்கள் 1618 வருஷம் வரைக்கும் ஆண்டார்க ளென்று சொல்லியிருக்குது. ஆனால் **ராயர்கள்**

துவக்கமான வருஷஞ் சொல்லப்படவில்லை. ஆயிலும் ஏறக்குறைய ஆயிரம் வருஷம் அவர்கள் ஆண்டார்களென்று சொல்லப்படுகிறது சரியல்ல ; 400 வருஷம் உத்தேசமா யிருக்குமென்று மேலாகச் சொல்லப்படுகிறது. சற்றேறக்குறையச் சரியா யிருக்குமென்று நம்பவேணும். ஆனாலவர்கள் 12 பட்டமல்ல, 14 பட்டமாண்டார்களென்று சொல்லவேணும். பின்னைடயும் இந்த ராயர்களுடைய பேர்களைத் தொட்டு விசாரித்து முன்னுது பின்னுதாக வராம லொழுங்குப்படுத்த வேணும். இந்த ராயர் காலத்திலே **அப்பாசி** யென்கிற ஒரு பெரிய மந்திரி யிருந்தார். அவர் மகா விற்பன்னமுள்ள **மந்திரி**; அவருக்கும் இராயருக்கு முண்டான காரியங்களைத் தொட்டுச் சில புத்தியுள்ள கதைகளுண்டு; அதுக ளங்கங்கே யுலகத்திலே யின்னஞ் சொல்லப்படுகுது. **துரையவர்களுக் கதின்**பேரில் மனதுண்டாயி ருந்தால் அதுகளைத் **திரட்டிச் சேர்த் தெழுதியனுப்புகிறேன்.**

17. இராயர் காலத்துக்குப் பிறகு, தஞ்சநகரத்தில் எலனவார வங்கிஷ மென்று கர்னாடக நாயக்கமார்களாகிற **அச்சுதப்ப நாயக்கர்** விசையராகுவ நாயக்கர், **செங்கமல நாயக்கர்** ஆண்டார்களென்று சொல்லுகிறார்கள். இதைத் தொட்டு உலக சரித்திரம் 197 ஏட்டிலே யெழுதியிருக்கிறத்திலே தெரிந்தெடுத் தெழுதின பிரதான செய்தி யென்னவென்றால், விசைநகரமாண்ட **கிஸ்ட்டராயன்** நாளிலே, செங்கமாலேழைக் குடியானவன் மகன் **சேவப்பநாயக்கன்** ராயடைப் பக்காரனாலேயும் ராசாத்தியாலேயும் வளக்கப்பட்டு, அடப்பக்காரனான இவனுக்கு ராயர் தஞ்சாவூர் இராட்சியத்தைக் கொடுத்தார். முதமுதச் செவ்வப்பநாயக்கன் ஆண்டபிறகு, இவர் குமாரன் ரெகுநாதநாயக்கரும் ஆண்டார்கள்.

---

*16. அப்பாசி - விசயநகர அரசர் கிருஷ்ண தேவராயரின் அமைச்சர்; அப்பாஜியின் அறிவுடைமை பற்றிப் பல கதைகள் உள.*
*இராயர் - கிருஷ்ணதேவராயர்.*

*17. சேவப்பநாயக்கன் - தஞ்சை நாயக்கராட்சியின் தொடக்கத்திற்குக் காரணமானவன்; கி.பி. 1532இல் ஆட்சிக்கு வந்தவன்.*

அதின்பிறகு, ராமபத்திர நாயக்கர் ஆறுமாதமும், விசையராகுவ நாயக்கர் 36 வருஷமும் ஆண்டனுபவித்துக் கொண்டு வந்தார்கள்.

18. அத்தோடே, வடுகராசாங்க முகிந்து போச்சுது! இவ்விதமாக, வடுகராசாக்கள் மூன்று தலைமுறையாக 58 வருஷம் ராட்சியத்தைக் கட்டிக் கொண்டிருந்தார்களென்று சொல்லியிருக்குது. விசையராகுவ நாயக்கனுக்குப் பிறகு, அவன் மகன் **செங்கமலதாசு** மூன்று மாத மாத்திரம் பட்டத்திலிருந்தான். அதின்பிறகு, 1675 ஆம் வருஷம் துவக்கி, புசிலைராசாக்களாகிற மராட்டியர் இராட்சியபாரம் பண்ணிவருகிறது. அதற்கு விபரமெப்படி யென்னில், 1) மராட்டியனாகிற **ஏகோசி ராசா** இராட்சத வருஷம் தைமாதஞ்சத்தமியில் சினேகத்தின் பேரிலே, தஞ்சாவூர்க் கோட்டைக்குள்ளே வந்து, கோட்டையை ஆக்கிறுமிட்சுக் கொண்டு, அதுமுதல் துன்மதி மட்டும் 7 வருடம் ஆண்டார்.

2. ஏகோசிபுத்திரன் சகசிராசா துந்திமி முதல் விகுறுதி மட்டும்.

3. அப்பா லவர்தம்பி சரபோசிமகாராசா கரவருஷம் முதல்ச் சவுமிய வருஷம் வரைக்கும் 18 வருடமாண்டார்.

---

*அடப்பக்காரன்-வெற்றிலைப்பெட்டி தூக்குபவன்.*

*18. விசையராக நாயக்கனை, மதுரை நாயக்கரான சொக்கநாதர் கொன்றுவிடுகிறார். கி.பி. 1675 இலிருந்து தஞ்சை மராட்டியராட்சி தொடர்ந்தது என்று வேதநாயகர் எழுதுவது வரலாற்றோடு இயைந்ததே.*

*1. ஏகோஜி-1676 ஜனவரி 14 முதல் பிப்ரவரி 13 வரை உள்ள காலத்திலிருந்து 1681-82 வரை.*

*2. சஹாஜி - 1681-82 முதல் 1710 -11 வரை*

*3. சரபோஜி - 1711-12 முதல் 1729-30 வரை*

*4. துளஜா - 1730-31 முதல் 1740-41 வரை*

4. அவர்தம்பி துளாசா மகாராசா சாதாருண வருட முதல் ஆனந்த வருடம் வரைக்கும் பத்து வருடமாண்டார்.

5. துக்கோசி புத்திரன் ஏகோசிராசா இராட்சத வருஷமட்டும் 11 மாதமாண்டார்.

6. ஏகோசிராசாவின் பட்ட இஸ்த்திரி பட்டங்கட்டிக் கொண்டு 23 மாதமாண்டார்கள்.

7. சரபோசி ராசாப் பிள்ளை யென்று காட்டுராசா வலோக்காரமாய் பிங்கள - காலையுத்தி வருஷமட்டும் 11 மாதமாண்டார்.

8. அதின்பிறகு, துளசி மகாராசாவின் பிள்ளை பிரதாப்புசிங்கு மகாராசா சித்திராவுத்தி வருடமுதல் கபானு வருட மார்கழி மாதமட்டும் 24 வருடம் ஆறுமாதம் ஆண்டார்.

9. பருதாப்புசிங்கு புத்திரன் துளசா மகாராசா சுபானு வருஷ மார்கழிமாதம் 16 முதல் பிரபவ வருஷம் மாசிமாதம் வரைக்கும் 23 வருடமும் 2 மாதமும் ஆண்டார்.

10. அவர் தம்பி **அமுர்தசிம் மகாராசா** பிலவங்க வருஷ முதல் காலையுத்தி வருடம் ஆனி மாதம் வரைக்கும் வருடம் நாலு மாத மாண்டார்.

---

*5. ஏகோஜி - 1741-42இல் 11 மாதங்கள்.*

*6. ஏகோஜியின் பட்டஸ்திரி 1742-43 முதல் 1743-44 வரை*

*7. காட்டுராஜா - 1744-45 முதல் 1745 ஏப்ரல் 15 வரை*

*8. பிரதாப்சிங் - 1745-46 முதல் 1769-70 வரை (மூலத்தில் சித்ராவுத்தி என்றிருப்பது சித்தார்த்தி என இருக்க வேண்டும்.)*

*9. துளஜா - 1769 -70முதல் 1792-93 வரை (பருதாப்பு- பிரதாப்)*

*10. அமரசிங்கு 1792-93 முதல் 1803-1804 வரை*

11. அப்பால்த் துளசா மகாராசாவின் தத்தபுத்திரனை **சரபோசி மகாராசா** பட்டமாயிருக்கிறார்கள்.

19. இப்படியாக, **இராயர்** இராட்சிய பாரம் பண்ணத் துவக்கமான நாள்முதல், இதுவரைக்கும் உத்தேசம் 400 வருஷம்; இதற்குள்ளாக மேலாகச் சொன்ன 29 பட்டம் ஆண்டார்கள்.

---

*வேதநாயகர் சுவடியில் குறித்த ஆண்டுகளே இவை; எழுதப்பட்ட வரலாற்று ஆண்டுகளோடு இவை ஆங்காங்கே வேறுபடுகின்றன.*

# 3. சோழ, சேர, பாண்டிய மன்னர்கள்

## வமிசாவளி

## (டி. 3280)

1. சோள ராசாக்கள்ச், சேர ராசாக்கள், பாண்டிய ராசாக்கள் இவாள் மூணு ராசாக்களுடைய வமுசாவழிகளுடைய பூற்வோக்தி வறிசைகளுடைய பூற்வோத்திறங்கள் கோயமுத்தூர் தாலுகா ஈரோட்டுக்கு சேந்த பூந்துறையில் யிறுக்கும். காளிகவிராய்யனிடத்தில் யிறுக்கப்பட்டத்தெ பார்த்து நக்கல் யெழிதப்பட்டது.

## சோள ராஜாக்களுடைய விபறம் 1 :-

பூற்வத்தில், சூறிய வமுசத்தில் பொரந்து பூமியாண்டு வறப்பட்ட சூறியவமுசத்து ராசாக்களுடைய வமுசத்தில் சோழிய யென்னப்பட்ட பேறை ஒடைத்தாநவனாயி இருக்கும் காலத்தில்1

இதுக்கு பூற்வகாலத்தில் **முச்சுகுந்த** சக்கறவர்த்தி ராசீயபாரம் பண்ணப்பட்ட **திறவாலூரில்,** மேல் எழிதப்பட்ட முச்சுக்குந்த சக்கற வர்த்தினுடைய வமுசத்தில் செனனம் பண்ணி, சோழியன்னின் னப்பட்ட ஒரு பெயரை ஒடைத்தாயி தேவத்தாமுசையினாலே யிருக்குற சாமயத்திலே, திருவாலூற் ராசீயத்துக்கு சக்கிறவற்த்தியாயி, ராசீயத்துக்கு ஏடைத்தவனானான். -1

2. இப்படி, தேவத்தா அமுசையினாலே சக்கிறவற்த்தியாக **சோழியன்** யென்னப்பட்ட பேரை எடைத்தவனாயி, சுவாமி காறிய துறந்துறனாயி சகல தற்மத்துக்கும் பரிபாலனம் பண்ணப்பட்ட யோக்கியங்களை உடையவனாயி தன்னுடைய ராசீயத்திலே யிறுக்கப்பட்ட சுறவசனங்களுக்கு துக்கங்கள், கஷ்ட்டங்கள்

---

*1. நக்கல் - நகல்; பேறை - பெயரை;*
*திறவாலூர் - திருவாரூர்.*

வராமல்ப் படிக்கி, ஆதறணெ பண்ணிக்கொண்டு, தன்னுடைய தேசத்திலே இருக்கப்பட்ட செனங்களுடைய குத்தம் குறைகள் கேட்டு தெறிஞ்சுக் கொண்டு, அவாளவாள் மனோபிஷ்டப்படிக்கி நிறவேத்தி குடுக்குறத்துக்காக நெமுகம் பண்ணி, தன்னுடைய அறமணைவாசலுக்கு யெதுறக்கே ரெண்டு குத்துக்கல் கால்நட்டு, அதுக்குமேல் ஒருகல் சாறமாகப் போட்டு, அதிலே **ஒருமணிகட்டி** யெந்த வேளையிலையானாற் குத்தங்கள், குறைகள் வறுகிறதோ அந்த நிமிஷத்துக்கு அவாள் குத்தம்ங்குரை ராசாவுக்கு தெறியகுரத்துக்காக அந்த மணியை ஆட்டறது யென்று நெமுகம் செயிது. அந்த மணிக்கிபேற் **ஆராட்சிமணி** யென்று பேறும் வச்சுயிருந்தான்.

3. அப்போ, **சோழியன்** யென்னப்பட்ட பேரை ஒடைத்தவனான ராசனுடைய ராச்சியத்திலே யிறுக்கப்பட்ட சறுவசனங்களும் அவாளவாளுக்கு குத்தம் குறையள் வந்தால், அந்த நாழிகைக்கி அறமணை வாசலிலே கட்டியிறுக்கப்பட்ட, ஆறாச்சி மணியை சப்புத்தம் பண்ணுகுறது; அந்த ஆறாச்சிமணி சபுத்தம் கேட்ட னாழிகைக்கு, றாஜா அவாளுடைய மனோபிஷ்டம் நிறவேத்தி குடுக்குறது. இப்படி தற்ம்ம றாசீயமாய்ப் பண்ணிக்கொண்டு **திறவாறூற்** தியாகராச சுவாமி சன்னதிக்கி பகுத்தனாக றாசீயம் பண்ணிக் கொண்டு யிறுந்தான்.-1

4. இப்படிக்கி, பூலோகத்திலேச் சோழியன் யென்னப்பட்ட பேரை ஒடைத்தாநவன் சகல செனங்களுக்கும் ஒண்ணுக் குன்னு வையிறங்கள் இல்லாமல், சறவசென சம்முத்தமாக தற்ம்ம றாசீயமாகப் பண்ணிக்கொண்டு வறுகுறானின்று தேவ லோகத்திலே சகலமான தேவத்தியளுக்கும் தெறியப்பட்டுயிறுந்துது. -1

---

2. *ராசீயம் - இராட்சியம்;*
*ஆதறணெ - ஆதரவு; யோக்கியம் - திறன்; மனோபிஷ்டம்-ஆசை; மன+அபிஷ்டம்-மனோபிஷ்டம்; நிமிழம்-நிமிடம்; நெமுகம்-ஏற்பாடு;*
3. *சபுத்தம்-சப்தம்; பகுத்தனாக - பக்தனாக.*
4. *வையிறங்கள்-விரோதங்கள்; பொகுனாள்-வெகுநாள்;*

இப்படி, பொகுனாள் நடந்துக் கொண்டு வறும்காலத்தில் ஒருனாள் சமயத்திலே சகலமான தேவாதிகளும், "பூலோகத்திலே திறவாறூற் தியாகராய்யதிடத்துக்குப் போயிவருவோமென்று தியாக ராய்யறிடத்தில் இருக்கப்பட்ட **சோழியன்** யென்னப்பட்ட பேரை ஒடைத்தாநவன் தற்ம்மறாசீயமாக சறுவசெண சம்முதமாக ஆறாச்சீ மணியைப் போட்டுக் கொண்டு

றாசீயம் பண்ணுகுறானாம்! அவனை சோதனை பண்ணவேணும்'' யென்று ஆலோசனை பண்ணி முப்பத்தி முக்கோடி தேவத்திகளும் ஒருப்பசுவாகவும், யெமதற்மம் றாஜா ஒருகன்னாகவும் றூபம் யெடுத்துப்போயி," அவனுடைய நினைவை அறிய்யவோம் யென்று யோச்சனைப் பன்னாறகள். -1

5. திறவாலூற் தியாகராய்யற் றெதத்து நின்னைக்கு, சகலமான தேவேதிந்திகளும் ஒருப்பவு கன்றுமாக றூபம் யெடுத்துப் பறப்பட்டு, கமலாலயத்திலே தண்ணி குடிச்சு கெளக்கு கோபிற வாசலைக் கோவிலிவுள்ப்புந்து மேற்கு வாசலாலெ வெளிப் பறப்பட்டு, மேச்சல் மாடுப்போலே திறஞ்சிக் கொண்டு யிருக்கிற சமயத்திலே, தியாக றெதத்தின் கீளை வண்டிக்காலுலே இந்தப் பசுவுங்கன்னும் மாயா றூப்பமாக விளுந்து செத்துப்போயிவிட்டது.-1

6. இந்தப் பசுவாநது தன்னுடைய கன்னெ காணாமல் அம்பாயென்குற சத்தத்துனாலே கூப்பிட்டுக்கொண்டு தேடிக்கொண்டு வந்து, தேறும்கீளை செத்து யிறுக்கப்பட்ட தன்னுடைய கன்னை பாத்து கண்ணீர் விட்டுக்கொண்டு, அந்த கன்னை மோந்து பாத்து திறப்பிக்கொண்டு போயிவிட்டது.

7. அந்தப் பசுவானது றாசாவுனுடைய அறமனை வாசலுக்கு வந்து ஆறாட்சமணியை கொம்புனாலே சபுத்தம்பண்ணி, அதின்கீளை கண்ணீர்விட்டு நின்னுக்கொண்டு யிறுந்தது. -1

---

5. *றெதத்துநின்னைக்கி-இரதத்து அன்று; புந்து - புகுந்து; வாசலாலை - வாசல்வழியே; கீளை-கீழே;*

6. *தேறும் கீளை - தேரின் கீழே; கன்னை - கன்றை;*

இந்த **சோழியன்** யென்னப்பட்ட பேறை ஒடைத்தாலனா றாசா இந்த ஆறாட்சிமணி சபுத்தம் கேட்ட நிமிஷத்துக்கு யெலைமுன் ஒக்காந்து இருந்தவன் யெலைவிட்டு பறப்பட்டு, "மணி சபுத்தம் பண்ணின பேற் யாற்?" யென்று விசாறிச்சார். "பசுவு வந்து நின்னுக்கொண்டு யிறுக்குறது யென்று" கேளுவைப்பட்டு அந்த நிமிஷம் ஆறாட்சிமணி யிடத்தில் வந்து நின்னான்.

7. அப்போ அந்த றாசாவைபாத்து இந்தப் பசுவு பின்னையும் ரொம்பவும் கண்ணீர் விட்டுக் கொண்டு யிறுந்ததெத்த பாத்து, "இது வாயில்லா சீவன்! இதுக்கு குறை வந்த வயணம் தெறியவில்லை!" யென்று ரொம்பவும் விசாறத்தெ அடைஞ்சு விசாறிச்சவிடத்தில, "கன்னும் பசுவும் குமஞ்சுக்கொண்டு யிறுந்து கமலாயத்தில் தண்ணி குடிச்சுக் கோவில் வழியாகப் பறப்பட்டு வந்தவிடத்தில், கன்னு யெளங் கன்னானபடியினாலே, துள்ளி துள்ளி விழுந்து, தேரினுடைய வண்டிக்காலுலே யாப்பட்டுக் கொண்டு செத்துப்போய்விட்டது! யென்றும், இந்தப் பசுவுகன்னை செத்துப்போனத்தெ பார்த்து ரொம்பவும் வேதனப்பட்டு, அறமணை வாசலிலை கட்டியிறுக்கப்பட்ட மணியை ஆட்டி, குறையை நிறவேத்திக் கொள்ள வேணும் யென்று நின்னுயிறுக்குறது; அது விசாரணைனாலே தெறிஞ்சுக் கொண்டான். -1

8. றாசாவுக்கு, இந்தப் பசுவுக்கு தம்முடைய றாசீயத்துக்குள்ளை, "இந்தப் பசுவு தன்னுடை புள்ளையை - கன்னுக்குட்டியை சாகக்குடுத்து. அதனுடைய பழியை நம்மிடத்தில் போட்டு, காத்து யிருக்குறதே" யென்று யிப்படியாயுள்ள இந்தப் பழியை நாம் யென்னமா தீத்துக் கொள்ளப் போறோம்" யென்னும்படியாய் ஆலோசனை செய்து, அந்த நிமிஷத்திலே தன்னுடைய புள்ளையை சகலா ஆபரணங்களும் சிங்காரிச்சு பழிக்கி பழியை பொதல் தீத்துகுடுக்கவேணும் யென்குறதாக யெத்தினம் பண்ணி, தன்னுடய (மகனைக்) கூட்டிக்கொண்டு

---

7. *பறப்பட்டு-புறப்பட்டு; யெளங்கண்ணு-இளங்கன்று.*
*குரையை - குறையை;*

8. *யெத்தினம் - முயற்சி*

தேறடிக்கி வந்து, **விசுவசேண** யென்னப்பட்ட புள்ளையை அந்த வண்டிக்காலுக்குக் கீளைபடுத்துக்கச் சொல்லி உயிற்கு உயிற் பொதல் குடுக்குறதுக்காக வண்டியை யிருக்கச் சொல்லி உத்திரவு பண்ணினான்.

9. அப்போ, சகலதேவத்திகளும் இவனுடைய தற்ம நெணவுக்கு ரொம்பவும் சந்தோஷப்பட்டு, இவனுடைய மனசுந... தெறிஞ்சுக் கொண்டவளாயி, முப்பத்தி முக்கோடி தேவதிகளும் பிறத்தியட்சமாயி, அந்தக்கால மீறுத்துரா (?) யிறுக்கப்பட்ட கன்னுக்குட்டி றூபமான யெமதற்ம்ம ராசாவும் பிரத்தியட்சமாயி, றாசாவினிடத்தில் அதிசந்தோஷப்பட்டு **தேறூர்ந்தசோளராஜா** யென்னப்பட்டபேறும் குடுத்தார்கள்.

அதுனாலே தேறூர்ந்த சோளன் யென்னப்பட்ட பேற்வந்து, அவனுடைய வமுசத்தில் சோளறாசா யென்னப்பட்ட பேற்வரப்பட்டது.

1. தேறூற்ந்தச் சோளன் பட்டம்
2. விசுவசேனன் சோளன் பட்டம்
3. இந்திரவிமாணச் சோளன் பட்டம்
4. லோகப்பதிபுறந்தச் சோளன் பட்டம்
5. மனுகார்த வனலோக்கறித்தச் சோளன் பட்டம்
6. மக்களுச்சானிவகுள்த்தச் சோழன் பட்டம்
7. யேதந்தீற்தச் சோளன் பட்டம்
8. பேறிலியும் தீத்தச் சோளன் பட்டம்
9. நாகக்கண்ணிக் கைப்பிடித்தச் சோளன் பட்டம்
10. தண்ணுயிற்போல் மன்னுயிறும் தேற்ந்தச் சோளன் பட்டம்
11. கெங்ககொண்டச் சோளன் பட்டம்
12. காவேறிக்கரை கண்ட சோளன் பட்டம்
13. வில்லவன் கவிகண்டச் சோளன் பட்டம்
14. புனக்கண்டச் சோழன் பட்டம்

15. கப்பனாற் கோயில் செப்பொன்னால் மேந்தச்சோளன் பட்டம்
16. மறனுடுக் கொண்டச் சோளன் பட்டம்
17. கெங்காபுறி போந்தச்சோளன் பட்டம்
18. ...தரைக்கொண்டச் சோளன் பட்டம்
19. கயிலாச ஆயிற்கேசம் கண்டச்சோளன்பட்டம்
20. அணத்த சயினச்சோளன் பட்டம்
21. கலிங்கத்தரைக் கொண்டசோளன் பட்டம்
22. பூகாறண்ணியச் சோளன்பட்டம்
23. சேறதோற்ந்தச் சோளன் பட்டம்
24. சிலைகடிந்தச் சோளன் பட்டம்
25. மறக்காளி சுக்கமாற்றிய சோளன் பட்டம்
26. ஆவுத்தீ குறுக்கொண்டச் சோளன் பட்டம்
27. அபயங்கறச் சோளன் பட்டம்
28. விக்கிரமச் சோளன் பட்டம்
29. யேகச்சக்கிறாதிபதிச் சோழன் பட்டம்
30. பறாத்தகச் சோழன் பட்டம்
31. உத்துங்கச் சோளன் பட்டம்
32. குலோத்துங்கச்சோழன் பட்டம்
33. றாசேந்திறச் சோழன் பட்டம்
34. செயங்கொண்டச் சோழன் பட்டம்
35. திறுவளஞ்சுளியிட்டச் சோழன் பட்டம்
36. வறகுணச் சோழன்ப் பட்டம்
37. திறனூத்திச் சோழன்ப் பட்டம்
38. வீறச் சோழன் பட்டம்
39. வசுதேவச் சோழன் பட்டம்
40. விட்டசேணச் சோழன் பட்டம்
41. ஆறலொண்ணு கடமை கண்டச் சோழன் பட்டம்
42. மனுநெறி தறித்த சோழன் பட்டம்

43. வற்ண நெலையிட்ட சோழன் பட்டம்

44. தீண வசத்தச்சோழன் பட்டம்

45. தாசைமுத்தீறத் சோழன் பட்டம்

46. சப்பிறதாயச் சோழன் பட்டம்

47. நீத்தியோச்சுங் சோழன் பட்டம்

48. கறிகாலச் சோழன் பட்டம்

10. பூற்வத்தில், இவாள் னாற்பத்தி யெட்டுபேறும். சோளறாசாக்களும் தேவதா அமுசத்தினாலே றாசீயபாரம் பண்ணிக் கொண்டு வந்தார்கள்.

இந்த கலியுகத்திலே மனுஷிய நூபமாயி றாசீயம் பண்ணப்பட்ட சோழன் நாஜாக்கள்

1. பவுண்ட றிகாச் சோழன் பட்டம்
2. நீலமேக சாமலவற்ண சோழன் பட்டம்
3. தாணவாறிச் சோழன் பட்டம்
4. பூபாரம் தீற்த்தச் சோழன் பட்டம்
5. பூவலவந்த சோழன் பட்டம்
6. பறறாசபயகாற சோழன் பட்டம்
7. பறாக்குறம்மச் சோழன் பட்டம்
8. மேறு நெலையிட்ட சோழன் பட்டம்
9. சந்திற குலாதிக சோழன் பட்டம்
10. சறாசறசு... ணி சோழன் பட்டம்
11. னாகலோகம் கண்ட சோழன் பட்டம்
12. ஆடகேசுவற சோழன் பட்டம்
13. கணகப்பீத்தாம்பற சோழன் பட்டம்
14. கணக சூடாமணி சோழன் பட்டம்
15. வக்கறுக்கர் சோழன் பட்டம்
16. சகது... ட்சய சோழன் பட்டம்
17. கிற்மி கண்ட சோழன் பட்டம்
18. காம்பிறியச் சோழன் பட்டம்

11. இந்தப் பதிநெட்டு சோழ றாஜாக்கஞூம் மனுஷிய றூபமாயி றாசீயபாரம் பண்ணிக் கொண்டு வறும்காலத்தில், கலியுகம் வறுஷம் 1800க்கு மேல் றாசீயபாரம் பண்ணப்பட்டச் சோழறாஜா ஆண்டுவறும் காலத்தில், கம்பற் யென்னப்பட்ட கவிசுவறருக்கும் அந்த சோழறாசாவுக்கும் சவாதம் வந்து, அந்த கலிசுவறன் அறம்ப்பாடினத்தினாலே சோளவமுசம் அத்துப் போயிவிட்டது. 1

12. கலியுகம் வறுஷம் 1807 சோள இல் வமுசம் அத்துபோயிவிட்டது.

அந்த **கம்பர்** சொல்லப்பட்ட விறத்தம் - சோழம்பேறில் அறம்பாடினது:

*வில்லம்பு சொல்லம்பு மேதனியில் ரெண்டுண்டு*
*வில்லம்பில் சொல்லம்பே மேலம்பு - வில்லம்பு*
*பட்டுதடா யேனமாறவில் பார்வேந்தர் வுன்குலத்தெ*
*சுட்டுதடா யென்வாயில் சொல்!*

13. அந்த அறம்பட்டு அந்த சோளன் யென்னப்பட்டவன் அத்தோடே ஆண்டுப் போயிவிட்டான்.

அதின் பிறக்காலம், சோள தேசத்துக்கு ராஜியாதிபத்தியம் பண்ணவன் சோளன் யெண்ணு பேர் வைத்துக் கொண்டு வந்தார்கள்.

---

*11. கம்பற் - கம்பர்; சவாதம் - சம்வாதம்;*

*12. இப்பகுதியில் வந்துள்ளது விருத்தம், அல்ல; நேரிசை வெண்பாவாகும். சுவடியில் உள்ள பாடலை வருமாறு பதிப்பிக்கலாம்;-*

*வில்லம்பு சொல்லம்பு மேதினியில் ரெண்டுண்டு*
*வில்லம்பில் சொல்லம்பே மேலம்பு - வில்லம்பு*
*பட்டுகடா யேனமவிப் பார்வேந்தர் உன்குலத்தைச்*
*சுட்டுதடா யென்வாயிற் சொல்!*

## சோளதேசத்து எல்லை வயணம்;-

*"கடல்கிழக்கு தெற்குக் கரைபோற்றும் வெள்ளாறு*
*குடதிசைக்கி ...*
*ஏணாப் பெண்ணை இருபத்தி னாக்காதம்*
*சோழநாட்டுக் கெல்லையெனச் சொல்!*

14. ச்சேற றாசாக்களுடைய வமுசா வழி பேற்கள்.

யுகாதிகளிலே சேறனென்னு பேறப்பட்டு சேரவது தேசாதிபதியானவாளுடைய பேர்களும், பட்டங்களுடைய வரிசைகளும் எழுதப்பட்டது.

1. யெதுகுலச் சேறன் பட்டம்
2. வமுசோத்தராக்க சேறன் பட்டம்
3. மனுமொரை நடத்த சேறன் பட்டம்
4. வீறபிறதாப சேறன் பட்டம்
5. விக்கிறம கேசறி சேறன் பட்டம்
6. றிபுகுலட்சயச் சேறன் பட்டம்
7. சமற சாற்த்துலச் சேறன் பட்டம்
8. புணற்னாடு கொண்டச்சேறன் பட்டம்
9. புலிக்கொடி பொறித்தச் சேறன் பட்டம்
10. யெல்லை கரைகண்டச் சேறன் பட்டம்
11. றாசகம்பிறச் சேறன் பட்டம்
12. முந்றில் மணியிட்டச் சேறன் பட்டம்
13. மொரைசறிந்தச் சேறன் பட்டம்
14. றாசமார்த்தாண்டச் சேறன் பட்டம்
15. றாசாறாசேசுவறச் சேறன் பட்டம்
16. றாசப்பிறத்தாபச் சேறன் பட்டம்
17. ஆறுலொன்று கடமெ பெத்த சேறன் பட்டம்
18. அணந்தகுணச் சேறன் பட்டம்
19. மத.. விஷ்த்தாரச் சேறன் பட்டம்

20. வாரனோத்துப்பலச் சேகறன் பட்டம்

21. ஆசுறமும் நிறவேத்த சேறன் பட்டம்

22. அனுபூத்திச் சேறன் பட்டம்

23. அவிற்பாகச் சேறன் பட்டம்

24. தியாகசமுத்திறச் சேறன் பட்டம்

25. திறனுத்திச் சேறன் பட்டம்

26. மெயிபொறுள் கண்டச் சேறன் பட்டம்

27. பானற்கு நீதிதந்த சேறன்பட்டம்

28. பாஷ்க்கறபாணிச் சேறன் பட்டம்

29. தெயிவகுஞ்சறச் சேறன் பட்டம்

30. சித்துலாறண்ணிய சேறன் பட்டம்

15. பூற்வத்தில், இந்த முப்பது சேற றாசாக்களும் தேவதா அமுசத்தினாலே றாசீய பாரம் பண்ணிக் கொண்டு வந்தார்கள்.

இந்த கலியுகத்தில் மனுஷிய றுபமாயி றாசீயபாரம் பண்ணிக்கொண்டு வந்தாள்ச் சேறறாசாக்கள்.

1. அட்சய பாத்திற சேறன் பட்டம்

2. யேனாதிச்சேறன் பட்டம்

3. வமுச பறிபாலக்கச் சேறன் பட்டம்

4. மங்களா... ச்சேறன் பட்டம்

5. சிவதற்மோத்தாரகச் சேறன் பட்டம்

6. சிவனேச சேறன் பட்டம்

7. சிவோப்பவச் சேறன் பட்டம்

8. சிந்துலாரண்ணியச் சேறன் பட்டம்

9. சேரல்சண சமுற்ட்சக சேறன் பட்டம்

10. திறகை யாதற்ச்சேறன் பட்டம்

11. திறக்கை சாத்தச் சேறன் பட்டம்

12. அச்சுல பிறத்தாபச் சேறன் பட்டம்

13. அகடித கீர்த்திப்பிறதாபச் சேறன் பட்டம்
14. வீற றாசேந்திறச் சேறன் பட்டம்
15. பிமீசுவறச் சேறன் பட்டம்
16. நிற்மல சேகறச் சேறன் பட்டம்
17. பஞ்சாட்சரச் சேறன் பட்டம்
18. சிவபாதக... சேறன் பட்டம்
19. திருமஞ்ச சேறன் பட்டம்
20. கயிலாசத்தெ அடஞ்ச சேறன் பட்டம்

16. இவாள் இறுவது பேறும் மனுஷிய றூபமாயி கலியுகத்திலே றாசீயபாரம் பண்ணிக்கொண்டு வறும்காலத்தில், கடசி பட்டக்காரனாகிய சேறறாசாவை சுந்திறமூற்த்தியானவற் கயிலாசம் அடைய சறீறத்துடநே கூடா கயிலாசம் அடையப் பண்ணினார். -1

17. அப்போச் சேறன் பேறில் சுந்திறமூற்த்திகள்ப் பாடினபாட்டு:-

*வுணக்கறும்புகள் மேவிய சுந்திறன்*
*வுன்பன விதிவற றென்றும்*
*கயில்ாச அடைந்தமே நெந்து*
*காளவகுரதே -1*

18. ச்சேறனுடைய மண்டலத்துக்கு பிரமானப்பாட்டு:-

*"வடக்கு பெறும்பாலை வைய்யாபுறி தெற்கு*
*கொடைக்கி பொறப்பு வெள்ளிக் கொண்டம் - தடக்கழிசூள்*
*கழித்தண்டலெ அளவு காவேறி சூள்நாடா*
*குழிதண்டலை அளவுக் கொங்கு" !*

---

*16. சுவடி குறிப்பது, சேரமான் பெருமாள் நாயனாரையும், சுந்தரமூர்த்தி நாயனாரையும் ஆகலாம்.*
*17. பாடல் மிகவும் சிதைவுற்றுளது.*
*18. பிரமாணம் - சான்று.*

19. இப்படிக்கி, கோங்கு தேசத்துக்கு சேறன் எண்ணப்பட்டவாள் ராஜியம் பரிபாலனம் பண்ணிவரும் காலத்தில், சேரன் கைலாசத்தை அடைய்ந்தபோது, தன்னுடைய மந்திரியை ராசியம் பண்ணிக் கொண்டுவரச் சொல்லி னேமுகம் பண்ணி போனவ்னானபடியினாலே, னாளது வரைக்கும் மளயாளில் ராமராஜர் வங்குஷத்தில் பூற்வமுதலாக பல்லக்குலே சேவையாயி உள்க்காந்து வருகுறது, யில்லை காலே தொங்கப்போட்டுக் கொண்டு யிருக்குறது. அது பத்தாவதி எண்ணவேண்... ராஜா மறுபடியும் வருவானென்று.

.....க்றுதேயாயி யிருக்குறாப் போலே னடக்கும் வரலாற் ........ றாசாக்கள் யென்னப்பட்ட பேரை ஓடைத்தானவளாயி, மதுரைப் பட்டண்ணத்தில் ஆளப்பட்ட பாண்டிய ராசாக்கள்-

20. பூற்வத்தில், தேவேந்திரன் ற்பபசு பண்ணி சுவாமி பிறத்தியட்சமாயி தேவேந்திரனுடைய சாபம் தீத்து, லிங்காரமாயிப் பிறந்திட்சமாயி கடம்பவனத்திலே உத்துபத்தியாயி தேவேந்திரனுக்குத் தெரிசனமானபடியினாலே, நம்ம அபிஷ்ட்டம் நிறவேறித்தி" யென்று சந்தோஷத்தை அடைந்தவராயி, சுவாமி பூசை பண்ணிக் கொண்டு யிறுக்கும் யெடத்தில், சொப்பனத்திலே, "நீ இவடத்தில் றாசீயம் பண்ணிக் கொண்டு யிருந்தால், ஒன்னுடைய புள்ளை வகுத்துலே பொன் பொறந்து, அந்தப் பொண்ணை நான் விவாகம் பண்ணிக் கொண்டு, றாசீயபரிபாலன் பண்ணி, திக்குவிசெயம் செயம்பண்ணி இருப்போம்" யென்னும்படியாயி சொன்னயிடத்தில், குலசேகற பாண்டியன் யென்னப்பட்ட பேரை

---

*இப்பாடலை வருமாறு பதிப்பிக்கலாம்:-*

*"வடக்குப் பெரும்பாலை வையாபுரி தெற்கு*
*குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்றம்-தடக்கழிசூழ்*
*குழித்தண் டலையளவு கொங்கு!"*

*(குடக்கு-மேற்கு; வையாபுரி-பழனி; பொருப்பு-மலை; வெள்ளிக்குன்றம்-மேற்குதொடர்ச்சி மலை; வடக்கு எல்லை, தலைமலை)*

*20. தப்பசு-தவசு; உத்துபத்தி-உற்பத்தி, பொன்-பெண்;*

கடம்பவனத்தெ அழிச்சுப்போட்டு, மதுராபுரி யென்னப்பட்ட பட்டணமும் வுண்டுபண்ணி, ராசியபாரம் பண்ணிக்கொண்டு இருந்தார்.

அவற்பிள்ளை வலயத்துவச பாண்டியன், இவற்க்கும் மீனாட்சிதேவி பொன்னாக அவதறிச்சு, சிறிது னாள்... விசயம் பண்ணினத்தினாலே, சுவாமி வந்து விவாகம் பண்ணிக் கொண்டு சுந்திறபாண்டியர் யென்னப்பட்ட பேரை ஒடைத்தாநவனாயி ராசீயத்துக்கு....

1. குலசேகர பாண்டியன் பட்டம்
2. மலயத்துவச பாண்டியன் பட்டம்
3. சுந்திற பாண்டியன் பட்டம்
4. வீற பாண்டியன் பட்டம்
5. அபிஷேக பாண்டியன் பட்டம்
6. விக்கிறம பாண்டியன் பட்டம்
7. றாசசேகர பாண்டியன் பட்டம்
8. அனந்தகுண பாண்டியன் பட்டம்
9. குணபூஷண பாண்டியன் பட்டம்
10. வறகுணபாண்டியன் பட்டம்
11. றாசறாச பாண்டியன் பட்டம்
12. றாசகம்பீற பாண்டியன் பட்டம்
13. சித்திரவிறத பாண்டியன் பட்டம்
14. சித்திர பூஷண பாண்டியன் பட்டம்
15. சித்திற துவஜ பாண்டியன் பட்டம்
16. சித்திறசேண பாண்டியன் பட்டம்
17. சித்திற விக்கிறம பாண்டியன் பட்டம்
18. றாசமார்த்தாண்ட பாண்டியன் பட்டம்
19. றாச சூடாமணி பாண்டியன் பட்டம்
20. றாசசுந்திர பாண்டியன் பட்டம்

21. றாச குலோத்துங்க பாண்டியன் பட்டம்
22. றாஜசிறகீச்ச கெம்பீற பாண்டியன் பட்டம்
23. றாசகெம்பீற பாண்டியன் பட்டம்
24. பாண்டியாதிப வமுச பாண்டியன் பட்டம்
25. புறந்துறசிந்த பாண்டியன் பட்டம்
26. பாண்டிய வமுச துறந்துற பாண்டியன் பட்டம்
27. சென்னீறேசுவற பாண்டியன் பட்டம்
28. பாதசேகற பாண்டியன் பட்டம்
29. வெறகுண பாண்டியன் பட்டம்
30. றாச சாற்ந்தூல பாண்டியன் பட்டம்
31. றாசகுலோத்தும பாண்டியன் பட்டம்
32. அயோதண பிறவிணு பாண்டியன் பட்டம்
33. றாச குஞ்சற பாண்டியன் பட்டம்
34. பறவிற றாஜபயக்கற பாண்டியன் பட்டம்
35. செங்குறசேண பாண்டியன் பட்டம்
36. சத்துறஞ்சய பாண்டியன் பட்டம்
37. வீறவுத்தண்ட பாண்டியன் பட்டம்
38. வீற பறாக்கிரம பாண்டியன் பட்டம்
39. பிறத்தாப மாற்த்தாண்ட பாண்டியன் பட்டம்
40. விக்கிறம கஞ்சுக பாண்டியன் பட்டம்
41. சமறசேகறக் கோலாகல பாண்டியன் பட்டம்
42. அதள விக்கிறம பாண்டியன் பட்டம்
43. அதள கீர்த்தி பாண்டியன் பட்டம்
44. வமுசசேகற பாண்டியன் பட்டம்
45. பிறத்தாப சூறிய பாண்டியன் பட்டம்
46. வமுசத்துவஜ பாண்டியன் பட்டம்
47. றீப்பு மறுந்தண பாண்டியன் பட்டம்
48. சோளவமுசாந்தக பாண்டியன் பட்டம்

49. குலச்சுடர்மணிப் பாண்டியன் பட்டம்

50. றாசசூடாமணிப் பாண்டியன் பட்டம்

51. வமுச சிலோமணி பாண்டியன் பட்டம்

52. பாண்டியசம்பு பாண்டியன் பட்டம்

53. குவலத்துவஜ பாண்டியன் பட்டம்

54. வமுசவிபூஷண பாண்டியன் பட்டம்

55. குலேச பாண்டியன் பட்டம்

56. சோள சூடாமணி பாண்டியன் பட்டம்

57. குலச்சுடர்மணி பாண்டியன் பட்டம்

58. றாசசூடாமணி பாண்டியன் பட்டம்

59. பூப சூடாமணி பாண்டியன் பட்டம்

60. குலேசபாண்டியன் பட்டம்

61. அறிமறுந்தண பாண்டியன் பட்டம்

62. செகநாத பாண்டியன் பட்டம்

63. வீறபாகு பாண்டியன் பட்டம்

64. விக்கிறமபாகு பாண்டியன் பட்டம்

65. பறாக்கிரமபாகு பாண்டியன் பட்டம்

66. துற்மத்த பாண்டியன் பட்டம்

67. காருண்ணிய பாண்டியன் பட்டம்

68. சறுவ சரசற பாண்டியன் பட்டம்

69. சர்தத்தம பாண்டியன் பட்டம்

70. னாகறீக்க பாண்டியன் பட்டம்

71. செங்கோல் நிலையித்த பாண்டியன் பட்டம்

72. வித்தியா வினோத கொடும்கோல் பாண்டியன் பட்டம்

**பூற்வத்தில்...**

5. ஷண்முக முகறாய பாண்டியன் பட்டம்

6. சசுவற்ண்ண பாண்டியன் பட்டம்

7. சறுவமத்திற பாண்யடின் பட்டம்

8. பறறாசசிம்ம பாண்டியன் பட்டம்

9. ..க்கறத்துவ பாண்டியன் பட்டம்

10. சத்துற்... சக்கறபாண்டியன் பட்டம்

11. சத்துற் சமார பாண்டியன் பட்டம்

12. கொடுக்கோல் பாண்டியன் பட்டம்

21. இவற்கள் பனிரெண்டுபேறும் கலியுகத்தில் றாசியபாரம் பண்ணிக்கொண்டு வந்து, பணிரெண்டாம் பட்டம் கொடுக்கோல் பாண்டியன் றாசியம் பண்ணிக் கொண்டு வறும்காலத்தில், **மதுறாபுரிப் பட்டணத்துக்கு** தாசி நிமிர்த்தியாற்தமாக **காஞ்சிபுரத்திலே** இருக்கும் தேசத்துக்குச் சேந்த **காவிறிப் பூம்பட்டணத்திலே** இருக்கப்பட்ட **கோக்குலன்** யென்னப்பட்ட செட்டிகளுடைய காமா துறத்தினாலே, **மதுறாபுரிப்** பட்டணத்திலே ஒரு தாசி இடத்துச் சிநேகமாயி நித்தியம் ஆயிரம் வறாகன் குடுத்துக் கொண்டு வந்துக் கொண்டுயிறுந்தான்.

இப்படி யிருக்கும் னாளையில் ஷ செட்டி ஆஷ்த்தி யெல்லாம் காடாலாயி, தன்னுடைய சுவஷ்தீஸ்ரீயான சாடாலாயி, கர்ண்ணகை யென்னப்பட்ட செட்டி பொன் லெட்சுமி அமுசத்தினாலே ஒரு காலுக்கு செலம்பையுடன் உள்ப்பத்தியாயி ஷ கோகுலசெட்டிக்குப் பொன்சாதியா யிறுந்தாள்.

22. மேற்படி கோக்குல யென்னப்பட்ட அண்ணை தினத்துக்கு ஆயிறம் விறாகன் குடுக்குரதுக்கு சகுத்தியில்லாம இருந்து, தன்

---

21. *கோகுலச் செட்டி- கோவலன்; சிலப்பதிகாரம் பாடும் கோவலன் ஒரு செட்டியார் வகுப்பினன் என்பது தெரிய வருகிறது. தமிழில் காப்பியங்கள் (ஸ்டார் பிரசுரம், சென்னை - 5) என்ற நூலிலும் இக்கருத்து நுவலப்பட்டுள்ளது.*

22. *கோவலன், மதுரையில் சிலம்பு விற்க வந்தது, தாசி மோகம் காரணமாகவே என்று இச்சுவடி கூறுவது சிலப்பதிகாரத்தில் இல்லாதது,*

பெஞ்சாதி கால் சலங்கையை களட்டிக்கொண்டு வேசியா போகத்தினாலே மதுரைப்பட்டணத்துக்கு வந்து இந்த நகையை வௌக்கி குடுக்கலாகது யென்று, அந்த செலம்பெ மதுறாபுரிப் பட்டணத்துக் கடையில் விக்கப்போனான்.

23. அந்த சமயத்திலே மதுறாபுறி ஆளப்பட்ட பாண்டியராஜனுடைய அந்தப்புரஷ்திறீகளது ஒருகால் சலம்போ முன்னாலே... காணாம போயிறுந்துது.

இந்த செட்டியை, இந்த சலம்பெ... இவன் கள்ளன் என்னும் படியாயி, றாசாவின் முன்னாலேதான் போயி விட்டார்கள்.

க. அந்த பாண்டிய றாசா, தன்னுடய அந்தப்புறத்திலே இருக்கப்பட்ட நகையை அளைப்பிச்சு சறிபாற்குமிடத்தில், சோடாக இருந்த படியினாலே, "இவன் கள்ளந்தான்" யென்று நிசப்பட்டு, அந்த கோகுலன் யென்னப்பட்ட செட்டியை, தலையை வெட்டிப்போடச் சொல்லி சீவ யிமுசைப் பண்ணினான்.

க. காச்சி தேசத்திலே காவேறிப் பொன் பட்டணத்தில் இருக்கப் பட்ட கண்ணிகை யென்னப்பட்ட செட்டிப்பொன் தன்னுடைய புற்ஷணை மதுரைப் பட்டணத்தில் பாண்டிய றாசா கள்ள யென்று கொண்ணுப் போட்டான் யென்று சமாசாரம் கேளுவைப்பட்டு, பறப்பட்டு, மதுரைக்கி வந்து தன்னுடைய புற்ஷணைக் கொள்ளப்பட்ட யெடத்திலே நெறுப்பெ வளத்தி, அப்போ தன்னுடைய ஷ்தனங்களெ யெல்லாம் கிள்ளி, அந்த றாசாவினுடைய அறமனை இமலேயும், பட்டணத்து மேலேயும் யெறிஞ்சாள்!

24. க. அப்போ பட்டணமும் தீப்பத்திக் கொண்டது தான் கண்ணாலே பாத்து, அந்த செட்டிப் பொன் அக்கினி பிறவேசம் பண்ணினாள்.

---

*23. சலம்போ - சிலம்போ; சலம்பெ - சிலம்பை; சோடாக - சோடியாக; இமுசை - இம்சை; கண்ணிகை - கண்ணகி; காவேறிப் பொன் பட்டணம்-காவிரிப்பூம்பட்டினம்; செட்டிப் பொன் - செட்டிப்பெண்; பறப்பட்டு-புறப்பட்டு*

க. அந்த சமயத்திலே மதுரையிலே யிறுக்கப்பட்ட யெடையர்கள் யெல்லாறும் வந்து ரொம்பவும் வுபச்சாரம் பண்ணினபடியினாலே, "யேகதுறவு வெந்தாலும் யெடையர் தெருவு வேகாதே" யென்று சொன்னாள்!

க. கல்லியாதம் 305க்கு, கண்ணிகை யென்னப்பட்ட செட்டிபொன் சாபத்தினாலே கடும்கோல் பாண்டியன் தன்னுடைய சக குடம்பபேதமாயி, வமுசம் அத்து போயிவிட்டான்!

க. கண்ணிகை யென்னப்பட்ட செட்டியான் சாபம் பலிச்ச பாட்டு.

25. அதற்குப் பிற்காலம் சிறிது நாள் பாண்டிய றாசியத்துக்கு ராஜாவே இல்லாமல் இருந்து, மதுரை சீமைக்கி சேற்ந்த குளம் யென்னப்பட்ட கிறாமத்தில், ஒரு ............ ஒரு ............ பொறக்கப்பட்ட புற்ஷன் அதி சூறறாயிறுந்து, அவன் பாண்டிய சிம்மாசனத்துக்கு அதிபத்தியாயி சந்திரகுலதீப பாண்டியன் யென்னப்பட்ட பேரை ஒடைத்தாநவனாயி றாசியபாரம் பண்ணினான். –க

26. கலியுகம்... மேல் றாசியபாரம் பண்ணது:-

1. சந்தற குலதீப பாண்டியன் பட்டம்
2. புலிக்கொடி பெறுத்த பாண்டியன் பட்டம்
3. மீன்கொடி பெறுத்த பாண்டியன் பட்டம்
4. மக்கறத்துவச பாண்டியன் பட்டம்
5. மார்த்தாண்ட பாண்டியன் பட்டம்
6. குவலையானந்த பாண்டியன் பட்டம்

---

24. *கல்லியாதம்-கலியப்தம்; குடம்ப - குடும்ப; இங்கு குறிப்பிடப்படும் பாட்டு, சுவடியில் எழுதாமல் வெற்றிடம் விடப்பட்டுள்ளது.*

25. *இப்பகுதியில், கலியுக ஆண்டு எழுதப்படாது சுவடியில் வெற்றிடம் விடப்பட்டுளது.*

7. குனாலய பாண்டியன் பட்டம்
8. வீறபாகு பாண்டியன் பட்டம்
9. சத்துற்சமாற பாண்டியன் பட்டம்
10. மாறவற்ம்ம பாண்டியன் பட்டம்
11. வறுணாகுலோத்துங்க பாண்டியன் பட்டம்
12. றாசிய மார்த்தாண்ட பாண்டியன் பட்டம்
13. குலவற்த்தன பாண்டியன் பட்டம்
14. வரைப்பொண்ணை செரையெடுத்த பாண்டியன் பட்டம்
15. குலவற்த்தண பாண்டியன் பட்டம்

27. இப்படி, குலவற்த்தனபாண்டியன் றாசீயம் பண்ணிக் கொண்டு வறுகுற னாளையில் பாதுஷாகா யென்னப்பட்ட துலுக்கன் வந்து பாண்டிய றாசியமெல்லாம் கட்டிக்கொண்டு, தேவாலையங்கள், பிறம்மாலயங்கள் யெல்லாம் யெடுப்பட்டு, பாண்டியறாசா அவடத்திலே நிக்கமாட்டாமல் மேல்ச்சீமைக்கி ஓடிப்போய்விட்டான்.

28. அப்போ, பாண்டியதேசம் பகு காலமாயி துற்காரனிமாயி யிறுந்துது.

இப்படி இருக்கும் காலத்தில், மேல்ச்சீமை கன்னடிய்யற் பரு செனத்துடநே பாண்டியதேசம் ஆளப்பட்ட துலுக்கனை அத்தம் பண்ணி, தேவாலயங்கள், பிறம்மாலயங்கள் முதலானது நிற்மித்து, தீதுறுப்புபண்ணி, தன்னுடைய மேல்சீமைக்கி வந்து பாண்டிய வமுசத்தனான சோமசேகரபாண்யடினை அளைப்பிச்சு, பட்டாபிஷேகம் பண்ணி "இந்த றாசியத்தை முன் ஒங்கள் வமுசம் பறம்பறியாயி துரைத்தனம் பண்ணி வந்த படிக்கி நீ றாசியம் ஆண்டு கொண்டு யிறுக்கச்சொல்லி நெமுகம் பண்ணி, கன்னடி தேசத்துக்கு வந்து விட்டார்கள்.

---

*27. இங்கு குறிக்கப்படும் "பாதுஷா", கி.பி. 1311 இல் தமிழகத்தைத் தாக்கிக் கொள்ளையடித்த மாலிக்காபூர் ஆக இருக்கலாம்.*

*28. இங்கு குறிப்பிடும் 'கன்னடியர்', விஜயநகர மன்னர்களாதல் வேண்டும்.*

1. சோம சேகற பாண்டியன் பட்டம்
2. சோம சுந்தற பாண்டியன் பட்டம்
3. றாஜறாச பாண்டியன் பட்டம்
4. ..... .....
5. றாச குஞ்சற பாண்டியன் பட்டம்
6. றாச சேகற பாண்டியன் பட்டம்
7. றாசவற்ண பாண்டியன் பட்டம்
8. பறந்த றாச பாண்டியன் பட்டம்
9. கொமாரசிம்ம பாண்டியன் பட்டம்
10. பீமசேன பாண்டியன் பட்டம்
11. பிறத்தாபறாச பாண்டியன் பட்டம்
12. வறகுண பாண்டியன் பட்டம்
13. கொமார சந்திற பாண்டியன் பட்டம்
14. வறுதுங்க பாண்டியன் பட்டம்
15. குலோத்துங்க பாண்டியன் பட்டம்
16. சந்திறசேகற பாண்டியன் பட்டம்
17. சந்தறகுமாற பாண்டியன் பட்டம்

இந்த **சந்திறகுமாற பாண்டியன்** றாசியபாரம் பண்ணிக் கொண்டு வறும்நாளையில், இவறை **வீரசேகர சோள ராசா** வந்து யெடுத்துப் போட்டு, றாசியத்தை தான் கயிக்கொண்டுஇருக்கும் னாளையில், அந்த சமயத்திலே மேல் யெளுதப்பட்ட **சந்தறகுமார பாண்டியன்** தன் பிறாணனை தப்புவிச்சுக் கொண்டுநற்ப்பதி **விசயநகற்** ஆளப்பட்ட றாய்யறவர்கள் சமட்சமத்திலே சேந்து, தன்னுடைய பறிதாபத்தை சொல்லிக் கொண்டு யிறுந்தான்.

29. இப்படி இருக்கும் வேளையில், றாய்யவர்களுக்கு, தயவு வந்து, சிற்து செனத்தை குடுத்து **தடையகுட்டி காமனாகம னாயக்கன்** யென்னப்பட்டவனை தளனாயிக்கனாக நெமுகம் பண்ணி, சோளறாசாவை செயிச்சு, பாண்டிய றாசாவுக்கு பட்டம் கட்டச் சொல்லி கட்டலையிட்டு அனுப்பி விட்டார்கள்.

றாய்யறவர்கள் கட்டலெபடிக்கி **கொட்டிகன் னாகமனாயக்கன்,** பாண்டிய றாசாவையு கூட்டிகொண்டுவந்து, சோளராசாவை செயிச்சு, பாண்டியறாசியத்தை தான் கயிக்கொண்டுமேல் யெளுதப்பட்ட சந்திறகுமாற பாண்டியனுக்குப் பட்டம் கட்டாமல் தான் றாசியம் ஆண்டுக் கொண்டு வந்து, ஒரு வறுஷத்துக்கு மேல் **கொட்டிகன்னாகம்னாயக்கற், சந்திறகுமார பாண்டியனைக் கொண்ணுப்போட்டு,** றாய்யறவர்கள் வளவுக்கு, "பாண்டியறாசா தையிலிகமாக செத்துப் போய்விட்டான்" யென்று சேதி யெளுதினான்!

29. அப்போ, **ஆனைகொந்தி** சமுஷ்தானத்துக்கு கற்த்தறாகிய றாயதேவறவற்கள் "பாண்டியவமுசம் நிற்வமுசமாகப் போய் விட்டது!" யென்று யோசிச்சு, தாம் செயிச்ச பாண்டிய தேசத்துக்கு **கொட்டிகம் னாகமனாயக்கற் பிள்ளை விசுவனாதனாயக்கனை, "பாண்டிய தேசாதிபதி"** யென்று பேறு குடுத்து, பட்டாபிஷேகம் பண்ணி லெட்சிண சிம்மாசனாதிபதி யென்று பேற்குடுத்து, சகல பொமுத்தியளுடநே கூட அனுப்பிவிட்டார்கள்.

30. க. அப்போ **விசுவனாதனாய்க்கற்** வந்து, **மதுரை, திற்ச்சுனாப்பள்ளி, ஸ்ரீறங்கம், திறனைவெல்லி, றாமேசுவற** முதலான பாண்டிய சேத்திலே இருக்கப்பட்ட ஷ்தளங்களுக்கு யெல்லாம் சீறனோத்தாரம் பண்ணி, அநேக கிராமங்கள் விட்டு, காவேறி, அமறாவதி, சித்திறுநதி, தாம்பறவற்ண்ணி, இப்படிப்பட்ட நதிகளுக்கு யெல்லாம் முன்னாலே கட்டியிறுக்கப்பட்ட அணை கரைகள் யெல்லாம் **சீறணோத்தாரணம்** பண்ணி, **றாசீயத்துக்கு உபயோகமாறாப்போலே** பண்ணினார்.

---

*29. விசுவநாத நாயக்கன் - மதுரை நாயக்கராட்சியின் தொடக்கம் இவரிலிருந்து ஏற்படுகிறது; கி.பி. 1529 லிருந்து இவராட்சி தொடங்கிற்று. தளவாய் அரியநாத முதலியார் இவரோடு வந்தவரே.*

*பொமுத்தியளுடனே - வெகுமதிகளுடன்*

க. இப்படி, பஷ்தி பண்ணிக் கொண்டு மதுரை கோட்டைக்கி யெளுவத்திரண்டு கொத்தளம் கட்டிவிச்சு, யெளுவத்திரண்டு கொத்தளத்துக்கும் யெளுவத்திரண்டு... இருந்துக் கொண்டு, மேல் யெளுதப்பட்ட வேலைகளில் ஆசறாயிறுக்கும்படியாயி திட்டப் படுத்திக் கொண்டு ஆண்டு வரப்பட்டவர்களுடைய வறிசைக் கணக்கு:-

| | | |
|---|---|---|
| 1. | விசுவனாத னாயக்கற் பட்டம் 1க்கு வருடம் | 26 |
| 2. | பெறிய கிஷ்ணப்ப னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 31 |
| 3. | பெறி வீறய னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 27 |
| 4. | விசுவப்ப நாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 20 |
| 5. | பெறி வீறய னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 17 |
| 6. | பெறி கிஷ்ணப்ப னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 16 |
| 7. | கஷ்தூறி ரெங்கப்பட னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 7 |
| 8. | முத்துகிஷ்ணப்ப னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 30 |
| 9. | றாசா முத்து வீறப்ப னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 32 |
| 10. | றாசா திறமலை னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 10 |
| 11. | றாசா சொக்கனாத னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 16 |
| 12. | ரெங்ககிஷ்ண முத்து வீறப்பனாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 7 |
| 13. | விசயரெங்க சொக்கனாத னாயக்கன் பட்டம்; மேல்படி. சிறுபுள்ளையான படியினாலே அவனுடைய ஓடப்புறந்தாள் மங்கம்மாள் பட்டம் 1க்கு வருடம் | 8 |
| 14. | விசயறங்க சொக்கனாத னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 19 |
| 15. | மேல்ப்படி மங்கம்மாள் பட்டம் 1க்கு வருடம் | 5 |
| 16. | றாசா விசயக்கொமாற திறமலை னாயக்கன் பட்டம் 1க்கு வருடம் | 1 |

மேற்படி றாசா **விசய கொமார திறமலை னாயக்கன்** னாளையிலை றாசியாதிபதியாய் நின்னு... பட்டம் கட்டிக் கொண்டார்கள்.

சாலிவாகன சகம் 1350க்கு சவும்ய வறுஷம் முதல், கலியுகம்...29, சவும்மிய வறுஷம் முதல் சாலிவாகண செகம் 1654 வரைக்கும் வடுகற் பித்திறற் பட்டம் ஆண்டு வந்தார்கள்.

30. அதற்குப் பிற்காலம், **துலுக்காண்ணிய** மாச்சுது!

வடுகற் னாளையிலை வுண்டு பண்ணின **பாளையப்பட்டு விபறம்**:-

| | | |
|---|---|---|
| 1. | மலெயாளம் றாமறசாப் பாளையப்பட்டு | 1 |
| 2. | றாமநாதபுரம் சேத்துபதி-அவறிலே பங்கு இட்டுக் கொண்ட எடயாத்தேவன் பாளையப்பட்டு | 1 |
| 3. | புதுக்கோட்டை றாயத்தொண்டைமான் பாளையப்பட்டு | 1 |
| 4. | அறியலூர் மாளவறாயன் பாளையப்ட்டு | 1 |
| 5. | தொரையூர் ரெண்டிபாளையப்பட்டு | 1 |
| | | 5 |

**திற்ச்சிறாப்பள்ளியன் கீள்ப் பாளயைப்பட்டுகள்**:-

| | | |
|---|---|---|
| 6. | யிலுப்பையூற் காமாட்சி னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 7. | கொளத்தூற் றாமசுவாமி தொண்டைமான் பாளையப்பட்டு | 1 |
| 8. | பெறும்பூர் தீத்தவெட்டி தேவன் பாளையப்பட்டு | 1 |
| | | 3 |

**மணப்பாரையிலே சேர்ந்தது**:-

| | | |
|---|---|---|
| 9. | முறங்காபுறி பூச்சினாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 10. | நத்தம் லிங்கம னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 11. | கொமாரபாளையம் ரெங்கப்பனாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| | | 3 |

*30. துலுக்கானியம் - இசுலாமியர் ஆட்சி.*

| | | |
|---|---|---|
| 12. | தோகமலை பசுவயனாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 13. | குரள்முளங்கி முத்தைய னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 14. | றாமகிறி சாமினாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| | | 6 |

**திண்டுக்கல்லுக்குச் சேர்ந்தது:-**

| | | |
|---|---|---|
| 15. | .... னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 16. | .... னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 17. | கன்னிவாடி அப்பயனாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 18. | ஆயக்கொடி கொண்டமனாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 19. | மாம்பரைப் பாளையப்பட்டு | 1 |
| 20. | யெடயக்கோட்டை பாளையப்பட்டு | 1 |
| 21. | அயி........ற் வல்லக் கொண்டம னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 22. | வடுகுற்வல்ல கொர்ண்டமனாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 23. | கொங்கறாயன் கொண்டமநாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 24. | மறணத்துற் னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 25. | யெழுக்குலபுறம் னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 26. | தவசி பாளையப்பட்டு | 1 |
| 27. | தொம்பதூர் பாளையப்பட்டு | 1 |
| 28. | கொண்டையக் கோட்டா பாளையப்பட்டு | 1 |
| 29. | முங்கீலணை தொட்டியன் பாளையப்பட்டு | 1 |
| 30. | பெறியகுளம் னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 31. | தீறமலை போடினாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 32. | அறவட்டம னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 33. | கோம்பை கவுண்டன் பாளையப்பட்டு | 1 |
| 34. | தேவாற னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 35. | யெறசிக்கி னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 36. | வலையப்பட்டி னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 37. | உத்தப்பனாயக்கன், தொண்டப்ப னாயக்கன் பாளையப்பட்டு | 1 |

38. கவுண்டன் பாளையப்பட்டு 1
39. வெள்ளி குண்டம் கவுண்டன் பாளையப்பட்டு 1
40. கச்சாட்டி னாயக்கன் பாளை[illegible]பட்டு 1
41. யேளாயிரம் [illegible] ண்ணிற பாளையப்பட்டு 1
42. சிவகிறி வறகுண வண்ணியன் பாளையப்பட்டு 1
43. யெட்டியாபுரம் னாயக்கன்பட்டு 1
44. பாஞ்சாலங்குறிச்சி னாயக்கன் பாளையப்பட்டு 1
45. சேத்தூற் திறவணாதேவ பாளையப்பட்டு 1
46. கொல்... ப்பட்டி னாயக்கன் பாளையப்பட்டு 1
47. கொட்டிகொளம் மூவறாயன் பாளையப்பட்டு 1
48. பேரையூர் னாயக்கன் பாளையப்பட்டு 1
49. சாப்பட்டூற் னாயக்கன் பாளையப்பட்டு 1
50. சந்தெயூர் னாயக்கன் பாளையப்பட்டு 1
51. யெழுமம... னாயக்கன் பாளையப்பட்டு 1
52. ...ன்னா கொண்டம னாயக்கன் பாளையப்பட்டு 1
53. ஆத்தங்கரை நாயக்கன் பாளையப்பட்டு 1
54. அளகாபுரி ரெட்டகோட்ட வண்ணியன் பாளையப்பட்டு 1
55. னாகலாபுரம் நாயக்கன் பாளையப்பட்டு 1
56. குறக்கப்பட்டி தேவன் பாளையப்பட்டு 1
57. வூத்துமலை மறுதப்பதேவன் பாளையப்பட்டு 1
58. சொக்கம்பட்டித் தேவன் பாளையப்பட்டு 1
59. நெக்கொட்டான் தேவன் பாளையப்பட்டு 1
60. கடம்பூற் வண்ணியன் பாளையப்பட்டு 1
61. வணியச்சிதேவன் பாளையப்பட்டு 1
62. நடுவகுறிச்சித் தேவன் பாளையப்பட்டு 1
63. தலவன் கோட்டைத் தேவன் பாளையப்பட்டு 1
64. சிங்கம்பட்டி சேத்துறாயன் பாளையப்பட்டு 1
65. வூறாக்காரட்டினபட்டி சேறுவக்காரர் பாளையப்பட்டு 1

| | | |
|---|---|---|
| 66. | யெந்தில னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 67. | ஆண்டச்சியம்மாப் பாளையப்பட்டு | 1 |
| 68. | தலமலை றாமசந்திற னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| | | 54 |
| 69. | ............... பாளையப்பட்டு | 1 |
| 70. | ............ பாளையப்பட்டு | 1 |
| 71. | றாசாம்பாளையம் றாசா பாளையப்பட்டு | 1 |
| 72. | மேல்மாந்தை னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 73. | ஆறகுளம் னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 74. | சன்னல்கொடி னாயக்கன் பாளையப்பட்டு | 1 |
| 75. | பறலாச்சி னாயக்ககன் பாளையப்பட்டு | 1 |
| | | 7 |
| | | 75 |

மேலே யெளுதப்பட்ட பாளையப்பட்டுகள் கற்னாடகத்தில் மதுரை சமஷ்தானத்துக்கு சேறப்பட்டது.1

கற்னாடகற் துரைத்தனத்தில் ஆளப்பட்ட றாசியத்தில் வுண்டுபண்ணின கோட்டைகள் வயணம்:-1

| | | |
|---|---|---|
| 1. | திண்டுக்கல் | 1 |
| 2. | தாறாபுரம் | 1 |
| 3. | கோயமுத்தூற் | 1 |
| 4. | தணாயக்கன் கோட்டை | 1 |
| 5. | சத்தியமங்கலம் | 1 |
| 6. | பாளையங்கோட்டை | 1 |
| 7. | அந்தியூர் | 1 |
| 8. | ஈறோடு | 1 |
| 9. | காங்கீயம் | 1 |
| 10. | விசய மங்கலம் | 1 |

| | | |
|---|---|---|
| 11. | கனூற் | 1 |
| 12. | னாமக்கல் | 1 |
| 13. | சேந்தமலம் | 1 |
| 14. | பெறிய சேலம் | 1 |
| 15. | யோமலூற் | 1 |
| 16. | ...ணி | 1 |
| 17. | காவேறிபுரம் | 1 |
| 18. | ஆத்தூற் | 1 |
| 19. | அ...தகிறி | 1 |
| 20. | பறமத்தி | 1 |
| 21. | மோகலூர் | 1 |
| 22. | சக்கிறகிறி | 1 |
| 23. | சங்கக்கிறி | 1 |
| 24. | மதுரை கோட்டை | 1 |
| 25. | திறசூறபுறம் | 1 |
| | | 25 |

★★★★★★

# 4. ஸ்ரீரெங்கம், திருச்சினாப் பள்ளியிலிருக்கப்பட்ட பிராம்மண வித்துவாம்ஸாள் சொன்ன உத்திரவு

(டி. 3186)

**1. கேழ்விக்கி**

தர்ம்ம வர்ம்மா என்னப் பட்டவர் யார்? அவர்தானா தர்ம்மராஜா? அவராலேதானா ஆதியிலே ஸ்ரீரெங்கம் கோவில் ஏற்பட்டுது? வர்ம்மா என்பதற்கு அர்த்தமென்ன?

**உத்திரவு**

தர்ம்மவர்மா என்கிறவர் சோளதேசத்து ராஜா. அவர் தர்ம்ம ராஜாவன்று. யிந்த கலி யுகத்துக்கு முன் துவாபராந்தத்தில், தர்ம்ராஜாவினுடைய காலம் 24 சதுர்யுகத்துக்கு முன், திரேதா யுகத்து ராஜா.

விபீஷணருக்குக் கொடுத்த ஸ்ரீரெங்க திவ்விய விமானத்துக்கு தர்ம்மவர்ம்மா, சப்த்தப் பிரகாரம், மண்டபம், கோபுராதிகள் கட்டினவர்.

வர்ம்மா வென்கிற சப்தத்து க்கு கவசம் யென்று அர்த்தம்; ஆகச்சே கர்மத்தை கவசமாக உடையவர் யென்று பேர்.

---

1. *துவாபராந்தத்தில் - துவாபர யுகத்தின் முடிவில்; தர்மவர்மா - பாண்டவர்களுள் ஒருவராகிய தர்மர் வேறு, சோழ அரசன் தர்மவர்மா வேறு என்று பதில் கூறப்படுகிறது.*

தர்ம்ம வர்ம்மாவுடைய வாசஸ்தானம் உரையூர்; அதுக்கு நிசுளாபுரி யென்று பேர். அவரது ரத்தினம் முதலான அந்த பட்டணத்துக்கு பிறசித்தி.

## 2. கேழ்விக்கி

ஸ்ரீரெங்கம் யெப்படி உண்டானதோ, அதனுடைய வயணமும், உறையூர் என்னப்பட்ட பழைய பட்டணமுண்டாய் எத்தனை நாளாச்சுது? சோள ராஜாக்களுடைய ராஜதானியம் எது? மேல்படி சோளராஜா பட்டணம் மேடுயிட்டு போனது யெப்போ? அதனுடைய வயணமும், அந்த ராஜாக்களுடைய கதை சரித்திரங்கள் என்ன?

## உத்திரவு

சகத்தின் விபரமாவது யெந்த ரராஜா சகலகுண பரிபூரணமாய் சக்கிரவர்த்தியாயிருக்காறோ, அவருடைய காலத்துக்குப் பிறகு திரும்ப ஒருவன் அவனெ போலே உண்டாகிற வரைக்கும் அந்த முன் ராஜாவினுடைய சகமென்று காலத்துக்கு நியமம் பண்ணுகிறது.

கலியுகம் பிறந்த பிறகு, 5000 வருஷத்துக்குள்ளாக யிப்படிக்கி தர்ம்ம புத்திருடைய காலத்துக்குப் பிறகு, விக்கிரமாதித்தியனுடைய காலம் வரைக்கும், யுதிஷ்டிர சகம் யெண்ணு நடந்துது. பிறகு சாலிவாகன னுடைய காலம் பரியந்தம் விக்கிர

---

*ஸ்ரீரங்கம் - திருச்சி மாவட்டத்தில், சமயபுரத்திற்கும் திருவானைக்காவலுக்கும் இடையே உள்ள ஊர்.*

*உறையூர் - திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்து, அதன் தென்பகுதியில் அமைந்துளது.*

மாதித்திய சகமெண்ணு நடக்கிறது. யினிமேல் சகராஜா விசயாமநந்தன் யென்று உண்டாகப் போறான்; அது பரியந்தம் நடக்கப் போகிறது.

இந்த கலியுகம் பாக்கி வருஷம் 427,000த்துக்குள்ளாக யின்னம் னாகார்ச்சுன பூபதி யென்றும், கலியென்றும் உண்டாகப் போறாள். இப்படிக்கி சாஸ்த்திரத்திலிருக்குது. சோழன், சேரன் கதைகள் யெங்களுக்கு தெரியமாட்டாது! தெற்கு தேசத்திலிருக்கப் பட்டவர்களைக் கேட்டால் தெரியும்.

### 3. கேழ்விக்கு

தெற்கே சோழ சமுத்திரம் முதல் கொண்டு சங்கறான் சங்கர் வரைக்கும் யிருபது ராஜாக்கள் 1179 வருஷம் ராச்சியம் பரிபாலனம் பண்ணினார்களாம். அவர்களுடைய ராஜதானி யெது? அவர்களுடைய கதைகள், சரித்திரங்கள் எப்படத்திலே யாகிலுமிருக்கிறதா?

### உத்திரவு

மேற்கே 3 நாழிகை வழி உண்டு; அதில் அந்த ராஜாக்களுடைய அரமணை யிடிஞ்சிருக்கிற மோடுகளிருக்கிறது. 20 ராஜாக்கள் 1179 வருஷம் யிருந்தார்க ளென்கிறதற்கு அவர்கள் யிருந்த ஊரும் அவர்கள் பேரும் தெரிய எழுதாதினாலே அகப்பட யில்லை! மேலும் க-நூன் சமுத்திரமென்றும்,

---

*3. எப்படத்திலே?- எவ்விடத்திலே*

*க-நூன் - 1 நூல்*

சங்கறான் சங்கர் யென்றும் யெழுதி யிருக்கிறது. யின்னதென்று தெரியும்படியாய் விபரித்து யெழுதி யிராததினாலே அதுக்குப் பதில் எழுதக் கூட யில்லை ஆனதால், யிந்தக் கலியுகம் உண்டான பிறகு உண்டான ராஜாக்கள் யெல்லார் பேரும்யெழுதி யிருக்கிறது. அதை யோசித்துக் கொள்ள வேண்டியது.

### 4. கேழ்விக்கு

சாலிவாகனன், போசன் முதல்கொண்டு அவர்களுக்கு பிற்காலமும் யிருந்த ராஜாக்களுடைய சரித்திரம் கதைகள், அவர்கள் நாளைய வருஷம் தேதி, அவர்களுக்குள்ளே கடைசியில் ராச்சியம் பண்ணினவர் யார்?

### உத்தரவு

இந்த கலியுகம் பிறந்த பிற்பாடு ரத்தினம் பண்ணின பேர்கள், கலியுகம் ஆதியில் யுதிஷ்டிரர்; பிற்பாடு பரீட்சித்து, செனமேசெயன், பத்துமகந்தன், உதயார்க்கன், பருவதராஜன், செயதேவன், மகோதரன், கேயூராநக்கன், பலவாலசக்கரவர்த்தி, ராஜசேகரன், சூத்திரகமகாராஜன், விஷ்ணுவர்த்தனன், சந்திரகுபுத்தன், விக்கிற மார்க்கன், சாலிவாகனன், போசராஜன், ராஜராஜ நரேந்திரன், கலிகால சோழன், யவனசோழன், பாண்டியராஜன், யாதவராயன், நீலகண்டருத்திரன், சம்புவராயன், பீலவாளராயன்,

அனுலேம சக்கிரவர்த்தி, உருகண்டிபிரதாப ருத்திரன், அதிஹரராயர், அம்பதேவராயர், பிறவுடதேவராயர், லாங்கல நரபதி, ஸ்ரீநரசிங்கராயர், வீரஸ்ரீபுருஷோத்தமராயர், விநூபாடசார்யர், நரநாயகர், கிருஷ்ணராயர், அச்சுதராயர், ராமராமராயர், சதாசிவராயர், திருமலைராயர், ஸ்ரீரெங்கராயர், வெங்கடபதிராயர், சிக்கராயர், ராமதேவராயர், ஆனகொந்தி வேங்கடபதிராயர், திருச்சினாப்பள்ளிக்கும் மதுரைக்கும் துரைகளுடைய விபரம். -

விசுவனாத நாயக்கர், பெரிய கிஷ்ணமநாயக்கர், பெரியவீரப்பநாயக்கர், விசுவப்பநாயக்கர், குமார கிஷ்ணப்ப நாயக்கர், கஸ்தூரி ரெங்கப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், திருமலநாயக்கர், முத்துகிஷ்ணப்பநாயக்கர், முத்துவீரப்ப நாயக்கர், சொக்கனாத நாயக்கர், முத்து அளகிரி நாயக்கர், ரெங்க கிஷ்ணமுத்து வீரப்ப நாயக்கர், மங்கம்மாள், விசயரெங்க சொக்கநாத நாயக்கர், மீனாக்ஷி அம்மாள், பங்காரு திருமலை நாயக்கர்

| 5. கேழ்விக்கு | உத்திரவு |
| --- | --- |
| பிறதானமாயிருக்கப்பட்ட சோழராஜா, சோழராஜா அவர்கள் ராச்சிய மாண்டவருஷம் தேதியும்; அவர்களில் பிரசித்தமாயிருக்கப்பட்ட ஆறு ராஜாக்கள், கிருமிகண்ட சோழன், கரிகால் சோழன் என்று சொல்லப் பட்டவாள் ராஜ்ஜியம் பண்ணினார்களே அவர்களுடைய சறித்திரங்களும், அவர்கள் நாளையில் நடந்த விசித்திர சங்கதிகளும், அவர்களிருந்த ராஜதானியும், அவர்கள் கையினாலே யெழுதியிருக்கிறதுக்கு வருஷமும் தேதியும், அவர்களிலே ஆர்னாலே காவேரிக்கி அணைக்கட்டு முதலானது கட்டி வைத்ததுவும் தெரிய யெழுதவேண்டியது. | தஞ்சை நகரஞ்சீமை துரைகளாவது,<br>கிறிமிகண்டசோழன் 1<br>கலிகால சோழன் 1<br>அகளங்கசோழன் 1<br>கிறிவிக்கிரமசோழன்<br>தவளசோழன் 1<br>கிளிகண்டசோழன் 1<br>ஆக 6 பேர் சோழராஜாக்கள்; மகா கற்மிஷ்டாள்! இவாள் ராஜதானி ஒறையூர், மண்மேடிட்ட பிறகு, திருவலஞ்சுழிக்கி தென்னண்டை சோழன் மாளிகை யென்றிருக்கிறது. அணைகட்டின கரிகால் சோழன் யென்கிறவன்; 700த்தி சொச்சம் வருஷம் மாகுது. அதில் ஒரு சுலோகம் எழுதி வைச்சதும் அவன் தான்.<br>ஆனால், நந்தாந்தம் சத்திரிய குலம் என்று சாஸ்திரமிருப்பதினாலே, நந்தன் யென்கிற ராஜாவோடே சத்திரி யாளுடைய குலம் நஷ்டமாய் போய்விட்டது. இப்போது, பூலோகத்தில் |

ட்சத்திரிய வமுசமே கிடையாது.

ஆனால், பலோராஜா பிறிதிவி யென்கிற சாஸ்திரப் படிக்கி, யெவன் பலவானா யிருக்கிறானோ அவன் ராச்சியத்துக்கு துரையென்று யிருக்கிறபடிக்கு, அவரவர் பிலத்துக்கு[5] தக்கதாய் இந்த கலியுகத்தில் துரைத்தினம் பண்ணினவர்கள் போரெல் லாம் யெழுதி யிருக்கிறோம். அவர்களில் கடைசியில் துரைத்தினம் பண்ணினவனை யோசித்துக் கொள்ள வேண்டியது.

சேரன், சோழனுடைய முந்தின ராஜாக்களுடைய கதைகள் முன்னாலேதானே யெழுதப்பட்டுது.

கிரிமிகண்ட சோழனென் கிறவன் வீரசைவன் சோழ தேசத்தில் இலக்ஷலிங்க பிரதிஷ்டை பண்ணினான். கரிகால் சோழன் யென்கிறவன் மகாதர்மிஷ்டன் அவன்தான் காவேரிக்கி அணை கட்டினவன்!

---

5. *பிலத்துக்கு - பலத்துக்கு*

## 6. கேழ்விக்கு உத்திரவு

ராமானுசாசாரி யென்னப் பட்ட மகா புருஷர், திருநாம தாரி பிராமணாள்; வைஷ்ணவ மதத்தை புனா உத்தாரம் பண்ணினவர். மறுபடியும் ஸ்ரீரங்கம், மேல்க்கோட்டை திருப்பதி யிந்த ஸ்தளத்தை யுண்டுபண்ணின வயணமும் அவர் யிருந்த காலத்தி னுடைய வருஷமும், சகமும், அவர் நாளையில் ராச்சியாதி பதி யார்? ஸ்ரீரங்கத்திலே புனா வைஷ்ணவ மதத்தை உத்தாரணம் பண்ணுகிற காலத்தில், அன்னிய மதஸ்தரனாலே சிறிது கறு ஷணை நடந்த சங்கதிகளும் அதையெல்லாம், மடக்கி மறுபடியும் ஸ்ரீரங்கத்தில் உத்தாரணம் பண்ணின வயணமும், அவர் யென்ன கிரந்தம், புஸ்தகம் பண்ணினாரு? அதுகளுடைய பேரும் ஜாபிதோஷம் தெரிந்து யெழுத வேண்டியது.

அனாதியாக யிருந்த ஸ்ரீவைஷ்ணவ மதத்தை விஸ் தாரம் பண்ணின ஸ்ரீராமானுச சாரியார், சாலிவாகன சகாப்தத் தில் 939ஆம் வருஷம், ஸ்ரீபெரும்புதூரில். கலியாப்தம் 4308 பிங்கள வருஷம் சித்திரை மாதம் 13 ஆம் பதே குருவாரம் சுக்கிலபக்ஷம், பஞ்சமி திருவாதிரை நக்ஷத் திரத்தில், கடக லக்கினத்தில் செனனம், அவர், 120 வருஷம் யிருந்தார். அவர் சேஷாவ தாரம் யாதவப் பிரகாசர் யென்கிறவர் கிட்ட சாமானிய சாஸ்திரமாகிய தற்க்கம் முதலானது படிச்சது. அவர் சரஸ்வதிபீட மெங்குற யிடத்துக்குப் போயிருந்த விடத்தில், சரஸ்வதி யிவரைப் பரீக்ஷித்து, யிவர் யோக்கி யாரென்று தெரிந்து கொண்ட தின் பேரில், சரஸ்வதி பிரசாதத்தினாலே பாஷிய காரரெங்குற பேரும் பெத்துக் கொண்டு, சரஸ்வதி கொடுத்த பேரதாயவிருத்தி யெங்குற மூலகிரந்தத்தையும் வாங்கிக் கொண்டு வந்து, ஸ்ரீபாஷியம்

---

6. *புனா - புனர்; மறுபடியும்*
*கறுஷணை - பூசல்;*

தீபம், சாரம், கீதாபாஷியம் வேதாந்த சங்கிரகம், நித்தியம் சத்தியதிரயம் -3, ஆக 9 கிரெந்தம் பண்ணினார்.

யெக்கிய மூர்த்தி முதலான அநேக வித்துவாம்சாளான அன்னிய மதாஸ்தாளை பிரசங்கத்தில் ஜெயித்தார். ஸ்ரீரெங்காதி திவ்யஸ்தளங்களுக்கு சிஷ்யாளைக் கொண்டு வெகுசாய் மரியாதைகளை யேற்படுத்தினார். திருப்பதியில் ஸ்ரீனிவாசன் தம்முடைய பக்தரான தொண்டைமான் சக்கிரவர்த்திக்கு சங்கசக்கிரங்களை சத்துருக்காளை ஜெயிக்கிற நிமித்தியமாய் கொடுத்துவிட்ட பிறகு அவர்சயிவ விக்கிரகமென்று சயிவாள் சங்கிச்ச விடத்தில், சங்குசக்கிரங்களையும், சூலமருகங்களையும் கூடவைத்து ஸ்ரீபாஷியக்காரர் ஸாமியைப் பார்த்து சங்கச்சக்கராதிகளை தரித்து கொள்ளுவாரென்றும், யிவர் ஸ்ரீவைஷ்ணவனே தவிர வேரே அல்ல வென்றும், சொல்லி, பிரத்திக்கியை பண்ணினதில் அப்படியே ஸ்ரீ னிவாசன் சங்கச்சக்கிராதிகளை தரித்துக்

கொண்டார் அப்படிப்பட்ட மகா புருஷன்!

## 7. கேழ்விக்கு

சங்கராசாரியர்மானுபவர் மேல் சொல்லப்பட்டவருக்கு சமானமானவர்; ஸ்மார்த்த மதத்தையும் உத்தாரணம் பண்ணினவர். அவருடைய சங்கதிகளும் தெரிய யெழுத வேண்டியது!

## உத்திரவு

சங்கராசாரியர் செனனம் மலையாளத்தில், காரடி யென்கிற கிராமத்தில் 32 வருஷ காலமிருந்தார். விக்கிரமார்க்க சகாப்தத்தில் யிருந்தது. அவர் ருத்திரவதாரம் அத்துவைத பாஷியம், கீதா பாஷியம், சகசிரனாம பாஷியம், யீசாதிதேகோபநிஷத பாஷியம் 10 யிவ்வளவு கிரந்தம் பண்ணினார். மண்டனமிசரன் முதலான பேர்கள் அன்னிய மதாஸ்தாளை ஜெயம் பண்ணினார்; அத்துவைத ஸ்தாபனம் பண்ணினார்; ஸ்மார்த்த மதாசாரங்களை யேற்பாடு பண்ணினார். ஸ்ரீ பாஷியக்காரரான ராமானுஜாசாரியர் என்கிறவர் ஸ்ரீவைஷ்ணவ சார்வபூமரரா யிருக்கிற சங்கதியை அறிஞ்சு, யிவரை யெந்த விதத்திலும் ஜெயிக்க வேணுமென்று மதத்தைச்

---

7. *காரடி-காலடி (கேரளாவில் உள்ள ஊர்)*
*பாஷியக்காரர்-இராமானுஜர் (கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்);*
*நிசிச்சு-நசிச்சு; ஸ்ரீவைகுண்டத்துக்குப் போனார்-இறந்தார்.*
*பிரசங்கம் - வாதம்;*

சேர்ந்த விவாதங்களில் சைவ வித்துவாம்சாளை யேற் படுத்தி, பிரசங்கம் பண்ணின தில், ஸ்ரீபாஷியக்காரராகிய ராமானுஜாசாரியார் ஜெயித்தது னாலே யிவரை யெந்த விதத்திலும் ரோஷ்ட்டுப் படுத்தவேணு மென்று கிரிமிகண்ட சோழ னென் கிறவன் யெத்தினப் பட்டான். யிது சேதி தெரிஞ்சவுடனே ஸ்ரீபாஷிக்காராகிய ராமானுஜா சாரியாருடைய யோக்கிய சிஷ்யாளில் சிறிது கூரத்து ஆள்வார் முதலானவள். "நாங்களிருந்து உத்திரவாதம் பண்ணகிறோமென்றும், நீர் யெப்படியும் தப்பியிருந்தால் வேண்டியதுண்டென்''றும் சொன்னார்கள். அப்படியே ஸ்ரீரெங்கனாதருடைய உத்திரவுமாச்சுது.

பிறகு, ஸ்ரீபாஷியக் காரரான ராமானுஜாசாரிய ரென்கிறவர் மேற்கே மைசூர் சீமைக்குப் போயிருந்தார். அவர் மேற்கே போனது அவர் ஆயுசுக் குள்ளாக 104, 105ம் வருடத்தில் அவ்விடத்தி லிருந்து 12 வருஷகாலம் அவர் மேற்கே போனபிறகு. யிவ்விடத்தில் கிரிமி கண்ட

சோழனென்கிறவன் கூறத்தாழ் வாரை பிரசங்கத்தில் ஜெயிக்க மாட்டாமல்போய், பிலதுற்பலம் பண்ணி, ''சிவனைத் தவிர வேரே பரதேவதை யில்லை" யென்று கையெழுத்துப் போடச் சொன்னான்.

அப்போது, அவர் சிவன் பரதேவதை ஆகாததினா லேயும், ஸ்ரீமகாவிஷ்ணுவே பரதேவதையானதினாலேயும் "சிவனைத் தவிர பரதேவதை யில்லை" யென்று கை ஒப்பம் போடுகிறது கூடாதென்று நிரா கரிச்சுப் போட்டார்; அப்போது, அவரையும் அந்த மதஸ் தாளையும் வெகுசாய் ரோஷ்ட்டு பண்ணினான். அப் போது, மேற்படி கூரத்தாழ்வா ரென்கிறவரும், மத்த அநேகம் பேர் சிஷியாளுமாயி மேற்படி ஸ்ரீபாஷியக்காரருக்கு இந்தச் சேதியை யெழுதி அறியப் படுத்தினவிடத்தில், சாஸ்திரப் படிக்கி பிரசங்கத்தில் ஜெயிக்க மாட்டாமல் போன அகங்காரத் தினாலே, ராஜாவாகப் பட்டவன் தனக்கு பிலனி ருக்குதென்று இப்படிப்பட்ட அநியாயம் பண்ணுகிறதி னாலே, "யிவன் நிசிச்சுப்போய் விடுவானெ''ன்று மேற்படி பாஷியக் காரர் சபித்தார்.

அந்த சாபத்தினாலே மேற்படி சோழராஜாவுக்கு கழுத்தில் புழுத்து அதினாலே செத்துப் போய்விட்டான்! அதினாலே தான் அவனுக்கு கிரிமிகண்ட சோழனென்று பேர் வந்தது.

இப்படிக்கி, அந்த துரோகி செத்துப் போனவுடனே, மறுபடியும் ஸ்ரீபாஷியக்காரர் 118 ஆம் வருஷம் திரும்பவும் ஸ்ரீரெங்கத்துக்கு வந்து, யெப்போதும் போலே இரண்டு வருஷம் யிருந்து, 120ஆம் வருஷத்தில் ஸ்ரீ வைகுண்டத்துக்குப் போனார்.

இப்படிப்பட்ட காரியங்கள் நடந்தபோதும் எந்தநாளையிலும் ஸ்ரீவைஷ்ணவம் மதம் யில்லாம லிருந்ததேயில்லை! ராமானுசமதம் விசிஷ்டாத்துவைதமதம் யென்று பேர்.

சங்கராசாரியர் யென்கிறவருடைய மதத்துக்கு அத்துவைத மதமென்று பேர். இந்த மதத்துக்கும் அந்த மதத்துக்கும் சுத்தமாய் பேதம்

---

*ஐண்டாவதாரம் - கண்டாவதாரம் - மணியினது அவதாரம்;*

பரதேவதா பேதம்; ஆசாரங்களும் பேதம் இப்படியாய் முழுமை யும் விருத்தமே தவிர ஒருமிப்பு யில்லை! இந்த பூலோகம் வுண்டான நாள் முதல் கொண்டு, யென்றென் றைக்கும். மேலும் விசேஷ மாய் ஸ்ரீபாஷியக்காரராகிய ராமாநுசாசாரியருடைய நாளையிலும், **வடகலை** யென்று ஸ்ரீவைஷ்ணவாளுக் குள்ளாக ஒரு மதமே தவிர, மற்றப்படி பேதமாய் வேறே மதமே கிடையாது!

இப்படியாய், ஒரே விதமாய் நடந்து வந் தவிடத் தில், சிறிது காலத்துக்கு பிறகு ஸ்ரீரங்கத்தில் சைவாளுக் குள்ளே கிருஷ்ணமிசிரன் யென்று ஒருவன் சைவவித்து வானும், பின்னும் சில பேரும் வைஷ்ணவாளுடனே பிரசங்கத்துக்கு வந்தான்! அப்போது, அவருடனே யிந்த ஊரிலிருக்கப்பட்ட வித்துவாம் சாள் ஒருவரும் பிரசங்கம் பண்ணமாட்டாமல் போனார் கள்!

அப்போது, ஸ்ரீபாஷியர் காரருடைய சிஷ்யரான ஸ்ரீவேதாந்தாசாரியரென்

கிறவர் ஸ்ரீனிவாசருடைய கெண்டாவதாரமாயி அவதரித்து, 25 வருஷத்துக் குள்ளாக சகலவித்தையும் தெரிஞ்சுக் கொண்டு அவர் யெழுந்தருளியிருந்தார். அவரை ஸ்ரீரெங்கத்திலிருந்த பிராம்மணாள் யெல்லாருமாய் வெகுசாய் வேண்டிக் கொண்டதில், அவர் மேற்படி சைவவித்துவானை செயம் பண்ணினார்!

அப்போது, அந்த அகங்காரத்திலே சிலபேர் அந்த கக்ஷியை சேர்ந்தவாள். யிந்த **தெங்கிலை**யாரென்கிற சில பிராம்மணாளை ஒரு கக்ஷியாக புதுசாய் நூதன பிரதிஷ்டையாய் உண்டு பண்ணி, மேற்படி வேதாந்த சாரியருடனே வாதம் பண்ணச் சொல்லி விட்டாள்!

அவர்களையும் பிரசங்கத்தில் ஜெயித்துப் போட்டார். **அப்போ முதலான தென்கிலை யென்கிற பேதம்** ஸ்ரீ வைஷ்ணவாளுக் குள்ளாக உண்டாயிருக்கிறது.

இது சங்கதியை மேற்படி ஜாதியார் வியாச்சியப்பட்ட சில விடங்களில் கூட அவாள்

தான் தங்கள் வாயினாலே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

மேல்படி பேதமான மதம் உண்டாயி 300த்து சொச்ச வருஷ மாச்சுது.

**8. கேழ்விக்கு**

பண்டாரங்களுடைய பீட்ட உத்தாரங்களும் தெற்கு பரதேசத்திலிருக்கப் பட்ட தேவஸ்தானங்களும் அவர்களுடைய நடத்தை மரியாதைகளும் தெரிய யெழுத வேண்டியது.

**உத்திரவு**

பீட்டாதாரத்தின் வயணம் தஞ்சைநகரஞ் சீமையில் திருவாவடுதுறை தர்ம்மபுரம் யென்கிற ஆதீனத்தாரைக் கேட்டால் தெரியும்.

தேவஸ்தானங்களாவது. ஸ்ரீரெங்கம், திருவள்ளறை உத்தமர்கோயில், அம்பில் அப்பகொரடத்தார், திருகாண்டியூர், தஞ்சாவூரில் மேல் நரசிங்கப் பெருமாள், மணிக்குன்றர், நீலமேகன், பாபவினாசம், ஆடுதுறை பெருமாள் கோவில், கபிஸ்தலம், நாதன் கோவில், கும்பகோணம் நாச்சியார் கோவில், திருச்சிறை, மன்னார் கோவில், திருக்கண்ணமங்கை, திருக்கண்ணன் குடி, நாகப்பட்டணம், சவுந்தரராஜன், திருக்கண்ணபுரம், சிறுபுலியூர், தேறழுந்தூர், திருவெந்தலூர், தாளாடங்கோவில், சித்திரகூடம் கோவிந்தராஜா,

திருநாங்கூரைச் சேர்ந்தது 12, வடுவூர், வடரெங்கம், ஆதி ரெங்கம், மாங்கூடி, பூவனூர், மதுரை, அழகர், திருமோகூர், திருமெய்யம், திருகோட்டியூர், திருப்புல்லாணி, திருத்தாங்கல், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டம், திருப்புளிங்குடி, வரகுண மங்கை, ரெட்டத்திருப்பதி, தெந்திருப்பரி, திருகோரனூர், பெருங்கொணம், வானமாமலை, திருவாண்டாறு, திருவனந்த புரம், சேனாரத்தனம், குட்ட னாட்டு திருப்புலியூர், திருனா வாயி, ஸ்ரீரெங்கப்பட்டணம், மேல்கோட்டை, கொடிமுடி; **சிவஷ்தளங்கள்** - செம்பு கேசுவரம், மாநுறுபூதா, ஓறையூர், உய்யக் கொண்டான், திருமலை, யெரும் பீசுவரம், வெராச்சாண்டாமலை, சிவாயம், கடம்பர் கோவில், திருவேங்கி மலை, திருப்பிலாத்துறை, அம்பில், திருவாசி, திருதவத் துரை, நகர், வாலிக்கொண்ட புரம், திருமங்கலம், ஊட்டத்தூர், திருப்பஞ்சேரி, தொரையூர், செட்டிகுளம், தேனூர், திருப்புட்டூர், ஒடையார்பாளையம், திருமலவாடி, திருவையாறு, திருகொண்டியூர், திருப்

பயணம், ஆடுதுறை, தஞ்சாவூர், 12 ஸ்தளம், பிறகதீசுவரர், நல்லூர், கும்பகோணம் - 5, திருவலஞ் சுழி, சாமிமலை, திருபுவனம், திருவடமருதூர், குத்தாலம், திருநாகேஸ்வரம், மாயூரம், வேதாரணியம், வயித்தீச்சுரன், திருவாலூர், திருக்காண்டியூர், சங்கமுகம், சுவேதாரணியம், ஆச்சாபுரம், சிதம்பரம், சீயாழி, நாகப்பட்டணம்-5 நாகூர், ஆவிடையார் கோவில், திருக்குறுணம், குடிமாலை தில்லாடி, பேரூர் வெராலி மலை, பழணி, மதுரை மீனாக்ஷி, அவினாசி, பேரயூர், திண்டுக்கல்லு, திருவாடநேரி, உத்திரகோசமங்கை, பெருவயல், ராமேஸ்வரம், வானமாமதுரை, சங்கரனார் கோவில், கோவில்பட்டி, திருநெல்வேலி, பாபனாசம், திருக்குத்தாலம், கன்னியா கொமறி யின்னம் அநேகம் ஸ்தளங்களிருக்கிறது.

## 9. கேழ்விக்கு உத்திரவு

சேர ராஜாக்களுடைய கதைகள், சரித்திரங்கள் அநேக கதைகளிலே சொல்லி வருகிறது. ஆனால், யிருட்டு

பாண்டியராஜாக்கள் மதுரைக்குச் சமீபத்தில் மண லூரில் யிருந்து துரைத்தினம் பண்ணினது.

போலே காண்பிக்கிறதே அன்னியில் நன்றாய் தெரிய வில்லை! அவர்களிலிருந்து பிரபுத்துவம் பண்ணின பட்டணம் யிது யென்று நிச்சமாய் தெரியவில்லை! ஆனால், கோயம்பத்தூர் யென்று தோணப்படுகிறது.

சோழராஜாக்கள் பட்டணம் முன்னாலே விவரிக்கப்பட்டிருக்கிறது.

சேர ராஜாக்கள் பட்டணம் கோயம்புத்தூர்தான் யென்று காணுது.

மதுக்கரை செல்லாண்டி கோவிலுக்கு மேற்கு, கண வாய்க்கு கிழக்கு வாளை யாரும் மட்டும் சேரன் தேசம். யிதுதான் கொங்குதேச மென்றும் சொல்லப்படும்.

சோழன் ஸ்ரீமுஷ்ணத்து சமீபம் வெள்ளாருக்கும், தொண்டைமான் சீமை வெள்ளாருக்கும் நடு சோழ ராஜாக்கள் சீமை சமுத்திர பரியந்தம்; அதுக்கு தெற்கு கன்னியாகொமரி பரியந்தம் பாண்டியதேசம்.

## 10. கேழ்விக்கு

அப்படியே கொங்கு ராஜாக்களுடைய சரித்திரங் களும் தோணப்படுகிறது.

## 11. கேழ்விக்கு

மதுரையிலே யிருந்து ராச்சியம் பண்ணின பாண்டிய ராஜாக்களுடைய கதை சரித்திரங்களும், அவர்கள்

இதற்கு பதில் தெரிய மாட்டாது; யேனென்றால் சாஸ்திரத்தை சேர்ந்த காரியமல்ல.

1300 வருஷத்துக்குக்குள்ளி ருந்ததும், அவர்களுடைய கதைகள் அநேகமாய் சம்பாதித்து யிருக்கிறோம்; யின்னும் சம்பாதிக்க வேண்டியது!

## 12. கேழ்விக்கு

சோழ ராஜா மலையாள ராஜாக்களுடைய கதைகள், கைபீத்துகள் கலந்து யிருக்கப் பட்டதும் சொன்ன பாண்டிய ராஜாக்களினாலே ஆர் ராஜாதிபத்தியம் பெற்றிருக் கிறதும் அதினுடைய விபரங் கள் தெற்கே யிருக்கப்பட்ட சங்கதிகளிலே யெங்கே யாகிலும் சொல்லப் படுகுதோ அதினுடைய வயணமும் -

## உத்திரவு

24-ம் சதுர் யுகத்தைச் சேர்ந்த கிருதாயுகத்தில், ஸ்ரீவிஷ்ணு பரசுராமனாய அவதாரம் பண்ணிருந்த போது, மலையாளதேசத்தை யுண்டுபண்ணினார். இது வரைக்கும் 24 சதுர் யுக மாச்சுது. இதுவரையில் வெகு பேர் ராஜாக்கள் ராச்சியம் பண்ணினார்கள். அதில் ஒருவர் குலசேகரராஜா வென் கிறவர் மகாபுண்ணிய புருஷர் ஸ்ரீ ரெங்கனாதனுடனே ஐக்கியமாய் போய்விட்டார்.

இப்படிப்பட்ட புண்ணிய ராஜாக்கள் அவ்விடத்திலிருந்த பேர் யெல்லாரும் தர்ம் மிஷ்டாள்.

## 13. கேழ்விக்கு

பிராம்மணாள், குடித்தினம் பண்ணப்பட்ட வெள்ளாளர், கருமான், தச்சன், முதலாகிய பேர்கள்.

## உத்திரவு

இந்த தெற்கு ராச்சியங்களில் ஒருக்காலும் பிராம்மணாள் முதலானபேர் யில்லாமலிருந்ததே யில்லை. ஆனால் நடுவில் ஒருக்கால் யிட்ஷுவாகு மகாராஜா

வினுடைய பிள்ளை தெண்டக னென்கிற ராஜாவுக்கு சுக்கிர ராஜாவினுடைய சாபத்தி னாலே, சிறிது நாள் சிறிது தேசங்கள் பலாயனமாய்ப் போனதில், தெற்கு ராச்சியத் தில் சிறிது பூமிக்கு தெண்ட காரணியமென்று பேராயி ருந்தது.

உடனே, அகஸ்திய மகாரிஷி சாபத்தை தீர்த்துப் போட்டார். பிறகு, அந்த தேசம் யெப்போதும் போலே ஆயிப்போச்சுது. இந்த காரியம் கூட 24 சதுர் யுகத்துக்கு முன்னே நடந்தது.

இவ்வளவுக் குள்ளாக நாங்கள் யெழுதிய சங்கதிகள் போக, மற்றதுகள் யெல்லாம் சாஸ்திரோக்த மாகாத சங்கதி களாகச்சே அதுகளுடைய விபரம் யெங்களுக்கு தெரிஞ் சதுகளும் அல்லா.

* * * * * *

---

*13. தெண்டகாரணியம் - தண்டகாரணியம் ; அல்லா - அல்ல.*

# 5. சந்திர வம்ச வரலாறு

(டி. 3188)

1. கலியுகத்துக்கு வருஷம் 4 லக்ஷத்து முப்பதிரண்டாயிரம்; பாபம் மூணு பங்கு ஒரு பங்கு, ஆய் நடக்கும். ராஜா -கலிபுருஷன், மந்திரி - பாபுருஷன். யிவர்களிவரும் வாதிச்சுக் கொண்டிருக்கிற படியினாலே சகல ஜெனங்களும் லவுக்கிய பாபங்களை யுக்த்தமாய் நடப்பிப்பார்கள்; சக ஜெனங்களுக்கும் அத்தமே ஆதாரமாயிருக்கும். அதினாலே வர்ணாசிரம தர்மம் தப்பும் புருஷ பிரமாணம் முழம் -4. பரஸ்ரீ பரதன அபேட்சை யாகிறபடியினாலே ஆயுசு பிரமாணந்தப்பி, க்ஷிண கதிகளாய் வர்த்திருக்கும். யின்ன மிந்த கலியுக லெக்ஷணங்கள் அநேகவிதங்களாய் நடக்கும்.

2. ஆதி மகாராஜா சந்திரனுடைய வமிசத்தில் பிறந்து, தன் பெரிய தகப்பானாராகிய திருதராட்சதனுடைய பிள்ளைகளாகிய துரியோதன மகாராஜன் முதலான அண்ணன் தம்பிகள் நூறு பேரையும் ராஜரீக வயிரத்தினாலே பதினெட்டு நாளைய உயித்தத்தினாலே சண்டைபண்ணி யெல்லாரையுங் கொன்று, பூலோகத்திலே மகாகீர்த்தியும் நீதியும் பெருமையுமாய் பலசாலியுமாய் உள்ள சத்திராதிகளை யெல்லாம் தன் கைக்குள்ளடக்கி, தனக்கு பகுதிப்பணம் கொடுக்கும் படிக்கு ராஜாதி ராஜானான தர்ம்மராஜாவின் தம்பி மகாவீராதி வீரனான அர்ச்சுன மகாராஜாவின் புத்திரன் அபிமன்யுனுடைய புத்திரன் பரிட்சத்து யென்கிற ராஜா, பிரம - தீக்ஷ வருஷம் ஆவணி மாதம் முதல் சித்திரபானு வருஷ வரைக்கும் ராச்சியபாரம் பண்ணின வருஷம் - 30.

அவன் புத்திரன் செனமேசெனனென்கிறவன் பிறந்து குழந்தையா யிருக்கச்சே சித்திரபானு வருஷக் கடைசியிலே

---

1. *அத்தம் - பொருள்; வர்ணாசிரமதர்மம் - சாதிப்பிரிவினை முறை; பரஸ்ரீ - பரஸ்திரீ; வேறு பெண்; பரதனம் - அடுத்தவர் பொருள்.*

சாபத்தினாலே எந்த விதத்திலும் தப்புவிச்சுக் கொள்ள மாட்டாமல் பாம்பினாலே சுவர்க்க மடைந்தான்!

சுபானு வருஷமுதல் விசுவாங்க வருஷ வரைக்கும் செனமேசெனன் ராச்சியபாரம்._பண்ணின வருஷம் 143; யிந்த ராஜாவினுடைய நாளிலே, தகப்பன் பாம்பு கடிந்து சுவர்க்க மடைந்தா னென்கிற கோபத்தினாலே, சர்ப்பயாகமே பண்ணி பூலோகத்திலுள்ள பாம்புகளை யெல்லாம் யாகத்திலே கொன்று போட்டார்!.

பராபவ வருஷமுதல் குரோதன வருஷம் வரைக்கும் செனமேசெனன் புத்திரன் ராஜராஜ நரேந்திரன் ராச்சியபாரம் பண்ணினது வருஷம் 140. ராஜ ராஜ நரேந்திரன் ராச்சியபாரம் பண்ணுகிறபோது, அவனுக்கு மூத்த பெண்ஜாதியாகிய றத்தினாங்கி யென்கிறவள் வயிற்றிலே சாரங்கதர னென்கிற பிள்ளை பிறந்தான். நல்ல யெவ்வன காலத்திலே, ராஜாவினுடைய யிளைய பெண்ஜாதியாகிய சித்திராங்கியினுடைய பூர்வ ஜென்ம பகையினாலே ராஜாவுக்கு பழிவார்த்தையைச் சொல்லி சாரங்கதரனைக் கொல்வித்தான். கை கால்கள் வாங்கினவிடத்திலே, சித்தாதிகள் வந்து, அவன்பேரில் தயவு வைத்து, கை கால்கள் வளரப்பண்ணி, தங்களுடனே சித்தனாயிருக்கும் படிக்கு உபதேசம் பண்ணிக் கொண்டு போனார்கள்.

யிப்பவும் **ராயவேலூருக்கு** மேற்கே **பள்ளி கொண்டையில்**, ஒரு மலையில் **சாரங்கதரன்** வாசமாய் இருக்கிறானென்று சொல்லப் பட்டிருகுது!

ராஜராஜ நரேந்திரனுடைய யிளைய பிள்ளை **சாரங்கபாணி** யென்கிறவன் அக்ஷய வருஷம் முதல் விகாரி வருஷம் வரைக்கும் ராச்சியபாரம் பண்ணின வருஷம் 214; அதுக்குமேல் புத்திர னில்லாமல் போனபடியினாலே **சந்திர வமிஸம்** நின்று யாச்சுது!

---

*2. வயிரத்தால் - பகையால்; பகுதிப்பணம் - கப்பப்பணம்;*

3. சார்வரி வருஷம் முதல் ஸ்ரீமுக வருஷ வரைக்கும் சூத்திரமகாராஜா ராச்சியபாரம் பண்ணின வருஷம் 154. யிந்த ஸ்ரீமுக வருஷத்தில் ஒரு காரணார்த்தமாய் ஆட்டுக்கிடாய் நிமித்தியம் சுவர்க்கமடைந்து போனான்! யிதுக்குமேல் சொன்ன ராஜாக்களின் பூர்வோத்திரமும் சவுரிய பராக்கிரமங்களும் **ஸ்ரீபாகவத** மென்று சொல்லப்பட்ட மகாவிஷ்ணுவினுடைய பிற்பக்கத்தில் விசதப்படச் சொல்லப்பட்டிருக்கும்.

சூத்திரமகாராஜா அடைஞ்சு போன பிற்பாடு, பவ வருஷ முதல் வெகுதானிய வருஷ வரைக்கும் **விக்கிரமார்க்க ராஜா** ராச்சியபாரம் பண்ணினது. வருஷம் 1745; யிந்த விக்கிரமார்க்க மகாராஜா மகா கீர்த்திபெற்றவன்; யிவனுடைய பிரபாவங்கள் வித்தாரமுண்டு; அநேகங் கதைகளு முண்டு. பூலோகத்திலே **வேதாள கதை** யென்றும், பிரதமை யென்றும் சொல்லப்பட்டிருக்கும்!

யிந்த ராஜாவைக் கொன்றவன் பிராமண பிந்துவுக்கு கொசஸ்ரீ கெர்பத்திலே பிறந்த **சாலியவாகனனென்கிறவன்** சிறுபிள்ளையா யிருந்து, விக்கிரமார்க்க ராஜாவைக் கொன்று போட்டு, மாம்மேருகச் சாரலிலே ஈசுபரனைக் குறித்து தபசுக்குப் போய்விட்டான்!

4. பிரமாதி வருஷம் முதல் சுபகிருது வருஷம் வரைக்கும் **போஜராஜன்** ராச்சியம் பண்ணுகிறபோது, ஒரு பிராமணன் மூலமாய் விக்கிரமார்க்க ராஜா யேறியிருந்த சிம்மாசன மகப்பட்டு, "அதின்பேரில் தானிருந்து ராசரீகம் பண்ணவேணுமென்று" ஆயத்தல் படும்போது, அந்த சிம்மாசனத்தி லிருக்கப்பட்ட முப்பத்திரண்டு படியிலும் செய்திருக்கிற பிரதமைகளினாலே விக்கிரமார்க்கனுடைய புஜபல பராக்கிரமும், தர்மநீதியும்,

---

*3. ஒரு காரணார்த்தமாய் - ஒரு காரணத்திற்காக;*

*4. பிரதமை - பதுமை - பொம்மை; உதாரகுணம் - வள்ளல் தன்மை; விதனத்தினாலே - சோகத்தினாலே*

உதாரணகுணமுங் கேழ்விப்பட்டு "யிந்த சிம்மாசனம் பேரில் தனக்கு யிருக்க தகாதெ"ன்று சும்மா யெதாபிரகாரம் யிருந்து ராச்சியம் பண்ணிக் கொண்டிருந்த வருஷம் 144; யிந்த ராஜா மகா விதுவாம்ஸன்! மகா கீர்த்திமான்! **காளிதாச** னென்கிற வித்துவாம்சன், ஒரு தாசியினாலே மரணமடைந்தான்! அவன் மரணமடைந்தா னென்கிற விதனத்தினாலே தானு மரணமடைஞ்சு போனான்!

சோபகிருது வருஷ முதல் குரோதி வருஷ வரைக்கும் **நந்தன சக்கிரவர்த்தி** ராச்சியபாரம் பண்ணின வருஷம் 62; விசுவாவசு வருஷ முதல் பல்லவ வருஷம் வரைக்கும் **திரிபுவனசக்கிரவர்த்தி** ராச்சியபாரம் பண்ணின வருஷம் 57; இந்த தேவ ராஜாக்கள் ஒன்பது பேரும் வெகு கீர்த்திகளை யடைந்தவர்களை. யிதுக்கு மேல் சோழராச்சியம் ராச்சியபாரம் பண்ணின சோழராஜாக்கள்,

1. சுபகிருது வருஷம் முதல்
   ஸ்ரீமுக வருஷ வரைக்கும் **உத்துங்கசோழன்**
   ஆண்ட வருஷம் 32

2. பவ வருஷம் முதல்
   சர்வதாரி வருஷம் வரைக்கும் **குலோத்துங்க சோழன்**
   ஆண்ட வருஷம் 15

3. விரோதி வருஷம் முதல்
   ஏவிளம்பி வருஷம் வரைக்கும் **ராசேந்திரசோழன்**
   ஆண்ட வருஷம் 9

4. விளம்பி வருஷம் முதல்
   ராக்ஷச வருஷம் வரைக்கும் **திருமுடிகண்டசோழன்**
   ஆண்ட வருஷம் 18

5. நள வருஷம் முதல்
   தாது வருஷம் வரைக்கும் **கரிகால்சோழன்**
   ஆண்ட வருஷம் 21

6. ஈஸ்பர வருஷம் முதல்

விரோதி வருஷம் வரைக்கும் **அருந்தவச்சோழன்**
ஆண்ட வருஷம் 13

7. விக்ருதி வருஷம் முதல்
பராபவவருஷம் வரைக்கும் **உறையூர் சோழன்**
ஆண்ட வருஷம் 17

8. பிலவங்க வருஷம் முதல்
துர்முகி வருஷம் வரைக்கும் **செங்கண்சோழன்**
ஆண்ட வருஷம் 15

9. துந்துபி வருஷம் முதல்
ஸ்ரீமுக வருஷம் வரைக்கும் **மண்ணளந்த சோழன்**
ஆண்ட வருஷம்... 12

10. பவ வருஷம் முதல் சர்வதாரி வருஷம் வரைக்கும்
**மநுநீதி கண்ட சோழன்** ஆண்ட வருஷம் 15

11. விரோதி வருஷம் முதல்
சுபகிருது வருஷம் வரைக்கும் **வரகுணசோழன்**
ஆண்ட வருஷம் 14

12. சோபகிருது வருஷம் முதல்
சாதாரண வருஷம் வரைக்கும் **ஆளப்பிறந்த சோழன்**
ஆண்ட வருஷம் 8

13. விரோதிகிருது வருஷம் முதல்
குரோதன வருஷம் வரைக்கும் **திருநீத்துச் சோழன்**
ஆண்ட வருஷம் 15

14. அக்ஷய வருஷம் முதல்
பிரபவ வருஷம் வரைக்கும்
**ஆறிலொரு கடமைகண்ட சோழன்**
ஆண்ட வருஷம் 62

15. விபவ வருஷம் முதல்

பிரமாதி வருஷம் வரைக்கும் **ஜெயங்கொண்ட சோழன்**
ஆண்ட வருஷம் 12

16. விக்ரம வருஷம் முதல்
விகாரி வருஷம் வரைக்கும் **கிருமிகண்ட சோழன்**
ஆண்டவருஷம் 20

17. சார்வரி வருஷம் முதல்
விரோதி கிருது வருஷம் வரைக்கும் **தொண்டமான்சோழன்**
ஆண்ட வருஷம் 12

யிந்த தொண்டைமான் சோழனுடைய புத்திரன் ஆதொண்டைச் சோழனென்கிறவனது சிறுகதையுண்டு! அவனாலே திருப்பதிக்கு கிழக்கே வடகிழக்கே யிருந்த காடுகளெல்லாம் வெட்டி வைத்து, தொண்டநாடு யென்கிறதாய் கட்டின ஸ்திதியண்டை பெரிய பட்டணம் தன்பேரில் உண்டுபண்ணி தெற்கேயிருந்து குடிகளை அழைப்பிச்சு பிரபலிக்கப் பண்ணினான். பிறகு, அவனுக்கும் திருப்பதிமலையின் பேரிலிருக்கிற வெங்கடாசல பதிக்கும் நடந்த சங்கதிகள் பெரிய கதைகளாயிருக்கும். வெங்கடாசலபதியினுடைய கோவிலில் மண்டபங்கள் கலியாண மண்டபம் உக்கிரண மண்டபங்களும் பின்னையும் அநேக திருப்பணிகள் நடப்பிச்சிருந்தான். அவன் பூர்வோத்திரங்கள் சேனையுண்டு.

18. பரிதாபி வருஷம் முதல்
துர்முகி வருஷம் வரைக்கும் பூதங்கட்டுசோழன்
ஆண்ட வருஷம் 45

19. ஏவிளம்பி வருஷம் முதல்
சாதாரண வருஷம் வரைக்கும் சங்கு நுழைஞ்சான் சோழன்
ஆண்ட வருஷம் 14

20. விரோதி கிருது வருஷம் முதல்
துர்மதி வருஷம் வரைக்கும் சோழமான் சோழன்
ஆண்ட வருஷம் 11

21. துந்துபி வருஷம் முதல்
ஆங்கீரச வருஷம் வரைக்கும் கெங்கை கொண்ட சோழன்
ஆண்ட வருஷம் 11

யிந்த ராஜாவின் நாளில் காவேரி யென்று சொல்லப்பட்ட கெங்கையை பிரபலப் படுத்தினா னென்று சொல்லப்பட்டிருக்கிறது.

22. ஸ்ரீமுக வருஷம் முதல்
பரிதாபி வருஷம் வரைக்கும் சுந்தரபாண்டியச் சோழன்
ஆண்ட வருஷம் 40

23. பிரமாதீக்ஷ வருஷம் முதல்
தாது வருஷம் வரைக்கும் பொக்கபூ சோழன்
ஆண்ட வருஷம் - 24
ஆக சோழன் பட்டம் 23

முன்னாலே விக்கிரமார்க்க ராஜாவைக் கொன்றுபோட்ட சாலிய வாகனென்கிற ராஜா அன்று முதல்க் கொண்டு 718 வருஷம் தபசு பண்ணி வந்து, ஈஸ்பர வருஷம் முதல் சாலியவாகனன் துரைத்தினம் பண்ணிக் கொண்டு யிருந்து துர்முகி வருஷத்தில் அந்தரத்தியானமாய் மறைந்து போய்விட்டார்! அப்படிக்கி, துரைத்தினம் பண்ணிக் கொண்டிருக்கச்சே மறைந்துபோன படியினாலே அவன்நாள் முதல்க் கொண்டு சாலியவாகன சகாப் நடந்துவருகிற படியினாலே யின்னம் துரைத்தினம் அவனதே யென்று சொல்லப்படும்.

அவன் வமிஷமாகியதுதான் மேற்கு கன்னடிய தேசத்தில் மைசூர் பட்டம் துரைத்தினம் பண்ணுகிற குராச்சூர நந்தி ராஜா அவாள் வமிசமிருந்தும் அந்தரத்தியானமாய் போனவனான படியினாலேயும் சகம் அவன்பேரே நடக்கிற படியினாலே வமிஷாவளியிவ்விடத்தில் கண்டெழுதாமல் போய்விட்டுது.

சாலியவாகனனுடைய வம்சத்தார் அப்படியிருக்க மற்ற தேசத்துக்கு யாதவராஜாக்கள் துரைத்தனத்துக்கு யேற்பட்டிருக்கிறார்கள்.

இந்த யாதவ ராஜாக்களிட பட்டங்களான பிற்பாடு, யிதுக்குள்ளே சந்திரகிரி கோட்டை சமாச்சாரங்கள் வரும்; பிற்பாடு சந்திரகிரி ஆண்ட ராயப்பட்டங்கள் வமிசம் வரப்போகுது அதுவெல்லாம் யின்னம் ஒரு டபாலிலே அனுப்பிவிக்கிறேன்.

வேணும். வெ. பரசுராமன்

சந்திரகிரி
சூன் மாதம் 11ஆம் தேதி
சுக்கிரவாரம்

# 6. சம்புகேஸ்வர ஸ்தல மகாத்மியம்

(டி. 2823; ஆர். 7730)

1. முதலாவது கல்பத்திலே காவேரிக்குத் தெக்ஷண பாகத்தில் பிரமாதி தேவதையினால் சனகாதி ரிஷிகளும் தபசு பண்ணினார்கள். அந்தத் தபோ மகிமையினாலே ஸ்ரீகைலாசபதி, அவர்களுக்குப் பிரசன்னமாகி, "உங்களுக்கு வேண வரங்கேளுங்களெ''ன்று சுவாமி சொன்னபோது, ''சுறன்னஉபதேசம் பண்ணவேணுமெ'' ன்று கேட்டுக் கொண்ட படிக்கி, சுறண உபதேசம் பண்ணினதினாலே, சுறணக்ஷேத்திர, மென்று நாமதேய முண்டாச்சுது. மந்திர உபதேசம் பண்ணின படியினாலே சுவாமிக்குச் **சங்கமேஸ்வரரென்றும்** நாமதேய முண்டாச்சுது. 2வது சகல லோகங்களையும் ஸ்ரீட்டிக்கப்பட்ட பிரமதேவர் அதிரூபமான திலோத்தமை யென்கிற பெண்ணை ஸ்ரீட்டித்து உடனே சேர்ந்ததுனால் அன்றுமுதல் பிரம்மா ஸ்ரீட்டிகள் யாவத்தும் அற்பாயிசாப் போறபடியினாலே ஸ்ரீகைலாஸ பரமேஸ்வரரிடத்தில்போய், யிந்தப் பாவங்களையும் சொல்லி, "யெனக்குப் பூறணத்தைக் கொடுக்க வேணு"மென்று கேட்டபோது, "பூமியிலே தெக்ஷிணதிக்கிலே இரண்டு க்ஷேத்திரத்திலே போய்த் தபசு பண்ணினால் நாம் வந்து தெரிசனம் குடுத்து சகல பாவங்களையும் போக்கி, பூறணத்துவமாகும்படி அனுக்கிறகம் பண்ணுகிறோமென்ற உத்தரவே வாங்கிக் கொண்டு, இரண்டு க்ஷேத்திரத்து ஒரு தீர்த்தக் கரையிலே வந்து, தபசுபண்ணிக் கொண்டு யிருந்தார். 3வது விருத்திராசூரனை சங்காரம்

---

*1. திருவானைக் காவல் என்ற ஊரே ஜம்பு கேஸ்வரம் என்று கூறப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்தது இவ்வூர்*

*தெக்ஷண - தென்திசை; பிரமாதி - பிரம்மா முதலான; கைலாசபதி - சிவன்; ஸ்ரீட்டி - சிருஷ்டி;சுறண - சுவர்ண; சம்புபலம் - நாவற்கனி;*

பண்ணினயிந்திரனுக்கும் விருத்திராசுர பிரம்மத் பிடித்துக் கொண்டு ரொம்பவும் உபத்திரவப்பட்டு. தேவ குருவாகிய பிரகஸ்பதிபகவான் உபதேசத்துனாலே இரண்டு க்ஷேத்திரத்தில் ஒரு தீர்த்தக் கரையில் வந்து. தபசு பண்ணிக் கொண்டு யிருந்தார். 4வது சம்பிமாமுனி யென்குறவர் பூஷண சுவற்ணக்ஷேத்திரத்தில் தபசு பண்ணிக் கொண்டு யிருக்கச்சே அந்த கெதியாய் ஒரு சம்பு பலம் பூமியிலே விளுந்துது!

2.அதை. ஸ்ரீவரமேஸ்வரரிடத்தில் கைலாஸத்தில் கொண்டுபோய்க் குடுத்தபோது. சுவாமி அந்தப் பலத்தைப் பட்சித்துக் கீழே உமிஞ்ச கொட்டையாகிய மகா பிரஸாதத்தை யெடுத்துச் சாப்பிட்ட சம்புமாமுனி வயத்திலே முளைத்து. சிரசுக்கு மேலே பிரவேசித்து. மரங்களை சுமக்கமாட்டாமல் சுவாமியிடத்தில். வந்து. தன்னுடைய வருத்தங்களையும் சொல்லி "யென்சிரசிலே யிருக்கிற விருக்ஷத்து நிழலிலே நீர் வாசம் பண்ணவேணு மென்"றும். தன்னுடைய வருத்தம் தீரவேணுமென்றும் வரம் கேட்டபோது. இரண்டு க்ஷேத்திரத்திலே போயிருந்தால் நாம் ஆவடத்துக்கு வந்து. உமக்குக் காக்ஷி கொடுத்து. நாமும் உம்முடைய சம்பு விருக்ஷத்து நிழலிலே வாசம் பண்ணுகிறோ மென்று கடாட்சம் பண்ணினபடி! சம்பு மாமுனியும் இரண்டு க்ஷேத்திரத்தில் ஒரு தீர்த்தத்துக் கரையில் வந்து தபசு பண்ணிக் கொண்டு யிருந்தார்.

**5-வது** ஸ்ரீ கைலாசத்தில், திவ்விய ரெத்தின சிம்மாஸனத்தில், முப்பதுமுக்கோடி தேவதைகள், நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள், கின்னரர், கிம்புருஷர், சித்த வித்தியாதரர், யக்ஷர், பன்னகர், திக்குப் பாலகர். நந்திகேஸ்வரர் முதலாகிய அனேகம் சனங்களுக்கு நமஸ்காரங்கள் பண்ணி, சன்னதி தானத்தில் நின்று அனேக தோத்திரங்களைப் பண்ணிக் கொண்டு சூழ்ந்து விக்கினேஸ்வரர் சுப்பிரமணியர் நிற்கும்படிக்கு ஸ்ரீ பார்வதி சமேதநாக யெழுந்தருளி யிருக்கிற பரமேசுவரன் வாச்சுருப தியானத்தில் தேக தியானமாயிருந்ததை ஸ்ரீ பார்வதி தேவி பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டாளதை ஸ்ரீபரமேஸ்வரர் பார்த்து. "நீ அகாறணத்திலே சிரிக்கவேண்டியது யென்ன?" வென்று மகா கோபத்துடனே கேட்கும்போது. பார்வதி தேவி பயந்து. அனேக நமஸ்காரங்கள்

பண்ணிக் கைகட்டி, வாய்பொத்திக் கொண்டு பக்கத்தில் நின்று சொல்லுகிற வசனம், "சுவாமி! தேவாதி பிரமா விஷ்ணு யிந்திரன் முதலாகிய அனேகம் தேவதையினாலே சகலலோகங்களுக்கும் அட்செரங்களுக்கும் கஷ்தவ்வியாயிருக்கப்பட்ட தேவரீர் சுகற்ப தியானமாய் மவுனத்திலிருந்ததைக் கண்டு தேவரீர்க்கு மேலான தேவாக்களிருக்கிறதே யென்கிற ஆச்சரியத்து னாலேயும், சொல்பமாகிய ஸ்ரீபுத்தியினாலேயும் தெரியாமல் புன் சிரிப்புக் கொண்ட அபராதத்தை க்ஷமை பண்ணிப் பேதையா யிருக்கிற அடியாளை க்ஷிக்கக் வேணுமென்று அனேக வந்தனத்துடனே கேட்டுக் கொண்ட **பார்வதி** தேவியைப் பார்த்து, அனேக கோடானுகோடி தேவதைகள் ரிஷிகளுட மத்தியில் நம்மைப் பார்த்து நீ ஆச்சரியம் பண்ணினபடியினாலே நம்மைவிட்டுப் பிரிந்திருக்கக் கடவதெ"ன்று சாபத்தைக் குடுத்தார்.

அப்போது, பார்வதி தேவி, ரெம்பவும் பயந்து சுவாமின் தடாக செலங்க ளில்லாமலிருக்கிற தாமரை போலவும், மரங்களை சுத்தின கொடிகள் போலவும் புஷ்பத்தில் நிறைந்த வாசனை போலவும், கரும்புக்கு யிருக்கிற ரசங்கள் போலவும், சாஸ்திரங்களிலே நிறைந்த பொருள் போலவும், தேகத்தி லிருக்கிற சீவன் போலவும், எள்ளுக்குள் இருக்கிற எண்ணெ போலவும் தேவரீர் ....த்துக்குள்ளிருக்கிற சோதிபோலவும், தேவரீரைவிட்டு ஒரு நிமிஷமாவது பிரியாதே யிருக்கிற யென்னை பிரியும்படி சிபானுக்கிரகத்தை அனுக்கிரகம் பண்ணினால் சகிக்க யென்னாலே யாகாது; ஆதலால் அடியேன் செய்த குத்தங்களை க்ஷமிக்க வேணுமெ"ன்று கேட்டுக் கொண்ட பார்வதி தேவியிடத்தில் கொஞ்சம் தயவு வந்து, அதனால், "பூமியிலே தக்ஷிணதிக்கிலே சொர்ண க்ஷேந்தரத்திரத்திலே பிரமா, யிந்திரன், சம்புமுனி முதலாகிய .... ரிஷிகளும் தபசு பண்ணினார்களர் க்ஷேத்திரத்தில் நீயும் போய் தபசுனாலே நம்மைப் பூசித்தால் நாம் அவரிடத்துக்கு வந்து, கடாக்ஷிக்கிறோமென்று சொன்ன வாக்குப் படிக்கி அனேக தேவஸ்ரீகளையும் செயாவிசெயா யென்கிற ஸ்ரீகளோடே கூடி ஸ்ரீகைலாசம் விட்டு, பூமியிலே வந்து தக்ஷிண திக்கில் சுவர்ணக்ஷேத்திறத்து சமீபத்தில் வந்து, அந்த க்ஷேத்திரத்தில் தபசு பண்ணிக் கொண்டு யிருந்த பிரமா, யிந்திரன், சம்பு முனி முதலாகிய அனேகம் ரிஷிகள் யெதிர்கொண்டு வந்து, நமஸ்காரங்கள் பண்ணிக் காத்துவந்த தேவஸ்ரீகளை யெல்லாம் அனுப்பிவிட்டு, செயா

விசயாயென்கிற ஸ்ரீகளோட கூடி ஸ்ரீகைலாசம் விட்டு, பூமியிலே வந்து தெக்ஷிண திக்கில் சுவர்ணக்ஷேத்திரத்து சமீபத்தில் வந்து, அந்த க்ஷேத்திரத்தில் தபசு பண்ணிக்கொண்டு யிருந்த பிரமா, யிந்திரன், சம்பு முனி முதலாகிய அனேகம் ரிஷிகள் யெதிர்கொண்டு வந்து, நமஸ்காரங்கள் பண்ணிக், காத்துவந்த தேவஸ்ரீகளை யெல்லாம் அனுப்பிவிட்டு, செய விசெயா யென்கிற இரண்டு பேர் சகிகளுடனே காவேரி மத்தியில் பூருவத்தே யிருக்கிற சாகறே யீசுபுரருடைய பக்கத்தில், மகாதபோதனைர்கள் சூழ்ந்து யிருக்கச்சே, பூசை பண்ணுகிற நிமித்தியம் உக்கிர அஷ்சமான செல்வத்தை பார்வதிதேவி கையினாலே திரட்டினாள்; அப்போது.... சுஷ்மனுவினுடைய அம்பத்திரெண்டாம் யுகத்தில் கிருதயுகத்தில் பிரமாதி வருஷம் மாசி மாதம் சுக்கில பக்ஷம்.. கூடின சுபதினத்தில் அண்டசராசர லோகாதி லோகங்களுக்கும் தேவாதி தேவதையள் முதலாகிய மகாவிஷ்ணுவுக்கு மேலான பதங்களைக் கொடுக்கும் பவிசத்தியாகிய பார்வதி அகிலாண்ட யீஸ்பரி யென்கிற நாமதேயத்துக்கும் .... யீஸ்வரரென்கிற நாமதேயத்துடனே ஸ்ரீகைலாசபதி ........ அந்த சுவாமிக்கு பூசைகளும் சோடச உபசாரங்களும் பூசைகளும் பண்ணுகிற நிமித்தியம் லோகத்திலே யிருக்கிற அன்பத்தாறு கோடி தீர்த்தங்களுக்கும் வரவேணுமென்றும் நினைச்சமாத்திரத்திலே சுவாமி ... பக்கத்தில் அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் வந்துது.

அந்தத் தீர்த்தங்களினாலே சுவாமிக்கு அனேகம் ..... ஆசமனியங்களினால் உபசாரம் பண்ணினதுனாலே .....யென்கிற நாமதேயம் உண்டாச்சுது. ..... ஸ்ரீபார்வதியினாலே கேழ்க்கப்பட்ட படிக்கி அனேகவரம் பெத்துக் கொள்ளவும் அகிலாண்ட யீஸ்வரி பக்கத்தில் தபசு பண்ணின சம்பு முனி ... இந்த மகாலிங்கத்து பன்னிரு ......... சாயை பண்ணிக் கொண்டு யிருமென்று சொன்னார்.

அப்போது, சுவாமி.... நாமதேயம் பண்ணிக் கொள்ள வேணுமென்று யென்னுடைய தீர்த்தம் சம்பு தீர்த்த மென்கிற நாமதேயம் குடுக்க வேணு மென்றும் கேட்டுக் கொண்ட படிக்கி, சுவாமியும் அனுக்கிரகம் பண்ணினார்.

அன்றுமுதல், சம்புநாதரென்கிற நாமதேயம் சுவாமிக்கி உண்டாச்சுது; தீர்த்தத்துக்குச் செம்பு தீர்த்த மென்கிற நாமதேயம்

உண்டாச்சுது. அந்த சம்புமாமுனியும் விருஷ ரூபியாய் ஆத்தும சாயை பண்ணிக் கொண்டு ஆதியாயிருக்கிற பூர்வம் ....... பண்ணின சம்பு நாதரே பூசை பண்ணி அவர் தீர்த்தத்துக்கு விஷதீர்த்தமென்கிற நாமதேயம் பெத்து துதித்துமையினாலே வரப்பட்ட சகல பாவங்களிலு நின்று விடுபட்டு, சுவாமி மாசிமாசம் மிருக சீரிஷ நக்ஷத்திரமுதல் மண்டலோஸ்வம் நடப்பிவித்து சத்தியலோகம் போய்ச் சேர்ந்தார்.

பூர்வம் தபசுபண்ணுகிற இந்திரனும் சம்புபதியை பூசித்து விருத்திராசூர சுத்தியும் விமோசனமாகி அவரிருக்கிற யிடத்திலிருக்கிற தீர்த்தத்துக்கும் யிந்திர தீர்த்தமென்கிற நாமதேயம் உண்டாச்சுது. இந்திரனும் அம்ராவதி பட்டணத்தைச் சேர்ந்தான்.

3 **ஆறாவது** பூர்வம் ராமண்ணா சுமரணம் பண்ணின விபீணருக்கு லங்காபிஷேகம் பண்ணி வைத்துப் போட்டு, புஷ்பகத்தி லேறிக் கொண்டு அயோத்திக்கு வரச்சே ராமேஸ்வரத்தில் ராமலிங்க பிரதிஷ்டை பண்ணினதினாலே ராவண அத்தி நிவர்தியாச்சுது, கும்பகர்ண அத்தி துடர்ந்து வந்துது.

இந்த ரெண்டு க்ஷேத்திரத்துக்கு வரச்சே விலகினது கண்டு மகாக்ஷேத்திரமென்று ஸ்ரீராமன் காவேரியில் ஸ்நானம் பண்ணி, செம்பு பதியைச் சேவித்து, மண்டபமும் கட்டி, இராமதீர்த்தமும் உண்டுபண்ணிக் கோவிலுக்கும் அட்டதிக்கும் நிவர்த்தியாக விபூதி பரதெக்ஷிணம் பண்ணி, ராமதீர்த்தத்துடைய புனர்வசு நட்சேத்திரத்தில் தெப்ப உற்சவமும் நடப்பிவித்து, அப்பால் அயோத்திக்கு போய்ச் சேர்ந்தார்.

அது முதல், அந்தத் தீர்த்தத்துக்கு ராமதீர்த்த மென்று நாமதேயம் உண்டாச்சுது. ஏழாவது பூர்வம் அக்கினி பகவான் வருணனுடைய ஸ்ரீயிடத்தில் சேர்ந்த தோஷத்தினாலே சுப்பிரமாயிருக்கிற தேகத்துக்கு கரிந்துபோனது உண்டாகவேணு

---

3. *ராமணாசுமரணம் - இராமனைத்துதித்தல்; ராவண அத்தி - ராவணஹத்தி - இரவணனைக் கொன்ற பாவம்;*

மென்கிற நிமித்தியமாக யிந்த க்ஷேத்திரத்தில் தரு தீர்த்தக்கரையில் வந்து ஸ்நானம் பண்ணி, செம்புபதியுடைய கடாக்ஷத்தினாலே வருணன் ஸ்ரீயிடத்தில் சேர்ந்த தோஷம் நிவர்த்தியாக சகலதேவதைகளுக்கும் மேலாய் ஊர்த்துவ தேகம் உண்டாச்சுது; அவருடைய லோகம் போய்ச் சேர்ந்தார். அன்று முதல், அக்கினி தபசு பண்ணின யிடத்திலிருந்த தீர்த்ததுக்கும் அக்கினி தீர்த்தமென்கிற நாமதேயம் உண்டாச்சுது.

எட்டாவது, பூர்வம் மேருகிரி பருவத்தில் திருக்கலியாணத் துக்கும் சகல தேவதைகளும் மேரு பருவதத்திலே வந்து சேர்ந்த படியினாலே தெக்ஷணத்தில் பாரம்யில்லாமல் பூமி உயர்ந்து போனதைக் கண்டு, ஸ்ரீ பரமேசுரனானவர் அகஸ்தியமுனியை யழைப்பித்து, "நீர் நமக்குச் சமான மானதினாலே, நீர் மலையபர் வதத்துக்குப்போய் வசித்தால், பூமி சமமாகுமென்று பரமேஸ்வரர் சொல்ல, அகஸ்தியரும் சுவாமியை நமஸ்கரித்து, "உம்முடைய திருக்கலியாணம் பாராமல் போம்படி கூறுவதென்ன." என்று கேட்கும்போது, "தெக்ஷணத்தில் யிரண்டு க்ஷேத்திரத்துக்குப் போய் தெரிசினம் பண்ணிக் கொண்டு மலையபர்வதத்துக்குப் போனால் உம்முடைய மனோரதம் யாவத்தும் தீரவேணுமெ"ன்று சொன்ன பரமேஸ்வரருடைய ஆனுக்கிரகத்தினாலே அகஸ்தியராவைர், யிரண்டு க்ஷேத்திரத்திலே வந்து ஒரு தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி, செம்பு பதியைத் தெரிசினம் பண்ணிக் கொண்டு, மலய பர்வதம் போய்ச் சேர்ந்தார்.

அன்று முதல், அகஸ்திய தீர்த்த மென்கிற நாம தேய முண்டாச்சுது. ஒன்பதாவது பூர்வம் சூரியபகவான் தனக்கு அதிகம் தேகசுகவேணு மென்கிற அபிப்பிராயத்தினாலே இந்த ரெண்டு க்ஷேத்திரத்தில் வந்து ஒரு தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி ஸ்ரீ சம்புபதியைப் பூசை பண்ணி தெரிசினம் பண்ணினதினாலே சகல லோகங்களிலேயும் பிரகாசிக்கும் படியான அதிக தேசசுகளையும் பெற்று, அவர்லோகம் போய்ச் சேர்ந்தார்.

அன்றுமுதல், அதுக்கு சூரியபுஷ்கரணி யென்று நாமதேயம் உண்டாச்சுது. பத்தாவது பூர்வம் **காஸிப பிரசாபதி**யினுடைய

கன்னிகையாகிய இருபத்தேழு நக்ஷத்திரத்தையும் கலியாணம் பண்ணிக் கொண்ட சந்திரபகவான் ஆனவர், ரோகணி தேவியிடத்தில் மாத்திரம் அதிமோகமா யிருந்து கொண்டு, மற்ற ஸ்ரீகளைச் சேராம லிருந்தத்துக்காக ராசயேஷ்சமா யென்கிற க்ஷயரோகத்தினாலே நீ "க்ஷீணமாகக் கடவதெ" ன்று காசிபர் சாபங் கொடுத்தார்! சாபத்துக்குள் பட்ட சந்திரன், யிந்த ரெண்டு க்ஷேத்திரத்தில் வந்து ஒரு தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி, செம்புபதியை பூசித்து தெரிசினம் பண்ணினதினாலே, அந்த சாபம் நிவர்த்தியாகி அனேகம் அமிர்தகிரணங்களினாலே நிறைந்து அவர் லோகம் போய்ச் சேர்ந்தார்.

அது முதல், அந்த தீர்த்தத்துக்கு சந்திர புஷ்கரணி யென்கிற நாமதேயம் உண்டாச்சுது. பின்னும், அயோத்தியிலிருந்து விபீஷணருக்கு ஸ்ரீராமன் குடுத்த ரேங்கவிமானத்தைக் கொண்டு வரச்சே, சந்திரபுஷ்கரணிக்குச் சமீபத்தில் அந்த ரேங்கவிமானத்தை வைத்து, மறுநாள் உதையத்துக்கு யெடுக்கச்சே யெடுபடாமல் விபீஷணன் சுவாமியை ஸ்தோத்திரம் பண்ணினபோது, ரெங்க நாயகர் பிரசன்னமாகி, யிந்த க்ஷேத்திரத்தின் மகிமை களையும் சொல்லி, ''யிந்த சந்திர புஷ்கரணி தீர்த்தத்திலேதானே நாம் யிருக்கிறோம்; நீ வருஷம் ஒரு தரம் வந்து, நம்மையும் செம்புபதியையும் தெரிசினம் பண்ணிக் கொண்டு போகலாமென்"று சொன்னபடிக்கி கேட்டுக் கொண்டு பின்னும் லெங்கைக்குப் போனார்!

அந்த சந்திரபுஷ்கரணி தீர்த்தத்திலேதானே ரெங்கநாயகர் வசித்துயிருக்கிறார். பதினொன்றாவது, பூர்வம் பராசர மகாமுனி, நான் கற்பத்திலிருக்கும் காலத்தில் தன்னுடைய தகப்பனா யிருக்கிற சத்தியை விசுவாமித்திரராலே யேவப்பட்டு ஒரு ராட்சதன் சங்கரித்துப் போட, அந்தச் சமாசாரத்தை ஒரு ராட்சதன் சங்கரித்துப் போட, அந்தச் சமாசாரத்தை பராசரர் அறிந்து, சம்வர்த்தமான புதர்கள் யிவாளை சம்மரித்து போடுகுறேனென்று ஞான க்ஷேத்திரத்துக்கு வந்து, செம்பு தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, சுவாமியைத் தெரிசினம் பண்ணிப் போட்டு ஆலயத்துக்கு வெளியிலே யாகசாலை கட்டி றெட்சோங்கணாம் யெங்கப்பட்ட

யெக்கியத்தைப் பண்ணுங்காலத்தில், லோகத்தி லிருக்கப்பட்ட றாச்சஸர்கள், அசுரர்கள் யிவர்களெல்லாம் யிவருடைய மந்திரம் நிரப்பினதுனாலே யிழுக்கப்பட்டு, அக்கினி குண்டத்திலே வந்து விழுகிறபோது, நிருதி திக்கில் வாகனமா யிருக்கப்பட்ட பூதத்தை மந்திரம் யிழுக்க, அந்த நிருதி பூதத்தின்பேரில் யேறிக் கொண்டு சம்பு ஸ்ரீசன்னிதானத்தில் வந்து ரட்சிக்கச் சொல்லி முறையிடுங் காலத்தில், சுவாமி தயிவினாலே ஆகாசபாணி பராசர முனியைப் பூதத்துக்கு உயிர்க்குடு மென்று பிராத்திச்சார். அப்போ, பராசரர் யெக்கிய காலத்திலே யிவன் போனத்தைக் கேட்டாலும் குடுக்க வேணுமென்றும், குடுத்தோமென்றும் சொன்னார்.

அப்போ, சுவாமிக்கு பச்சாத் தாபேசுவர் யென்று நாமதேயம் உண்டாச்சுது.

12வது ஒரு காலத்தில் குபேரனும், இராவணனும் ஒண்ணுக்கொண்ணு யுத்ரம் பண்ணினார்கள். அப்போ, ராவணனாலே செயிக்கப்பட்டு புஷ்பவிமானத்தையுந் தோத்து தன்னுடைய ஸ்தானத்தையும் விட்டு, தியான க்ஷேத்திரத்துக்கு வந்து, செம்பு பதியை தரிசித்து ராஜராஜேஸ்வர ரென்கிறதாகிய லிங்க பிரதிஷ்டையும் பண்ணி, ராவணனை சங்கரிக்கிறது; மகாவிஷ்ணு ராமராய் அவதரித்து சங்காரம் பண்ணுவாரென்று அனுக்கிரகத்தைப் பெத்து, தன்னுடைய விமானத்தை அடைந்து சுகமாயிருந்தான்.

பூர்வம் கைலாசத்திலே மாலியவானென்று, புஷ்பதந்த னென்றும் ரெண்டுபேர் பிரமத கெணங்கள் ஒண்ணுக்கொண்ணு சபித்துக் கொண்டு, ஒருத்தன் யானையாயும், ஒருத்தன் செலந்திப் பூச்சியாயும் பூலோகத்திலே செம்புகேஸ்வரத்திலே வெண்ணாவல் மரத்தும் பேரிலே ஒருதன் சிலந்திப் பூச்சியாயிருந்தான். ஒருத்தன்......... கரையிலே காட்டானையாய்ச் செனித்து யிருந்தான்!

அதிலே, அந்த செலந்திப் பூச்சியானது வெண்ணாவல் மரத்தடியிலே யிருக்கிற சிவலிங்கத்தை தெரிசினம் பண்ணி, அனேகம் சருகுகள் மேலே உதிர்ந்து யிருக்கிறதைப் பார்த்து,

விசனப்பட்டு ''யிந்த சிவலிங்கத்திலே ஒண்ணும் உதிராமல் நம்முடைய முகத்திலேநின்றும் உண்டாயிருக்கிற நூலாயே பந்தல் போடுவோமென்று ஆலோசித்து, அந்தப் பிரகாரம் சுவாமியின்மேலே பந்தல் போட்டுது!

யிப்படி யிருக்கிற காலத்தில், அந்தத் தீர்த்தக்கரையிலிருந்து, அந்த யானை சம்புவனத்துக்கு வந்து, அந்தச் சிவலிங்கத்தைப் பார்த்து, பூச்சிமேலே கூடுகட்டியிருக்கிறது, யென்கிறதாய் விசனமாகி, தன்னுடைய துதிக்கையிலே சலமெடுத்துக் கொண்டு வந்து, தாமரை புஷ்பங்களையும் கொண்டு வந்து, அந்த பந்தலைக் களைச்சு அந்த சலத்தினாலே அபிஷேகம் பண்ணி தாமரை புஷ்பங்களாலே சிவனை அர்சித்து சோடச உபசாரங்களையும் பண்ணிப் போட்டுப் போச்சுது, இந்த சிலந்திப் பூச்சி பார்த்து, இந்த சுவாமியினுடைய சிரசிலே சருகுகள் உதிராமல்படிக்கி யிருக்கும்படியாய் நாம் போட்ட பந்தலை யிந்த துஷ்டமா யிருக்கிற கட்டானை கலைத்துப் போட்டுதெ"ன்று விசனப்பட்டுக் கொண்டு மறுபடியும் அந்தப் பிரகாரம் வாய் நூல்களினாலே பந்தல் போட்டுது.

மற்றநாள் அந்தக் காட்டானை புஷ்கரணியிலே ஸ்நானம் பண்ணிப்போட்டு, சலத்தையும் புஷ்பங்களையும் துதிக்கையிலே யெடுத்துக் கொண்டு வந்து, அந்தச் சிவலிங்கத்தின் பேரிலே கட்டியிருக்கிற அந்த நூல்பந்தலையும் பார்த்து, இந்தக் கெட்ட பூச்சியானது யெச்சில் நூலாலே சுவாமியின் பேரிலே கூடுகட்டுகிறதென்று விசனப்பட்டு திரும்பவும் அந்தப் பந்தலைக் கலைத்துப் போட்டு, தான் யெப்போதும் போலே பூசித்துப் போட்டு தன்னுடைய யிருப்பிடத்தை அடைந்துது.

யிப்படி, தினம்தினம் சிலந்திப் பூச்சி போடப்போட யிந்த யானை கலைத்துப் போடறது! யிது சிலந்திப் பூச்சியானது பார்த்து, "நானே யிந்த யானையைக் கொண்ணுபோட வேணுமென்று அந்த மரத்துலே காத்திருந்தது. மற்றொரு நாள் யெப்போதையும் போலே இந்த யானை சுவாமியைப் பூசித்துப் போட்டு துதிக்கையை உயரத்தூக்கிக் கொண்டு தியானம் பண்ணிக் கொண்டு யிருந்தது.

அந்த வேளையிலே சிலந்திப் பூச்சி யிதுதான் சமயமென்று துதிக்கைவழியாய் யானையுடைய மஸ்தகத்துக்குள் நுழைந்து குடைகிறபோது, அது பொறுக்கமாட்டாமல் படிக்கி, யானை கீழே விழுந்து போய்விட்டுது! இந்த சிலந்திப்பூச்சியும் வெளிவர, மாட்டாமல் அதுவும் பிராணனை விட்டுது! அந்த க்ஷணத்தில் இந்த ரெண்டு பேர்களுக்கும் சுவாமி பிரத்தியக்ஷமாய் ''உனக்கு யென்னவரம் வேணுமென்"று கேழ்க்க அப்போ அந்த யானை ........ பிரசித்தமா யிருக்க வேணுமென்று கேட்டுக் கொண்ட யானைக்கி மோக்ஷத்தைக் குடுத்து, சிலந்திப் பூச்சியானது ................ மண்டபம், பிரகாரங்களைக் கட்டிட ...... சுவாமி அனுக்கிரகம் பண்ணினார்.

அந்தப் பிரகாரமே சிலந்திப்பூச்சி சிதம்பரத்தி லிருக்கப்பட்ட **சுபதேவ னென்கிறவனுடைய** ஸ்ரீவயத்துலே கெற்பமாயிருக்கிற காலத்தில், அந்த ராசா ஜோஸியாளை அழைப்பித்து, யெந்த லெக்கினத்திலே புத்திரன் ஜெனித்தால் யேகச்சக்கிராதிபதியா யிருப்பானோவென்று கேட்க, அதுக்கு அந்த ஜோஸியாள், ........ முகற்தம் போய் பிள்ளை பிறந்துதே யானால் அனேகம் .... சனங்களோடே கூடிக்கொண்டு யிருப்பானென்று சொல்ல, அந்த சுபதேவனென்கிற றாசா, தன்னுடைய ஸ்ரீயை தலைகீழாக கட்டித் தொங்கப் போட்டான்.

ஒரு முகூர்த்தம் .... அவிழ்த்து வருகிறபோது, யிந்தக் கெற்பத்திலே யிருக்கப்பட்ட சிசு ... பிறந்த மகிழ்ச்சி யிந்தக் கணங்களுடனே செனிச்சது. அதினாலே, செங்கண் சென்னி யென்று பேரிட்டாள்! அந்த சிசு .... பட்டாபிஷேகம் யிருக்கிற நேரத்திலே தான் பூசிச்ச சிவலிங்கத்தை மனதிலேயும் பூசித்துக் கொண்டு, திக்குவிசயம் பண்ணகிறோமென்கிற விசனத்தினாலே அங்கங்கே யிருக்கப்பட்ட றாசாக்களை செயித்து, அவர்களிடங்களிலே கப்பம் வாங்கிக் கொண்டு அனேகம் ஒட்டகையள், ....பணத்தை ... க்ஷேத்திரத்துக்கு வந்து திருப்பணி பண்ணி வைக்கிறதுக்காக யெத்தினம் பண்ணுகிற போது, சுவாமி யிவனுடைய சொப்பனத்திலே வந்து கெண்டகி தீர்த்தத்திலே, கெண்டகி நதிக்கரையிலே **விசுவகர்மாவினாலே** நீர்மிக்கப்பட்டு யிருக்கிற விமானம் யிருக்கிறது; அந்த விமானத்தை யிவடத்தில்

கொண்டு வந்து கற்பகிரகத்தை நிர்மானம் பண்ணி, ... யென்று சொன்னார்.

றாசாவும அந்தப் பிரகாரம் சேனைகளோடே **கண்டகி** தீர்த்தத்துக்குப் போய், அங்கே யிருக்கிற ருத்திரகோடிசுவர் .... தெரிசினம் பண்ணி அருடைய பிரசாதத்துனாலே அந்த விமானத்தையும் அடைந்து, யிந்த விமான ..... யிந்த கண்டக நதியிலே ஸ்நானம் பண்ணிப் போட்டு, ஸ்ரீசனங்களோடே அவடம்போய் சேர்ந்தால், யிந்த விமானம் அவடத்திலே வந்து சேரு மென்று ருத்திரகோடி யீஸ்வரருடைய அனுக்கிரகத்தைப் பெத்து, மூன்றுமாசத்திலே யிவடம் வந்து சேர்ந்தான்.

அப்போ, அந்த விமானம் காவேரியிலே கிளம்பியிருந்துது; அதைக் கொண்டு வந்து சுவாமி கெற்பகிரகம் கட்டி வைத்தான். பூர்வ சென்மத்தில் அந்த யானை உபத்திரவம் பண்ணினதை நினைத்துக் கொண்டு ....... விக்ரமார்க்க ராஜா சுவாமி .... க்ஷேத்திரங்களைக் கட்டி வைத்து பூசை பண்ணுகிறதுக்கு போகுற ... ... யிந்த மூணு ஸ்தலங்களுக்கும் யிந்த செங்கண் சோளனண்டையிலே வந்து, "நீ மகா தன்னியன்! சுவாமிதானே உனக்கு யிந்த விமானத்தைக் கொண்டு வந்து குடுக்கிறதுக்கு உபாயம் சொன்னாரே! ஆகையால், யினிமேல் நாம் நாலுபேருமா யிருந்து கொண்டு, ஒரு கோயில் பெரிசாய் கட்டி வைப்போம்" யென்று யோசினை பண்ணுகிற காலத்தில், ஆகாசவாணியாய் சுவாமி சொன்னார் ''யெனக்கு நீங்கள் பிரகாரம்கட்ட தேவையில்லை'' நீங்கள் நம்முடைய .... தாறு மண்டபங்கள், கோபுரங்கள், தேவாளுடைய சன்னிதானத்தில் மண்டபங்கள், தீர்த்தக் கரைகளிலே மண்டபங்கள், யிதுமுதலா யிருக்கிற திருப்பணி பண்ணுங்களெ"ன்று சுவாமி சொன்னார்.

றாசாக்களும் அந்தப்பிரகாரமே அனேக மண்டபங்கள், கோபுரம், பிரகாரங்கள் யிதுகளை கட்டி வைத்தார்கள்! அதுக்கப்பறம், ரமேஸ்வரர் பிராமண சுருபமா யெடுத்துக் கொண்டு, தன்னுடைய பிரமதகணங்களை ... பண்ணிக் கொண்டு, அனேகம் பர்வதங்களை யின்னு மலை கல்லுகளை அழைப்பிவிச்சு, பிரகாரம்

கட்டி வைத்தார். அதிலே நித்தியம் சாயுங்காலம் விபூதியைக் கையிலே .... அந்தப் பிரகாரம் வழியாக வந்து, பூமிக்குச் சமானமாய்ப் பண்ணிக் கொண்டு, யிப்படி வெகுகாலம் கட்டி வைச்சார்!

யிதிலே வேலை செய்கிற பேர்களுக்கு பையிலிருக்கிற விபூதியை அள்ளிக் குடுக்க அந்த விபூதி யெவ்வளவு வேலை செய்து யிருக்குறாளோ, அதுக்கு பணங்களாய் விடும்! ஆகையாலே, அந்தப் பிரகாரத்துக்கு விபூதி பிரகாரமென்று நாமதேயம் அந்தப் பிரகாரம் பிரதக்ஷணம் பண்ணினால், சர்வாபீஷ்டம் சித்திக்கும்.

**முற்றும்**

**அச்சிட்டவர்கள் :** **இராயப்பேட்டை எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் உபபொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் லிட்.,**
26, கோயா அருணகிரி முதல் தெரு, இராயப்பேட்டை
சென்னை - 600 014.